# T. N. L. A. Debate

## OFFICIAL REPORT

VOL: XXXIX NO: 1 and 2

January 25th 27.

1983

©

D

V211,31 N83

N83.39.1&2

135972

128-261—1

2651

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
21 SEP ..3
EGMORE, MADRAS-8

S.no 14/6/5/1

# தமிழ் நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1983 ஜனவரி 25-தொகுதி XXXIX எண் 1

**Tuesday 25th January 1983 —Volume XXXIX No. 1**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

ஆவணக்காப்பக நூலகம்
135972
சென்னை-600 008.

D
V2l1,31 N83
N83-39.1 cf2

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

திரு சுந்தர்லால் குரானா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்!

1 மாண்புமிகு திரு. எம், ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) —பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள் மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல். இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) —நிதி, மட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) —மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுபாடு.

4 மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை துறை அமைச்சர்). கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள். பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச்சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் [வருவாய்த்துறை அமைச்சர்)— வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு இராம. வீரப்பன் [செய்தி அறநிலையத் துறை அமைச்சர்] — செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக்கழகம், திரைபடச்சட்டம், இந்து அறநிலையத் துறை, வணங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்,

7. மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் [கல்விஅமைச்சர்]— தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

2651

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### Governor of Tamil Nadu.

### Thiru S. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister) Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officer, Deputy Collector, Police, Prevention of Corruption Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance) —Finance, Legislature, Elections Food, Fisheries, Backward Classes Youth Service Corps price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN. (Minister for Electricity Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY. (Minister for Rural Industries) Rural Industries including village, cottage and small Industries, Milk, Dairy Development Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)-- Revenue, Commercial Taxes Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) Information and Publicity, Film Technology Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor permits.

7. Hon. Thiru R. C. ARANGANAYAGAM. (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU. (Minister for Local Administration) Municipal Administrations Panchayats and Panchayat Unions, Community Development, Rural indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

8. மாண்புமிகு டாக்டர். க. காளிமுத்து [வேளாண்மைத்துறை அமைச்சர்] — வேளாண்மை, வேளாண்மை மறுநிதி. வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. இ. பொன்னையன் [கூட்டுறவு—சட்ட அமைச்சர்] —சட்டம் நீதிமன்றங்கள் சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல் நிறுவனங்கள் பதிவு, கடன் வாங்கல் மீதான நிவாரணச்சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு, ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சிஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர் வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம் நகரஅமைப்பு. இடவசதிக்கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) —மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்) —வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள், வக்ப்.

14. மாண்புமிகு திரு. கு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)— அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள் நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர்மற்றும் பொதுபணிதுறை அமைச்சர்)-கதர், மது அனுமதிச்சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுபணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலகள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர்நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு சாதிதக்கட்டுபாடு, மலைவாழ்பழங்குடியினர் பிணைத்தொழிலவர். வேலைவாய்ப்புபயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசினிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)— மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதைவிடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)— Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health) Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation Agro Service Co-operative Societs, irrigation including Minor irrigation and Wakf,

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport) Transport. Nationalised Transport, Motor Vehicles Act and Ports

15. Hon. Thiru S THIRUNAVUKKARASU (Mintster for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public works and Khadi.) Handlooms Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare, Stationery, and printing, Gvernment Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18 Hon Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)— Social welfare including Women and Children Welfare. Animal Husbandry, Beggars Home. Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Adminitsiration.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத்தலைவர் ;

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி. தா. இராசம்பாள்
5. திருமதி. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. இ.மு. அழகர்சாமி.பி.ஏ.பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. ரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ பி.ஜி.எல்.
திரு. சா. சீனிவாசன் பி. எஸ் சி (குழு அலுவலர்.)
திரு. வி. சீதாராமன்.பி. காம்.பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)
திரு. பெ.பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி. எல். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜானகிராமன், பி ஏ, பி.எல். (சார்புச் செயாலாளர்
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி காம். (சார்புச்செயலாளர்.)
திரு. ஜெ. ரெஜினால்ட் ஜான், பி ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன் பி.ஏ. பி. எல். எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத்தலைவரின் தனிச்செயலாளர்.)
திரு. சீ. பாலசுப்பிரமணியன்(தலைமை நிருபர்.)
திரு. வி. இராமசந்திரன், எம். ஏ. எல். எல், பி. (விவாதப் பதிப்பாளர்.)

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
* 27—1—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதுரை, திரு. எம். | திருவெறும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9. அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 20. ஆறுமுகம், திரு. க. .. | அரியலூர் |
| 21. ஆரூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ... | மருங்காபுரி |
| 24. இராசமாணிக்கம், திரு. இ. செ. | குத்தாலம் |
| 25. இராசரத்தினம், திரு. து. . | பூந்தமல்லி |
| 26. இராசாம்பாள், திருமதி தா... | தலைவாசல் (செ.வ.) |
| 27. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28. இராசாராமன், திரு. வே. .. | பாபநாசம் |
| 29. இராசு, திரு. ஜெ. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 30. இராசேந்திரன். திரு. எஸ். என். | [illegible] |
| 31. இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 32. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 34. இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 37. இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38. இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39. இராமலிங்கம், டாக்டர். கே. பி. . | இராசிபுரம் |
| 40. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41. இராஜசேகரன், திரு. வே. .. | இராதாகிருஷ்ண நகர் |
| 42. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43. இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44. இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46. உகம்சந்த், திரு. எஸ். டி. . | மதுராந்தகம் |
| 47. உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 48. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49. உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 50. கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 52. கணேசன், திரு. இ. .. | இடப்பாடி |
| 53. கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 54. கந்தசாமி, திரு. கா. வே .. | கிணத்துக்கடவு |
| 55. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 56. கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 57. கருணாநிதி, டாக்டர் மு. . | அண்ணாநகர் |
| 58. கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. .. | பாளையங்கோட்டை |
| 59. கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 60. கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை |
| 61. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 62. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 63. கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 64. கலையரசன், திரு. நன்னிலம் அ. .. | நன்னிலம் (செ.வ.) |
| 65. காளிமுத்து, டாக்டர். கா. .. | திருப்பரங்குன்றம் |
| 66. கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம் |
| 67. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 69. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 70. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 71. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 72. கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 73. குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர் |
| 74. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 75. குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 76. குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 77. குருசாமி, திரு. ப. .. | அந்தியூர் (செ.வ.) |
| 78. குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 79. குலசேகரப் பாண்டியன், திரு ந. | வாணியம்பாடி |
| 80. குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 81. அமிர்தராஜ், திரு. .. | திருச்செந்தூர் |
| 82. கோபால், திரு. சி. .. | சோளிங்கர் |
| 83. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84. கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |
| 85. கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கை (செ.வ.) |
| 86. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87. கோவைத்தம்பி, திரு. .. | பேரூர் |
| 88. சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி |
| 89. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 90. ...ட்டநாத கரையாளர், திரு. சி. .. | தென்காசி |
| 91. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 92. சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி |
| 93. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 94. சந்திரசேகரன், திரு. ஏ. — | சோழவந்தான் |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 157 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி. |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம். |
| 166 | பலராமன், திரு. இல. .. | பேரூர். |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம். |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ. வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி... | சிவகாசி. |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.). |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர். |
| 179 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ. வ). |
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம். |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென்னை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி. |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ. வ.). |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ. வ.). |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| | பெருமாள், திரு. ரா. கு... | விளாத்திகுளம். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு, |
| 193 | மணிமாறன், திரு. ஆர்... | திருப்பூர். |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வாலூர் (செ. வ.). |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிப்பூண்டி. |
| 204 | முனுசாமி, திரு. மு. ப... | பாலக்கோடு. |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 207 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 208 | ரகுமான்கான், திரு. அ... | சேப்பாக்கம். |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 213 | ராஜமாணிக்கம், திரு. .. எம். கே. | முசிறி. |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல். |
| 215 | வரதராஜன், திரு. என்... | திண்டுக்கல். |
| 216 | விசயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி. |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 95. சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ.வ.) |
| 96. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம் |
| 97. சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர் |
| 98. சாமிக்கண்ணு, திரு. தா. . | செங்கம் |
| 99. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100. சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி |
| 101. சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி |
| 102. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 103. சிவப்பிரகாசம், திரு. ஏ. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104. சிவபெருமான், திரு. மு. .. | ஓமலூர் |
| 105. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 106. சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 107. சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர் |
| 108. சின்னராசு, திரு. க. இரா... | கிருஷ்ணகிரி |
| 109. சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர் |
| 110. சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 111. சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர் |
| 112. சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம் |
| 113. சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர் |
| 114. சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம் |
| 115. சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர் |
| 116. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 117. சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். .. | போடிநாயக்கனூர் |
| 118. சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு |
| 119. சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 120. சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121. சுவாமிநாதன், திரு. வி. வி... | புவனகிரி |
| 122. செங்கோட்டையன், திரு. கு. அ. .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 124. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 125. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 126. சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 127. சேதுராமன், திரு. ஏ. எம்... | ஆற்காடு |
| 128. சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் |
| 129. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130. சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131. சௌந்திரராசன், திரு. கே... | திருச்சி-2 |
| 132. டாக்டர் திரு. சௌரிராஜன், கே. .. | தி. நகர் |
| 133. தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 135. தங்கவேல்ராஜ், திரு. பி. எம் | கிருஷ்ணராயபுரம் (செ.வ. |
| 136. தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 137. தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 138. தனபால், திரு. ப. .. | சங்ககிரி (செ.வ.) |
| 139. தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 140. தாமரைக்கனி, திரு. இரா... | ஸ்ரீ வில்லிப்புத்தூர் |
| 141. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாச்சலம் |
| 142. திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 144. திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி |
| 145. திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.) |
| 146 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 148 துரைசாமி, திரு. பி. எஸ்... | பரிகூர். |
| 149 துரைமுருகன், திரு. .. | ராணிப்பேட்டை. |
| 150 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 151 துரைராஜ், திரு. பி, .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.). |
| 152 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| 153 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 155 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 156 நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம். |
| 157 நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு. |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு. |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம். |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர். |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர். |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர். |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை. |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர். |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 235 | மார்கரெட் எலிசபெத் பீலிக்ஸ், திருமதி. | (நியமன உறுப்பினர்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்;
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர்.

செவ்வாய்க்கிழமை, 1983 சனவரி 25.

தை 12, துந்துபி — திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்''

வாய் வழியாக வெளிப்படும் 'மெய்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது எது என்றால், மற்றவர்க்குத் தீங்கு ஒரு சிறிதும் பயக்காத சொற்களைச் சொல்லுவதே ஆகும்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்.

திரு. மு. அம்பிகாபதி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையே இன்னும் ஆரம்பிக்கவில்லை, இதற்குள் பாயின்ட் ஆப் ஆர்டரா?

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் மத்தியில் கடுமையான கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள் முடிந்தவுடன் சொல்லுங்கள்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 400 குடிசைகளைப் பிரித்துப் போட்டுவிட்டார்கள். வடித்து வைத்திருக்கிற சோற்றுப்பானைகளை உடைத்து விட்டார்கள். மக்கள் தாங்க முடியாத துன்பத்தால் அழுது கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று இத்தகைய பிரச்சினைகளை எழுப்பக் கூடாது.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். பேரவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் இந்த பிரச்சனையை எழுப்பினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றம் என்றால் இங்கு எல்லோரும் தான் இருப்பார்கள்.

2. இரங்கற் குறிப்புகள்.

*(அ) முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் வி. கே. கண்ணன், ஏ. வேலு, கே. கஜபதி ரெட்டியார், ஆச்சார்யா வினோபா பாவே ஆகியோர்மறைவு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. கே. கண்ணன் அவர்கள் 30–8–1982 அன்றும், திரு. ஏ. வேலு அவர்கள் 24–11–1982 அன்றும், திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்கள் 15–12–1982 அன்றும், மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கண்ணன் அவர்கள் 1952 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. வேலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை ரிசர்வ் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் 1957 ஆம் ஆண்டு வரை பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வோதய இயக்கம், மற்றும் பூதான இயக்கம் ஆகியவற்றைத் தோற்றுவித்தவரும், மகாத்மா காந்தியடிகளின் ஆன்மீக வாரிசாக விளங்கியவருமான ஆசார்ய வினோபா பாவே அவர்கள் 15–11–1982 அன்று மறைந்ததை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. வினோபா பாவே அவர்கள் 1895 ஆம் ஆண்டு மராட்டிய மாநிலத்தில், கொலாபா மாவட்டத்திலுள்ள ககோடாவில் பிறந்தார். வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அவர் பள்ளிப் படிப்புடன் தம் கல்வியை நிறுத்திக் கொண்டதோடு, வெறும் சான்றிதழ்களில் நம்பிக்கையின்மை காரணமாகத் தாம் பெற்ற பள்ளிச் சான்றிதழ்களையெல்லாம் தீயிலிட்டுக் கொளுத்தி விட்டார். அவரது உள்ளத்தில் எழுந்த பல சிந்தனைகளுக்கு விடை காண, அச்சமயம் இந்திய விடுதலைப் போரில் பிரபலமாகிக் கொண்டிருந்த மகாத்மா காந்தியடிகளுக்குப் பல கடிதங்கள் எழுதி, பிறகு 1916 ஆம் ஆண்டு அவரை நேரில் சந்தித்து, அது முதல் அவரது சீடராக விளங்கினார். வினாயக் நரஹரி பாவே என்று அழைக்கப்பட்டு வந்த அவரை மகாத்மா காந்தியடிகள் அன்பாக வினோபா பாவே என்று அழைக்க அதுவே அவரது பெயராக ஆகியது.

காந்தியடிகளைச் சந்தித்தபின் இந்திய விடுதலைப் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் திரு. வினோபா அவர்கள். 1940 ஆம் ஆண்டு கேரள மாநிலம் வைக்கத்தில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கைது செய்யப் பட்டு அவர் 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றார், பிறகு 1942 ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் கலந்து கொண்டு அதற்காக மூன்று ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆயினும், மகாத்மா காந்தியடிகள் முழு மூச்சுடன் விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்ததால், நிர்மாணப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு அவரால் ஏற்படுத்தப்பட்ட பல ஆசிரமங்களின் பொறுப்புகளை திரு. வினோபா அவர்களிடம் ஒப்படைத்தார். இதன் காரணமாக நிலமற்ற ஏழை விவசாயிகளின் துயர் துடைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள திரு. வினோபா அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

1951 ஆம் ஆண்டு பூதான இயக்கத்தைத் துவக்கி, 13 ஆண்டுகள் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் 40 ஆயிரம் மைல்கள் கால்நடையாகவே சென்று, மொத்தம் 45 லட்சம் ஏக்கர் நிலம் தானமாகப் பெற்று நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவற்றை அளித்தார். 1951 ஆம் ஆண்டு தீவிரவாதிகளின் இயக்கத்தினால் கலவரப் பகுதியாக விளங்கிய தெலுங்கானாவில் காவலர் துணையின்றிச் சுற்றுப்பயணம் செய்து, பூதான இயக்கம் பிறந்த இடமான பொச்சம்பள்ளியில் 40 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்கு 80 ஏக்கர் நிலம் அளிக்கப்பட ஏற்பாடு செய்தார். இந்தப் பிரசித்தி பெற்ற தெலுங்கானா பயணம் 51 நாட்கள் நடந்தது. மொத்தம் 200 கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அளிப்பதற்கென 12,200 ஏக்கர் நிலம் தானமாகப் பெற்றார்.

1973 ஆம் ஆண்டில் பூதான இயக்கத்தை முடித்துக் கொண்டு அவர் பூனா அருகில் பவுனார் என்னும் இடத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு அங்கு தங்கி இருக்கலானார்.

அவர் ஒரு மேதையாக, பன்மொழிப் புலவராக, எழுத்தாளராக, இலட்சியவாதியாக, இந்திய மக்களின் நன்மதிப்பையும், மரியாதையையும் பெற்ற ஒரு தூய துறவியாக வாழ்ந்து வந்தார். அவர் எழுதிய நூல்கள் 34. மராத்தியில் அவர் எழுதிய கீதை என்ற நூல் 16 முறை வெளியிடப்பெற்று, 6.75 இலட்சம் பிரதிகள் விற்கப்பட்டன. அவர் இஸ்லாம், கிறிஸ்துவம், சீக்கியம் மற்றும் பௌத்தம் ஆகிய சமயங்கள் குறித்தும் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

பிலிப்பைன்ஸ் நாட்டு மகசேசே விருது 1968 ஆம் ஆண்டு அவரது சமூகப் பணிகளுக்காக அவருக்கு வழங்கப்பட அறிவிக்கப் பட்டது. ஆனால், அவர் அப்போது பூதான இயக்கத்திற் காகப் பாத யாத்திரையில் ஈடுபட்டிருந்ததால் அந்த விருதைப் பெற்றுக்கொள்ள அந்நாட்டிற்குச் செல்ல மறுத்து விட்டார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஏழு நாட்கள் வரை உணவோ, மருந்தோ, தண்ணீரோ கூட உட்கொள்ளாமலிருந்து 15-11-1982 அன்று இயற்கை எய்தினார்.

ஆச்சாரிய வினோபா பாவே அவர்களின் மறைவு குறித்து நமது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) உறுப்பினர் திரு.சி. கேசவ ஆதித்தன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருச்செந்தூர் தொகுதியிலிருந்து இப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பணியாற்றிய திரு. சி. கேசவ ஆதித்தன் அவர்கள் 26-11-1982 அன்று மறைந்தது குறித்து பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"திருச்செந்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இப்பேரவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவரும், இனிய பண்பும், உள்ளமும், செயல்திறனும் கொண்டவரான திரு. சி. கேசவ ஆதித்தன் அவர்கள் 26-11-1982 ஆம் தேதியன்று மறைந்தமை குறித்து







இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள் கிறது. அன்னாரது மறைவால் வருந்தும், அவரது குடும்பத் தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது".

திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் 1980ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று இந்த அவைக்கு வந்தவர் ஆவார்கள். அவர்கள் 26-11-1982 அன்று எட்டையபுரத்திலே நடைபெற்ற பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டுவிட்டு திரும்பு போது எதிர்பாராத வகையில் மறைவு எய்தியது நமக் கெல்லாம் துக்கத்தையும் ஆற்றொண்ணாத் துயரத்தையும் அளிக்கக் கூடியதாகும். நான் அவரை கடந்த 33, 34 ஆண்டு கால மாக மிக நன்றாக அறிவேன்.

அவர்கள் திராவிட கழகத்திலும், பிறகு திராவிட முன்னேற்ற முன்னேற்றக் கழகத்திலும், பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பணியாற்றி செய்து கொண்டு, தந்தை பெரியார் அவர் கள் வகுத்துத் தந்த கொள்கை களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் வகுத்துத் தந்த கொள்கை களையும், குறிக்கோள்களையும், கடைப்பிடித்து வருவதில் மிகத் தீவிரம் காட்டியவர் ஆவார்கள். கொள்கையில் நீங்காப் பற்றும் தணியா ஆர்வமும் கொண்டவர்கள். அவற்றை நிறைவேற்றுவதில் அவர்கள் ஊக்கமும் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல மக் மிக அமைதியான போக்கு கொண்டவர்; அடக்கமான பண்பு களுக்கு உறைவிடமாக விளங்கியவர். படாடோபம் அற்றவர்கள், ஆரவாரம் அற்றவர்கள்.

திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் 1933 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ம் நாள் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த காயாமொழி என்ற சிற்றூரில் பிறந்தவர்கள். பிறகு இட்டாமொழி என்ற ஊரில் ஜோசப் உயர் நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரையில் படித்தவர்கள். அவர்கள் பள்ளிப் படிப்பு முடிந்த காலத் திலிருந்து பொதுத் தொண்டிற்கு ஆளாக்கிக் கொண்டு, கொள்கைக்காகவும், கோட்பாட்டிற்காகவும் பாடுபட்ட ஒரு நல்லவர் ஆவார்கள். இப்படிப்பட்டவர் மறைவு எய்தியது அனைவருக்கும் துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கக் கூடிய தாகும். அவரது மறைவிற்கு இப்பேரவை தன்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை மொழிவதோடு அவரது மறைவால் வருந்தும் அவரது உற்றார், உறவினர்களுக்கும், குடும்பத்தினருக்கும், இப்பேரவை இரங்கலைத் தெரிவித்துக் கொள் நண்பர்களுக்கும் இப்பேரவை இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை என்ற முறையில் மொழிந்து அமர்கிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவருடைய உணர்வுகளோடு நானும் பங்குகொள்ளுகிறேன். மறைந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் சிறப்பாக இந்த மாமன்றத்திலே பணியாற்றியதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆகவே, அவரது குடும்பத்திற்கு உங்கள் அனைவரின் சார்பாக இரங்கலைத் தெரிவித்து, இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** சாதாரணமாக இந்த மாதிரி தீர்மானம் வரும்போது கட்சிகளின் தலைவர்கள் அதைப்பற்றி சில வார்த்தைகள் கூறித்தானே எடுத்துக்கொள்வீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பலரைக் கலந்துவிட்டுத்தான் அந்த முடிவுக்கு வந்தேன்.

**திரு. என். சங்கரய்யா:** இதைப் பொறுத்தவரைக்கும் கலக்கமில்லை. இருக்கிற நடைமுறையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஆகவே, யாருக்கும் இஷ்டம் இருக்கிறதோ அவர்கள் பேசலாம். இது ஒரு முன் உதாரணமாக ஆகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானே இரண்டு மூன்று பேரிடம் கேட்டேன். இது புது மாதிரியல்ல.

**திரு. என். சங்கரய்யா:** பி.ஏ.சி.யில் இது பற்றிப் பேசவில்லை. அனுதாபத் தீர்மானங்கள் இந்தச் சபையிலே வந்தவுடன், கட்சிகளுடைய தலைவர்கள் தங்களுடைய கட்சிகளின் சார்பாக, இந்த இரங்கல் தீர்மானத்தோடு தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தித்தான் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த நடைமுறையைப் பின்பற்றவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானத்திலே ஒன்றும் பிரச்னை இல்லை. எல்லோரும் வருத்தம் தெரிவிக்கிறோம், அவ்வளவுதானே.

**திரு. என். சங்கரய்யா:** நாம் திடீரென்று ஒரு நடைமுறையை மாற்றுவது என்பது சரியல்ல. இதுவரையில், தமிழ்நாடு சட்டப் பேரவையிலே வரக்கூடிய இதுபோன்ற தீர்மானங்களைப் பொறுத்தவரையில் நான் சொல்கின்ற முறைதான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் அறிவிப்புகளாக வெளியிடக்கூடியவைகளைப் பொறுத்தவரை நீங்களே அறிவித்து விட்டீர்கள். ஆனால், சபையினுடைய முன்னவர் அவர்கள் வெளியிட்டிருக்கிற தீர்மானத்தைப் பொறுத்தவரை, கட்சிகளுடைய தலைவர்கள்



அதை ஆதரித்து சில வார்த்தைகள் பேசுவதற்குப் பிறகு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதுதான் முறையானது. இறந்து போனவருக்கும் நாம் செய்யக்கூடிய மரியாதையாகும்.

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிகிற கடமைப்பாடு உடையவன். சட்டமன்ற உறுப்பினராக இருந்து பொதுத்தொண்டு ஆற்றி வந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் எதிர்பாராத வகையில் மறைய நேரிட்ட இந்தத் துக்ககரமான நிகழ்ச்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்து, தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

* **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே திருச்செந்தூர் தொகுதியினுடைய பிரதிநிதியாக இருந்து லாரி விபத்திலே அகால மரணம் அடைந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்களுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எளிமையாகவும் அடக்கமாகவும் வாழ்ந்த அவரது மறைவு உண்மையிலே வருந்தத்தக்குரியது. அவரது இந்தத் திடீர் மறைவினாலே இழந்து தவிக்கின்ற அந்தக் குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எங்கள் பேரியக்கத்தின் சார்பிலே எங்களது பரிவான இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்களுடைய மறைவு குறித்து இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த அனுதாபத் தீர்மானத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவரோடு நேரிடையே பழகுவதற்கான வாய்ப்புகள் இல்லாவிட்டாலும்கூட அவர் திருச்செந்தூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே பணியாற்றினார். இடையிலேயே இப்படிப்பட்ட ஒரு விபத்திலே அவர் காலமாகியிருக்கிறார். இதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் இம்மாதிரி விபத்திலே காலமாகியிருக்கிறார்கள். இம்மாதிரி லாரிப் போக்குவரத்துக்களின் மூலமாக ஏற்படும் பயங்கரமான விபத்துக்களைத் தடுப்பது பற்றி அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். விபத்திற்கு ஆளானவர் சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்திற்காக மட்டும் நான் இதைச் சொல்லவில்லை. இம்மாதிரி பயங்கரமான விபத்துக்களில் மக்களின் பொதுவாகவே உயிர் பலி வாங்கப்படுவதும் மிகுந்து வருகிறது. எனவே இதுபற்றி அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஜனவரி 25

நான் பத்திரிகையில் படித்த அளவிற்கு அவர் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர், பல பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவருடைய மனைவிக்கும், அவரது குடும்பத்தின் உறுப்பினர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவர் இணைந்திருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தில் எங்களுடைய உணர்வையும் நாங்கள் சேர்த்துக் கொள்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, மறைந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்களுடைய குடும்பத்தினருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் திருச்செந்தூர் தொகுதியிலேயிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் எட்டையபுரத்தில் நடைபெற்ற பாரதி விழாவிற்கு வந்த அன்று நானும் அங்கு இருந்தேன். உணவு அருந்தி விட்டுச் செல்லுங்கள் என்று சொன்னபொழுது அவசரமான வேலை இருக்கிறது என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அப்படிச் செல்லுகின்ற நேரத்தில் எதிரே வந்த ஒரு லாரியோடு மோதி பெரிய விபத்துக்குள்ளாகி மறைந்துவிட்டார்கள்.

இம்மாதிரி விபத்துக்கள் சம்பந்தமாக மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் கூறியதுபோல் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இம்மாதிரி போக்குவரத்துக்கள் சீராக செல்வதற்கு சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்து இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுப்பதற்கு யோசிக்க வேண்டும்.

திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் எல்லோரிடமும் நன்றாக, இனிமையாகப் பழகக் கூடியவர். அவருடைய மறைவினால் வருந்தும் குடும்பத்தினருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, அகால மரணமடைந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் காயாமொழியில் மிகப் பெரும் புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அவர் தான் தேர்ந்தெடுத்துக்கொண்ட தலைவரின் எல்லாத் திறமைகளையும் சின்ன வயதிலேயிருந்தே போற்றி வருபவர்.

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, அகால மரண மடைந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் காயாமொழியில் மிகப் பெரும் புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள், மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பெற்ற அவர், தான் தேர்ந்தெடுத்துக்கொண்ட தலைவரின் எல்லாத் திறமைகளையும் சின்ன வயதிலிருந்தே போற்றி வருபவர்,

நாடக நடிகராக அவர் இல்லை என்றாலும் அந்தக் கலையிலே மிகவும் ஆர்வம் உடையவராக இருந்தார். இங்கே இன்று அவரால் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளப்பெற்ற தமிழ்நாடு முதலமைச்சரவர்கள் அன்று நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த நேரத்திலே, சின்ன வயதிலேயே அவருடைய நாடகத்தை நடத்துவதே தம்முடைய இலட்சியம் என்று நினைத்து கிராமங்களிலேயெல்லாம் சென்று பணியாற்றியவர் என்பது அந்தப் பகுதியிலே இருப்பவர்களால் இன்றும் சொல்லப் படும் ஒன்றாகும்.

அந்த வகையிலே தொடர்ந்து ஒரு தலைவரை ஏற்றுக் கொண்ட அபூர்வ மனிதர்களுள் அவரும் ஒருவர், அப்படிப்பட்ட சிறந்த ஒருவராக விளங்கிய சட்டமன்றப் பேரவை உறுப்பினரின் மறைவுக்காக காந்தி–காமராஜ் தேசிய காங்கிரஸ் மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவை முன்னவரவர்களுள் கூறிய சொற்களோடு எங்கள் உணர்வையும் சேர்த்து மறைந்த அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்

திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு சி. கேசவ ஆதித்தன் திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராவர்; அவர் அகால மரணம் அடைந்தது குறித்து அவை முன்னவரவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தோடு அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் உணர்வையும் இணைத்துக்கொள்கிறேன்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் பொது ஜனங்களுக்காக சேவை செய்வதில் எவ்வளவு அக்கறை கொண்டவராக இருந்தார்கள் என்பதை அறிந்திருக்கிறோம், அமைதியாக இருக்கும் பண்புடையவர், அப்படிப்பட்ட உறுப்பினர் நம்முடன் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை குறித்து வருத்தத்தைத் தெரிவிப்பதோடு அன்னாருடைய குடும்பத்தினருக்கும், அந்த மன்ற உறுப்பினர் சார்ந்திருந்த அவரை [illegible]திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அகில இந்திய ஃபார்வேர்ட் பிளாக் கட்சியின் ஆழ்ந்த இரங்கலைத் [illegible] கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக்கி அகால மரணமடைந்ததற்கு அவை முன்னவரவர்களும், மற்றுமுள்ள கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலையொட்டி எங்கள் இயக்கத்தின் சார்பாக அன்னாருடைய குடும்பத்திற்கும், அவருடைய இயக்கத்திற்கும் எங்கள் கட்சியின் இரங்கலைத் தெரிவித்து நான் அமர்கிறேன்.

**திரு. பி. முகமது இஸ்மாயில்:** மாண்புமிகு சட்டமன்றபேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. கேசவ ஆதித்தன் அவர்களின் அகால மறைவு குறித்து மிக்க வேதனைப் படுகிறோம். அவரைப் பற்றி இங்கே குறிப்பிட்ட கருத்துக் களையும், உணர்வுகளையும் பகிர்ந்து கொண்டு அவரை இழந்து தவிக்கின்ற உற்றார் உறவினர்களுக்கும் ஜனதா பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளுடைய நல்ல எண்ணத்தைப் பெற்று இன்று எல்லோரும் தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கும் அளவிற்கு எல்லோருடனும் அன்போடும், பண்போடும் பழகி, அவருடைய தொகுதிக்காகவும் இந்த நாட்டு மக்களுக்காகவும் தொண்டாற்றிய திரு. கேசவ ஆதித்தன் அவர்களுடைய மறைவு பற்றி இங்கே முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து நான் பேசுவதில் என்னுடைய துக்கத்தை என்னுடைய வேதனையை அத்தோடு நான் கலந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நல்ல கருத்தினை எல்லாம் எவ்வளவு சுருக்கமாகப் பேசவேண்டுமோ—குறுகத் தறித்த குறள் என்பது போல— அவ்வளவு சுருக்கமாக வெளியிட்டு இருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். லாரி விபத்துக்களைப் பற்றி எல்லாம் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் இதிலே குறிப்பிட்டுச் சொல்லும்போது, இறந்தவர்களைப் பற்றி வேதனைப்படுகின்ற நேரத்தில் அதற்கு என்னென்ன காரணங்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நமக்கு அக்கறை அதிகமாவது இயற்கை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

அதுபோலவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்தினார்கள். நான் ஒன்றையும் சொல்லக் கூடாது என்று எண்ணினாலும்' அவர்களுடைய குடும்பத்தில்





இருந்தும், நண்பர்களிடமிருந்தும் இந்த மரணத்தைப் பற்றி வேறு விதமான செய்திகள் அரசுக்கு வந்திருக்கின்றன. என்பதை நான் இங்கே தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்ற அவசியத்தில் இருக்கிறோம். இப்படிப் பட்ட லாரி விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதையும் இந்த அரசு செய்யும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்வதோடு திரு. கேசவ ஆதித்தன் அவர்களுடைய மரணத்திற்கு என்ன காரணம் என்பதைப் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று வேதனையோடு சொல்லி அவர்களுடைய மரணத்திற்கு நீங்கள் காட்டிய அனுதாபத்திற்கும், எதிர்க் கட்சியைச் சேர்ந்த அத்தனை பேர்களுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி கூறுவதோடு, அந்தக் குடும்பத்திற்கு அரசின் சார்பாகவும், எங்கள் கட்சியின் சார்பாகவும் இரங்கலைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர், அவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகிய எல்லோரும் இரங்கலைத் தெரிவித்து இருக்கிறார்கள். நானும் என்னுடைய இரங்கலை அந்தக் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல திரு. கேசவ ஆதித்தன் அவர்கள் சபையில் உள்ள அனைவருடனும் நன்கு பழகியவர்கள். சபையில் நன்றாக மரபு வழுவாமல் நடந்து கொண்டவர் அவருடைய மறைவுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி வேண்டுகிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதின் மூலம் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. நாளை பேரவைக் கூட்டம் இல்லை. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை மறுநாள், நாள் 27-1-1983, காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 3. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்:

[25 சனவரி 1982

(அ) சட்டப்படிப்புக்கான விதிகளும், ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் 10 (4) பிரிவின் கீழ் அறிவிப்பு தொடர்பாக வீட்டுவசதி -நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27-3-1980 ஆம் நாளிட்ட, 397 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

2. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பல்முனை வரிவிதித்தல்' வரிவீதத்தைக் குறைத்தல் தொடர்பாக வணிகவரி-அறநிலையத் துறையின் 26-6-1982 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பெற்ற வெளிநாட்டு சாராவி (பத்திரத்தின் பேரில் சேமித்து வைத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 134 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக வருவாய்த்துறையின் 29-10-1981 ஆம் நாளிட்ட, 864 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

5 தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள் துறையின் 24-7-1982 ஆம் நாளிட்ட 1857 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்] (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.



25 சனவரி 1982]

6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பவர்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத் துறையின் 29-7-1982 ஆம் நாளிட்ட 550 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

7. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள் துறையின் 24-5-1982 ஆம் நாளிட்ட, 1796 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

8. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் தலைவரையும், அரசு சார்பற்ற நான்கு உறுப்பினர்களையும் நியமனம் செய்வது குறித்த வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24-7-1982 ஆம் நாளிட்ட, 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள்-சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

9. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாறு சரக்கு கட்டுப்பாடு, முறைப்படுத்தல் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் துறையின் 2-6-1982 ஆம் நாளிட்ட 399 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத் துறையின் 1-6-1982 ஆம் நாளிட்ட 395 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

11. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல [illegible] விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையின் 20-5-1982 ஆம் நாளிட்ட 1020 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை

## 3. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்;



(அ) சட்டப்படிப்புக்கான விதிகளும், ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் 10 (4) பிரிவின் கீழ் அறிவிப்பு தொடர்பாக வீட்டுவசதி -நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27-3-1980 ஆம் நாளிட்ட, 397 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

2. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பல்முனை வரிவிதித்தல்' வரிவீதத்தைக் குறைத்தல் தொடர்பாக வணிகவரி-அறநிலையத் துறையின் 26-6-1982 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பெற்ற வெளிநாட்டு சாராவி (பத்திரத்தின் பேரில் சேமித்து வைத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16-3-1982 ஆம் தேதியிடப்பெற்ற மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 134 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக வருவாய்த்துறையின் 29-10-1981 ஆம் நாளிட்ட, 864 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

5 தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள் துறையின் 24-7-1982 ஆம் நாளிட்ட 1857 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்] (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.



6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பவர்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத் துறையின் 2?-7-1982 ஆம் நாளிட்ட 550 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

7. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள் துறையின் 24-5-1982 ஆம் நாளிட்ட, 1?96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

8. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் தலைவரையும், அரசு சார்பற்ற நான்கு உறுப்பினர்களையும் நியமனம் செய்வது குறித்த வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24-7-1982 ஆம் நாளிட்ட, 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள்-சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

9. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாறு சர்க்கரை கட்டுப்பாடு, முறைப்படுத்தல் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் துறையின் 2-6-1982 ஆம் நாளிட்ட 399 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத் துறையின் 1-6-1982 ஆம் நாளிட்ட 395 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

11. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதி விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையின் 20-5-1982 ஆம் நாளிட்ட 2020 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை

22 தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய விதிகளை உருவாக்குவது குறித்து 3-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 19 ஆம் எண் ஆணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டப் 10/1937) 54 (3) விதியின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

23. 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளைச் சேர்ந்த 10 ஆவது விதியில் பிறப்பிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக மதுவிலக்கு-ஆயத்துறையின் 20-4-1982 ஆம் நாளிட்ட 263 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

24. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள்-விதிகளில் பிறப்பிக்கப்பட்ட திருத்தம் தொடர்பாக உணவு கூட்டுறவுத் துறையின் 2-7-1982 ஆம் நாளிட்ட 563 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

25. காந்தி நகர் பகுதிக்கான வளர்ச்சிவிவரத் திட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக வீட்டுவசதி— நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22-9-1982 ஆம் நாளிட்ட, 1230 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

26. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சட்டமன்ற (மருத்துவ சோதனை, சிகிச்சை) விதிகளை இயற்றுவதற்கு பொதுத் (பணியாளரமைப்பு 1) துறையின் 25-1-1982 ஆம் நாளிட்ட 122 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

27. செக்கோஸ்லோவாக்யா சோஷியலிஸ்ட் குடியரசின் வர்த்தக பிரதிநிதிக் குழுவிற்குச் சொந்தமான, 2298 ஆம் எண் 'பென்ஸ்' வண்டிக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக உள்துறையின் 5-5-1982 ஆம் நாளிட்ட 1995 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

1983 [illegible]

28. ஏற்றுமதிக்கு முன் ஏலத்தில் தேயிலை விற்பனை செய்வதற்கு விலக்களிப்பது தொடர்பாக வணிகவரி அறநிலையத் துறையின் 29-7-1982 ஆம் நாளிட்ட 876 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

29. 1-7-1982 க்கு முன் முதல் அட்டவணையின் 78 ஆம் விதியின்கீழ் ஏற்கனவே ஒருமுனைவரியால் பாதிக்கப்பட்ட பொருள்களுக்குப் பல்முனை வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக வணிகவரி அறநிலையத் துறையின் 29-7-1982 ஆம் நாளிட்ட 885 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959; 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

30. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழுவையும் ஆட்சிக் குழுவையும் அமைப்பதற்கான கால அளவை நீட்டிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் 15-4-1982 ஆம் நாளிட்ட 669 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

31. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தரை நியமனம் செய்வது தொடர்பாக கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் 11-1-1982 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

32. 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் சில பிரிவுகளைச் செயலாக்குக் கொண்டுவரும் நாள் தொடர்பாக, கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் 29-3-1982 ஆம் நாளிட்ட 542 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

33. திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழக நிதி அலுவலரை அவர் பதவி ஏற்கும் நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு நியமனம் செய்வது தொடர்பாக கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் 31-3-1982 ஆம் நாளிட்ட

[தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).]

12. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சில கிராமங்களைத் தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது தொடர்பாக ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 30-6-982 ஆம் நாளிட்ட, 961 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

13. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைச் சேர்ந்த 282 ஏ விதியில் திருத்தம் செய்வது தொடர்பாக உள்துறையின் 14-6-1982 ஆம் நாளிட்ட 1500 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

14. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு சட்டமன்றத்தினர் பயணப்படி விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக பொதுத் (பணியாளரமைப்பு-1) துறையின் 24-6-982 ஆம் நாளிட்ட 1243 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1981) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

15. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் துறையின் 29-3-1982 ஆம் நாளிட்ட 212 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

16. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள்-சாராயக் கடைகள் (ஏலத்தில் விடுதல்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத் துறையின் 5-2-1982 ஆம் நாளிட்ட 86 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].





17. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் விதிகளிலும் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (சில்லறைக் கடைகள்) விதிகளிலும் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத் துறையின் 22-8-1981 ஆம் நாளிட்ட 198 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

18. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதி விதிகளில் பிறப்பிக்கப்பட்ட திருத்தம் தொடர்பாக தொழிலாளர் நல-வேலைவாய்ப்புத் துறையின் 28-5-1982 ஆம் நாளிட்ட 1100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. ]தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (சில்லறைக் கடைகள்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு—ஆயத்துறையின் 14-8-1981 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

20 தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கான ஊதியங்கள்-மருத்துவச் செலவுத் தொகையை திரும்பிப் பெற்றுத் தருதல்) விதிகளிலும், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் (வீட்டில் தொலைபேசி இணைப்பு கொடுத்தல்) விதிகளிலும் திருத்தங்கள் செய்வது தொடர்பாக பொதுத் (பணியாளரமைப்பு 1) துறையின் 22-1-1982 ஆம் நாளிட்ட. 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

21 தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சட்டமன்ற (இரயிலில் இலவசமாகச் செல்வதற்குரிய) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக பொதுத் பணியாளரமைப்பு 1) துறையின் 28-7-1982 ஆம் நாளிட்ட. 1202 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

565 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

**34.** பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முதல் பதிவாளரை நியமனம் செய்வது தொடர்பாக கல்வி அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் 31-3-1982 ஆம் நாளிட்ட 570 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

**35.** பாரதிதாசன் பல்கலைக் கழகத்திட்டக் குழுவை அமைப்பது தொடர்பாக கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 12-7-1982-ஆம் நாளிட்ட, 1498 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1982-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

**36.** பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழுவையும், ஆட்சிக் குழுவையும், அமைப்பதற்குரிய கால அளவை நீட்டிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 20-7-1982-ஆம் நாளிட்ட, 1569 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது )

**37.** கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தரை நியமனம் செய்வது தொடர்பாக கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 11-1-1982-ஆம் நாளிட்ட, 59-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

**38.** பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு பணியாளர்களை மாற்றுதல் தொடர்பாக கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 30-7-1982-ஆம் நாளிட்ட, 558-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]



**39.** பாரதியார் பல்கலைக் கழகத்தின் பதிவாளரை நியமனம் செய்வது தொடர்பாக கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 31-3-1982-ஆம் நாளிட்ட, 569-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**40.** பாரதியார் பல்கலைக் கழகத்தின் நிதி அலுவரை நியமனம் செய்வது தொடர்பாக கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 31-3-1982-ஆம் நாளிட்ட, 566-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**41.** பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழுவையும், ஆட்சிக் குழுவையும் அமைப்பதற்கான கால அளவை நீட்டிப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 7-8-1982-ஆம் நாளிட்ட 1915-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

**42.** தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளை இயற்றுவதற்கு, உணவு கூட்டுறவுத் துறையின் 25-8-1982-ஆம் நாளிட்ட, 63-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 38/1982) 28 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**43.** 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பயணப்படி விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக பொதுத் (பணியாளரமைப்பு I) துறையின் 29-7-1981-ஆம் நாளிட்ட, 1475-ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

**44.** 1975-ஆம் ஆண்டு உண்டிகளை நிறுவுதல், பாதுகாத்தல், கணக்கு வைத்தல் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக, வணிகவரி-அறநிலையத் துறையின் 6-7-1982-ஆம் நாளிட்ட, 775-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

45. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக வணிகவரி அற
நிலையத் துறையின் 23-6-1982-ஆம் நாளிட்ட 711-ஆம் என்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு
1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.)

46. கிண்டி பகுதிக்கான வளர்ச்சித் திட்டத்திற்கு அனுமதி
வழங்குவது தொடர்பாக வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை
யின் 12-8-1980-ஆம் நாளிட்ட, 1035-ஆம் என் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு
நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.)

47. நுங்கம்பாக்கம் பகுதிக்கான வளர்ச்சித் திட்டத்திற்கு
அனுமதி வழங்குவது தொடர்பாக வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித்
துறையின் 27-10-1980-ஆம் நாளிட்ட, 1419-ஆம் என்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு
1971-ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது.)

48. வணிகவரி-அறநிலையத் துறையின் 29-12-1981-ஆம்
நாளிட்ட II (1) CT/E/583 (a) 81-ஆம் என் அறிவிக் கையில்
திருத்தம் செய்வது தொடர்பாக வணிக வரி-அறநிலையத் துறை
யின் 24-8-1982-ஆம் நாளிட்ட 989-ஆம் என் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு (1959-ஆம் ஆண்டு
பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)
53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

49. உள்துறையின் 14-?-1979-ஆம் நாளிட்ட, II (2)/ HO/
3872/79-ஆம் என் அறிவிக்கையில் திருத்தம் செய்வது தொடர்
பாக உள்துறையின் 24-8-1982-ஆம் நாளிட்ட, 2221-ஆம்
என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு
1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (?) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப் பெற்றது.)

50. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டத்தில்
உள்ள தடியம்பட்டி சிற்றூரை தானமாகக் கொடுக்கப்பட்ட
கிராமமாக அறிவிப்பது தொடர்பாக ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்
துறையின் 12-5-1982-ஆம் நாளிட்ட, 6??-ஆம் என் ...





வில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு
பூதான இயக்கச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 15/1958) 28
(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

51. மதுரை மாவட்டம், நத்தம் வட்டத்திலுள்ள சில
கிராமங்களை தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களாக
அறிவிப்பது தொடர்பாக ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின்
30-6-1982-ஆம் நாளிட்ட 962-ஆம் என் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான
இயக்கச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

52. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டத்தில்
உள்ள சில கிராமங்களை தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்
களாக அறிவிப்பது தொடர்பாக ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்
துறையின் 12-?-1982-ஆம் நாளிட்ட 670-ஆம் என் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு
பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28
(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

53. சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தில் சில கிராமங்
களை தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது
தொடர்பாக ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 5-6-1982
ஆம் நாளிட்ட, 80-ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

54. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில்
உள்ள சில கிராமங்களை தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமங்
களாக அறிவிப்பது தொடர்பாக ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்
துறையின் 19-5-1982-ஆம் நாளிட்ட 672-ஆம் என் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு
பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28
(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதி
களில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத்துறை
யின் 15-12-1981-ஆம் நாளிட்ட, 358-ஆம் என் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு
மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

[1983 சனவரி 25

56. வணிகவரி-அறநிலையத்துறையின் 29-4-1981—ஆம் நாளிட்ட II (1) CTRE/239 (b) 81-ஆம எண் அறிவிக்கையில் திருத்தங்கள் செய்வதற்காக வணிகவரி-அறநிலையத் துறையின் 1.10.1982—ஆம் நாளிட்ட, 1110-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

57. தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் திருத்தம் செய்வதற்கு வணிகவரி-அறநிலையத் துறையின் 1--10—1982-ஆம் நாளிட்ட 1111—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

58. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் அரசு சார்பற்ற உறுப்பினரை நியமனம் செய்வது தொடர்பாக, வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6.?.1982-ஆம் நாளிட்ட 772-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடும் மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (?) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

59. தமிழ்நாடு 1961- ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் காரியங்களுக்காக இம்மாநிலத்திற்குள் அனுமதிக்கப்பட்ட வங்கிகளாக சில வங்கிகளையும் அவற்றின் கிளைகளையும் அறிவிப்பதற்கு வணிகவரி-அறநிலையத்துறையின் 18.9.1982-ஆம் நாளிட்ட 1061—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

60. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கடம்பர்கோயில் மணப்பாறை, செம்பட்டு ஆகிய இடங்களில் சுங்க சாவடிகளை ஏற்படுத்துவதற்கு, வணிகவரி--அறநிலையத் துறையின் ?1.7.1982 ஆம் நாளிட்ட, 838- ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 195?-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

61. திருநெல்வேலி மாவட்டம், கோயில்பட்டி வட்டத்தில் சுங்கச்சாவடி ஒன்றை அமைப்பது தொடர்பாக வணிகவரி-அறநிலையத்துறையின் 1?.4 198?-ஆம் நாளிட்ட 406-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-



1983 சனவரி 25]

ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

62. ஈரோட்டில் சுங்கச்சாவடி அமைப்பது தொடர்பாக வணிகவரி-அறநிலையத்துறையின் 26.6.1982-ஆம் நாளிட்ட 732-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

63. தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசைப்பகுதி மாற்று வாரிய பணிவிதிகளை திருத்துவது தொடர்பாக, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையில் 22-6-1982 ஆம் நாளிட்ட, 505-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடும் மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

64. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு சினிமா (முறைப்படுத்தல்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள்துறையின் (சினிமா) 6.7.1982 ஆம் நாளிட்ட, 1716-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு சினிமா (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது).

65. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக 30-7-1982-ஆம் நாளிட்ட, 1944-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

66. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு சினிமா (முறைப்படுத்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக உள்துறையின் (சினிமா) 29.3.198?-ஆம் நாளிட்ட 721-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு சினிமா (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

67. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு வகை சாராயங்கள் (புட்டிகளில் அடைக்கப்பட்ட) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத்துறையின் 21.4.1982-ஆம் நாளிட்ட 275-ஆம் எண்

[1983 சனவரி 25

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1931-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் ( மிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

68. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ந்தியாவில் யாரிக்கப் பட்ட வெளிநாட்டு வகை சாராவி (தயாரிப்பு) விதி ளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவி க் -ஆயத்துறையின் 4-10-1982 ஆம் நாளிட்ட 712-ஆம் எண் அ ாணையில் வெளியிடப்பட்ட அறிவி தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக் ப் பெற்றது).

69 தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ம பான ( ரிமங்கள் ) அனு மதிகள்) விதிகளில் திருத்தம் செய்வ தொட பாச மது லக்கு-ஆயத்துறையின் 29-3-1982-ஆம் நாளிட்ட 212-ஆம் எண் அரச ணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

70. மிழ்நாடு 194 -ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத் ம் செய்வது தொடர்பா உள்துறையின் 24-7-1982- ம் நாளிட்ட, 1856-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத் ன் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பே ர வ முன் வைக்கப் பெற்றது].

71. தமிழ் டு 1981-ஆம் ண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட வெளிநா டு வகை சாராவிகள் (மொத் பனைக்கு வழங்குதல்) வி களில் ருத்தங்கள் செய்வது தொட பாக மது விலக்கு-ஆய துறையின் 3. .1982-ஆம் நாளி ட, 5 - ம் எண் அரச ணையில் வெளியிட பட்ட அறிவி . [தமிழ்ந டு 937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் (தமிழ்நாடு ச ம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

72. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உ றையின் 4.8.1982-ஆம் நாளிட்ட 2011-ஆம் எண் அரசாணையில் வெளி யி ப்பட்ட அ ிவிக்கை. [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4 1939) 133 (3) பி வின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1983 ஜனவரி 25]

73. இருபது அல்லது இருபதுக்கு மேற்பட்ட தொழிலாளர் களைக் கொண்ட தொழில் நிறுவனங்களின் தொழில் முனை வோர்களுக்கு தமிழ்நாடு 1981-ஆம் ண்டு தொழில் நிறு வனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை வழங்குதல்) சட்டம் பொருந்துவது தொடர்பாக தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 24-9-1982-ஆம் நாளிட்ட, 2043 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1981) 12 (3 பிரிவின் கீழ் பேரவை முன் வைக் ப் பெற்றது]

74. 19 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிப் பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு, மேல்முறையீடு) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 22- -1982-ஆம் நாளிட்ட, 1121-ஆம் எண் அர ாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919] 348 (d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

75. தமிழ்நாடு 1940- ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்த செய்வது தொட பாக உ றுறையின் 15-9-1982-ஆம் நாளிட்ட, 2378-ஆம் எண் அரசாணையில் வெளியிட பட்ட அறிவிக்கை. (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய ட்டம் 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

76. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய விதிகளில் திருத்தங்கள் செய்வ தொடர்பா மதுவிலக்கு-ஆயத்து யின் 30 8.1982-ஆம் நாளி ட 6 8-ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக் க. (தமிழ்நாடு 1937-ஆம் ண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54( ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

77. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் ரு தங்கள் செய்வது தொ ர்பாக உ துறையில்

24-7-1982-ஆம் நாளிட்ட, 858-ஆம் எண் அரசாணையின் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

78. தமிழ்நாடு 1962-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழு பணி ள் (தேசி பாதுகாப்பு) விதிகளை ரத்து செய்வதற்கு ஊர்வளர்ச்சி-உள் ாட்சித் து றயின் 10.8.1982-ஆம் நாளிட்ட 1218-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

(தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

79. தமிழ்நாடு 1962-ஆம் ஆண்டு ஊராட்சி பணிகள் (தேசிய நலனைப் பாதுகாத்தல்) விதிகளில் 10-8-1982-ஆம் நாளிட்ட, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1219-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

80. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டுகள் இறக்குவது குறித்த விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத் துறையின் 21-7-1982-ஆம் நாளிட்ட, 532-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

81. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சி பொறியின் மற்றும் தண்ணீர் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16-9-1982-ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1423-ஆம் எண் அரசாணையின் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1920-ஆம்-ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

82. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக் கழகத்தின் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 21-4-1981-ஆம் தேதியிடப் பெற்ற பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தப் (பணியாளரமைப்பு) துறையின் 411-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 350 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

83. தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு இந்துத் திருமண (பதிவு செய்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக உள் துறையின் 26-6-1981-ஆம் நாளிட்ட 1442-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் மத்தியச் சட்டம் 25/1955) 8(3) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது).

84. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள்துறையின் (போ.1) 24-9-1982-ஆம் நாளிட்ட, 2427-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை.



1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

85. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வேண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக உள்துறையின் 4-9-1982-ஆம் நாளிட்ட, 2392-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

86. நீலகிரி வருவாய் மாவட்டத்தில் மரங்களை எடுத்துச் செல்வதை முறைப்படுத்துவதற்கான விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக வன-மீன் துறையின் 13-4-1982-ஆம் நாளிட்ட, 450-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

87. தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்று கசண்டு கட்டுப்பாடு முறைப்படுத்துதல் விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத்துறையின் 23-8-1982-ஆம் நாளிட்ட, 634-எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

88. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத் துறையின் 29-10-1982-ஆம் நாளிட்ட 763-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

89. தருமபுரி மாவட்டத்திலுள்ள நாட்ராபாளையத்திலிருந்து உரிகமிற்கு விடவிருக்கும், தருமபுரியைச் சேர்ந்த திரு. ஏ. எம். ஷெய்யத் ஹாயத்திற்கு சொந்தமான TND 5184-ஆம் எண் சிறுப் பயணிப் பேருந்தை பொருத்தவரையில் காலாண்டிற்கு இருக்கை ஒன்றிற்கு வரியாக ரூ. 40-ம் (ரூபாய் நாற்பது மட்டும்) காலாண்டிற்கு இருக்கை ஒன்றிற்கு மேல் வரியாக ரூ. 10-ம் (ரூபாய் பத்து மட்டும்) என்ற செலுத்தத் தக்க வரிவீதத்தை குறைப்பதற்கு உள்துறையின் 15-9-1982 ஆம் நாளிட்ட, 2372-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

1983 ஜனவரி 25]

அறிவிக்கை, (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 2 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

90. இந்தியாவிலுள்ள அணைத்து நாட்டு விமான நிலைய அதிகார மன்றத்திற்குச் சொந்தமாக சில மோட்டார் வண்டிகளைப் பொறுத்தமட்டில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பதற்கு உள்துறையின் (போ.1) 16-10-1982-ஆம் நாளிட்ட, 2582-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

91. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வணிகம், சாரா நிறுவனங்கள் சட்டம் 1-7-1981-ஆம் நாள செயலுக்கு வரும் என்று குறிப்பிடுவதற்கு தொழில் துறையின் 27-6-1981-ஆம் நாளிட்ட 909-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு சட்டம் 16/1972) 5 (2) பிரிவின் கீழ் பேரவை முன் (1972 ஆம் ஆண்டு வணிகம் சாரா நிறுவனங்கள் சட்டத்தின் வைக்கப் பெற்றது).

92. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வணிகம் சாரா நிறுவனங்கள் விதிகளை ஏற்படுத்துவதற்கு, தொழில் துறையின் 27-6-1981-ஆம் நாளிட்ட 910-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு வணிகம் சாரா நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 16/1972) 5 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

93. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் (இரண்டாவது திருத்தம்) சட்டத்திற்கேற்ப 183-ஆம் எண் விதியினுக்கு மாற்று எண் கொடுப்பது குறித்து 23-10-1982-ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1192-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிப்பு(தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது).

94. தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளின் 15 (5) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 15-10-1982-ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1163-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).



95. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக, மதுவிலக்கு-ஆயத் துறையின் 29-9-1982-ஆம் நாளிட்ட, 703-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

96. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளைச் சேர்ந்த 18-ஆம் விதியில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத்துறையின் 24-8-1982-ஆம் நாளிட்ட, 636-ஆம எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

97. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு மது பானங்கள் (தயாரிப்பு) விதிகளில் திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத்துறை (II) யின் 4-10-1982-ஆம் நாளிட்ட, 711-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன வைக்கப் பெற்றது).

98. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஐயப்பந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த நி. அ. பு. எண்.05/5, 35/6, 30/1-லுள்ள சென்னை பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 4-6-1982-ஆம் நாளிட்ட, 445-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப்பெற்றது).

99. மாம்பலம் விரிவாக்கப் பகுதியில் (தியாகராய நகர் மாற்றங்கள் செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9-12-1981-ஆம் நாளிட்ட 1070-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ்-ஆங்கிலம் (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத்திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972 123 2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

100. மயிலாப்பூரைச் சேர்ந்த ஆர். எஸ். எண். 1422-ன் ஒரு பகுதியிலும் 1410-2-ன் ஒரு பகுதியிலும், மயிலாப்பூர் தேனாம்பேட்டை பகுதி நகரதிட்டப் பணியை மீண்டும் வகை பாடு செய்வது தொடர்பாக வீட்டு-வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 21-6-1982-ஆம் நாளிட்ட 494-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்-ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

101. மாடனரண்டாபும் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.பு. எண். 69-2, 70-5, 72-3—லுள்ள நிலப்பயன்பாட்டை மீண்டும் வகைப்பாடு செய்வது தொடர்பாக வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 30-6-1981-ஆம் நாளிட்ட 534-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

102, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்தம்) சட்டம் செயலுக்கு வரும் நாளாக 1-11-1982-ஆம் நாளை நிர்ணயிப்பதற்கும், தமிழ்நாடு 1959 ஆம்-ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்வதற்கும் வணிகவரி-அறநிலைய துறையின் 15-10-1982 1164-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

103. கட்டப்பொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சிறுப்பயணிப் பேருந்துகள் செல்லும் சில வழித் தடங்களின் வரி விகிதத்தை குறைப்பதற்கு உள்துறையின் (போ. எண் 1) 18–9–1982 ஆம் நாளிட்ட 2412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகளின் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

104. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம் சங்கனாங்குளம் கிராமத்தில் 1980 ஏப்ரல்—மே திங்களில் 17 ஆதிதிராவிடப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்றும், மணி என்ற ஆதி திராவிடர் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறப் பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து மாண்புமிகு நீதிபதி திரு கே. எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை (தமிழ்).

105. சென்னை மாநகரில் 1981—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6—ஆம் நாளான்று மாணவர்களுக்கும் பேருந்து பணியாளர்களுக்கும் இடையே நடந்த மோதலுக்கான காரணங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட திரு. எஸ். ஏ. காதர் விசாரணைக் கமிஷன் அறிக்கை (தமிழ்).

106. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1978-79 ஆம் ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம். தமிழ்) (தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு குடிநீர் வடிக்கால வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1974) 47-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).





107. தமிழ்நாடு தனி ஆலைக் கழகத்தின் 31-3-1981-ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டிற்குரிய 13—ஆம் ஆண்டு அறிக்கை. (1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1966) 616 (A) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

108. 1980—81-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு அறிக்கை (1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

109. 1981-82—ஆம் ஆண்டு தமிழ்நாடு கிடங்குகள் கழகத்தின் இருபத்து நான்காம் ஆண்டு அறிக்கை (கழகத்தின் தணிக்கை அறிக்கையுடன் கூடியது) (ஆங்கிலம்) 1962—ஆம் ஆண்டு கிடங்குகள் கழகச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

110. 1978-79—ஆம் ஆண்டு சரியாக நிறுவனத்தின் ஏழாம் ஆண்டு அறிக்கையும், கணக்கு விவர அறிக்கையும் அது குறித்த அரசு ஆய்வுடையும் (ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் மத்திய சட்டம் (1956) 619 (A) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

1. 1984-85-ஆம் ஆண்டின் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்—தமிழ்நாடு (ஆங்கிலம்).

2. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளிலும் 323—58 அன்று அவ்வாறு ஐந்தொகை கணக்குகளில் பிழைத்திருத்தம் (ஆங்கிலம்)

3. தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு சட்டமன்ற (முன்னாள் உறுப்பினராக மருத்துவ உதவி-சிகிச்சை) விதிகளின் பிழை) திருத்தம் செய்வது தொடர்பாக பொதுப் (பணியாளரமைப்பு-1 துறையின் 9-6-1982-ஆம் நாளிட்ட 1922-ஆம எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை.

4. தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு கேளிக்கை வரி அவசரச் சட்டம் (மூன்றாம் திருத்த) தமிழ்நாடு அவசரச் சட்ட எண். 11 1982).

5. தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு ஒன்றியமையாப் பணியாளர் பராமரிப்பு அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 12/1982).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4,
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 84C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss. Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores. South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Id Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya. 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

2661

C... OF TAMIL NADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
21 JUL 1983
EGMORE, MADRAS-8

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1983 ஜனவரி 27-தொகுதி XXXIX எண் 2

...sday 27th January 1983 —Volume XXXIX No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

Legislative Assembly Department, Fort St. George, Madras-600009

6. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தம்) அவசரச்சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண். 13/1982)

7. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு வேளாண்மை விளைப் பொருள் அங்காடிகள் (திருத்தமும், தனி விதித்துறைகளும்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1982).

8. ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் புனையுரிமை பட்டய (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டம், 1682 தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1982).

9. 1982-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1982).

10. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண்மை விளைப் பொருள் அங்காடிகள் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் (1/1981)

11. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஆழ்கடல் மீன்பிடிப்பு முறைப்படுத்துதல் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1983).

12. 1983—ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ம் தேதியன்று) சட்ட மன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ் ஆங்கிலம்)

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வியாழக்கிழமை, 1983 சனவரி 27

### தை 14, துந்துபி, திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை."

ஒருவன் செய்கின்ற குற்றமே அவனுக்கு அழிவை உண்டாக்கும் பகை ஆகும். எனவே, அக்குற்றம் நேராமல் இருத்தலை வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

### 1. இரங்கல் குறிப்புகள்.

**முன்னாள் உறுப்பினர்களான திரு. என். எம். ஆர். சுப்பராமன் திரு. ஆர். சி. சாமண்ண கவுண்டர் ஆகியோர் மறைவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் 25-1-1983 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எம். ஆர். சுப்பராமன் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். மதுரை நகராட்சி மன்றத்தின் தலைவராக இருமுறை பதவி வகித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் ஒரு சிறந்த தேசபக்தர். இவர் 1930 மற்றும் 1932 ஆம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாகிரஹப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை தண்டனை அடைந்துள்ளார்.

அன்னார் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார். அன்னார் அவர்களின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 127 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். இதன் மூலம் எத்தனை மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும்? வேறு இடங்களில் இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 100 வாட் மின்திறன் உள்ள நான்கு யூனிட்டுகள் இந்தத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின் நோக்கம், மின்தேவை எப்போது ஏற்படுகிறதோ அப்போது இந்த அணையில் இருந்து வருகின்ற நீரைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டு, நள்ளிரவில் மின்தேவை திடீரென்று குறைகிறபோது, அனல் மின்நிலையத்தின்மூலம் நீரை அணைக்கு திரும்பக்கொண்டுவருவதற்கானதாகும். ஆகவே, இது மின் உச்சக் கட்டத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே தவிர, கூடுதலாக அதிகமான பலனைத் தந்து விடாது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர் அழுத்த மின் நிலையம் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் நிரம்பியுள்ள கோவை மாவட்டத்தில் அனல் மின்நிலையம் அமைக்க அரசு முன்வருமா? தனியார் அனல் மின்நிலையம் அமைக்க முன்வந்தால் அரசு ஆதரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி நீர் அழுத்த மின் நிலையத்தைப் பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தகைய கேள்விகளை எழுப்பினால், அமைச்சர் எப்படி பதில் அளிக்க முடியும்?

குந்தா ஐந்தாம் நீர் மின் நிலையம்.

*வினா எண். 2 திரு. கே. உச்சி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குந்தா ஐந்தாம் மின் நிலைய கட்டுமானப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) அதற்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) குந்தா ஐந்தாம் நீர்மின் நிலையம் ஏற்கனவேஇயங்கி வருகிறது. இம்மின் நிலையத்தில் ஒரு கூடுதல் 20 மெகாவாட் திறன் கொண்ட பிரிவு அமைக்க மத்திய அரசின்ஒப்புதல் பெறப்பட்டு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



(ஆ) இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.503 இலட்சங்களாகும்.

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, குந்தா ஐந்தாவது மின் நிலையம் பயன் உள்ளதாக இருக்கவேண்டுமானால், ஏற்கனவே, அந்த நீர்த்தேக்கத்திற்கு வரும் ஊற்றுகள் சரியாக இருக்க வேண்டும். அவைகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஊற்றுகள் பராமரிக்கப்படுவது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அங்கே கூடுதலாக 20 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(முற்பகல் 9.10)

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பூமிக்கடியில் இருக்கிற நீரைக் கொண்டுவர முயற்சி செய்து, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு இது சம்பந்தமில்லை.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, கோத்தகிரி, ஆவக்கல், இளப்பி, முள்ளூர் கீழ்த்தட்டப் பள்ளம் முதலிய ஐந்து ஆறுகள் ஒன்று சேருகின்ற மொழிகரையில் ஒரு மின்சார நிலையம் அமைக்க அரசு முயற்சி செய்யுமா? அதற்கான ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, இந்தத் திட்டமானது செயல்பட்ட பிறகு எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? எவ்வளவு மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திட்டம் செயல்பட்டால் மின் உற்பத்திதான் கிடைக்கும். வேலை வாய்ப்பு அதிகம் கிடைக்காது.

சென்னை மாநகரிலுள்ள பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகம் செய்யும் லாரிகள்

*வினா எண் 3—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஆர். சி. சாமண்ண கவுண்டர் அவர்கள் 26-1-1983 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்றுள்ளார். மூன்றுமுறை வடாற்காடு மாவட்ட நிர்வாகக் குழுவில் (டிஸ்டிரிக்ட் போர்ட்) தலைவராக பணி ஆற்றியுள்ளார்.

அன்னாரை இழந்துவிட்ட அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் நமது இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பூமிக்கடியில் நீர் அழுத்த மின்நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண். 1—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பூமிக்கடியில் நீர் அழுத்த மின் நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிற காலத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்கள். அது எப்போது எப்படி செயல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது காடம்பாறை நீரேற்று மின் திட்டம். இதனுடைய முதல் யூனிட் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இயங்கத் துவங்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆகும் திட்ட மதிப்பீடு எவ்வளவு? இதன் மூலம் எவ்வளவு மெகா வாட் மின்சாரம் உற்பத்தி ஆகும் என்பதை அறிவிக்க இயலுமா?





மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 127 கோடி ரூபாய் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதலாக மின் உற்பத்தி எதுவும் கிடைக்காது. மின் உச்ச காலத்தில் நமக்கு இது பயன்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் இதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவில் தற்போது மின்சார கட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இப்போது எங்கெங்கே மின்சாரம் தயாரிக்க முடியுமோ அங்கெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் திட்டமிடுவது அவசியம்தான். தமிழகத்தில் பூமிக்கடியில் இந்த மின்சாரம் எப்படி எடுக்கப்படுகிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே அமைச்சர் அவர்கள் 10, 10 மெகாவாட் திறனுள்ள சிறுசிறு மின் உற்பத்தி நிலையங்கள் துவங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இதற்கு 130 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக இதற்கு மத்திய அரசு தடங்கலாக இருந்தாலும் மாநில அரசே இதைச் செய்வதற்கு வேண்டிய திட்டங்களை உருவாக்க மின்சார அமைச்சர் அவர்கள் யோசித்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. எஸ். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் 1984 ஆம் ஆண்டு இந்த பூமிக்கடியில் நீர் அழுத்த மின் நிலையம் ஏற்படும் என்று சொன்னார்கள். இந்த ஆண்டே அப்படிப்பட்ட மின் நிலையம் ஏற்படுத்துவதற்கான தீர்மானம் ஏதேனும் உள்ளதா? தற்போதுள்ள மின் வெட்டு எப்போது தளர்த்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தனிக்கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நிலத்தடி நீரைப் பயன்படுத்த, குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் நீரைத் தோண்டியெடுத்து இருக்கிறார்கள். அது செயல்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது, அதைச் செயல்படுத்த நமது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி நிலத்தடி நீரில் இருந்து மின்சாரம் எடுப்பதைப் பற்றியதாகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத்திற்குத்தான் நிலத்தடி நீரை எடுத்து இருக்கிறார்கள்.

[1983 சனவரி 27

(அ) சென்னை மாநகரில் பால்வள டிப்போக்களுக்கு பால் விநியோகம் செய்வதற்காக, தனியார் லாரிகளை அரசு வாடகைக்கு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்படி வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள தனியார் லாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் 27 லாரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 60 லாரிகளை சென்னை நகரில் பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகம் செய்வதற்காக வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த பால்வள நிறுவனம் பால் விநியோகம் செய்ய தனியார்களிடம் லாரிகளை வாடகைக்கு எடுத்துக் கொள்வதை நிறுத்தி, பால்வள நிறுவனமே சொந்தமாக லாரிகளை வாங்கி பயன்படுத்த முயற்சி செய்யுமா? அப்படிச் செய்தால் இப்போது ஏற்படுகின்ற குறைபாடுகள் நீங்க வழி பிறக்கும் அல்லவா? அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, பால்வள நிறுவனமே சொந்த லாரிகளை ஏற்றுக்கொள்வது என்பது அனுபவ ரீதியில் இலாபகரமாக இல்லை. ஆனால் இப்போது தனியார் லாரிகளைப் பயன்படுத்துவதினால் ஏதாவது குறைபாடுகள் ஏற்படுமானால் அதைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க இணையம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

திரு. தி. கா. குப்பன்: தலைவரவர்களே, 27 லாரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 60 லாரிகளை வாடகைக்கு எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த லாரிகளை வாடகைக்கு எடுக்க காரணம் என்ன? இந்த நிறுவனத்திடம் லாரிகள் இல்லாத காரணத்தால் வாடகைக்கு எடுத்தார்களா? இல்லை என்றால் வேறு ஏதாவது காரணத்திற்காக வாடகைக்கு எடுத்தார்களா? சொந்த லாரிகள் வாங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, பால்வள நிறுவனத்திற்கு பால் விநியோகம் செய்ய லாரிகள் இல்லை. ஆனால் தனியாரிடம் கொடுத்து, அதைச் சீராக நிர்வாகம் செய்ய முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 4— திரு. இரா. தாமரைக்கனி: மற்றும் திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1983 சனவரி 27]

தமிழ்நாட்டில் தோல் தொழில் வளர்ச்சிக்கு தனி அமைப்பு (கார்ப்பரேசன்) அமைக்கும் கருத்துரு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஆம். தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைப்பதற்கான அரசு ஆணை 16-7-1982-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, இந்தக் கழகம் எந்த இடத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்தக் கழகத்திற்கு முதலீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, இந்த தோல் தொழில் வளர்ச்சிக் கழகம் வடஆற்காடு மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, 10 கோடி ரூபாய் முதலீட்டில் நடக்க இருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, தோல் சம்பந்தப்பட்ட பொருள்களை இந்தியாவிலேயே அதிகமாக உற்பத்தி செய்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான். அப்படி இருக்கிறபோது இந்த 6-வது ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் இந்த கார்ப்பரேஷனை அமைக்க அல்லது தொழில் தொடங்க மத்திய அரசு கொடுத்திருக்கிற உதவி என்ன? மானியம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, தமிழக அரசு இதை உருவாக்கியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இன்றைய தினம் தோல் தொழில் வளர்ச்சிக்கு 'பாரத் லெதர் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த நிறுவனம் இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு 'எஃப்லுயண்ட் டிஸ்போசல்,-கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு வளர்ச்சி நிதியாக கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதையும் இந்தக் கார்ப்பரேஷன் மூலம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் தொழில் வளர்ச்சிக்காக இந்த தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் என்னென்ன பணிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய தோல் பதனிடுவோர் ஓரளவுக்கு பதனிடப்பட்ட தோலினைச் செய்யவும், அவைகளை முற்றுப்பெற்ற தோலாக உற்பத்தி செய்யவும் பரவலான வசதிகளை அளிக்கிறது. காலணிகள் மற்றும் இதர தோல் பொருட்களை தயாரிப்பதற்கு வரைபடம் மற்றும் உருவகக் குறிப்புகளைக் கொண்டு தயாரிப்பதற்கான (டிசைன் சென்டர்கள்) நிலையங்கள் அமைத்தல்; இவ்வாறு பரவலான பல நிலையங்களில் தயாரிக்கப்

பெற்ற பொருட்களின் விற்பனைக்காக (ஏற்றுமதி உட்பட) புதிய உதவிகளை அளிக்க தகுந்த செயல்களை மேற்கொள்ளல் மற்றும் அங்கே பணிபுரியும் தொழிலாளர்களின் தொழில் வன்மையை மேம்பாடு அடையச் செய்ய நிலையான நவீன பயிற்சிகளையும் இந் நிறுவனம் கொடுக்க இருக்கிறது.

இவை மட்டும் அல்லாமல், ஆதிதிராவிடர்களுக்காக சிறப்பு பகுதி திட்டத்தின் கீழ் (Special component plants for scheduled castes) வேலை வாய்ப்புக்கான திட்டங்களையும் இந்தத் தொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. இதைப் போலவே பாரத வர்த்தக நிறுவனம், பாரத தோல் வளர்ச்சி நிறுவனம், ஆகியவற்றின் திட்டங்களை பெற்றுத் தரும் சேனலைசிங் ஏஜென்சியாகவும் இது செயல்படும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முதலிலே கூறும்போது 10 கோடி ரூபாய் பெறுமான திட்டம் என்று சொன்னார்கள். மத்திய அரசு தொழில் வளர்ச்சிக்காக, பல்வேறு தொழில்களிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு உதவி செய்கிறார்களே, அதுபோல இந்த நிறுவனத்திற்கு என்று ஏதாவது உதவிகள் மத்திய அரசிடம் இருந்து கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படி கேட்டு தகவல் ஏதாவது கிடைத்திருக்கிறதா? அல்லது மேற்கொண்டாவது இதனைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தினுடைய நோக்கமே, இந்தத் தோல் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தனியார்களுக்கு என்னென்ன வசதிகளையெல்லாம் செய்துதர வேண்டுமோ, அவைகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட கழகம் இது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தோல் தொழில் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டிருக்கிற இந்த நிறுவனத்தின் செயற் குறிப்பில், எந்தெந்த தோல்களுக்கு இந்த அமைப்பு உதவி செய்ய இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே அனைத்து தோல்களுக்கும்

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மனிதத் தோல்களுக்கும் இந்த அமைப்பு உதவுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்து தோல்களுக்கும் என்று அமைச்சர் பதிலளித்து விட்டார். கேள்வி நேரம் என்பது உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் சில விளக்கங்களைக் கேட்டு பெறுவதற்காகவும் அதனை நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. இதிலே எல்லா வகையான கேள்விகளுக்கும் அமைச்சர்கள் பதிலும் சொல்ல முடியாது. எல்லா வகையான கேள்விகளையும் உறுப்பினர்கள் கேட்கவும் கூடாது.



திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தகவல்கள் தெரிவிக்கும்போது, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தனி நபர்களுக்கு உதவுகிற வகையில் இந்தக் கார்ப்பரேஷன் செயல்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற சில பிரிவு ஆதிதிராவிட மக்கள், குறிப்பாக அருந்ததியர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும்கூட அவர்கள் பெரும்பாலும் கூலி தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஒன்று திரட்டி, ஒரு அமைப்பாகச் சேர்த்து இந்தத் தொழிலில் அவர்களை ஈடுபடுத்தி உதவிகள் அளித்து, அந்த முறையில் இதனை இன்னும் வளர்ச்சியடையச் செய்யும் வகையில் முயற்சிகளை இந்த கார்ப்பரேஷன் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தொழிலாளர்களையெல்லாம் கூட்டுறவு முறையில் ஒன்று திரட்டி இன்டஸ்டிரியல் கோவாப்பிரேட்டிவ் சொசைட்டிஸ் என்று ஏற்படுத்தி, அவர்களுக்கு உதவி செய்கிற ஒரு ஆலோசனையும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

### கோவை, வடாற்காடு மாவட்டங்களில் காடுகள் வளர்க்கும் திட்டம்.

வினா எண்.5 திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவை மாவட்டத்தில் சமுதாயக் காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் எவ்வளவு பகுதிகளில் காடு வளர்ப்பு நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கோவை மாவட்டத்தில் 1981-82 இல், 1,046·66 எக்டேர் பரப்பில் மரத்தோட்டங்களும் 365.80 கி.மீ. தூரத்திற்கு தொடர் தோட்டங்களும் பரவலாக வளர்க்கப்பட்டுள்ளன. 1982-83 இல், 1,120 எக்டேர் நிலத்தில் மரத்தோட்டங்கள் மற்றும் 70 கி.மீ. தூரத்திற்கு தொடர் தோட்டங்கள் வளர்க்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காடு வளர்ப்பிற்காக எடுத்துக் கொள்ளக்கூடியது அரசாங்கத்தின் புறம்போக்கு நிலமா அல்லது வேறு வகையான காட்டு நிலங்களா? எப்படிப்பட்ட நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன? ஏழை விவசாயிகள் பலரின் நிலங்களைப் பிடுங்கிக் கொள்கிறார்கள் என்று ரிப்போர்ட் வருவது உண்மையா? இது பற்றி விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் என்பது காட்டு நிலங்களுக்கு வெளியிலே நிறைவேற்றப்படுகின்ற ஒரு திட்டம். அரசாங்கத்தின் புறம்போக்கு நிலங்கள், ஏரிகள், பஞ்சாயத்து நிலங்கள், சாலை ஓரங்கள், தனியார் நிலங்கள் போன்ற எல்லா வகையான நிலங்களிலும் ஒரு சமுதாயத் தேவையின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்ற திட்டம் இது. ஆனால் தனியார்கள் வைத்துக்கொண்டிருக்கிற நிலங்களில் அவர்களுடைய விருப்பம் இல்லாமல் போய் மரங்களை நடுவது என்ற பிரச்சினை இல்லை. ஆனால் நம்முடைய அரசு புறம் போக்கு நிலங்களைப் பலர் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட காடு வளர்க்கின்ற திட்டத்திற்காக முயற்சி செய்கின்றபோது அங்கே அதைத் தடுக்க முயற்சிக்கிறார்கள் என்பதுதான் இன்றைக்கு உள்ள சூழ்நிலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மலைக் காடுகளுக்குப் பக்கத்தில் மலைச் சரிவுகளில் ஆங்காங்கே உள்ள நிலங்களில் ஆதிவாசிகளாக இருப்பவர்கள் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள், அவர்கள் அங்கே விவசாயம் செய்துகொண்டிருக் கிறார்கள். அது அவர்களுடைய சொந்த பூமியல்ல. ஆனால் பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக அவர்கள் அங்கே விவசாயம் பண்ணிக்கொண்டிருக்கக்கூடிய இடம் அது. அந்த இடங்களை சமுதாயக் காடுகள் வளர்ப்பதற்கென்றும். அந்த காடுகள் வளர்ப்பதற்கென்றும் சொல்லி அதிகாரிகள் அவற்றைப் பிடுங்கிக் கொண்டிருக்கையில் அதைப்பற்றி அவர்கள் நிரந்தரக் ரிப்போர்ட் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கத் தினுடைய நிலைமை என்ன ? அது தடுக்கப்படுமா ? அந்த ஆதிவாசிகள் தொழில் செய்யும் இடங்களில் அவர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக வன நிலங்களில் அல்லது வனத்தை ஒட்டிய நிலங்களில் குடியிருப்பவர்கள் குறிப்பாக மலைவாழ் மக்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள். அவர்கள் நீண்ட காலமாக ஆங்காங்கே இருந்து அதையே தங்களுடைய வாழ்க்கைக்குரிய ஜீவனத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக் கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டால் அதற்கான விதி விலக்குகளை அளிக்க வேண்டும் என்று கொள்கை அளவில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் சமீப காலத்திலே சிலபேர் சில இடங்களை ஆக்கிரமித்துக்கொண்டு நாங்கள் நீண்ட காலமாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட வேண்டுகோள் அல்லது புகார்கள் வருகின்ற நேரத்தில் வருவாய்த் துறையினைச் சார்ந்தவர்களும், வனத்துறையினைச் சார்ந்தவர்களும் அந்தந்த நிலங்களுக்குச் சென்று உயர் அதிகாரிகள் மட்டத்தில் பரிசீலனை செய்து நீண்ட





காலமாக அங்கே வாழ்ந்துகொண்டு வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதுதான் அரசாங்கத் துடைய முடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் என்பதில் பல இடங்களில் ஆறுகளைக் கூட எடுத்துக்கொள்கிறார்கள். உதாரணமாக தட்டாங்குளம், பூங்கோடு ஆகிய இடங்களில் 60 ஆயிரம் ரூபாய் செலவில்—பாலாற்றிலேயே சமுதாயக் காடுகள் இருப்பதால் பாலாற்றிலே தண்ணீர் வரத்து போதிய அளவு இல்லை. தண்ணீர் வரத்து தடுக்கப்பட்டுவிட்டது. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆகவே ஆறுகளிலே சமுதாயக் காடுகளை வளர்க்கின்ற நேரத்திலே வன இலாக்காவினர் பி.டபிள்யூ.டி. அனுமதி பெற்று பாசனத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதை முடிவு செய்தபின் காடுகளை அங்கே ஏற்படுத்துவது என்ற முறையினை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த சமுதாய காடு—வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எங்கெல்லாம் மரங்கள் நடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அந்த இடங்கள் யாருக்கு சொந்தமான இடங்களாக இருந்தாலும் அல்லது எந்தத் துறைக்குச் சொந்தமாகயிருந்தாலும் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் ஒப்புதல் பெற்ற பிறகுதான் மரங்கள் நடப்படுகின்றன. அது பஞ்சாயத்து நிலங்களானாலும் சரி அல்லது பொதுப்பணித் துறையோடு தொடர்புள்ள நிலங் களானாலும் சரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்தில் ஒரு சிறிய மாறுதல். இப்படி ஆற்றுப்படுகைகளில் இப்படிப்பட்ட மரங்களை நடுவது என்பது ஒரு திட்டம். அதனால் அந்தத் தண்ணீர் ஓட்டத்தைத் தடுத்துவிடுவது என்பது பிரச்னை அல்ல. அப்படி தடுப்பதும் கிடையாது. ஏனென்றால் ஏரிகளிலே இந்த மரங்களை நட்டு வளர்த்துக்கொண்டிருக் கிறோம். அதில் பெரும் பலன் கிடைத்துக்கொண்டிருக்கிறது. வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகள், அவர்கள் நீண்டகாலமாக ஏரிக்கரைப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நாம் மரங்களை நடப்போகும் போது அவர்கள் எங்கள் பயிர்கள் பாழாகிறது அல்லது தண்ணீர் வரவில்லை என்ற குற்றச்சாட்டைத் தந்துகொண்டிருக்கிறார்கள். பலயிடங்களில் தண்ணீர் ஓட்டத்தைத் தடுக்கிற வகையில் அப்படி நடுகிற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல் அரசுக்கு வந்தபோது உடனடியாகப் பரிசீலித்து தண்ணீர் ஓட்டத்தை, கால்வாய் ஓட்டத்தைத் தடுக்கிற முறையில் அந்த மரங்களை நடக்கூடாது என்று தெளிவாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கரையோரங்களில் மரங்களை நடுவது என்பது அது கரைகளை வலுவுள்ளதாக ஆக்கவும் அந்தத் தண்ணீருக்கும் பயன் உள்ளதாகயிருக்கும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டம் என்பது இன்று ஒரு நல்ல திட்டமாகயிருந்தாலும் கூட தமிழ்நாட்டில் வசிக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களை இது பெரிதும் பாதித்துள்ளது. அவர்களுக்கு சொந்த நிலம் கிடையாது. ஆங்காங்குள்ள புறம்போக்குகளில், ஏரிப் புறம்போக்குகளில் இவர்கள் 30, 40 சென்ட் நிலங்களில் பரம்பரையாக சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களிடம் ரிக்கார்ட்ஸ் கிடையாது. அமைச்சர் அவர்கள், அவர்கள் பரம்பரையாக சாகுபடி செய்து வருவதை அல்லது செய்வதை நிரூபிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். எப்படி நிரூபிப்பது ? அவர்களிடத்தில் ரிக்கார்ட்ஸ் கிடையாது. அவர்களுக்கு அனுபோகம் ஒன்றைத் தவிர வேறு ரிக்கார்ட்ஸ் கிடையாது. இன்று அவர்களெல்லாம் காட்டு இலாகா அதிகாரிகளிடம், தாசில்தார்களிடம் மனு கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு என். பழனிவேல் : அந்த மனுக்களுக்கு பதிலேயில்லை. காட்டு இலாகா அதிகாரிகள் கன்றுகளை நட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டம் நம்முடைய மக்களுக்காகத்தான், மனித சமுதாயத்திற்காகத்தான். ஆகவே நாம் எல்லோரும் சேர்ந்து இதில் ஒத்துழைத்தால்தான் மரங்கள் வளரும், காடுகள் பெருகும், மழையும் வரும். ஆகவே ஆங்காங்கே சில தனிப்பட்டவர்கள் இடைக்காலத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அல்லது அனுபவித்துக்கொண்டிருக்கிற சில வசதிகளுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். அதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து மாற்றுவழி கண்டுபிடித்தாக வேண்டும். அப்படி யாராவது ஏரிக்கரைகளில் அல்லது ஏரிக்குள்ளே புறம்போக்கு நிலங்கள் என்று ஆக்கிரமித்துக் கொண்டிருப்பார்களேயானால் அவர்களுக்கு வேறு இடங்கள் கொடுப்பதற்கும் வருவாய்த் துறையோடு கலந்து நாம் ஆலோசனைகள் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் நியாயமாக பாதிக்கப்படுகிற ஏழை எளிய மக்கள் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் எங்கேயாவது இருந்தால் அவர்கள் உண்மையாகவே பாதிக்கப்படுகிறார்கள் தான் என்பதை எடுத்துச் சொன்னால் அரசாங்கம் தக்க வழியில் அவர்களுக்கு பரிகாரம் காண முயற்சிக்கும்.

*வினா எண் 6 திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் வனத்துறை புதிய காடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் எவ்வளவு கன்றுகள் எவ்வளவு



(ஆ) அதற்காக செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) 1981-82 ஆம் ஆண்டில் வடாற்காடு மாவட்டத்தில் சமூக நலக் காடுகள் மற்றும் இதர வன திட்டங்கள் மூலம் 8371 எக்டேரில் 1,08,98,026 செடிகள் ரூ. 79.92 லட்சம் செலவில் நடப்பட்டன. இதுவல்லாமல் 87 (கி.மீ) தொலைவுக்கு காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பெரும்பாலும் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஏரிகளில்தான் அதிகமாக கன்றுகள் நடப்படுகின்றன. கிராமங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு இன்றையதினம் மேய்ச்சல் நிலங்களாக இந்த ஏரிகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆக, காடுகள் வளர்ப்பதால் இந்த மேய்ச்சல் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அதற்கு அரசு ஏதாவது மாற்று நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; நான் முதல் கேள்விக்கு பதிலளிக்கும்போது இதற்கானவிளக்கங்களை அளித்திருக்கிறேன். ஏரிகளிலே முக்கியமாக இந்த காடு வளர்க்கிற் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அங்கேதான் துரிதமாக மரங்கள் வளர்கின்றன. அதுபோன்ற சூழ்நிலையில் ஆடுகள் அல்லது மாடுகளை மேய்ப்பதென்றால், ஒரு இரண்டாண்டுகள் அந்தச் செடிகள் வளர்ந்துவிட்டதற்குப் பிறகு அதற்குள்ளே மாடுகளை அல்லது ஆடுகளை அனுமதிப்பதில் தவறில்லை. ஆனால் துவக்கக் காலத்தில் அப்படிப்பட்ட பிரச்னை வருகிற நேரத்தில் நான் முன்பே சொன்னதுபோல் இது பொது நன்மைக்காகச் செய்யப்படுகிறது என்பதை எல்லோரும் உணர்ந்துகொண்டு கொஞ்சம் இருக்கிற இடங்களில் ஆடுமாடுகளை மேயவிட்டு—நாம் வீட்டில் ஒரு மரம், செடி வளர்த்தால் அதை எப்படி பாதுகாப்போமோ அதேபோல் நாட்டுக்சாக வளர்க்கப்படுகிற மரங்களைப் பாதுகாக்கிற முயற்சியில் நாம் அனைவரும் ஈடுபட்டாகவேண்டும்.

(முற்பகல் 9.30)

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, நீண்ட நாட்களாக பயிர் செய்து கொண்டுவரும் விவசாயிகளுக்கு ஆக்கபூர்வமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நான் நேரில் சென்றிருந்தபோது, உண்மையிலேயே எந்தவிதமான நிலமும் இல்லாதவர்கள் 1 ஏக்கர், 2 ஏக்கர்கள் வனத்துறைக்கு அடுத்துள்ள காடுகளிலே கடந்த 30, 40 ஆண்டுகளாக பயிர் செய்து கொண்டு வருபவர்களை வெளியேற்றி, அங்கே வனத்துறையைச் சார்ந்தவர்கள் கன்றுகளைப் பயிரிடுவதாக சொன்னார்கள். காடுகள் வளர்ப்பது என்பது அவசியம்தான். ஆனால், பஞ்சாயத்துக்

[திரு. சோ. அழகர்சாமி] [1983 சனவரி 27

களிடமிருந்து விவரங்கள் கேட்டு' ஜமீன் காடுகளில், ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு அந்த நிலங்களில் காடுகளை வளர்த்துக் கொண்டு வந்தார்கள். இப்படிப்பட்ட இடங்களில் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்க அதிகாரிகளுக்குச் சரியான உத்தரவு பிறப்பித்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பே விரிவாக பதிலளித்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தெரிவித்ததைப் போல், தர்மபுரி மாவட்டத்தில் இந்தமாதிரியான பிரச்னைகள் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றன. அதற்காகவே, வருவாய்த் துறை, வனத் துறை அதிகாரிகள் இணைந்து அந்த இடங்களை எல்லாம் பரிசீலனை செய்து நியாயமாக, நீண்டகாலமாக அந்தப் பகுதிகளிலே வாழ்கின்றவர்களுக்கு அந்த உரிமைகள் எல்லாம் கிடைக்க, பல பகுதிகளை வன நிலம் என்கின்ற அந்த அறிவிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இப்படி உண்மையான வேண்டுகோள் வருகின்ற நேரத்தில், அதைத் தீவிரமாக விசாரித்து, ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சமுதாய காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் வட ஆற்காடு மாவட்டமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி, அவர்களை நியமிக்கின்ற முறை சரியான முறையில் இல்லாதது அரசாங்கத்திற்குத் தெரியுமா? சில சந்தர்ப்பங்களில் ஒரு மாதம், இரண்டு மாதங்கள் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களை போகச் சொல்லிவிட்டு, வேறு ஒருவரைப் போடுவதும், அதுவும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் இருந்து எடுக்காமல், தங்களுக்கு விருப்பப்படுகின்றவர்களை ரேஞ்ச் ஆபீசர்களாக நியமிப்பதும் அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது சமுதாய காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்குப் பதிலளித்துக் கொண்டிருக்கிறேன். இதிலே அலுவலர்கள் நியமிக்கும் முறையைப் பற்றி தகவல் அறிய விரும்புகிறீர்கள். இதுகுறித்து, தனிக்கேள்வி போட்டால், அதுபற்றி விரிவாக பதிலளிக்க முடியும்.



1983 சனவரி 27] [திரு. ஆர். எம். வீரப்பன்]

## வன இலாகா நிலங்களில் குமரி முறையில் சாகுபடி செய்யும் திட்டம்

*வினா எண் 7 திரு செ. செம்மலை: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன இலாகா நிலங்களை வன இலாகா சம்மந்தப்படாத காரியங்களுக்கு ஒதுக்கக்கூடாது என்ற தடை இருப்பது உண்மையா?

(ஆ) அப்படியானால் 'கும்ரி சாகுபடி' (Kumri Cultivation) முறைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) வனப்பரப்பில் கும்ரி முறையில் விவசாயப் பயிர்களை சாகுபடி செய்வது, வன இயல் சம்பந்தமில்லாத காரியம் என்று கருதப்படவில்லை. ஆகவே, வனப்பாதுகாப்பு சட்டத்தின் விதிகள், வனப்பரப்பில் கும்ரி முறையில் விவசாயப் பயிர்களை சாகுபடி செய்ய குத்தகை அளிக்கும் விஷயத்தில் பொருந்தாது.

திரு செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுபோன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போது, வன இலாகாவைப் பொறுத்தவரையில், பொதுப் பட்டியலில் வருவதால், நம்முடைய கருத்துக்களை மத்திய அரசு கேட்டறிந்து, இதுபோன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றதா என்ற விவரத்தை அறிய விரும்புவதோடு, வனப்பகுதி மக்களுக்கு பயனளிக்கக்கூடிய திட்டங்களை அமுல்படுத்துவதில் கூட மத்திய அரசின் உத்தரவை நாம் பெற வேண்டியிருக்கிறது. உதாரணமாக, ஒரு அணை கட்ட வேண்டுமென்றால், மத்திய அரசின் உத்தரவைப் பெற்றுத்தான் கட்ட வேண்டியிருக்கிறது. எனவே, இதுபோன்ற நல்ல காரியங்கள் செய்வதில் கால தாமதங்களும், சிரமங்களும் ஏற்படுகின்றன. எனவே இது போன்ற நல்ல காரியங்களைச் செய்வதற்கு விதிவிலக்கு அளிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் காடுகள் என்கின்ற அந்தப் பிரிவு மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டிருப்பதே, மத்திய அரசு தன்னுடைய அதிகாரத்தை செலுத்துவதற்காக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல, வனம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிலங்களில் எந்தக் காரியம் நடைபெற வேண்டுமென்றாலும், அதில் மத்திய அரசின் அனுமதியைப் பெற்று நடைபெற வேண்டும். உதாரணமாக, அணைகட்டு கட்டுவதைப்

பற்றித் தெரிவித்தார்கள். அணைக்கட்டு கட்டுவதற்கு மட்டு மல்ல. மின்சாரம் கொண்டு போகவேண்டுமென்றாலும், அங்கே வாழ்கின்ற மலைவாழ் மக்கள். ஆதிதிராவிட மக்கள் அல்லது அங்கேயிருக்கின்ற கிராம மக்களுக்கு வனப் பகுதியில் ஒரு மின் கம்பம் நடுவதற்கோ, அல்லது அங்கே சாலை போடுவதற்கோ அல்லது ஒரு விளக்கு கம்பம் நடுவதற்குகூட மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே மாநில அரசின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கடுமையாக, இது தவறு, இப்படிப்பட்ட முறைகளை வைத்திருப்பது மத்திய அரசே ஏற்றுக்கொண்டு, அமுல்படுத்த விரும்புகின்ற இப்படிப்பட்ட சமூகநலத் திட்டங்களுக்கு இடையூறாக இருக்கின்றது என்ற கருத்தை மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். சட்ட விதிகள் தடுத்துக் கொண்டிருக்கிறது. நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைச்சரிவுகளிலும், குன்றுகளிலும் குறிப்பாக ஆக்கிரமிப்பாளர்களுடைய அத்துமீறல்கள் இருக்கின்றன. அதுவும் இன்னும் சொல்லப்போனால் விவசாயப் பயிர்கள் பயிரிடப்படுகின்ற நிலைமை இருந்து வருகிறது. எனவே மரங்களை வளர்க்கப்பட வேண்டும் என்ற நிலையில் அதுபோன்ற இடங்களில் மரங்கள் மட்டும் தான் நடப்படவேண்டும்; வேறு விவசாயப் பயிர்கள் அங்கே பயிரிடக்கூடாது என்ற சட்டத் திருத்தத்தை—மலைச்சரிவுகளிலும், குன்றுகளிலும் மரங்களை மட்டும்தான் நடவேண்டும் என்ற உத்திரவை அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசு நிறைவேற்றியிருக்கிற வனப் பாதுகாப்பு சட்டத்தினுடைய முக்கிய நோக்கமே வன நிலங்களை வனமாகவே வைக்க வேண்டும் என்பதுதான். அதிலும் குறிப்பாக மலைச்சரிவுகள் போன்ற இடங்களில் சரிவுகள் ஏற்பட்டு மண் அரிப்புகள் ஏற்பட்டு இயற்கை ஊறு விளைவிக்க முடியும் என்கிற காரணத்தினால் அதிலே கவனம் செலுத்தப் படுகிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் காடுகளை வெட்டி விட்டு வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது என்பது தான் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிற சட்டம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது மலைவாழ் மக்களுக்கு, ஏழை மக்களுக்கு தண்ணீர் கொண்டு போகவேண்டும் என்றாலும்கூட மத்திய அரசின் அனுமதியை பெற்றுதான் கொண்டுபோக வேண்டும் என்று மத்திய அரசின் மீதுபழி சுமத்துகிறார்கள் மாண்புமிகு அமைச்சர்அவர்கள். இதுபோன்ற மலைவாழ் மக்களுக்கு தண்ணீர் கொண்டுபோக வேண்டும் என்று இதுவரை அமைச்சர் அவர்கள் மனு செய்து அதை மத்திய அரசு மறுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் மீது பழியைச் சுமத்துகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த நேரத்திலே உறுப்பினர்களும் பழி சுமத்தக் கூடாது, அமைச்சர்களும் பழி சுமத்தக்கூடாது. நான் பழி சுமத்தவில்லை. இருக்கிற சூழ்நிலையில் இயற்றப்பட்டுவிட்ட சட்டத்தினாலே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் அதை அதிகாரிகள் எப்படி கையாண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் எடுத்து விளக்குவதற்காக தெரிவித்தேன். இதை நாங்கள் அங்கே வனத் துறை மாநாட்டிலே கூட, மத்திய வனத்துறை அமைச்சர் இடத்திலே கூட தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் மூலமாக தெரிவித்து இருக்கிறார்கள். இதைபோன்ற கோரிக்கைகள் பெய் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை விட இந்த கோரிக்கைகளை அனுப்பினால் வருவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பது தான் இன்றைக்கு இருக்கிற பிரச்சனை. இன்றைக்கு உடனடி யாக மலைவாழ் மக்களுக்கு நம்முடைய பாரத பிரதமர் அவர்களுடைய 20 அம்ச திட்டத்தின் கீழ் பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசே மலைவாழ் மக்களுக்கு என்று நிதிகளை ஒதுக்கி அவைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். அந்த திட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்திலே இந்த வன பாதுகாப்புச் சட்டம் குறுக்கே வந்திருக்கிறது. மத்திய அரசு என்று சொல்லுகிற நேரத்திலே அதிகாரிகள் தான் அங்கே ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் பிரச்சனையே தவிர அரசின் மீது அல்ல. அங்கே இருக்கிற ஐ. ஜி. ஆர். பாரஸ்டு என்பவருக்கு இங்கு இருக்கிற மாநில அரசு எழுதி அங்கிருந்து அனுமதி பெறவேண்டும். அவர் அனுமதி தருவதற்கு முன்னாலே ஒரு நூற்றுக்கணக்கான சந்தேகங்களை எழுப்புகிறார். அவைகள் எல்லாம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வந்து போவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதுதான் பிரச்சனையே தவிர மத்திய அரசு மீது குற்றம் சுமத்துவது இதனுடைய நோக்கம் அல்ல.

திரு. பொ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்று மலைகளிலே வன இலாக்காவுக்குச் சொந்தமான இடங்களில் மரங்களை மட்டும் தான் பயிரிட வேண்டும் என்பதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அங்கு வாழும் மக்களுக்கு மருத்துவ வசதி, பாடசாலை வசதி செய்யவேண்டும் என்றால் கூட டெல்லிக்கு எழுத வேண்டும் என்று இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இதுபோன்ற அதிகாரங்களை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று டெல்லிக்கு எழுதி கேட்க இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மத்திய வன பாதுகாப்புச் சட்டம் நிறை வேற்றப்பட்டதற்கு பிறகு எழுந்து இருக்கிற நடைமுறை

சிக்கலை நான் நேரிடையாகவே தெரிவித்திருக்கிறேன். குறிப்பாக இந்த மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள் அல்லது மலையில் இருக்கிற கிராம மக்கள் அவர்களுக்கு வசதிகளை செய்கிற முயற்சியில் மாநில அரசு நடவடிக்கை எடுக்கிறபோது ஒரு வனத்தை பாதுகாக்கிற உணர்வு மத்திய அரசில் இருக்கிற ஒரு அதிகாரியை விட மாநில அரசில் இருக்கிறவர்களுக்கு அதிகமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் நீங்கள் இதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப்பகுதியில் விறகுக்கு கூப்புகள் ஏலம் விடப்படுவது முழுவதும் தடை செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி தடைச்செய்யப்பட்டிருப்பதால் விறகுக்காக எடுத்து வருவதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. அதனால் திருட்டுத்தனமாக கொண்டுவந்தாலொழிய வேறு வகையில் கொண்டு வரமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் விறகின் விலை உயர்ந்திருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் விலையைக் குறைக்கும் அளவிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மலைகளின் மீது இருக்கிற வனங்களில் விறகு கூப்புகள் என்று விறகுகள் வெட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதைத் தடை செய்யப்படவில்லை. அனேகமாக குறைத்துக்கொண்டு வந்து விட்டோம். காரணம் மலைகளின் மீது இருக்கிற மரங்களை விறகுக்காக பயன்படுகிறது என்பது இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கைக்கு தேவையான ஒரு பொருளை அதை விட குறைந்த தேவைக்கு பயன்படுத்துவது என்பதற்கு சமம் ஆகும். இந்த சமுதாய காடு வளர்ப்பு திட்டத்தினுடைய அடிப்படை நோக்கமே மக்களுடைய எரி பொருள் தேவைக்கு அதிக அளவில் மரங்களை அழித்து காடுகளை அழித்து பெறாமல் இப்படிப்பட்ட முயற்சிகளின் மூலம் பெறுவதற்குதான் இந்தத் திட்டமே இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கொஞ்சம் இடைக்காலத்தில் விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாம் இன்றைக்கு தொழிற்சாலைக்கு வழங்குகிற அந்த மரங்களிலிருந்து வெட்டப்படுகிற மற்ற பகுதிகளை எல்லாம் விறகுகளாக பயன்படுத்த நாம் இன்றைக்கு வழங்கி கொண்டு வருகிறோம். மிகுந்த தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் விறகுக்கென்று வளர்க்கப்பட்டிருக்கின்ற மரங்களை வெட்டுவதற்கும் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். பல இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒரு நிர்ணயமான விலைக்கு இந்த விறகுகளை இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். நீலகிரி மாவட்டம் மதுரை மாவட்டம் இவைகளில் எல்லாம் இவை சிறப்பாக நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன.



சாத்தூர் தாலூக்காவில் விதை கொள்முதல் செய்யும் திட்டம்.

*வினா எண். 8 திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதைக் கொள்முதல் அதிகாரிகள் இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலுகாவில் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யாமல் வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்ய சிறந்த திட்டம் வகுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:—

(அ) மற்றும் (ஆ): பருத்தி விதைகள் மட்டும், நியமனம் செய்யப்பட்ட வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றது. மற்ற விதைகளை விவசாயிகளிடமிருந்து நேரிடையாகவே கொள்முதல் செய்யப்படுகிறது.

பருத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் தங்கள் வசம் இருக்கும் பருத்தியை அரைத்து விதைகளை மட்டும் விவசாயத் துறைக்கு கொள்முதலுக்கு வழங்க முன்வருவதில்லை. எனவே நியமனம் செய்யப்பட்ட வியாபாரிகள் மூலம் பருத்தியை அரைத்து விதையை மட்டும் அவர்களிடமிருந்து துறை வாங்குகிறது.

(முற்பகல் 9.40)

திரு. சோ. அழகர்சாமி: கடந்த ஆண்டு இந்த மாதிரி விவசாயிகளால் புகார் அந்த வட்டாரத்திலே கூறப்பட்டிருக்கிறது. பருத்தி விதைமட்டுமல்ல, வேறு விதைகளும் அப்படித்தான். ஆகவே கூடுமானவரையில் விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளை அரசாங்கப் பண்ணையில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அது போதாமல் வாங்கவேண்டுமானால் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டுமென்ற உத்திரவை அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இருக்கிற விதிமுறைகள் அப்படித்தான். பருத்தியைத்தவிர, மற்ற விதைகளை நேரடியாக வாங்கவேண்டும் என்பதுதான். ஆகவே அந்த விதியை நிச்சயமாக அரசு அமல்படுத்தும்.

தஞ்சை மாவட்டத்தில் கோடைக்காலத்தில் பருத்தி பயிரிடும் திட்டம்.

*வினா எண் 9 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் கோடை காலத்தில் பருத்தி பயிரிடும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ&ஆ) தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக இல்லை. ஆனால் ஒருங்கிணைந்த பருத்தி பெருக்கத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் நெல் தரிசுகளில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, இந்த பருத்தி ஒருங்கிணைந்த திட்டத்தில் தஞ்சை மாவட்டம் மட்டுமல்லாது வேறு மாவட்டங்களும் இணைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி பருத்தி பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு இலாகா மூலமாக என்ன என்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அவர்கள் போட்டிருக்கிற மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பற்றியது. இந்தத் திட்டத்தில் 1981–82, 1982–83 ஆம் ஆண்டுகளில் இந்த பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் அமல் நடத்தப்படுகிறது என்பதையொட்டி அதனுடைய பரப்பளவு அதிகமாகி இருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது, ஒருங்கிணைந்த பருத்திப் பெருக்கத் திட்டம் மாநிலம் முழுவதற்கும் உரியது. அதன் அடிப்படையில் செய்யப்படுகிற உதவிகளைப் பொறுத்த வரையில் தனிக் கேள்வியாகப் போட்டால் எடுத்துச் செல்ல இயலும்.

**திரு. ந. சிவஞானம்.** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நெல்லுக்கு மாற்றுப் பயிராக வறட்சிக் காலத்திலே மல்பெரி சிட்ஸ் உற்பத்தி செய்வதை அரசாங்கம் ஊக்குவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** கேள்வி பருத்தியைப் பற்றியது.

**திரு. பொ. உத்திராபதி.** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஒவ்வொரு ஆண்டும் நெல் விளைச்சல் பாதிக்கப்படுவதால் ஒரு நிரந்தரமான மாற்றுத் திட்டத்தோடு பருத்தி உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தக்கைப உற்சாகத்தின் மூலமாக 1981-82 ஆம் ஆண்டில் 'எம். சி. யு. 7' என்ற ரக பருத்தி 4,636 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் 'எம். சி. யு. 7' ரக பருத்தி 7,000 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்ய அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்தப் பரப்பளவை அதிகரிக்க அரசு முயற்சி செய்யும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே பருத்தி சாகுபடி செய்வதற்கு எந்த எந்த ரகத்தை அரசு சிபாரிசு செய்திருக்கிறது? தஞ்சை மாவட்டத்திலே பருத்தி சாகுபடி செய்வதற்கு தனியாக மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, எம். சி. 7 பருத்தி இரகத்தை சிபாரிசு செய்திருக்கிறது. தனியே மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை.

**தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை.**

* வினா எண் 10—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–1981-ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(ஆ) 1981–1982-ம் ஆண்டில் வந்த ஒன்றியங்கள் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(இ) ஒதுக்கப்பட்ட குறியீட்டுப் பணம் அண்மையில் குறைக்கப்பட்டுள்ளதா?

(ஈ) இது பற்றிய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சராசரியாக சுமார் ரூபாய் 35 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டில் 150 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சுமாராக 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

(இ) இல்லை.

(ஈ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுகளில் முதலில் சராசரியாக 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒதுக்கப்பட்டது. அதற்கு பிறகு இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று சில பஞ்சாயத்து யூனியன்களில் வெட்டப்பட்டுவிட்டதன் காரணமாக பல வேலைகள் அப்படியே கிடந்து விட்டன. என்பதாக அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா? அப்படியானால் அதில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக கடையம் ஊராட்சி ஒன்றியத்தில், இதன் காரணமாக, 4, 5 பல வேலைகள் நிறைவேற்றப்படாமல் நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா? அவை நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டில் மீண்டும் கூடுதல் பணிகள் செய்வதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் அங்கேயிருக்கிற ஆட்சியாளர்களுடைய வேண்டு கோளிற்கிணங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விடுபட்டு போயிருந்தாலும் அவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் பல ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட பல வேலைகளுக்கு இன்னும் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கின்றது. செய்த வேலைகளுக்காவது பணம் பட்டுவாடா செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்த வேலைகளுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இதுவரையில் அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. எந்தெந்த ஒன்றியங்களில் பணம் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது என்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியவாறு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டிருப்பது உண்மை. இருந்தாலும் இதன்கீழ் எத்தனை வேலைகள் நடந்திருந்தாலும் கூட சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் போடப்பட்ட ரோடுகள், கட்டப்பட்ட கட்டடங்கள் பல இடங்களில் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே பராமரிப்பு வேலைகளை செய்வதற்காக பணம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்யப்பட்ட வேலைகளில் பராமரிப்பு என்பது அந்தந்த ஒன்றியங்களே செய்ய வேண்டும். பொது நிதியிலிருந்து இந்த பராமரிப்பு பணிகளைச் செய்யலாம். பொது நிதியில் பணம் இல்லையென்றால் அரசாங்கத்திடமிருந்து 'வேஸ் அண்ட் மீன்ஸ்' -ல் பணம் அட்வான்ஸாகப் பற்றுக்கொண்டு அந்த பராமரிப்புகளை செய்ய வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வேலைகளில் ஊராட்சி ஒன்றியங்களில் பல கிராமங்கள் விட்டுபோய் இருக்கின்றன. விடுபட்ட கிராமங்களிலும் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று கட்டமாக இந்த பணிகள் நடைபெற்று இருக்கின்றன, 1980-81, 1981–82 மற்றும் 1982-83. ஆகவே முதல் கட்டத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டமா 150 ஊராட்சி ஒன்றியங்களிலும், மேலும் 159 ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே எந்தெந்தக் கிராமங்களில், எந்தெந்த பணிகள் விடுபட்டுப் போயிருக்கின்றனவோ அவைகள் எல்லாம் கண்டிப்பாக எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளில் முக்கியமான பணி குடிநீர் வழங்கும் திட்டம். இந்தக் குடிநீர் வழங்கும் திட்டம் இன்னும் பல்வேறு ஒன்றியங்களில் இருக்கிற கிராமங்களில் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மையா ? அப்படி நிறைவேற்றப்படாமல் இருந்தால் அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில கிராமங்கள் என்றாலும் ஒன்றுதான். பல கிராமங்கள் என்றாலும் ஒன்றேதான். திரு. வின்சென்ட் அவர்களும் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள்.

(முற்பகல் 9.50)

திரு. கி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் நடந்த பள்ளிக்கூடங்கள், பாலங்கள், மற்றவைகளுக்குத் திட்ட மதிப்பீட்டில் சிமெண்டுக்கு ரூ. 36 என்று போட்டு, அந்த ஒப்பந்தக்காரர்களிடம் ரூ. 42 பிடித்து, பலமுறை கோரிக்கைகள் வைத்தும், எல்லோரிடமும் கூறியும் இன்னமும் அவர்களுக்குப் போதிய பணம் கொடுக்கவில்லை. அரசும் அதற்குத் தனியான நாக்கீது அனுப்பியுள்ளது. ஆனால், சேலம் மாவட்டத்தில் பல பகுதிகளில் இது போன்ற ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அதிகமாகப் பணம் பிடித்தம் செய்து அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தால், அவைகளைத் தயவுசெய்து தனியாக என்னிடத்திலே நீங்கள் கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[1983 சனவரி 27

கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் வலசைக்கல் பட்டியில் கட்டப்பட்ட ஏரி.

* வினா எண் 11—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் ஆத்தூர் வட்டத்தில் கெங்கவல்லி வலசைகல் பட்டி ஏரி கட்டப்பட்டுள்ளதால் நடூர், மால்புளி முதலான சுமார் பதினைந்து ஊர்களுக்குச் செல்லும் வழி தடுக்கப் பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மாற்று வழித்தடம் அமைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ). கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், 74 கிருஷ்ணாபுரம் ஊராட்சி வலசைக்கல் பட்டியில் பொதுப்பணித் துறையினரால் ஏரி கட்டப்பட்ட சமயத்தில் 74 கிருஷ்ணாபுரத்தில் இருந்து நடூர், மால்புளி முதலிய கிராமங்களுக்குச் செல்லும் பாதையில் சுமார் 0.60 கி. மீ. ஏரி அமைப்பில் அடங்கி விட்டது. எனவே மேற்படி பாதைத் தொடர் பாதிக்கப்படாத வகையில் 1.4.. கி. மீ. நீளமுள்ள மாற்றுப்பாதை மேற்கண்ட ஏரிக்கு கிழக்கு திசையில் மலை ஓரமாக 1981-82-ல் வறட்சி நிவாரணைத் திட்டத்தில் ரூ.7,500/ செலவு செய்து 17-6-81-ல் பணி முடிக்கப்பட்டது. இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டபடி எந்தவிதமான தடையும் எந்த ஊருக்கும் ஏற்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

* வினா எண். 12—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் துக்காச்சி கிராமத்திற்கும் நெடுஞ்சாலைக்கும் இடையில் அரசலாற்றில் ஓர் பாலம் கட்ட திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செலவிட அரசு அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பாலம் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) (ஆ) 1982—83-ம் ஆண்டில் ரூ. 1.00 லட்சம் மதிப்பீட்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் பாலம் செயல்படவுள்ளது.



1983 சனவரி 27]

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துக்காச்சி கிராமத்திற்குத் தேவையானது நடைபாலம் அல்ல. தற்போது என். ஆர். இ. பி. திட்டத்தின்கீழ் நடைபாலம் தான் போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ. 8 இலட்சம் டெபாசிட் ஒர்க்காகச் செய்வதற்காக ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட வளர்ச்சி மன்றமும் தீர்மானத்தை நிறைவேற்றி, மாவட்ட ஆட்சியாளரும் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். நான் கேட்டிருக்கிற கேள்வி அதை டெப்பாசிட் ஒர்க்காக, ஒன்றியப் பொது நிதியிலிருந்து செய்வதற்கு அரசு அனுமதிக்குமா என்பதுதான் கேள்வி. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்வதாகத்தான் திட்டமிடப் பட்டுள்ளது. ஆகவே, இதை டெப்பாசிட் ஒர்க்காக, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பதில்லை. ஆகவே, என். ஆர். இ. பி. என்று சொல்லக் கூடிய வேலைகளை எல்லாம் ஒன்று இருக்கக் கூடிய ஒன்றியங்களே செய்யவேண்டுமென்பதுதான் இப்பொழுது இருக்கிற விதிமுறைகள். அந்த விதிமுறைகளுக்கேற்ப ரூ. 1 இலட்சம் செலவிலே என். ஆர். இ. பி. ஒர்க்காக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என். ஆர். இ. பி. திட்டத்தின்கீழ் நடைபெறுகின்ற அந்தப் பாலம் குமாரமங்கலம் என்ற கிராமத்திற்கு அருகே கட்டப்படுகிறது. துக்காச்சி என்ற கிராமத்தில் ஏறத்தாழ 5,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குப் போக்கு வரத்து வசதி கிடைக்காமல், கல்வி வசதி, மருத்துவ வசதி பெற முடியாமல் ஆதிவாசிகளைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவேதான் போக்குவரத்து வசதி வேண்டுமென்ற அடிப்படையில், அங்கே ஒரு நிரந்தரமான பெரியபாலம் பேருந்துகள் செல்கின்ற அளவுக்கு பாலம் வேண்டுமென்று கேட்டு சர்வகட்சியினரும் உண்ணாவிரதம் இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரும் . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலம் வேண்டும் அவ்வளவு தானே? உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று ஏன் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். பாலத்தை மட்டும் கேளுங்கள்

திரு. செ. இராமலிங்கம்: எனவே, ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஆர். ஆர் டிவிஷன் மூலமாக, டெப்பாசிட் ஒர்க்காகச் செய்வதாக மாவட்ட ஆட்சியாளரும் உறுதிமொழி அளித்து, அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே, ஒன்றியப் பொது நிதியிலிருந்து டெப்பாசிட் ஒர்க்காக . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். ஒரு உறுப்பினருக்கு ஒரு பாலம் வேண்டுமென்பதற்காக இவ்வளவு நேரமா? கேட்க வேண்டியதைச் சுருக்கமாக கேட்கத் தெரியவில்லையே. (குறுக்கீடு) அந்த ஊருக்குப் பாலம் தேவை. ஆதிவாசி மாதிரி இருக்கிறார்கள் என்று சொன்னீர்கள் என்றால், அதிலே பல அர்த்தம் இருக்கிறது. புரிகிறது. அதற்கு மேல் எதற்கு உண்ணாவிரதம்? மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டளை, அதற்குப் பிறகு மந்திரி வரும்போது கொடுத்த விண்ணப்பம், இவ்வளவுமா கேள்வி நேரத்திலே வரும். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: இந்தக் கேள்வி துக்காச்சி கிராமத்தைப் பற்றியது. அதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. ஆகவேதான், நான் விவரமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலம் தேவை என்பது தான் கேள்வி. துக்காச்சி கிராமத்திற்குப் பாலம் தேவை என்பது கேள்வி அதைச் செய்கிறாரா இல்லையா என்பதை மட்டும் கேளுங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: இதுபற்றிய முழு விவரமும் அரசுக்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. நான் பதில் சொல்லிவிடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: நான் கேள்வியைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் கேட்ட கேள்வி போதும். இந்தக் கேள்வியின் நோக்கம் எனக்கே புரிகிறது. எனவே, விவாதத்திற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு. செ. இராமலிங்கம்: சர்வகட்சியினரும் சம்பந்தப்பட்டிருக்கின்ற பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்வ கட்சி என்பதால் முக்கியத்துவம் வந்துவிடாது. மக்களால்தான் அது முக்கியத்துவம் பெறும்.

திரு. செ. இராமலிங்கம்: சரியான விடை கிடைக்காததால் நான் வெளிநடப்பு செய்கிறேன்.





(திரு. செ. இராமலிங்கம் வெளிநடப்பு செய்தார்)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டதாகும். ஏற்கனவே அரசலாற்றின் குறுக்கே இரண்டு வண்டிகள் செல்லும் அளவிற்கு மிகப் பெரிய பாலம் ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்திலேயே இன்னொரு பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டார்கள். அந்தக் கிராமத்தில் ஒரு வண்டி, கால்நடைகள் செல்லும் அளவிற்கு வண்டிப் பாலமாக ஒரு இலட்சம் ரூபாயில் திட்டத்தில் கட்டுவதற்கான இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இங்கே மீண்டும் பெரிய பாலம் கட்ட வேண்டுமென்றால் அதற்கான நிதி வசதி நம்மிடத்திலே இல்லை.

நடமாடும் காசநோய் மருத்துவமனைகள்

*வினா எண். 13 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடமாடும் காசநோய் மருத்துவமனைகள் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காசநோயால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நீண்ட நாட்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால் ஓரளவிற்கு அந்த நோய் குணமடைந்ததும் அந்த நோயாளிகள் சிகிச்சையை நிறுத்தி விடுவதால் அவர்களுக்கு மீண்டும் சிகிச்சை அளிக்கும் வகையில் இப்படிப்பட்ட நடமாடும் காசநோய் மருத்துவமனைகளை நிறுவி கிராமங்கள் முழுவதும் சென்று சிகிச்சை அளிப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது 5 மொபைல் மொபைக்கல் யூனிட்டுகள் இருக்கின்றன. தாம்பரத்தில் ஒன்று மிகவும் செம்மையாகச் செயலாற்றிக்கொண்டு வருகிறது. நீண்ட நாட்களாக—ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக—செயலாற்றிக்கொண்டு வருகிறது. அது மட்டும் அல்ல, சேலம், பெரியார், மதுரை, திருநெல்வேலி, வடஆர்க்காடு மாவட்டங்களில் கூட இந்த நடமாடும் மொபைல் யூனிட்டுகள் என்ற நடமாடும் காசநோய் மருத்துவமனைகள் துவக்கிச் செயலாற்ற ஆயத்தமாக இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மாநிலம் முழுவதும் காசநோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுத்

கின்றவா? இந்தக் காசநோய் ஒருவருக்கு ஏற்பட்டால் அது மற்றவர்களுக்கும் பரவும் என்று சொல்கிறார்கள். எனவே, கிராமங்களுக்குச் சென்று மொத்தமாக சிகிச்சை அளித்து இந்தக் காசநோயை ஒழிப்பதற்கான சிறப்புத் திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசநோயைப் பொறுத்தவரையிலே ஆரம்பக் கட்டத்திலேயே அதைக் கவனிப்பது மிகவும் அவசியமாகும். ஆகவே, ஒரு இன்டென்சிவ் சர்வே என்று ஏறத்தாழ 4, 5 ஆண்டுகளுக்கு எடுக்கப்பட்டு கண்டுபிடிக்கப்படுகிறது. யார் யாருக்கு இந்தக் காசநோய் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து 1980 ஆம் ஆண்டில் அதற்காக பி.சி.ஜி. வேக்சின் 13,15,230 கொடுக்கப்பட்டுள்ளது. 49,456 பேருக்கு புதிதாக டி.பி. கேசஸ் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரம் இருக்கிறது. 1981 ஆம் ஆண்டில் 13,59,715 டோஸ்—ஒருவருக்கு மூன்று முறை கொடுக்க வேண்டும்—பி.சி.ஜி. டோசஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல நடவடிக்கைகளின் மூலம் வியாதி வருவதற்கு முன் தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட காசநோய்க் கழகங்கள் என்ற அமைப்புகளின் மூலம் நடமாடும் யூனிட் வாங்க வேண்டுமென்று தீர்மானம் செய்து விண்ணப்பம் அனுப்பியிருந்தும், சரியான ரோடுகள் இல்லாததால் வண்டிகள் செல்ல முடியாது, அதில் சென்றால் வண்டிகள் பழுதடைந்து விடும் என்று சொல்லி மறுத்திருக்கிறார்கள் என்ற விவரம் அமைச்சருக்குத் தெரியுமா? நெசவாளர்கள் அதிகம் வாழும் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் அதிகமான அளவிற்கு ஏழைத் தொழியாளர்கள் இருக்கிறார்கள். எனவே இதுகுறித்து பரிசீலித்து அவர்களுக்கு அதிக வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் டிஸ்டிரிக்ட் டியூபர்குலோசிஸ் ஆபிசர் என்று ஒரு ஆபீசரை சிவில் சர்ஜன் அளவில் நியமித்திருக்கிறோம். அவர் மற்ற மருத்துவமனைகளைச் சென்று பார்க்கும் அளவுக்குப் 'பவர்' கொடுத்திருக்கிறோம். அது மட்டுமல்ல. இவர்கள் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சென்று அங்கே என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன என்பதைக் கண்காணித்து வருகிறார்கள். மேலும் அந்த மாவட்ட காசநோய் மருத்துவ அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்டத்தி



இன்டென்சிவ் ஸ்கீமை எடுத்து, எந்தெந்தப் பகுதியிலே நோய் அதிகமாக இருக்கின்றது என அறிந்து அவர்களுக்கு பி.சி.ஜி. கொடுக்கின்ற நேரத்திலே அந்த நோயாளிகளைப் பரிசோதனை செய்து, அந்த நோய் அவர்களுக்கு ஆரம்ப நிலையிலே இருக்கின்றதா என்று பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்னும் சில மொபைல் யூனிட்டுகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்கிறார்கள். அது மிகவும் நியாயமான கோரிக்கை. அது நிதிநிலைமையைப் பொறுத்து ஆராயப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசநோயால் நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நெசவாளர்களின் காசநோயைத் தீர்க்கின்ற வகையில் குறிப்பாக தனிக் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? இதுபோன்ற நடமாடும் மருத்துவ ஊர்திகளை அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த 5 நடமாடும் காசநோய் மருத்துவ மனைகளை ஏற்படுத்தியதே இந்த நெசவாளர்களுக்கு இருக்கக் கூடிய ஹாண்ட்லூம் வீவர்சுகளுக்கு அந்தப் பகுதியை கவனிப்பதற்கும், பீடித் தொழிலாளர்களைக் கவனிப்பதற்கும்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த 5 மாவட்டங்களில் பணிகள் விரைவில் முடிந்துவிடும். அப்படி முடிந்த பின்னர் அதே மொபைல் யூனிட்டுகள் மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் சென்று இன்டென்சிவ் டிரீட்மென்ட் கொடுக்கும் வாய்ப்பிருக்கிறது.

திரு ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, முன்பெல்லாம் இந்தக் காசநோயாளிகள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டால் அவர்களுடைய நோய் குணம் ஆகும் வரையில் வைக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் இப்போது அவர்களை ஒரு நாள், இரண்டு நாள் வைத்திருந்து, அந்த நோய் குணமாகாமல் இருக்கும் போது வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்படி இல்லாமல் முன்புபோல நோய் குணமாகும் வரையில் அல்லது சில மாதங்களாவது வைத்து மருத்துவம் செய்து குணப்படுத்தி அனுப்ப ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, காசநோயைப் பொறுத்தவரையிலே ஒரு காலத்திலே அதற்கு சானடோரியம் டிரீட்மென்ட்தான் அவசியம். வேறு வழியே இல்லை என்ற சித்தாந்தம் இருந்து கொண்டு வந்தது. அந்த முறை இப்போது மாற்றப்பட்டு வருகிறது. வெளி புறநோயாளிகளாகவே சிகிச்சை செய்வதற்கு புது முறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உலக சுகாதார நிறுவனம் இந்த நோயாளிகளை இன்பேஷன்ட்டாக வைத்து கொள்ளாமல் அவுட் பேஷன்ட்-

ஆக வைத்துக் கொண்டு வாரத்திற்கு ஒரு முறை வைத்தியம் செய்ய வேண்டும் என்று சொல்லி இருந்தாலும் கூட, அதை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், இங்கே இருக்கின்ற பொருளாதார சூழ்நிலை காரணமாக, இது சாத்தியம் இல்லை என்ற நிலையில்—உலக சுகாதார நிறுவனத்தின் சித்தாந்தத்திற்கு சற்று மாறாக, அந்த நோயாளிகளை மருத்துவ மனையிலே அனுமதித்து சிகிச்சை செய்து கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு .இ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவர் அவர்களே, காசநோய் நெசவாளர்களுக்குத்தான் அதிகமா வருகிறது. அவர்களுக்காக மொபைல் யூனிட் போடப்பட்டிருப்பதாக தெரிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே அப்படிப்பட்ட மொபைல் யூனிட்டை தஞ்சை மாவட்டத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்யப் படுமா? மேலும் அங்கே உள்ள செங்கிப்பட்டி சானடோரியம் சரியாக நடந்தாலும் கூட, அரசாங்க உதவி அதிகமாக இல்லை என்ற காரணத்தினால் அது சரியாக நடக்கவில்லை. அதற்கு அரசு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை)

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, காசநோய் வருவதற்குக் காரணமே அவர்களுடைய உடலில் சரியான உணவு ஊட்டம் இல்லாமல், பலவீனமாக இருப்பதால்தான். இங்கே டொமிசிலரி டிரீட்மெண்ட் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். ஆனால் அவர்களுடைய உணவின்மை காரணமாக, அவர் வீட்டிலே இருந்தாலும் சரி அல்லது மருந்து சாப்பிட்டாலும் கூட எந்தவிதமான பயனும் இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவரின் சத்துணவுத் திட்டத்தை இந்த காசநோயாளிகளுக்கு விஸ்தரிப்பதற்கு சிபாரிசு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே நம்முடைய இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குப் பதில் சொல்லும் போது தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். அதிலே டபிள்யூ எச். ஓ டொமிசிலரி டிரீட்மெண்ட் கொடுக்கவேண்டும் என்று சொன்னாலும் கூட, நாம் அதை ஏற்றுக் கொள்ளாமல் சானடோரியா டிரீட்மெண்ட் கொடுக்கவேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறோம். ஏனென்றால் அவர்களை வீட்டுக்கு அனுப்பினால் சரியாக சாப்பாடு கிடைப்பது கஷ்டம். We have deviated from the suggestions and directions given by the World Health Organisation.

அதற்கு மாறுபட்டு நாம் சானடோரியம் டிரீட்மெண்ட் வேண்டும் என்ற அளவில் ஆங்காங்கே படுக்கைகளை விஸ்தரித்துக் கொண்டு வருகிறோம் என்பதை தவிர; வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனை.

*வினா எண். 14 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனையில் படுக்கை வசதிகளோடு கூடிய டி.பி.வார்டு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: 34 படுக்கைகள் கொண்ட ஒரு காச நோய் வார்டு ஏற்கனவே இங்கு உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாநகரில் பெரிதும் நெசவாளிகள் இருக்கின்ற காரணத்தால் அந்தத் தொழில் செய்கின்றவர்கள் அதிகமாக அந்த நோய்க்கு ஆளாக்கப்படுகிறார்கள். அங்கே இருக்கின்ற அந்த வார்டு போதுமான வசதிகள் கொண்டதாக இல்லை. கூடுதலான படுக்கை வசதிகள் பெற நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தினுடைய தலைநகரமாக காஞ்சிபுரம் விளங்கிக் கொண்டுவருகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 776 படுக்கைகள் கொண்ட டி.பி. சானிடோரியம் குரோம்பேட்டை தாம்பரத்திற்கு இடையிலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் செங்கற்பட்டு வேலூர் மருத்துவமனையில் 10 எமர்ஜென்சி டி.பி. படுக்கைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் திருப்புக்குழி உத்திரமேரூர், பரனூர், அய்யம்பேட்டை, சாலவாக்கம் பகுதிகளிலே டி.பி. சிகிச்சை செய்வதற்காக வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் நடமாடும் மருத்துவமனை அங்கே தாம்பரத்திலே இருக்கிறது. இதற்கு முன்பு எழுப்பப்பட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஆகவே செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களை விட நல்ல சாதகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் என்னுடைய கேள்வியில் காஞ்சிபுரம் தாலுக்காவில் மட்டும்தான் கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பேர்கள் நெசவாளத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நடவடிக்கைகள் எடுப்பாரா என அறியவிரும்புகிறேன்.

[1983 சனவரி 27

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே,
அதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும்
துரித நடவடிக்கை எடுக்கப்படும். நடமாடும் காச நோய் மருத்
துவமனை மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பகுதிக்கு நிச்சய
மாக அனுப்பப்படும் என்று ஒரு உறுதியாகச் சொல்லிக்
கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்காகவும், கைத்தறித்
தொழிலாளர்களுக்காகவும் வேண்டி காச நோய் மருத்துவமனை
அதிகமாக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
வடஆற்காடு மாவட்டத்திலே உள்ள காச நோய் மருத்துவமனை
யில் பீடித் தொழிலாளர்களுக்காக மத்திய அரசினால் வழங்கப்
படும் செஸ்ஸிலிருந்து தனி வார்ட் அமைக்க வேண்டும் என்று
மத்திய அரசு கூறியிருக்கிறார்களே, அதற்கு அரசு உடனடியாக
உதவி செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர்
அவர்களே, தற்போது மாவட்ட மருத்துவமனை அதற்கு
ஏற்பாடு செய்து கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல்
தனியாக வேலூர் மாநகரத்திலே ஒரு டி.பி. ஆஸ்பிடல் செயல்
பட்டுக்கொண்டு வருகிறது. இந்த மாவட்டத்தை டிஸ்டிரிக்ட்
டியூபர்குளோசிஸ் ஆபீசர் அவர்களை வைத்து எல்லாப் பகுதி
களிலும் ஸ்கிரினிங் செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட
சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 15—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார
நிலையம் என்பதை தளர்த்தி தேவைப்படும் இடங்களில் மேலும்
சுகாதார நிலையங்கள் துவங்க அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) இதுவரை எத்தனை ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேற்
பட்ட சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன?



1983 சனவரி 27]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஒவ்வொரு ஒன்றியத்
திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவது என்பது
அரசின் கொள்கையாகும். தேவையைப் பொறுத்து கூடுதலாக
ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஏற்
படுத்த தடை ஏதுமில்லை.

(ஆ) 30 ஊராட்சி ஒன்றியங்கள். இவை ஒவ்வொன்றிலும்
இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையம் மக்கள்
தொகை அடிப்படையில் தான் கொடுக்கப்படுகிறதா? அப்படி
என்றால் 1 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட
ஒன்றியங்களுக்கு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க
அரசு உதவுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு
ஆரம்ப சுகாதார நிலையங்களின் கீழ் இயங்குகின்ற துணை
மையங்கள் 10 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு மையம் என்று
இருப்பதை தளர்த்தி நோய்த்தடுப்பு முறைகள் (பிரிவென்ட்டிவ்
மெஷர்ஸ்) தீவிரமாக எடுக்கிற வகையில் 5 ஆயிரத்திற்கு ஒரு
துணை மையம் என்று கொள்கை ரீதியில் அரசு ஒப்புக்கொண்
டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்
பொறுத்தவரையில், 5000 ஜனத்தொகை உள்ள இடங்களில்
எல்லாம் சப்-சென்டர்கள்-அதாவது தாய் சேய் நல நிலையங்கள்
ஏற்படுத்தவேண்டும் என்பது லட்சியமாகும். இந்த லட்சியத்தினை
அடைய எல்லா மாநிலங்களையும் விட, தமிழகம் தான் வெகு
வேகமாக முன்னேறிக் கொண்டு இருக்கிறது. ஏனென்றால்,
தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நாம் ஏராளமான சப்-
சென்டர்களை தாய்—சேய் நல நிலையங்களை ஏற்படுத்தியிருக்
கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தின்
அடிப்படையிலும் கிளை நிலையங்களை நாம் ஏற்படுத்த
இருக்கிறோம். அதே நேரத்தில் சில ஒன்றியங்களில் இரண்டாவது
ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டிய நிலைமைகள்
இருக்கின்றன. அங்கேயெல்லாம் தண்ணீர் வசதி இருக்கு
மானால், மற்றும் பல்வேறு சௌகரியங்கள் இருக்குமானால்,
அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நாம் இரண்டாவது
ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து ஒரு முடிவுக்கு
வருகிறோம். அந்த வகையில் இது ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இனாமாக அந்தப் பகுதியில் நிலம் தரப்படவேண்டும், ஒரு குறிப்பிட்ட தொகை நிதியாக அந்தப் பகுதி மக்களால் தரப்படவேண்டும் என்று விதியிருக்கிறதா? அப்படியிருப்பினும், என்னுடைய தொகுதியான தொண்டாமுத்தூரில் 1,20,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் நிலத்தையும் இனாமாகத்தந்து, ஒரு குறிப்பிட்ட தொகையையும் அரசுக்குக் கட்டச் சம்மதித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்களின் கோரிக்கையை அரசு பரிவோடு கவனிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கொடுப்பது, பணம் கொடுப்பது ஆகியவை யெல்லாம் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு வைக்கப்பட்டுள்ள பல்வேறு விதிமுறைகளில் ஒன்றாக இருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் அந்தக் கருத்து நிச்சயமாக ஆராயப்படும்.

திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருப்பதாகச் சொன்னார்கள். பூவிருந்தவல்லியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அவர்களே கூட, கடந்த ஆண்டு இதுகுறித்து வாக்குறுதி கொடுத்தார்கள். இதுவரையில் அது நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. அது மட்டுமல்ல, பொதுமக்கள் கட்ட வேண்டிய தொகையும் கட்டப்பட்டு விட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் 5000 ஜனத்தொகையுள்ள இடங்களில் சப்சென்டர்கள் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. அங்கெல்லாம் டாக்டர்களைப் போடுவதற்கு, அந்தப் பதவிகளை நிரப்புவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் குறிப்பிட்டது, சப்சென்டர்கள், இளை நிலையங்கள் அதாவது தாய் சேய் நிலையங்கள் அமைப்பதை



பற்றியதாகும். அங்கே எல்லாம் ஸ்டாப் கம்ப்ளீட்டாக நிரப்பப் பட்டு இருக்கிறது. ஆனால், ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு காரணங்களினால், 3 டாக்டர்கள் இருக்கவேண்டிய இடங்களில் 2 டாக்டர்கள் இருக்கிறார்கள். இந்தப் பிரச்னை வெகு சீக்கிரமாகத் தீர்க்கப்படும். மேலும் 1,000 டாக்டர்களை நாம் சர்வீஸ் கமிஷன் மூலம் எடுக்க இருக்கிறோம். அப்போது இந்தப் பிரச்சினை நிச்சயமாக நீங்கி விடும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் சென்ற ஆண்டில் எத்தனை விரிவுபடுத்தப்பட்டன? இந்த ஆண்டு எத்தனை விரிவு படுத்தப்படவுள்ளன? இந்தத் திட்டம் தொடருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற இரண்டு ஆண்டுகளில், ஆண்டுதோறும் 15 ஆரம்ப சுகாதார நிலையங்கள் விரிவுபடுத்துவது என்ற அடிப் படையில், இதுவரையில், 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. இந்த ஆண்டைப் பொறுத்த வரையில். பட்ஜெட்டில் எல்லா விவரங்களும் வர இருக்கின்றன.

திரு. க. பாரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேலாக உள்ள ஒன்றியங்களில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். இப்படிச் செய்வதற்கு, ஜனத்தொகையை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், அந்தப் பகுதியின் பரப்பளவு, மற்றும் அங்கேயுள்ள பிற வசதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பெரிய அளவில் உள்ள ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா? அதோடு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க பல்வேறு இடங்களில் தண்ணீர் வசதி, இட வசதி எல்லாம் இருக்கின்றன. ஆகவே, அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, தன்னிறைவுத்திட்டம் அமல்படுத்துவதுபோல் — ஒரு ஃபேஸ்ட் புரோக்கிராம் என்ற முறையில் எல்லா ஒன்றியங்களை யும் கவர் செய்யும் முறையில் இந்தத் திட்டத்தை அமைப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னமாதிரி இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஜனத்தொகை மட்டுமே ஒரு அளவுகோல் அல்ல. அங்கேயிருக்கக்கூடிய பிற வசதிகளும் கவனிக்கப்படு கின்றன. அந்த ஒன்றியம் ஒரு பிற்படுத்தப்பட்ட ஒன்றியமாக இருந்தால், அங்கே வேறு எந்தவிதமான சௌகரியமும் இல்லை என்று தெரிந்தால், அங்கே இது அமைக்கப்படுகிறது. மாண்பு மிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததுபோல், பரப்பளவு ஜாஸ்தி யாக இருக்கிறது. ஏரியா பரவலாக இருக்கிறது மற்றும் பல் வேறு நியதிகள் இருக்கின்றன என்கின்ற எல்லா குறிக்கோள்களும் ஒட்டுமொத்தமாக இருக்குமானால், அந்த அடிப்படையில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தி வருகிறோம்.

## அரசு போக்குவரத்துக் கழகங்களில் வசூல் போனஸ் வழங்கும் திட்டம்.

* வினா எண் 16—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர் நடத்துனர்கட்கு வசூல் போனஸ் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்தப் போக்குவரத்துக் கழகங்களில் எவ்வளவு வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக மற்ற அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில், மாவட்ட வழித்தடங்களில் (Mofussil routes) இயக்கப்படும் பேருந்துகள் அன்று ஈட்டும் வருவாயில் 2.2 சதவிகிதம், அந்தந்தப் பேருந்துகளின் ஓட்டுநருக்கும் நடத்துனருக்கும் சமமாக பகிர்ந்து அளிக்கப்படுகிறது. மேலும் பாண்டியன், சோழன், சேரன் மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகங்களின் நகர்ப்புற வழித்தடங்களில் (Town routes) தினசரி ஈட்டும் வருவாயில் 3 சதவிகிதமும் பல்லவன் புறநகர் மற்றும் பெருநகர் மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களின் நகர்ப்புற வழித்தடங்களில் 3.5 சதவிகிதமும் அவ்வண்ணமே ஓட்டுநர் நடத்துனருக்கு சமமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் தினசரி வசூலில் 0.67 சதவிகிதம் ஓட்டுநர் நடத்துனர்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர், நடத்துனர்களுக்கு வழங்கப்படுகின்ற வசூல் போனஸ் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் மாறுபட்டு இருக்கிறதே. அதை எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரே மாதிரியாக வழங்க அரசு முன்வருமா? அதோடு வழங்கப்படுகிற படி போதுமானதாக இல்லை; அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்கப்படுகிறதே; அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மற்ற போக்குவரத்துக் கழகங்களைவிட மாறுபட்டு இருப்பதால் அவர்களுக்கு வழங்கப்படும் வசூல் போனஸ் சற்று வேறுபட்டு இருக்கிறது. மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகத்தான் கொடுக்கப்படுகிறது. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் சிறிது உயர்ந்திருக்கிறது. அதைக்



குறைப்பதற்கான எண்ணம் அரசுக்கு இல்லை. மேலும் இந்த வசூல் போனஸ் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று யாரும் சொல்லவில்லை. 6 மாதங்களுக்கு முன்னால் அப்படிச் சொன்னார்கள். அதன் பிறகு கட்டணம் ஓரளவுக்கு உயர்த்தப்பட்டிருப்பதால் வசூல் போனசும் உயர்ந்திருக்கிறது. இருந்தாலும் அதுபற்றி கோரிக்கை வரும்போது அரசாங்கம் கனிவோடு பரிசீலனை செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, கும்பகோணத்தில் இருக்கிற சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கொடுக்கப்படுகிற வசூல் போனஸ் குறைவாக இருக்கிறது; அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சேரனும் அதையேதான் கொடுக்கிறது; அண்ணாவும் அதைத்தான் கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது சோழன் மட்டும் உயர்த்திக்கொடுப்பது நியாயமில்லை.

## புதிய நகர்ப்புற பேருந்துகள் விடும் திட்டம்.

* வினா எண் 17— திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய நகர்ப்புற பேருந்துகள் எந்த அடிப்படையில் விடப்படுகின்றன?

(ஆ) முடிவு எடுக்கும்போது மக்கள் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) பொதுமக்களிடமிருந்து நகரப் பேருந்து விடுமாறு கோரி வரப்பெற்ற மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தின் முக்கியத்துவம், மக்கள் தொகை இவற்றைக் கணக்கிட்டு, தேவையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்ட பின்பு புதிய நகர்ப்புற பேருந்துகள் விடுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

திரு. கே. நாராயணசாமி: தலைவரவர்களே, சில முனிசிப்பாலிட்டிகளுக்கு டவுன் பஸ் விடப்படுகிறது. மேஜர் பஞ்சாயத்துக்கும் டவுன் பஸ் விடப்படுகிறது. ஆனால் எங்களுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் மேஜர் பஞ்சாயத்துக்கு டவுன் பஸ் விடப்

படவில்லை. அங்கே டவுன் பஸ் விடவேண்டுமென்று கோரிக்கை
வைத்திருக்கிறார்கள். அது இன்னும் பரிசீலிக்கப்படவில்லை;
அரசாங்கம் அதைப் பரிசீலித்து கீழ்ப்பெண்ணாத்தூர் மேஜர்
பஞ்சாயத்துக்கு டவுன் பஸ் விட ஆவன செய்யுமா என்று அறிய
விரும்புகின்றேன்.

(முற்பகல் 10.20.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான்
பதிலிலே முன்பே சொல்லியதைப்போல எங்கெங்கே என்னென்ன
தேவைகள் இருக்கின்றனவோ, அவைகள் பரிசீலிக்கப்பட்டு,
அந்தந்த தேவைகளுக்கேற்ப அந்தத் தேவை நிச்சயமாக அங்கே
இருக்குமானால், நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும்.

திரு. கே. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,
டவுன் வண்டிகளைப் பொறுத்தவரை, சாதாரணமாக 30 கிலோ
மீட்டர் அளவுதான் விடப்படுகின்றன. சில பகுதிகளில் இந்த
30 கிலோ மீட்டர் அளவையும் தாண்டி விடப்படுவது அரசுக்குத்
தெரியுமா? அப்படி இருந்தால் அதை தடுத்து நிறுத்துவதற்கான
நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்
வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
அப்படிப்பட்ட நிலைமை இருப்பதாக தகவல் கிடைக்கப் பெற
வில்லை. ஒருவேளை அப்படி இருந்தாலும் கூட, உறுப்பினர்
அவர்கள் ஒத்துழைத்தால் நிச்சயமாக அதனை களைய முடியும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சில வழித்
தடங்கள் முக்கியமான வழித்தடங்களாக இருந்தும் கூட,
மக்களுக்குத் தேவையான வழித்தடங்களாக இருந்தும் கூட,லாபம்
கிடைக்கவில்லை என்ற காரணத்தால் சில போக்குவரத்துக்
கழகங்கள் அந்த வழித் தடங்களில் பேருந்துகள் விடுவதற்கு
மறுக்கின்றனவே, அது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்
கிறதா? அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி மக்களுக்குத்
தேவையான வழித்தடங்களில் பேருந்துகளை விடுவதற்கு
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேருந்துகளே இல்லாத
வழித்தடங்கள் எங்கே இருந்தாலும் அவைகளில் வருவே
கிடைக்கவில்லை என்றாலும் கூட, எந்த போக்குவரத்துக்
கழகமும் அங்கே பேருந்துகளை விடுவதற்கு மறுப்பதில்லை.
ஒருவேளை ஏற்கெனவே அங்கே சில வழித்தடங்களில் பேருந்துகள்
விடப்பட்டிருக்குமானால், மேலும் புதிய பேருந்துகளை விடுவதற்கு அனுமதி கேட்கப்
பட்டிருக்குமானால், அது தேவையில்லை என்ற கருத்தில் மறுக்கப்
பட்டிருக்கலாம்.





திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர்
அவர்களே, நகரப் பேருந்துகள் விடப்படுகிற நேரத்திலே எந்தத்
தொகுதியிலேயானாலும், இடைத்தேர்தல் நடந்தாலும் சரி,
நடக்காவிட்டாலும் சரி அந்தத் தொகுதியிலே இருக்கிற உண்மை
யான தேவைகளின் அடிப்படையில், அந்தப் பகுதி
யிருக்குமேயானால் அந்தத் தேவையை உத்தேசித்து
பேருந்துகள் விடப்படவேண்டும். எதற்கு சொல்கிறேன்
என்றால், சமீபத்தில் பெரியகுளம் நாடாளுமன்ற இடைத்
தேர்தல் நடைபெற்ற சமயம் அங்கே நிறைய பேருந்துகள் விடப்
பட்டதை அனைவரும் அறிவர். (மேஜையடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பு நடந்து முடிந்த
சம்பவங்கள் திரும்பவும் வேண்டாம். குற்றச்சாட்டுகளும்
கேள்வி நேரத்தில் கூடாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: குற்றச்சாட்டிற்காகச் சொல்ல
வில்லை. புதிய பேருந்துகள் எங்கேயானும் விடவேண்டுமானால்,
அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சரிடம்
இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, மக்களுடைய தேவைக்
கேற்ப தேவைப்படும் இடங்களில் பேருந்துகளை விடுவதற்கு
அந்தந்த கார்ப்பரேஷன் மேனேஜிங் டைரக்டர்களிடமே புதிய
பேருந்துகள் விடுவதற்கான அனுமதி அளிக்க உரிமை, வாய்ப்பு
இருந்தால் நலம். அதனை அரசாங்கம் முயன்று செயல்படுத்துமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
உறுப்பினர் அவர்கள் சொல்லியதிலேயே பதிலும் அடங்கியிருக்
கிறது. எல்லா இடங்களுக்கும் சமமாக கொடுக்க வேண்டும்
என்பதற்காகத்தான் கண்காணிப்பாக பார்த்துக் கொண்டிருக்
கிறோம். தொகுதியைப் பொறுத்து எந்தப் பாரபட்சமும்
இல்லை. ஒட்டுமொத்தமாக எல்லா இடங்களுக்கும் விட
வேண்டும் என்றுதான் அரசு முயன்று வருகிறது. பெரியகுளத்தில்
அதிகமாக விடப்பட்டிருப்பதாக அவர் சொல்கிறார். இந்த
அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பிறகு 4,000 பேருந்துகளை
அதிகமாக விட்டிருக்கிறது. அத்தனையும் பெரியகுளத்தில்
தான் ஓடுவதாக அவர் சொல்கிறாரா? பேருந்துகளின்
எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் எந்த
விதத்திலும் பாகுபாடு இல்லாமல் செய்து கொண்டிருக்கிறோம்
என்பதை அனைவரும் உணரலாம் என்று கருதுகிறேன்.
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
சித்தன் போன்றவர்கள் மற்றவர்களுக்கு வழி காட்டியாக
இருக்கவேண்டும். ஒரு உப கேள்வியைத்தான் அனுமதிக்க
முடியும் என்பது உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். மூலக்
கேள்வி கேட்டிருந்தால் இரண்டு உப கேள்விகள் [illegible] அனுமதித்

திருக்க முடியும். தாங்கள் இரண்டாவது கேள்வி கேட்க வேண்டும் என்றால், அதை பின்னால் இருப்பவர்களும் பின்பற்ற முனைவார்கள்.

திரு. க. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளில் கூட்டம் அதிகமாக இருப்பதால், ஒரு கண்டக்டருக்குப் பதிலாக இரண்டு கண்டக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கூடுதல் பேருந்துகளைப் பற்றியது. கூடுதல் நடத்துனரைப் பற்றியது அல்ல.

**Taxi and Auto Drivers demanding excess fares in Madras.**

*Q. No. 18: THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware that Taxies and Auto-rickshaws drivers are squeezing passengers at Central Station and Egmore Station in Madras; and

(b) the steps taken to put down this menace?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சென்னை எழும்பூர் மற்றும் மத்திய இரயில் நிலையங்களில் பிரயாணிகளிடம் அதிக கட்டணம் கேட்கும் சில டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதனை செயல்படுத்துவதற்காகப் போக்குவரத்து இலாகாவில் உள்ள சோதனைக் குழு மோட்டார் வாகன ஆய்வாளர்கள் டாக்சிகளையும் ஆட்டோ ரிக்ஷாக்களையும் திடீர் சோதனை செய்ய வாராந்திர வேலை முறைப் பட்டியல் தயார் செய்கிறார்கள். அதன்படி மோட்டார் வாகன ஆய்வாளர்கள் இரயில் நிலையத்தில் இரயில் வரும் எல்லா நேரங்களிலும் இருந்து டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களின் நடத்தைகளைக் கண்காணிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மீது குறிப்பிட்ட புகார்கள் கொடுக்கப்பட்டால் அதனை பரிசீலித்து ஓட்டுநர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, இப்படி பிரயாணிகளை துன்புறுத்தும் நிலைமை சென்னை எழும்பூர் மற்றும் மத்திய ரயில் நிலையங்களில் எல்லாம் இருப்பது முற்றிலும் உண்மை. ... சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால்கூட



டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஒட்டுநர்கள் வர மறுக்கிறார்கள். இன்று காலையில் கூட ரயில் நிலையத்தில் அவ்வாறு எனக்கு எந்த வாகனமும் கிடைக்கவில்லை. நான் ஒரு எம்.எல்.ஏ. என்று சொன்னாலும் கூட வர மறுத்துவிட்டார்கள். பிறகு ஒரு போலீஸ்காரரை அணுகி உதவி கேட்டதும், அவர் வந்து உதவி டாக்சி பிடித்து அனுப்பினார்..... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் விளக்கங்கள் வேண்டாம். டாக்சி கிடைத்தது அல்லவா? போலீஸ்காரர் பிடித்து கொடுத்துவிட்டார் அல்லவா? இன்னமும் இதில் என்ன பிரச்னை. உட்காருங்கள்.

**பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஜனதா இன்சூரன்ஸ் திட்டம்.**

*வினா எண். 19—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஜனதா இன்சூரன்ஸ் திட்டம் அமுல் நடத்தப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) ஜனதா இன்சூரன்ஸ் திட்டத்தில் சேருவதற்கு 10 முதல் 65 வயதுக்குள்ளானவர்கள் தகுதியுடையவராவார்கள். ஆரம்ப காலத்தில் ஆண்டு சந்தா ரூ.10 வசூலிக்கப்பட்டது. அப்போது மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு நட்ட ஈட்டுத் தொகை ரூ. 10,000 ஆக இருந்து வந்தது. தற்பொழுது வருட சந்தா ரூ. 12 வசூலிக்கப்படுகிறது. தற்போது விபத்தில் மரணம் அடைந்தாலோ/இரண்டு கண்களும் சேதமடைந்தாலோ/ இரு கைகள்/கால்கள் அல்லது ஒரு கால், ஒரு கை மற்றும் ஒரு கண் சேதமடைந்தாலோ ரூ. 15,000 நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்படுகிறது. தவிர ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் நிரந்தரமாக சேதமடைந்தாலோ ரூ. 7,500 நட்ட ஈட்டுத்தொகை பெற வழிவகையுள்ளது.

**மண்டல கால்நடைப் பராமரிப்பு அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள ஸ்பெஷலிஸ்டுகள்.**

*வினா எண். 20—திரு. மா. சுப்பிரமணியன் மற்றும் திரு. இரெ. இராமமாணிக்கம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டல கால்நடை பராமரிப்பு அலுவலகங்களில் ஸ்பெஷலிஸ்டுகள் (Specialists) என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

(ஆ) அவர்கள் எந்தெந்த விஷயங்களில் "ஸ்பெஷலிஸ்ட்" ஆக உள்ளார்கள்?

(இ) ஸ்பெஷல் பதவிகளால் செய்யப்பட்டு வருகின்ற பணிகள் யாவை?

(ஈ) அத்துறையில் நோய் ஆய்வுப் பிரிவு (Intelligence Unit) என்று இயங்கி வருகிறபோது இந்த அதிகாரிகளும் அவசியமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) முதல் (ஈ) வரை: விவரமான அறிக்கை * ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் ஆய்வுப் பிரிவு என்பதில் ஸ்பெஷலிஸ்ட்ஸ் என்ற முறையில் பிரித்து பணி செய்ய அனுமதிக்கப்படுகின்றனரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையில் ஸ்பெஷலிஸ்ட்ஸ் என்ற வகையில் கால்நடை பராமரிப்புத் துறை வல்லுநர் ஒருவரும், கோழி அபிவிருத்தி வல்லுநர் ஒருவரும், நோய் புலனாய்வு வல்லுநர் ஒருவரும் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் இந்தத் துறையில் எவ்வளவு ஸ்பெஷலிஸ்ட்ஸ் உள்ளனர். அடுத்து எவ்வளவு மண்டலத்தில் எத்தனை ஸ்பெஷலிஸ்ட்கள் இருக்கின்றனர் என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் 12 ஸ்பெஷலிஸ்ட்ஸ் இருக்கிறார்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு ஸ்பெஷலிஸ்ட் விதம் வேலூர் நோய் புலனாய்வுப் பிரிவில் ஒரு வல்லுநரும், தஞ்சாவூர் நோய் புலனாய்வுப் பிரிவில் ஒரு வல்லுநரும் ஆக மாத்தம் வேலூரிலும், தஞ்சாவூரிலும் இரண்டு வல்லுநர்கள் பணியாற்றிக் கொண்டு வருகின்றனர்.

---

* 125 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



திரு. இரெ. இராமமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு 8 இடங்களில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு கால்நடை நோய் ஆய்வுப் பிரிவை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நோய் புலனாய்வுப் பிரிவு வல்லுநர்கள் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

திரு. இரெ. இராமமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படுமா என்பது. அப்படி ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்தால் அதனை கும்பகோணத்தில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நோய் ஆய்வுப் பிரிவு அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 6ஆவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

## 4. ஒழுங்குப் பிரச்சினை

வறட்சி குறித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பெற்ற அறிக்கை.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். தமிழகத்திலே நிலவும் கடுமையான வறட்சி குறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பிவிட்டதாக ஆளுநர் அவர்களின் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைச் சேர்ந்தவரும், மத்தியிலே துணை வேளாண்மைத்துறை அமைச்சராக இருப்பவருமான திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அப்படிப்பட்ட அறிக்கை வரவில்லை என்றும் அப்படிச் சொன்னது உண்மைக்கு மாறானது என்றும் அதாவது உண்மைக்கு மாறானது என்பதற்கு வறுவகையில் பயன்படுத்தப்படுகின்ற அந்த வார்த்தையினையே சொல்லி, அவர்கள் அவ்வாறு பேசி இருப்பது எல்லாப் பத்திரிக்கைகளிலும் வந்திருக்கிறது. எனவே நான் இந்த மாமன்றத்திலே அமைச்சரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் வறட்சி குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி விட்டார்களா? ஆம் என்றால் எப்போது அனுப்பினார்கள்? அந்தத் தேதியினை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி வேறு வகையில் ஏதாவது ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கலாம். ஆனால் இப்படி திடீரென்று எழுந்து பத்திரிகையிலே வந்தது என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவம் மிக்கவர்கள். ஆற்றலும் வாய்ந்தவர்கள். நாடாளுமன்ற முறைகள் தெரிந்தவர். எனவே அவர்கள் இப்படித் திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும். ஆகவே இதைப்பற்றி கேள்வியாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அப்படி ஏதாவது ஒரு வகையிலே கொண்டு வரலாம். இப்படி திடீரென்று எழுந்து கேட்பது சரியல்ல.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே. நான் கேட்பது அறிக்கை அனுப்பிவிட்டீர்களா என்பது தான். அனுப்பப்பட்டு விட்டது என்றால் ஆம் அனுப்பிவிட்டோம் என்று கூறலாம். ஆனால் அறிக்கை அனுப்பாமல்....

(முற்பகல் 10.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த குற்றச்சாட்டை எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சொல்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: இது நியாயமான குற்றச்சாட்டுதான்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த முறையில் அதைக் கொண்டுவர வேண்டுமோ அந்த முறையில் அதை கொண்டு வாருங்கள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது ஒன்றும் பெரிய பவிசி மேட்டர் இல்லை. அறிக்கை அனுப்பப்பட்டதா? இல்லையா? அனுப்பப்பட்டது என்றால் எந்தத் தேதியில் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது நான் மத்தியப் பேரரசின் அமைச்சர் அவர்களுடைய பதிலை மறைத்து சொன்னதாக சொன்னார்கள்....

திரு. துரைமுருகன்: அப்படிச் சொல்லவில்லை. அறிக்கை அனுப்பிவிட்டீர்களா? இல்லையா? ஆம் என்றால் என்றைக்கு அனுப்பினீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அறிக்கை அனுப்பி ஆகிவிட்டதா இல்லையா என்பதை மட்டும் அவைக் குறிப்பில் வைத்துக்கொண்டு கேட்டால் நான் பதில் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன்: இதில் ஒன்றும் பெரிய ராஜ தந்திரமோ, ரகசியமோ கிடையாது. அறிக்கை அனுப்பினீர்களா? என்றைக்கு அனுப்பினீர்கள்? இந்த மன்றம் தலையானது, ஆகவே மன்றத்தில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த மாதம் 24-ஆம் தேதி காலையில் இங்கே அலுவலகத்தில் இருக்கிற துணைச் செயலாளர் மூலமாக நேராக அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன்: 24-ஆம் தேதி தான் ஆளுநர் உரை இங்கே படிக்கப்படுகிறது. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரைமுறைகளின்படி நடந்து கொண்டால் நன்றாக இருக்கும். திடீர் திடீர் என்று எழுந்து கேட்கக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த அவையினுடைய நிகழ்ச்சிகள் எப்படி நடத்தப்படவேண்டும் என்பதற்கு வரைமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதைத்தான் குறிப்பிட்டார்கள். திடீர் என்று கேள்வி கேட்டவுடனே திடீர் என்று பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும்கூட பேரவைத் தலைவர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

( டாக்டர் இரா.நெடுஞ்செழியன்) [1983 ஜனவரி 27

அவர்கள் சொன்னதுமாதிரி முறைப்படி எழுதிக்கொடுத்து கேட்டால் தான் முழு விவரத்தோடு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கமுடியும். அமைச்சர் அவர்கள் எந்தத் தேதி என்று குறிப்பிட்டார்கள். அதைக்கூட கூறியிருக்க வேண்டியது அவசியம் இல்லை. இருந்தாலும் அவர்கள் பெருந்தன்மையின் அடிப்படையில் இந்த அவையின் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அதை அளித்திருக்கிறார்கள். இந்த விவாதத்திலே கலந்து கொள்கிறபோது பிரச்சனைகளை எழுப்பலாம். தனியாகக் கேட்கவேண்டும் என்றால் சட்டப் பேரவையின் விதிமுறைகளின்படிதான் கேட்கவேண்டும். ஒரு அடிப்படையும் இல்லாமல் திடீர் என்று எழுந்து கேட்பது என்பது சரிப்பட்டு வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சுருக்கமாகச் சொன்னது உங்களுக்கு விளங்கவில்லை. அதையே நாவலர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: ஜீரோ அவர் என்பது நாவலர் அவர்களுக்கு புதுமையானது அல்ல.

## 5. தகவல் கோரல்

### (அ) பேருந்து விபத்து

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து சேலத்துக்கு 36 பேர்கள் சுற்றுலா சென்று இருக்கிறார்கள். அவர்கள் பேருந்து மூலம் செல்கிற நேரத்தில் 16 பேருக்கு விபத்து ஏற்பட்டு அதில் 3 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை எல்லாம் எழுத்து மூலமாக கொடுத்து விளக்கங்களை கேட்டால் விளக்கம் தர முடியும். ஒவ்வொரு ஊரிலிருந்தும் சுற்றுலா போகிறார்கள். ஆங்காங்கே விபத்துகள் தினசரி நடந்துகொண்டிருக்கின்றன. உங்கள் தொகுதியிலிருந்து போனவர்களாக இருந்தால் அதற்காக தனி முக்கியத்துவம் அளிக்கமுடியாது. எழுத்து மூலம் கொடுங்கள்.

### (ஆ) ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டு வருதல்.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கும்போது நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்திராவிலிருந்து 40 லட்சம் டன் அரிசி கொண்டு வருவது பற்றி வெளியில் பேசியிருக்கிறார்கள்...



1983 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்பு மூலமாகவோ உரிமைப் பிரச்சனை மூலமாகவோ கொடுங்கள். சட்டப்பேரவை விதிமுறைகளை, வேண்டுமானால், ஒரு காப்பி கொடுக்கச் சொல்கிறேன்.

### (இ) தஞ்சையில் விவசாயிகள் பாதிப்பு.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி திடீர் திடீரென்று எழுந்து கேட்டால் தஞ்சை மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் அனுதாபம்தான் தெரிவிக்க முடியும். நான் அவ்வளவுதான் செய்ய முடியும். வேறு ஒன்றும் செய்யமுடியாது. வரைமுறைகளின்படி அவைகளைக் கொண்டுவாருங்கள். ஒரு மணி நேர விவாதம் வேண்டுமானால் கேளுங்கள். அதை அனுமதிப்பதற்கு நான் முயற்சி எடுக்கிறேன். அந்த உதவியைத் தான் நான் செய்யமுடியும். நாளையிலிருந்து எல்லாம் எடுத்துக் கொள்ளலாம்.

### (ஈ) வி. ஐ. பி-க்களுக்காக ஒதுக்கப்பெற்ற மின் தூக்கியில் சட்டமன்ற உறுப்பினர்களை அனுமதிப்பது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ள விஷயமாக இருப்பதால் நான் தெரிவிக்கிறேன். 24 ஆம் தேதி அன்று மாலை 4-30 மணிக்கு புதிய பில்டிங்கிற்கு நான் சென்று கொண்டிருந்தேன். அங்கே இதுவரைக்கும் எம். எல். ஏ. க்கள் தாராளமாக லிப்டில் போய்க்கொண்டு இருந்தோம். யாரும் தடுத்து நிறுத்துவது இல்லை. ஆனால் அன்றைக்கு நான் போனபோது அங்கே இருந்த, காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு போலீஸ்காரர் 'மேடம், மேடம் போகாதீர்கள்,' என்று சொன்னார். அய்யா, நான் எம் எல். ஏ. அய்யா என்று நான் சொன்னேன். நான் அதிகாரிகளிடத்திலே சில வேலைகளுக்காகச் செல்கிறேன் என்று சொன்னவுடன் உங்கள் பாஸைக் காட்டுங்கள் என்று சொன்னார். உடனே நான் பாஸை எடுத்துக் கொடுத்தேன். அவர் கேவலமான முறையிலே, வேறு எதுவும் வார்த்தை பேசவில்லை, இதில் வி. ஐ. பி. தான் போகலாம்" என்று சொன்னார். இந்த பாஸை கையில் வைத்துள்ள எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் வி.ஐ.பி.-க்களா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு என். சங்கரய்யா: இது மிகவும் மோசமான விஷயம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே உள்ள பத்து அடுக்கு மாளிகையில் இரண்டு தூக்கிகள் இருக்கின்றன. இரண்டையும் சாதாரணமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். முக்கியமான மாநாடோ மற்றவைகளோ நடைபெறுமானால் அந்த மாநாட்டிலே முக்கியமானவர்கள் எல்லாம் கலந்து கொள்கிறபோது ஒரு லிப்டை அவர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டு மற்றொரு லிப்டை அந்தப் பல்லடுக்கு மாளிகையிலே பணியாற்றுகிற பல்வேறு அதிகாரிகளும் அலுவலர்களும் பயன் படுத்த வேண்டுமென்ற ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வகையிலே ஏதேனும் ஒரு மாநாடு நடைபெறுகிற போது ஒன்றை அதற்கென்று தனியாக ஒதுக்கிவைப்பது உண்டு. ஆனால் எம். எல்.ஏ.க்களைப் பொறுத்தவரையிலும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள் என்று சொல்வது உள்ளபடியே வருந்த வேண்டிய ஒன்று. வி.ஐ.பி.யைத் தான் அனுமதிப்போம், இல்ல விட்டால் இல்லை என்று சொன்னதாக சொன்னார்கள். அவர்கள் தாங்கள் வி.ஐ.பி. இல்லையா என்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வி. ஐ. பி.க்கள் அல்ல, வி.வி.ஐ.பி.க்கள்தான். 'வெரி இம்பார்ட்டன்ட் பெர்சன் அல்ல' 'வெரி வெரி இம்பார்ட்டன்ட் பெர்சன்' என்று கருதப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரைக்கும் அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர்களுக்கு எல்லாம், அலுவலகத்திற்கு வந்தாலும், அவரவர்களுடைய அலுவலகங்களுக்கு வந்தாலும் அதிகாரிகளை, மற்றைய அலுவலர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கவந்தாலும் அவர்களுக்கு எல்லாம் உரிய மரியாதை கொடுக்கவேண்டுமென்று தனியாக ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது என்றால் அது வருந்தத்தக்க ஒன்று. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெறாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் போன்றவைகள் கொடுக்கிறபோது அதைத் தாங்கள் மறுத்தாலும் கூட அதை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் துறைகளுக்கும் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கிறீர்கள். அதே நடைமுறையை கவன ஈர்ப்புக்கும் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10.40)

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் நமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (திருத்தச்)சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

திரு. கே. குப்புசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983 ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 24 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு ** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

திரு மா. சின்னராசு: தலைவர் அவர்களே, இத்தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டில் சம்பிரதாயங்களும், மரபுகளும் பின்பற்றப்படுவது வழக்கம். சட்டமன்ற ஜனநாயக முறைக்கு ஏற்ப, இந்த ஆட்சியினுடைய சீரிய திட்டங்களை, சாதனைகளை, எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக நம்முடைய ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருக்கிறது என்பதை முதற்கண் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி தமிழர்களின் உணர்வில், உள்ளத்தில், உதிரத்தில் இரண்டறக் கலந்திருக்கும் மொழி யாம் தமிழ் மொழி. தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டிராத ஆளுநர் அவர்கள் தமிழில் பேசியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்றாகும். இது எதை காட்டுகிறது என்றால் தமிழர்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழினுடைய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை தழைத்தோங்க தமிழகத்திலே முயற்சி எடுத்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அண்ணாவின் திருமொழிக் கொள்கை இங்கு மட்டுமில்லாமல், பிற மாநிலங்களிலும் பின்பற்றக்கூடிய ஒரு நிலை உருவாகி இருப்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. தமிழை பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாது இமயம் வரைசென்று இலச்சினை பொறித்த வரலாறு தமிழருடைய வரலாறு. கல் தோன்றி மண் தோன்றா காலத்திலும் முன்தோன்றிய மூத்த மொழியின் வளர்ச்சியை பழிக்கிற முயற்சியில் யார் ஈடுபட்டாலும்

**156 ம் பக்கங்களில் ஆளுநர் இணைப்பு உரை II ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 167 ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



அந்த முயற்சியை தடுத்து நிறுத்துகிற தெம்பு, திறமை இதந்த அரசிற்கு உண்டு. அதனாலே தான் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும், இந்நாள் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்களும் கொடுத்த வாக்குறுதியை மீறி, இந்தி பேசாத மக்கள் மீது இந்தி நிச்சயமாக திணிக்கப்பட மாட்டாது என்பதை மீறி இன்று ரெயில்வேயிலும் இந்தி, தொலைக்காட்சியிலும் இந்தி, வானொலியிலும் இந்தி, இவைகளில் எல்லாம் நேரடியாக இந்தி, மற்றத் துறைகளில் மறைமுகமாக இந்தி திணிக்கப்படுகிற நிலையை இந்த அரசு கடுமையாக சாடியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை

தமிழ் மொழியின் வளர்ச்சியில் தடை ஏற்படுமானால் இந்த மாமன்றத்து உறுப்பினர்களும், இந்த நாட்டு மக்களும் நிச்சயமாக பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். இந்திய நாடு ஒன்றுபட்டு இருக்கவேண்டுமானால், இந்திய ஒற்றுமை காப்பாற்றப் படவேண்டுமானால் இந்திரா அம்மையார் அவர்களின் வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும். இந்தி திணிக்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையென்றால் மாநில உணர்வுகள் வளரும். மாநில கட்சிகள் பெருகும். மாநில சுயாட்சிக்கு இது வழி வகுக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இந்த நிலையை, மேலே, மத்திய அரசிலே இருப்பவர்கள், நிச்சயமாக உணர்ந்து கொள்வார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். இந்த நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவருடைய கருத்தை இந்த மன்றத்து உறுப்பினர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். "மொழிவாரி மாநிலத்தை அமைத்துவிட்டு மாநில உணர்வு கூடாது என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது" என்று அவர்கள் மிக அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் உண்மையிலேயே சமுதாய அமைதி தேவையானால் இங்கே வறுமை ஒழிந்தாக வேண்டும்; அறியாமை நீங்க வேண்டும்; ஆண்டாண்டு காலமாக வறுமைக் கோட்டிலே வாழ்கின்ற எண்ணற்ற மக்களுடைய இன்னலைத் தீர்க்கின்ற முயற்சியிலேதான் இங்கே சத்துணவுத் திட்டம் புரட்சித் தலைவரால் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல் படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டாண்டு காலமாக இந்த வறுமைக் கோட்டிலே இருப்பவர்கள் குழந்தைகள் நல்லமுறையிலே உண்டு, உண்மையிலே, 'எதிர்காலத்திலே, சிறந்த பிள்ளைகளாக விளங்க வேண்டுமென்ற இலட்சியத்தோடுதான் இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.' பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பாணியிலே இதைச் சொல்வதானால், 'ஒட்டிய வயிறு, உலர்ந்த உதடு,' குழி விழுந்த கண்கள், இவற்றிற்கு சொந்தக்காரர்களாக இருக்கிற இலட்சோபலட்சம் குழந்தைகள் வாழ்விலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் திட்டம் இங்கே செயல்பட்டு வருகிறது. ஆனாலும், இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்தில், அறிவிக்கப்பட்ட நேரத்தில், இந்தத் திட்டம் வெற்றி பெறாது, இந்தத் திட்டம் நடைபெறாது,

இந்தத் திட்டத்திற்குப் போதிய நிதி இல்லையென்றெல்லாம் ஆருடம் கணித்தவர்கள் நாட்டில் ஏராளமான பேர்கள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுதுகூட இந்தச் சத்துணவுத் திட்டத்தில் எங்கேயாவது பல்லி விழாதா? எங்கேயாவது கரப்பான் பூச்சி விழாதா? 4 மாணவர்கள் மயங்கி விழமாட்டார்களா என்ற பகற்கனவிலே இன்று நாட்டிலே எண்ணற்றவர்கள் இருக்கிற நிலையை நாம் காண்கிறோம். இதையெல்லாம் மீறி இந்தச் சத்துணவுத் திட்டத்தை வெற்றிகரமாக உலகமே போற்றுகின்ற முறையிலே புரட்சித் தலைவருடைய அரசு இதை அமுலாக்கி வருவதை நாடு அறியும், இந்த மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

பொதுவாக, ஐரோப்பிய நாடுகளில் சத்துணவுத் திட்டத்தை நல்லமுறையிலே நடத்துகிற பெருமையைக் கொண்டது, டென்மார்க்கிலே இருக்கிற கோபன்ஹேகன் என்ற இடமாகும். அண்மையிலேகூட சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே சென்றிருந்த காலத்தில், அங்கேயிருக்கிற மக்களோடு இதுபற்றிக் கலந்து பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தது. அங்கே கூட சத்துணவை அவர்கள் நடைமுறையிலே வைத்திருக்கிறார்கள். ஆனாலும் வசதியற்றவர்களுக்கு மட்டுமே அங்கே ரொட்டியும் பாலும் கொடுக்கிறார்கள். ஆண்டு முழுவதும் அங்கே சத்துணவுத் திட்டம் இல்லை. டென்மார்க்கிலே இருக்கிற மக்கள், இங்கே இருக்கிற, புரட்சித் தலைவருடைய புனிதமான சத்துணவுத் திட்டத்தைப் பற்றி கேட்ட பிறகு, அவர்கள் இதனை வானளாவ புகழ்ந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே மன்றத்து உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரவிரும்புகிறேன். எனவே, இந்தத் திட்டம் வெற்றி பெறாது, வெற்றி பெறக் கூடாது என்ற சில விஷமிகளின் விரோத மனப்பான்மைகளை எல்லாம் தாண்டி இந்தத் திட்டம் அமுலாகிறது, வெற்றி பெற்றிருக்கிறது என்பதற்காக இந்த அரசுக்கு, இதை உருவாக்கி அமுல்படுத்திய புரட்சித் தலைவருக்கு இந்த நேரத்தில் நன்றிக் கடன் செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். புரட்சித் தலைவர் அரசை, நிச்சயமாக இந்தத் தமிழகத்திலே இருக்கிற மக்கள் மட்டுமல்லாமல், வெளி மாநிலங்களிலே இருக்கிற மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டம் இன்று பிற மாநிலங்களிலே பின்பற்றப்படுவது ஒன்றே இந்தத் திட்டத்தினுடைய பயன் எந்த அளவு இருக்கும், இந்தத் திட்டத்தினுடைய வெற்றி எதிர்காலத்திலே எத்தகைய நிகழ்ச்சியை தமிழகத்திலே உருவாக்கும் என்பதையெல்லாம் நமக்குத் தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

உலக சமாதானத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு, விஞ்ஞானிகளுக்கு, பல்வேறு தொழில் துறைகளிலே சிறந்த சாதனைகள் புரிந்தவர்களுக்கு, நேரு சமாதானப் பரிசு கொடுக்கப்படுகிறது; லெனின் சமாதானப் பரிசு கொடுக்கப்படுகிறது; நோபல் பரிசு கூடக் கொடுக்கப்படுகிறது. ஆனாலும் நான் சொல்வேன்.





தமிழகத்தில் தமிழின் பெருமையை நிலை நிறுத்தி, தமிழின் வளர்ச்சியை மனதில் கொண்டு, தமிழ்ச் சமுதாயத்திலே சத்துணவுத் திட்டத்தை அமுலாக்கி ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிற புரட்சித் தலைவர் உண்மையிலேயே உலகத்தினுடைய உயர்ந்த பரிசுக்கே உரியவர் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன்

(முற்பகல் 10.50)

இந்தத் திட்டத்தால் 112 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சம் ஏழைக் குழந்தைகள் சத்துணவு பெறும் நிலைமை உருவாகியிருக்கிறது.

வேலையில்லாத கிராம மக்களுக்கு அந்த ஊரிலேயே வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் 1,40,000–க்கு மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக மகளிர் முதன் முறையாக இதில் பெரும்பாலும் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது 35,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 2,63,000 குழந்தைகள் கல்வி கற்பதற்காகப் புதிதாக இந்தத் திட்டத்தின் காரணமாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

இவைகளெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே பல மாநிலங்களை எடுத்துக்கொண்டால், இவ்வளவு அதிகமான பெண்களுக்கு, கிராமப்புறங்களிலே வேலையற்றிருப்பவர்களுக்கு அந்த ஊரிலேயே வேலை கொடுக்கும் திட்டம் வரலாற்றிலேயே இதுதான் முதன் முறையாக இருக்கிறது என்று நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இங்கே கிராமப் பகுதிகளிலே உள்ள வேலையில்லாத மக்களுக்கு வேலை தர வேண்டுமென்ற நோக்கத்தில் வேலைக்கு உணவுத் திட்டம் "ஃபுட் ஃபார் ஓர்க் (Food for work") மூலம் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான இளைஞர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. தொழில் செய்ய விரும்புகின்றவர்களுக்குக் கடனும் மானியமும் தரப்படுகிறது.

இதையெல்லாம் விட முக்கியமாக, வேலையற்றவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு 15 கோடி ரூபாய் செலவில் வரும் ஆண்டுகளில் அமுல்படுத்த இருப்பதை நாட்டு மக்கள் நிச்சயமாக வரவேற்பார்கள், பாராட்டுவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

கிராமங்களெல்லாம் சிறு நகரங்களாக மாற வேண்டும் என்று புரட்சித் தலைவரவர்கள் அடிக்கடி சொல்வார்கள். கிராமங்களில் உள்ள மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற் கொண்டுதான் உலகமே போற்றுகின்ற தன்னிறைவுத் திட்டம் தமிழகத்திலே அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஒருகாலத்தில் குடிக்கத் தண்ணீரின்றி, குடிலை ஏந்திக் கொண்டு நெடிய பயணம் மேற்கொண்டிருந்த நிலைமை மாறி, இப்பொழுது அந்தந்தச் சிற்றூர்களில் அடிக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிற்றூர்களின் பள்ளிகள், சத்துணவுக் கூடங்கள், பஸ் நிலையங்கள், மருத்துவ இல்லங்கள், மயானப் பாதைகள், சாலைகள் இன்னும் இன்னோரன்ன ஆதி திராவிடர் குடியிருப்புகள் என்று இப்படிச் சமுதாயத்தில் கீழ்த்தட்டிலே உள்ளவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலே தன்னிறைவுத் திட்டமானது மற்ற மாநிலங்களுக்கு, எடுத்துக்காட்டும் வகையிலே வெற்றி நடை போட்டு வருவதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

அடுத்து நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். அரசின் சாதனைகள் என்பது வேறு, கட்சியின் கொள்கைகள் என்பது வேறு என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அரசின் சாதனைகளைப் பற்றி யார் சொன்னாலும் அரசு நிச்சயமாக நன்றிக் கடனோடு அதைப் பாராட்டும். கட்சி மாச்சரியமின்றி தன்னிறைவுத் திட்டம் கிராமங்களில் அமல் படுத்தப்பட்டிருக்கிறது. கட்சி மாச்சரியமின்றி அமல்படுத்த பட்டு வருகிறது என்பதை அனைத்துக் கட்சி நண்பர்களும் பாராட்டுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மகாத்மா காந்தியடிகள் கிராம ராஜ்யம் உருவாக வேண்டு மென்று சொன்னார்கள். அந்தக் கிராம ராஜ்யத்தைத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகப் புரட்சித் தலைவரவர்கள் தமிழகத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு என்றுமில்லாத வறட்சி நிலவி வருவதை நாம் அறிவோம். மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற அக்கறையோடு 17½ கோடி ரூ. செலவில் 7,500 அடி குழாய்க் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. குடிதண்ணீர்ப் பிரச்னையை ஓரளவு தீர்த்து விட்ட பிறகு, தமிழகத்தின் நெற் களஞ்சியம் என்று சொல்லப்படும் தஞ்சையிலே உள்ள நெற்பயிர் களுக்கு இப்பொழுது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விட முடியவில்லை. மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லை. அணையையே மூடப்போவதாகத் தகவல் வந்திருக்கிறது.



ஆனால் மேட்டூர் அணைக்குத் தண்ணீர் விடுவதற்குக் கர்நாடக அரசு மறுக்கிறது. வழியில் உள்ள கிருஷ்ணராஜ சாகரில் தண்ணீர் நிறைய இருக்கிறது. கபினி நீர்த்தேக்கத்தில் தண்ணீர் நிறைய இருக்கிறது. ஹேமாவதி அணையில் தண்ணீர் நிறைய இருக்கிறது. ஹேரங்கியில் தண்ணீர் நிறைய இருக்கிறது இவ்வாறு இருந்தாலும் தண்ணீர் கொடுப்பதற்குக் கர்நாடக அரசு மறுக்கிறது. இன்னும் சொல்லப் போனால் வெறுக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை, தேசிய நீரோட்டம் என்றெல்லாம் சொல்லுகின்ற தேசிய நண்பர்களைப் பார்த்து நான் கேட்டுக் கொள்கிறேன். கர்நாடகத்திற்குத் தேசிய நீரோட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுத்திருக்கிறீர்களா? தேசிய நீரோட்டத்தைத் தேசம் முழுமையும் பரவ விட வேண்டு மென்று சொல்கிறார்களே, கர்நாடகம் நடந்து கொள்வதில் தேசிய நீரோட்டத்தின் பொருள் என்ன என்பதை இந்த நேரத்திலே நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஊட்டியிலே கலர் பிலிம் தொழிற்சாலை ஏற்படுத்துவதில் மாற்றம் என்று நான் அறிகிறேன். தூத்துக்குடியில் அகல இரயில் பாதை அமைப்பதில் தயக்கம் காட்டுவதன் நோக்கம் என்ன. சேது சமுத்திரத் திட்டத்தை இன்னும் செயலுக்குக் கொண்டு வரவில்லை.

இப்படி அடுக்கடுக்காக ஆயிரக்கணக்கான விவரங்களை இன்று தேசிய நீரோட்டத்திலே இருப்பவர்களுக்கு நாம் எடுத்துக் காட்ட முடியும். காரணம் இவையெல்லாம் தேசிய நீரோட்டம் என்றால் தமிழகம் தொழில் துறையிலே, தமிழகம் வளர்ச்சித் துறையிலே முன்னேறாமல் தடுப்பது தான் தேசிய நீரோட்டம் எங்களுக்குத் தேவையில்லை என்று எதிர்க்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை உங்களுடைய சிந்தனைக்கு விருந்தாக வைக்க விரும்புகிறேன்.

திரு.பி.எம்.தங்கவேல்ராஜ்: துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது தேசிய நீரோட்டம் என்று பேசினார்கள். ஆனால் இங்கே அமராவதி ஆற்றில் அணையைக் கட்டி உடுமலைப் பேட்டையிலே இருந்து திருச்சி மாவட்டத்திற்கு தண்ணீர் வருவதை பெரியார் மாவட்டத்து மக்கள் தடுக்கின்றார்கள். இப்படி தமிழகத்திலே இருக்கின்ற தண்ணீரை ஒரு ஜில்லாவிலே இருந்து மற்றொரு ஜில்லாவுக்கு அனுப்ப மறுக்கும் இந்த காலத்தில், ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு

. . . . . . . . . . .

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே: ஏற்கனவே ஒரு அணைக்குத் தேவையான தண்ணீர் போக மீதி தண்ணீரைத் தான் மற்ற மாவட்டத்திற்கு அனுப்பும் திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்

திரு.கே.குப்புசாமி: கர்நாடக அணையிலே இருந்து தண்ணீர் வரவு மறுக்கப்பட்ட காரணத்தினால் தான். காவிரி நீர் கடலிலே சென்று வீணாகக் கலக்கின்ற நீரை சேமித்து இங்கே வேளாண்மைக்குப் பயன் படுத்தும் நோக்கத்தோடு இந்த அரசு செயல் படுத்தி வருகிறது.

அடுத்து, தமிழகத்திலே இன்று கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்றது. இங்கே அனல் மின்சாரத்திற்கு வேண்டிய தண்ணீர் அணைகளிலே இல்லை அனல் மின்சாரம் தயாரிப்பதற்கு வேண்டிய நிலக்கரியும் இல்லை. அனல் மின்சாரம் தயாரிப்பதற்குத் தரப்படும் நிலக்கரி போதுமானதாக இலலை. நிலக்கரி வேண்டும் என்றுக் கேட்டால் 'வேகன்' இல்லை என்று சொல்கிறார்கள். வேகன் வந்தப் பிறகு கேட்டால் நிலக்கரி இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிக் கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்ற கதையைப் போலத் தான் அவர்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் குற்றக்சாட்டாகச் சொல்லவில்லை. அது தான் பரிட்சாத்தமான உண்மை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே நமக்கு சிங்கரேணியிலிருந்தும், வங்காளத்திலும் இருந்து வருகின்ற நிலக்கரி தரம் வாய்ந்ததாக இல்லை. அனல் மின்சாரம் உற்பத்திக்கு உகந்ததாக இல்லை என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல, 'பெல்' நிறுவனத்திடம் இருந்து தூத்துக்குடி தெர்மல் யூனிட்டுக்கு வாங்கப்பட்ட இயந்திரங்கள் முழுவேகத்தோடு எதிர்பார்த்த அளவுக்கு வேலை செய்யவில்லை. இங்கே தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரியினுடைய அளவைக் கூட அவர்கள் அங்கே இருந்து அனுப்பவில்லை. கேட்டால் ஏதோ சாக்குப் போக்கு சொல்லிக் காண்டு இருக்கிறார்கள். நாம் இதற்குப் பதிலாக வேறு நாடுகளிலே இருந்து வரவழைத்துக் கொள்கிறோம் என்று அனுமதிக் கேட்டால், அதற்கு அனுமதி இல்லை. எனவே வெளநாடுகளிலே இருந்து வரவழைப்பதற்கும் அனுமதி இல்லை. இங்கேயும் போதுமான அளவுக்கு நிலக்கரியை அனுப்பவில்லை. அப்படியே அனுப்பினாலும் அதனுடைய தரமும் சரியில்லை. அந்த அனல் மின்சாரம் தயாரிக்கப் பயன் படும் இயந்திரமும் எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இதை எல்லாம் மக்களுடைய கவனத்திற்குக்கொண்டு வந்து ஆக வேண்டும் இதிலே கூட ஆதாயம் தேடுகின்றவர்கள் இருக்கிறார்கள். இந்த தமிழக அரசு மின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் தான் மின்வெட்டு அதிகமாக இருக்கிறது என்றும் சொல்வார்கள்.



இப்போது கேரளாவிலே அனல் மின்சாரம் நல்லபயனாக இருந்தும் அங்கே முழு அளவில் மின்சாரம் கிடையாது. அங்கேயும் 60 சதவிகிதம் மின்வெட்டு இருக்கிறது. கர்நாடகத்தில் இவ்வளவு தண்ணீர் இருந்தாலும், அங்கேயும் மின்வெட்டு இருக்கின்றன. இந்திய துணைக் கண்டத்திலே தென் மாநிலங்களில் இன்றைக்கு மின்சார வெட்டு இருக்கின்றது. தமிழகத்திலே மட்டும் விதிவிலக்காக இல்லை. ஆனால் தமிழக அரசு இதை ஒரு போர்க்கால நடவடிக்கையாக எடுத்து எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு தொழிலர்களுக்கு தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விரைவாக கொடுப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழக அரசு அதற்கான காரியங்களைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மின்சார உற்பத்திக்கும் மின்சார தொழிலாளர்களுக்கும் நாளுக்கு நாள் செலவு அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் கிட்டத்தட்ட தொடர்ந்து நஷ்டத்திலே இயங்கி கொண்டு வரும் நிறுவனம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

(முற்பகல் 11-00)

எனவே இந்த நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்காகவும் புதிய மின் திட்டங்கள் தொடங்குவதற்காகவும் இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியே தீர வேண்டிய ஒரு கட்டாயம் ஒரு இக்கட்டான சூழ்நிலை இந்த அரசுக்கு வந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்துக் கொண்டாக வேண்டும். நாட்டு மக்களிடம் இருக்கிற சூழ்நிலையைய யதார்த்தமான நிலையை, இக்கட்டான நிலையை எடுத்து சொல்ல வேண்டியது இந்த மாமன்ற உறுப்பினர்களின் தலையாய கடமையாகும். இதிலே கட்சி வேறுபாடு இல்லாமல் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை என்பதை இந்த நேரத்திலே நான் மிகப் பணிவன்புடன் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது தேசிய நீரை சீரான முறையிலே வினியோகம் செய்வதற்கான நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட் போர்டு என்ற ஒரு நிறுவனத்தை மத்திய அரசு அமைத்து இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் தண்ணீரைப் பொறுத்த வரையில் 'இட் கம்ஸ் அண்டர் தி ஸ்டேட் சப்ஜெக்ட்' இங்கே மாநில அதிகாரத்திற்குள் வருகிறது தண்ணீர் எனவே இது போன்ற வாரியங்களை அமைப்பதனாலே மட்டும் தண்ணீர்ப் பிரச்சனையை நிச்சயமாக தீர்த்து விட முடியாது. அரசியல் சட்டத்தைத் திருத்தி நதிகளை தேசிய மயமாக்கின்ற இந்தியாவிலே இருக்கின்ற அவ்வளவு நதிகளையும் வளைகுடா நதிகள் உட்பட அவ்வளவு நதிகளையும் தேசிய மயமாக்கி தண்ணீர் வினியோகம் சீராக்கப்பட்டால் தான் நாங்களுடைய பற்றாக்குறை நிச்சயமாக நீங்கும் என்பதை இந்த நேரத்திலே நான் மன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[திரு. கே. குப்புசாமி]

இதன் முதற் கட்டமாக கங்கை—காவேரி இணைப்பு இந்த தலைமுறையிலே நடக்காத ஒன்று என்று தெரிகிறது காரணத்தால் முதற் கட்டமாக வளைகுடா நதிகள், இந்தியாவிலே ஓடுகிற மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி ஆகிய நதிகளை இணைத்தால் நிச்சயமாக அந்தப் பகுதியிலே இருக்கிற மாநிலங்களுடைய நீர் நிலைல வளரும், பற்றாக்குறை நீங்கும், மின் பற்றாக்குறை நீங்கும். மின் உற்பத்தி ஹைட்ரோ எலக்டிரிசிடி அதிமாக்கிற வாய்ப்பு ஏற்படும் என்பதால் மத்திய அரசு இந்த வளைகுடா நதிகளை இணைக்கின்ற முயற்சிகளிலே உடனடியாக இறங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது வறட்சியின் காரணமாக உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடிய நிலை இருந்து வருகிறது. இருக்கிற உணவு 1இலட்சம் டன் அரிசி, 2இலட்சம் டன் நெல் மட்டுமே இப்போது நம்மிடம்இருந்து வருகிறது. நாம் நீண்டகாலமாக இது இரண்டு மாதத்திற்குத் தான் வரும் மார்ச் மாதம் வரையிலேதான் வரக் கூடியதாக இருக்கிறது இந்தக் கையிருப்பு என்பதால் மத்திய அடமியிருந்து நாம் மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் அரிசி அனுப்பி வையுங்கள் என்று கேட்டோம். ஆனால் இதுவரை நாம் வைத்த வேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கிறதே தவிர, அங்கேயிருந்து, பயனுள்ள, உறுப்படியான பதில் வரவில்லை. எனவே, இந்த நேரத்தில் நான் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதிலே அறிக்கை மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பி விட்டதா, அறிக்கை போய் சேர்ந்து விட்டதா, நீங்கள் அங்கே பேசிவிட்டீர்களா என்று எல்லாம் வீணான விவாதத்தில் நாம் இறங்காமல் மத்திய அரசிடம் இருந்து விரைந்து தமிழக அரசுக்கு அரிசி கிடைகின்ற முயற்சியிலே மன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இறங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில் இன்று 190கோடி ரூபாய் அளவுக்கு வறட்சிக்கான பிளான் தயார் செய்யப்பட்டு, திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பபட்டு இருக்கிறது. வறட்சியினுடைய நிலைமை அவ்வப்போது மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. எனவே இதை மத்திய அரசு பரிவோடு பரிசீலித்து மாநில அரசுக்கு தேவையான உணவுப் பொருள்களை உடனடியாக வழங்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். தொழில்கள் இங்கே வளரவில்லை என்று பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சி தலைவர்களும் அடிக்கடி ஒரு பிரச்னையை எழுப்பி வருவதை நாம் அறிவோம். குறிப்பாக இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் காங்கிரஸ் ஆட்சியிலே ஏற்பட்ட தொழில் வளர்ச்சி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே இல்லை என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே ஒன்றை குறிப்பிட விரும்பு





கிறேன். தமிழகத்திலேயிருந்து தொழில்கள் துவங்குவதற்கான அனுமதி கேட்டு கிட்டத்தட்ட 300—க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இங்கே தேங்கி கிடக்கின்றன. ஆண்டாண்டுக் காலமாக அங்கே சென்று தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே அமைக்க வேண்டுமென்று கேட்டால், தமிழகம் தொழில் துறையிலே வளர்ந்து இருக்கிறது. நீங்கள் உ.பி.யிலே அமையுங்கள் என்று சொல்லுகின்ற மனப்பான்மை அங்கே மத்திய அரசிலே வளர்ந்து இருக்கிறது எனபதை நம்முடைய மத்திய அரசு ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்கு நான் குறிப்பாக கோடிட்டு காட்ட விரும்புகிறேன். இது மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா. ஏதாவது குறை சொல்வதாக இருந்தால்........(குறுக்கீடு)

திரு.என்.எஸ்.வி.சித்தன்: மாண்புமிகு மன்றத்திலுடையதுணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த தீர்மானத்தில், தமிழகத்திலே இப்போது தொழில் வளர்ச்சி குறைந்து விட்டது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சொல்கிறார்கள் என்று பொதுப்படையாக சொல்லிவிட்டு அடுத்தபடியாக மத்திய அரசை சந்திக்கின்ற நேரத்திலே தமிழகத்திலே தொழில் தொடங்க வேண்டுமென்று நாங்கள் கேட்கின்ற நேரத்திலே, தமிழகம் தொழில் துறையிலே முன்னேறி இருக்கிறது ஆகவே தமிழகத்திலே வேண்டாம், உ.பி. யிலே போய் ஆரம்பியுங்கள் என்று சொல்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை இப்போது மாமன்றத்தின் முன்னாலே வத்திருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி பொதுப் படையாக குற்றம் சொல்கிறபோது இது எந்த நிகழ்ச்சியிலே கேட்டது. எங்கே மறுத்தார்கள்; யார் உத்திரப் பிரதேசத்திற்குப் போய் ஆரம்பிக்கச் சொன்னார்கள் என்ற உத்தரவை இப்போது அவர்கள் எங்களுக்கு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கே.குப்புசாமி மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகுகாங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் களுக்கு வருவதை நம்மால் உணர முடிகிறது.

திரு.நா,சுந்தரராஜ், இது பார்லிமெண்ட் டரி சொல் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அந்த வார்த்தையை அவை குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கே. குப்புசாமி: அது விரக்தியால் கூட வந்து இருக்கக் கூடும்.

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றஞ்சாட்டை சொல்லியிருக்கிறார். அதை நிருபிக்க வேண்டிய பொருப்பு அவருக்கு இருக்கிறது.

திரு. கே. குப்புசாமி: இருக்கின்ற நிலைமைகளை நான் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் அந்த விவரங்களை எல்லாம் நான் இங்கே சொன்னேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr Deputy, Speaker, sir, hon Member must state very categ nocialy who was applied for the licence and by whom they were directed .o go U rar Pracesh. He must state with facts and figures and shou|d not make a geneaal sa ement.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் என்றவுடனேயே அது குறித்து ஒவ்வொருவரும் குறுக்கிட்டுப் பேசுவது சரியல்ல மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் தெரிவித்ததில் தவறு இருக்கிறது என்று கருதுபவர்கள் தாங்கள் பேசுகின்ற நேரத்தில் அதற்கு பதில் அளித்துக் கொள்ளலாம், அல்லது விளக்கம் அளித்துக் கொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த தகவல் தமிழ்நாட்டை பாதிக்கும்பிரச்னையாக இருப்பதால், அத்தகைய கருத்தை தெரிவித்தவர் யார் என்பதைத் தெரிந்துக் கொள்ள நாம் விரும்புகிறோம். ஆகவே அப்படி சொல்லிய மத்திய அமைச்சர் யார் என்பதை அவர் இங்கே தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், நாம் எல்லோரும் சேர்ந்து அவரை எதிர்க்கலாம் அல்லவா?

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உறுப்பினர் தான் சொன்னதை நிருபிக்க வேண்டும் அல்லது அதை அவர் திரும்ப பெற வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அண்மையில் ஒரு புதிய தொழில் கொள்கை அறிவித்து இருக்கிறது. புதிதாக பெரிய தொழில்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் அதற்காக அவர்கள் இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களில், 87 மாவட்டங்களைப் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவித்து, அவைகளில் தான் புதிதாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த 87 மாவட்டங்களில் தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு மாவட்டமும் சேர்க்கப்பட வில்லை. பிற்படுத்தப் பட்ட மாவட்டம் என்று தமிழகத்தில் எந்த ஒரு மாவட்டமும் அறிவிக்கப் படவில்லை. ஆகவே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க



வேண்டிய நியாயம் நமக்கு இருக்கிறது. தமிழகத்தில் எந்த ஒரு மாவட்டமும் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்கப் படாத காரணத்தால் தான் புதிய தொழிற்சாலைகள் அமைக்க நெருங்குகிற போது, பிற்படுத்தப்பட்ட மாவட்டம் சில பேர் என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் அந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்குங்கள் என்று சொல்கிறார்கள். அந்த வகையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. என்பது உண்மை அது பற்றிய முழு விவரங்களை விளக்கமாக எடுத்துச் சொல்ல இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. அதை தான் மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் தெரிவித்தார் என்று கருதுகிறேன். அப்படி சொல்லியவர் யார் என்று தனிப்பட்டயில் வேண்டுமானால் சொல்லலாம். இந்த அவையில் அதைத் தெரிவிப்பது சரியா என்று தெரியவில்லை. அதுபற்றி பின்னர் வேண்டுமானால் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன். தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வேண்டுமென்று கேட்டால் உத்தரப்பிரதேசத்தில் தொடங்கு என்று சொன்ன மத்திய மந்திரி யார்? அவருடைய பெயரை இங்கே அறிவியுங்கள். அந்த அமைச்சர் யார் என்று தெரிந்தால் தான் இந்த தமிழக சட்டமன்றமே அவரை எதிர்க்கலாம். அப்படி சொன்ன அமைச்சர் யார், எங்கே, எப்போது, யாரிடத்தில் அப்படி சொன்னார் என்ற தகவல் இங்கே தரப்படவேண்டும்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். அதுபற்றிய விவரங்கள் பின்னர் தரப்படும்.

(முற்பகல் 11·10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாராளமாக நீங்கள் உரையாற்றும்போது சொல்லுங்கள். இப்படி வரிக்கு வரி மற்றவரின் உரையில் குறுக்கிட்டு பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அது சரியான மரபும் அல்ல. பார்லிமெண்டிலே இப்படியெல்லாம் அனுமதிப்பதே இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: யாரிடம் சொன்னார்கள் என்று சொல்லச் சொல்லுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பதில் வரும்வரை நாங்கள் உட்காரப் போவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் முறையான விவாதங்கள் அல்ல. பார்லிமெண்டிலே இப்படியெல்லாம் அனுமதிப்பதே இடையாது. ஒருவருடைய உரையில் இப்படி மற்ற அங்கத்தினர்கள், நுழைந்து, அவரை உரையாற்றவிடாமல் செய்வதே முறையல்ல. அங்கே பார்லிமெண்டிலும் நான் இருந்திருக்கிறேன். இப்படியெல்லாம் நடத்து கொள்வதை அங்கே அனுமதிப்பதேயில்லை. தவிர எதிர்க்கட்சியினருக்கு அனுமதிக்கப் [illegible] ஒரு குறைவு அங்கே. இங்கே உங்களுக்கு அதிக

அளவில் நேரம் கொடுக்கப்படுகிறது, அவையை முறையாக நடத்து
வதற்கு எல்லோரும் உதவ வேண்டும். எல்லாவிதத்திலும்
நிதனமாக இருக்க வேண்டும் எல்லோரும் உட்காருங்கள்.

(முற்பகல் 11-20)

THIRU DURAMURUGAN i am going to raise entirely a different matter. i want a ruling from the Hon. Chair (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரும் உணர்ச்சி வசப்படாதீர்கள். எல்லோரும் அமைதியாக அமர வேண்டும்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நான் இந்த பிரச்சி னைக்கு வரவில்லை, வேறு ஒன்று. எங்கள் கட்சியைப் பற்றி..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஒரு பிரச்சினையினைக் கிளப்புகின்ற நேரம் அல்ல இது. அமருங்கள்.

திரு. நா. சுந்தர ராஜ்: தலைவரவர்களே, ஒரு முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது அனுமதியில்லை. உறுப்பினர் அவர்கள் தயவு செய்து அமரவேண்டும்.

திரு. கே. கல்லன்: தலைவரவர்களே, ஊட்டியிலே அமைக்கப்
பட வேண்டிய கலர் ஃபிலிம் தொழிற்சாலையினை ஏதோ
உத்தரப்பிரதேசத்திற்குக் கொண்டு சென்று விட்டதாக
திரு. திவாரி கூறியிருப்பதாக ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகின்ற
வகையிலே இங்கே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.
உண்மையான நிலை அப்படி இல்லை. அந்த கலர் பிலிம் ஆனால்
தொழிற்சாலை அமைப்பது 6-வது ப்ளானில் சேர்க்கப்
பட்டுள்ளது. அந்தத் தொழிற்சாலை பற்றிய கொலாபரேட்டட்
காண்ட்ராக்டே இன்னும் செய்யவில்லை. அதற்கு சாங்ஷனும்
ஆகவில்லை. ஆகவே கொலாபரேஷன் கூட இன்னும்
செய்யாமல் எப்படி அதனை இன்னொரு ஸ்டேட்டுக்கு கொண்டு
போக முடியும். எனவே இங்கே கூறப்படுவது ஒரு திசை திருப்பு
கின்றமுயற்சி. உண்மை அப்படி இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இப்போது யாரையும் அனுமதிப்பதற்கு இல்லை. திரு. குப்புசாமி அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.





திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் கேட்ட கேள்வி
களுக்கு நிச்சயமாக தெளிவான விடை என்னிடம் இருந்து
கிடைக்கப் போகின்றது என்பதை நான் முதலிலே பணிவோடு
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மைய அரசு மாநிலத்தின்
தொழில் வளர்ச்சியில் அதிக நாட்டம் கொள்ளாதது குறித்து
நான் சுட்டிக்காட்டிப் பேசியது பற்றி குறைபட்டு கொண்
டார்கள். ஊட்டியிலே கலர் பிலிம் தொழிற்சாலை நிச்சயமாக
அமைய இருப்பதாகக் கூட இங்கே உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்னார்கள். அப்படி என்றால் நான் கேட்கிறேன். 3 சட்ட
மன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்த காரணம் என்ன?
தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்த காரணம் என்ன?
இந்தத் தொழிற்சாலை உத்தரபிரதேசத்திற்குச் சென்றுவிடுமா
என்ற அச்சத்தின்காரணமாக மக்கள்ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.
சட்டமன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதை
யாரும் மறக்க முடியாது. (குறுக்கீடு) ஆனால் இங்கே எனக்கு
முன்னாலே விடையளித்த வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் அவர்களு
டைய விடையே புரியவில்லை என்று சொன்னார்கள். வேளாண்
மைத்துறை அமைச்சருடைய விடையே புரியவில்லை என்றால்
உங்களை யார்தான் புரிய வைக்க முடியும். எனவே மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு பேரவைத்
தலைவரின் அமைதியோடு கூறவிரும்புகிறேன். (கூச்சல் குழப்பம்)

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரம் கேட்டார்கள். அதற்
காக மத்திய அரசினுடைய தொழிற்துறை அமைச்சர் மாண்பு
மிகு திவாரி அவர்கள் நான் அந்த கருத்தை சொல்லியிருக்
கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே காங்கிரஸ் நண்பர்
களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய
கருத்தை வலியுறுத்திகிற வகையிலே 'இல்லஸ்டிரேட்டர்டு'
வீக்லியில் ஒரு கருத்து வெளியாகியிருக்கிறது. அதை பேரவைத்
தலைவர் அவர்கள் அனுமதியோடு இந்த பேரவையின் கவனத்
திற்கு கொண்டு வர விரும்புகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'இல்லஸ்ரேட்டர்டு வீக்லி பத்திரிகையில் வந்ததை எல்லாம் இங்கே படிக்கவேண்டாம். நேரமாகிவிட்டது. சீக்கிரமாகப் பேச்சை முடியுங்கள். (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
உறுப்பினர் திரு. குப்பசாமி அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்
தார்கள். ஒரு செய்தியை தெரிவித்தார்கள். அந்த கருத்தையும்,
செய்தியையும் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
உறுப்பினர்கள் மறுத்திருக்கிறார்கள். இவர்கள் தெரிவித்திருக்
கிறார்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மறுத்து இருக்கிறார்கள்,

இரண்டுபேரும் தங்களுடைய ஆதாரங்களை வைத்து இருக்கிறார்கள். சட்டமன்ற நிகழ்ச்சிகளில் ஏராளமான வாய்ப்புகளுக்கு இடம் இருக்கிறது. இவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். அவர்கள் மறுப்பதற்கு ஆதாரங்கள் இருக்கிறது என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர் சொன்ன கருத்தை திருப்பதற்கு இவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் இந்த கருத்தை இந்த அளவோடு நிறுத்திக்கொண்டு வேறு கருத்துக்குச் செல்லவேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்)

திரு நா. சுந்தரராஜ்: மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வது ஒரு சொன்கை. மத்திய அரசு ஒரு சொள் சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது வேறு விஷயம். ஆனால் திரு. குப்புசாமி அவர்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டு வேறு. தமிழ்நாட்டிலிருந்து சென்ற ஒரு தொழிலதிபரிடம் மத்திய அமைச்சர் சொன்னதாகச் சொல்கிறார். உத்திரப்பிரதேசத்தில் தொடங்குங்கள் என்ற மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிற ஒரு அமைச்சர் சொன்னதாகச் சொல்கிறார். அப்படிச் சொன்னவர் யார் என்பதை நாங்கள் தெரிந்துக்கொள்ள விரும்புகிறோம். தயவுசெய்து அவர்கள் அதைச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் அவர்கள் சொன்னதை 'வாபஸ்' பெறறுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி, சரியான விவரம் இருந்தால் சொல்லாம்: இல்லையென்றால் வேறு பிரச்சனைக்கு வந்து, சீக்கிரம் முடித்துப் கொள்ள வேண்டும்.

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவரவர்களே, இப்படிச் சொன்ன மத்திய அமைச்சர் யார் என்று இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் ஆர்வத்தோடு அறிய விரும்புகிறார்கள். (குறுக்கீடு) ஆதங்கத்தோடு அறிய விரும்புகிறார்கள். ஊட்டியில் ஒரு போட்டோ பிலிம் தொழிற்சாலை இருக்கிறது. அங்கே அமைக்கப்பட இருக்கிற கலர் பிலிம் தொழிற்சாலையை.. (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து உட்கார வேண்டும்.

திரு ப. நெடுமாறன்: தலைவரவர்களே, ஊட்டியில் அமைக்க விருந்த கலர் பிலிம் தொழிற்சாலையை அங்கிருந்து மாற்றி உத்திரப்பிரதேசத்திலுள்ள நைநிட்டாலில் அமைக்க வேண்டுமென்று எந்த அமைச்சர் சொன்னாரோ, பெரம்பூர்





இரண்டாவது யூனிட்டை அங்கிருந்து அரியானாவிற்கு மாற்றச் வேண்டுமென்று எந்த அமைச்சர் உத்தரவிட்டரோ அந்த அமைச்சர்தான் இதையும் சொன்னார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கரவொலி)

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே.... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள் பல தொழில்கள் தமிழ்நாட்டுக்கு வரவில்லை. மத்திய சர்க்காரில் இருக்கிற ஒரு மைச்சர் உத்திரப்பிரதேசத்திற்கு மாற்றச் சொன்னார் என்று பொதுப்படையாகச் சொல்லப்பட்டது. அந்த மைச்சர் யார் என்று கேட்கிறார்கள். மத்திய சர்க்கார் பொதுவான ஒரு சர்க்கார். ஆகவே மத்திய சர்க்காரைப் பற்றி பொதுவாக எல்லா மாநிலங்களிலும் இப்படிச் சொல் கிறார்கள். இது ஒரு குற்றச்சாட்டு என்று சொல்லமுடியாது எல்லோரும் சேர்ந்து நமக்கு தொழிற்சாலை வேண்டுமென்று கேட்கலாம். இதிலே உணர்ச்சிவசப்பட ஒன்றும் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, திரு. குப்புசாமி அவர்கள் சொன்ன குற்றச்சாட் வேறு. தமிழ்நாட்டிலிருந்து போகிற தொழிலதிபர்களிடம் மத்திய அமைச்சர் 'தமிழ்நாட்டில் தொடங்க வேண்டாம் உத்தரப்பிரதேசத்தில் தொடங்குங்கள்' என்று சொன்னார் என்பது அவருடைய குற்றச்சாட்டு. அது யார் என்று நாங்கள் கேட்கிறோம். அவ்வளவுதான்.

திரு. கே. குப்புசாமி: தலைவரவர்களே, மத்திய அரசினுடைய மாற்றான்தாய் மனப்பான்மையை எடுத்துக்காட்ட இதை ஒரு உதாரணமாகக் குறிப்பிட்டேன். அப்போது திரு. சுந்தரராஜ் அவர்களும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்களும் அப்படிச் சொன்னவருடைய பெயரைச் சொல்லியாக வேண்டுமென்று சொன்னார்கள் அதற்கு உரியான பதிலை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் (குறுக்கீடுகள்). என்னாலும் விவரமாகச் சொல்ல முடியும், பேச முடியும்.

திரு. நா. சுந்தரராஜ்: திரு. நெடுமாறன் அவர்கள் பதில் சொல்வதற்கு அவர் உங்களுடைய 'மௌனத்பீசா' (குறுக்கீடுகள்)

திரு. கே. குப்புசாமி; ஊட்டியில் அமைக்கப்படவிருந்த கலர் பிலிம் தொழிற்சாலையை மாற்றுவதற்கு என்ன காரணம் இருக்கிறது? அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்க இயற்கைச் சூழ்நிலைகள் நன்றாக இருக்கின்றன. தொழிற் சாலை அமைப்பதற்குத் தேவையான அனைத்தும் அங்கே இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நான் இதற்கு ஒரு நல்ல முடிவைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் பேசட்டும். மற்றவர்கள் உட்காருங்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: தலைவர் அவர்களே, ஊட்டியிலே உள்ள பிலிம் தொழிற்சாலையை விரிவுபடுத்தத்தான் கேட்டிருந்தார்கள். ஆனால் மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் பேசுவது வேறு விஷயம். தமிழ்நாட்டிலே ஒரு தொழிற்சாலையையும் வரவிடாமல் தடுக்கிறார், உத்திரபிரதேசத்திற்கு தொழிற்சாலை அமைக்க அழைக்கிறார் ஒரு மத்திய மந்திரி என்று சொல்லியிருக்கிறார்கள். யார் அப்ளிகேஷன் போட்டது? யார் எடுத்தது? என்ன தொழிற்சாலையை தடுத்தார்கள்? என்ன காரணம்? ஆளுநர் உரையிலே கூட இரண்டு புதிய சிமெண்ட் தொழிற்சாலையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி மத்திய அரசில்தான் என்று சொன்னால், இப்போது புதிதாக சிமெண்ட் தொழிற்சாலையை கட்ட அனுமதித்திருப்பார்களா? ஆகவே ஊர்ஜிதமாக எதையும் சொல்ல வேண்டும். பெரிய குற்றச்சாட்டு இது. ஒரு ஆதாரமாக இதை எல்லாம் சொல்வது அவையின் கவனத்தை திசை திருப்புவது போல் தான் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழக அரசாலே பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற சில தொழில்களிலே கூட மத்திய தொழில் அமைச்சர் மாண்புமிகு திவாரி அவர்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார்கள். இனிமேல் நீங்கள் செய்ய வேண்டியது மாண்புமிகு திவாரி அவர்களிடம் சென்று கேட்டு விட்டு தேவையானதைச் செய்யப்பாருங்கள்.

திரு. என். எ. வி. சித்தன்: எந்தத் தொழில் அதிபர்களிடம் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி எல்லோரும் எழுந்து நின்று இதில் விவாதத்தை வளர்த்துக் கொண்டிருக்க நேரம் இல்லை. யார் என்று கேட்டதற்கு பதிலளித்துவிட்டார்கள். அவர்களிடம் சென்று டெல்லியிலே பேசிவிட்டு பிறகு முடிவு செய்யுங்கள். அல்லது உங்களுடைய உரை வரும் போது கேட்டுக் கொள்ளுங்கள். இப்படி குறுக்கிடுவது முறையல்ல. அனைவரும் உட்காருங்கள்.

என். எஸ். வி. சித்தன்: இப்படிச் சொன்னார், வந்தார் போனார் என்று பொதுவாக தகவல் வந்திருக்கிறது என்று சொன்னால் எப்படி. நாங்களும் சொல்வோம் இந்த அரசாங்கத்தைப்பற்றி அதை செய்திருக்கிறது, இதைச் செய்கின்றது. இதைச்செய்யவில்லை என்றெல்லாம்....



அவர்களிடத்திலே போகிற தொழிலதிபர்களிடத்தில் அதற்காக தமிழகத்திலே தொடங்குகிறீர்கள், யு.பி.யிலே தொடங்குங்கள் என்று சொல்வதாக வந்திருக்கிற தகவல்களின் அடிப்படையில் தான் அந்தக் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே தவிர தவறான கருத்துக்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாதப்பிரதிவாதங்களை நான் அனுமதிக்க முடியாது.

திரு. கே. குப்புசாமி: தமிழக அரசு நடப்பு நிதி ஆண்டில் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 811 கோடி திட்டமிடப்பட்டது. ஆனால் திட்டக்குழுவோடு கலந்து உரையாற்றியபிறகு அதை 1983–84 நிதி ஆண்டுக்கு ரூபாய் 845 கோடிக்கு உயர்த்திருக்கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் இந்திய துணைக்கண்டத்திலே தமிழகத்தை பொறுத்தவரை திட்ட செலவீடுகளின் சாதனைகளை அதிகமாக தமிழகம் தான் செய்திருக்கிறது, என்பதை நான் மன்ற உறுப்பினர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்கு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்ற அளவுக்கு இப்படிப்பட்ட நிலையை உருவாக்கிய இந்த அரசுக்கும், புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

ஆதி திராவிடர்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும், சிறுபான்மையினருக்கும் என்ன என்ன பணியை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆதி திராவிட மக்களுக்காக அவர்களுடைய அடிப்படை பிரச்சனைகளை தீர்க்கிற வகையில், வேலை வாய்ப்பு, குடிதண்ணீர் வசதி, பள்ளிக்கூட வசதி, சாலை வசதி, குடியிருப்பு மனை வசதிகள், கடன் வசதி ஆகிய அடிப்படை தேவைகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஆதி திராவிட பெருங்குடி மக்களுக்காக செய்து வருகிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அதே போல் பின்தங்கியவர்களின் நலனுக்காக அண்மையில் 'பேக்வார்டு' கிளாஸ் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கியவர்களுடைய நலனை நிச்சயமாக பரிசீலித்து நல்ல முறையில் அந்த குழு பரிந்துரை செய்யும். இங்கே சிறுபான்மையினர்களைப் பொறுத்தவரை 2,400 முஸ்லீம் ஸ்தாபனங்கள் இங்கே இருக்கின்றன. இவைகளை சீர் ஆக்குவதற்காக, இவைகள் சீராக விளங்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

[கே. குப்புசாமி] [1983 சனவரி 27

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11.30)

சமுதாயத்திலே ஆண்களை மிஞ்சுகின்ற அளவுக்குப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு, தனிப் பல்கலைக் கழகம், ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சி மன்றங்களின் தேர்தலில் நிற்பதற்கு தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுதல் ஆகிய இத்தனையையும் இந்த அரசு இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறது என்பது எதைக்காட்டுகிறது என்றால் சமுதாயத்தின் அடிமட்டத்திலே இருக்கின்ற பல்வேறு சமூகங்களின் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு கட்சி வேறுபாடின்றி, மத வேறுபாடின்றி அண்டை மாநிலத்தில் உள்ளது போல் மொழி வேறுபாடின்றி இந்த அரசு பணியாற்றி வருகிறது. ஆகவே ந்தப் புரட்சித் தலைவர் அரசுக்கு யார்மீதும் வெறுப்பு இல்லை, காழ்ப்புணர்ச்சி இல்லை. ஆனால் தமிழகத்தின் உரிமையை தமிழின் உரிமையை இந்த அரசு கைவிட்டு விடத் தயாராக இல்லை. இந்த உரிமைகளை நிச்சயமாகக் கட்டிக் காக்க இந்த அரசுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் தலையாய கடமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிடைக்க வேண்டிய உரிமைகளை கேட்டுப் பெற அனைத்துக் கட்சி தலைவர்களும், இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர்களுக்கும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய சமுதாய பொருளாதரச் சூழ் நிலையில் இதைவிட ஒரு சிறந்த அறிக்கையை ஆளுநரால் இந்த மன்றத்திற்கு அளிக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். இன்றைக்கு இருக்கின்ற சமுதாய நிலையினைக் கணக்கிலே கொண்டு, இன்றைக்கு இருக்கின்ற பொருளாதார நிலைமையைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட உன்னதமான உரை ஆளுநரால் ஆற்றப்பட்டு இருக்கிறது. இந்த உரைக்கு மன்றத்தினுடைய நன்றியறிதலைத் தெரிவிப்ப தோடு அரசுக்கு நன்றியைத் தெரிவித்து பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த ஆளுநர் உரையை வரவேற்று நன்றிகூறி அமைகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரை சர்க்காருடைய கொள் கைகளை, திட்டங்களை எடுத்துச் சொல்வதாக இல்லை. இன்றைக்கு நாட்டிலே எப்படி வறட்சி நிலைமை இருக்கிறதோ அதைப்போலவே ஆளுநர் உரையும் வறட்சியாக இருக்கிறது.



135972

1983 சனவரி 27] [திரு. அ. ரகுமான்கான்]

ஆனால் கல்லறைகளுக்கு வெள்ளை அடிக்கக் ... நீங்கள் செய்திருக்கிறீர்கள். வறட்சி பற்றிய அறிக்கைபற்றி இங்கே விவாதிக்க பட்டது. உள்ளபடியே நான் வருத்தப்படு கிறேன். 24 ஆம் தேதி ஆளுநர் இங்கே உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார், தமிழகத்திலே உள்ள வறட்சி பற்றி அன்று காலை 11 மணிக்கு உரை நிகழ்த்துகின்றபோது தான், டெல்லி நோக்கி அந்த அறிக்கை போகிறது.

N211,31 N83
N83-39.1 92

நான் கேட்கிறேன், மந்திரிகள் என்ற பயர் தாங்கிக் கொண்டு ஒரு அரசாங்கம் என்று இங்கே இருந்து கொண்டிருப் பதிலே என்ன நியாயம்? மேற்கு வங்கத்திலே அந்த முதலமைச்சர் திரு. ஜோதி பாசு வறட்சிநிலை ஏற்பட்டவுடனே டெல்லிக்குப்போய் நிதிவாங்கிக் கொண்டுவந்து காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார். ஒரிஸாவிலே வறட்சி ஏற்பட்டு நிபுணர் குழு வந்து பார்த்து 15 கோடி ரூபாய் அட்வான்ஸாக வாங்கி வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. மகாராட்டிரத்திலே ரிப்போர்ட் அனுப்பிவைக்கப்பட்டு நிபுணர்குழு வந்துபோய் வறட்சி நிவாரணப் பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதே நிலைதான் உத்தரப் பிரதேசத்திலும். நீங்களே அறிக்கையிலே வரலாறு காணாத அளவுக்கு நினைவு தெரிந்த அளவுக்கு வறட்சிஏற்பட்டதில்லை, உண்மையிலேயே இது மிகப் பெரிய வறட்சிதான் என்று சொல்லியிருக்கிறீர்கள், ஒரு சர்க்கார் நடத்திக்கொண்டிருக்கிறீர் களா? தமிழ்நாட்டு மக்களின் தலையெழுத்தோடு விளையாடு கிறீர்களா என்று தமிழ் மக்களின் சார்பாக கட்சிக்கு அப்பாற்பட்ட முறையிலே நான் கேட்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள், தகவல் தெரிவிக்சப்பட்டாகிவிட்டது என்று. எதுபற்றி, வறட்சி பற்றி. தெரிவித்திருக்கிறார்களா என்றால் தெரிவிக்கவில்லை. மோசடி செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால்—சபா நாயகர் அவர்களே, தவறான தகவலை அமைச்சர் கொண்டுவந்ததற்காக நான் இந்த நேரத்திலேயே உரிமைப் பிரச்சனை கொண்டுவர லாம் என்றாலும் உங்கள் அனுமதியோடு சொல்லிக் கொள் கிறேன். அந்த உரிமைப் பிரச்சனையை நாளை காலையிலே கொண்டுவருவோம். இல்லாததைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காருக்குத் தகவல் தெரியாது. ஆனாலும் அனுப்பி யிருக்கிறோம், மத்திய சர்க்காருக்கு தகவல் தெரியும் என்று சொல்கிறார்கள், இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது மக்களை ஏமாற்றும் மோசடி என்று நான் குற்றஞ்சாட்டு கிறேன். அதைப்போலவே இன்னொரு வாதம். இங்கே தொழிற் சாலைகள் சம்பந்தமாக வந்தது. என்னுடைய இனிய நண்பர் அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் பேசும்போது திவாரி

போன்றவர்கள் உத்திரப்பிரதேசத்தில் தொழிற்சாலைகள் துவக்கப்படவேண்டுமென்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள்.

நான் இந்த சர்க்காரைக் கேட்கிறேன். நீங்கள் கோட்டை விடவில்லையா? இதே தமிழ்நாட்டிற்கு திட்டங்கள் கொடுத்த போது பயன்படுத்திக் கொண்டீர்களா? நேவல் அகாடமி 500 கோடி திட்டம், பாதுகாப்பு அமைச்சர் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த வெங்கட்ராமன். அந்தத் திட்டத்தை பயன்படுத்திக் கொண்டீர்களா? நில ஆர்ஜிதம் செய்ய சொன்னார்களே, நீங்கள் கேட்டீர்களா? தீபம் பார்த்தசாரதி கூட முதலமைச்சரை வைத்து ஒரு கூட்டத்திலே சொன்னார். அதற்கு என்ன சொன்னார்? இந்திரா அம்மையாருடைய கருத்து சென்னை நகரம் அழகு கெட்டுப்போய் விடக்கூடாது கடற்கரைப் பகுதி கெட்டுப் போய் விடக்கூடாது என்பதால் தான் அந்த திட்டத்தை நீங்கள் ஏற்கவில்லை என்று சொன்னார்களே. ஆனால் உங்களை நான் கேட்கிறேன். சர்க்காரா நடத்துகிறீர்கள்? உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். கேரளாவிலே கருணாகரன் முதலமைச்சர் இந்த 500 கோடி திட்டத்தை கொண்டு போய் விட்டார். இதற்கு யார் பொறுப்பு? இவர் பொறுப்பா? சர்க்கார் பொறுப்பா? நீங்கள் தானே அதற்கு பொறுப்பு. மத்திய தமிழக மக்களுடைய தலை எழுத்தோடு விளையாடுகிறீர்களே என்பதற்காக இதைச் சொல்கிறேன். கோச் பாக்டரி போனதற்கு யார் காரணம்? கலர் பிலிம் தொழிற்சாலை போனதற்கு யார் காரணம்? தூங்காதே தம்பி தூங்காதே என்று சினிமாவில் பாடிவிட்டு சர்க்கார் நடத்துகிற நீங்கள் தூங்கலாமா? நான் கோபமாகப் பேசுகிறேனே என்று நீங்கள் வருத்தப்படக் கூடாது. மக்களுடைய நன்மை அடிப்படையிலே நான் இவைகளை எல்லாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள். ஆட்சித் தேர் நடத்தும் அன்பு தர்மராம், பொற்காலம் பிறந்தது. பூமி குளிர்ந்தது என்று அடிமைப் பெண்கள் நாட்டிலே புதுக்கவிதைப் பாடலாம். ஆனால் இன்றைக்கு இந்த சர்க்கார் என்ன காரியங்கள் செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இதிலே தேர்தல் காலத்து வாக்குறுதிகளைப் பற்றி குறிப்புகள் இருக்கிறதா? வாக்குறுதி ரத்து பற்றி இருக்கிறதா? இன்னும் சொல்லப் போனால் அரசு ஊழியர்களுக்கு குடும்ப ஆதார நிதியாக 10 ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்களே—தேர்தல் காலத்து வாக்குறுதிகள் இல்லையா? விவசாயிகள் கடன் விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு கூடுதல் விலை கொடுப்போம்—அதைப்பற்றிய





குறிப்பு இல்லை. பொங்கல் வாழ்த்து சொல்கிறீர்களே, மகிழ்ச்சி பொங்குமா? விலைவாசி ஏறி இருக்கிறதே; ஒட்டல் பண்டங்கள் விலைகள் ஏறி இருக்கிறதே? நான் கேட்க விரும்புகிறேன். இங்கே ஒரு அமைச்சர் இருக்கிறார். ரேஷன் கடைகளிலே அரிசி விலை உயர்த்தப்படும் என்று சொல்கிறார். அரிசி விலை இறக்கப்படும் என்று சொல்வதற்கு அமைச்சர் வந்திருந்தால் பாராட்டலாம். உயர்த்தப்படும் என்று சொல்வதற்கு நாவலர் மந்திரியாக இருக்கவேண்டுமா? அதற்காகவா மக்கள் ஓட்டு போட்டார்கள்? இன்றைக்கு விலைவாசியை கட்டுப்படுத்துகிற குறிப்பு இருக்கிறதா? 10 ஆயிரம், 12 ஆயிரம் போலீஸ்காரர்களை நியமிப்போம் என்று சொன்னீர்களே, நியமித்து இருக்கிறீர்களா? மதுவிலக்கைப் பற்றி உருக உருக பேசினீர்களே? தடுப்பதற்கு முயற்சி எடுத்திருக்கிறீர்களா?

ஜனநாயகத்தைப் பற்றி பேசுகிறார் என்னுடைய அருமை நண்பர் குழந்தைவேலு அவர்கள் ஆனால் சென்னை மாநகராட்சிக்கு தேர்தல் உண்டா? மற்ற மாநகராட்சிகளுக்கு தேர்தல் உண்டா? (குறுக்கீடு) சந்தோஷம். அதைப்பற்றி ஆளுநர் குறிப்பிலே இருக்கிறதா? கூட்டுறவுத் துறைகளுக்கு தேர்தல் இல்லையே? அதுபற்றிய குறிப்பு இருக்கிறதா?

சென்னையிலே முதலமைச்சர் அவர்கள் இரத்தத்தின் இரத்தமே என்று உங்களை எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் சென்னையிலே கொசுக்கள் தான் எங்களைப் பொறுத்தமட்டில் இரத்தத்தின் இரத்தமாக எங்கள் உயிரை வாங்கிக்கொண்டிருக்கின்றன. சாக்கடைகள் ஓடுகின்றன. குப்பைகள் கோபுரங்களாக இருக்கின்றன. பாதைகள் சரியில்லை. குழாய்களில் தண்ணீர் இல்லை. விளக்குகள் எரிவதில்லை. இவற்றைப்பற்றி எல்லாம் என்ன நடவடிக்கை இருக்கிறது? தனி அதிகாரியுடைய கொள்ளை அடிக்கிற கூடாரமாக, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாமன்றமாக ஜனநாயக விளக்கு அணைந்த தீபமாக மாநகராட்சிகள் இருக்கிறது.

நெசவாளிகள் மதுரை கலெக்டர் ஆபீஸ் முன்னால் போராட்டம் நடத்துகிறார்கள். நூல்விலை உயர்ந்திருக்கிறது தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கிற நிலை இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொகுதியிலே ஏராளமாக நெசவாளிகள் வேறு வேலையில்லாமல் வேறு இடங்களுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் கக்கூஸ்கள் கட்டப்பட்டதை ஒரு சாதனையாக சொல்கிறார். மதுரைக்கு போயிருந்தேன். அவருடைய தொகுதியிலே பேசினேன். கோவில்பாளையத்தில் பேசுகிறபோது தாய்மார்கள் மனு கொடுத்தார்கள். 13—வது வார்டு இது யாருடைய தொகுதி என்று கேட்டேன். முதலமைச்சர் எம். ஜி. ஆர். தொகுதி என்று சொன்னார்கள். கேவலம். இன்றைக்கு ஐந்து ஆண்டுகளாக ஆண்டுக் கொண்டிருக்

கிறார் நம்முடைய முதலமைச்சர். மதுரை கோப்பாளையத்திலே தாய்மார்களுக்கு ஒரு குக்கூசை கூட கட்டிக்கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், நான் கேட்கிறேன்—முதலமைச்சர் 24 மணி நேரத்தில் உத்தரவு போடக்கூடிய ஆற்றல் பெற்றவர் செய்திருக்க கூடாதா? ஆக இன்றைக்கு இவைகளை எல்லாம் சாதனையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இன்னும் நான் தெளிவாக சொல்ல விரும்புகிறேன். என். ஜி. ஓக்கள் பிரச்சனைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். கேட்டால் போராடுவேன் என்று சொல்கிறார். என். ஜி. ஓக்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள். திரிபுராவில் கொடுக்கிறார்கள். அகவிலைப்படி எல்லா ஆந்திராவிலே வைத்திருக்கிறார்கள். கேட்டால் நோட்டு அடிக்க மாநிலங்களிலும் என்னிடத்தில் இயந்திரமா இருக்கிறது என்று முடியுமா? மத்திய சர்க்கார் இடத்திலே இருக்கிறது என்று கேட்கிறார். இஷ்டத்திற்கு மத்திய சர்க்கார் நோட்டு அடிக்க சொல்கிறார். தங்கத்தை இருப்பில் வைத்துக் கொண்டால் தானே முடியுமா? முடியும். இல்லையென்றால் ஐ. எம். எப். ல் இந்தியா அடிக்க கடன் வாங்குகிறது? வெளி நாடுகளில் எப்படி வாங்குகிறார்கள்? பொருளாதார அடிப்படை எப்படி கடன் தெரியாது என்று சொல்ல மாட்டேன். முதலமைச்சருக்கு தெரியும். அவர் ஒரு டாக்டர். ஆனாலும் கூட அவர் இப்படி அவருக்கு நன்றாகத் பேசுகிறார்.

(முற்பகல் 11.15)

அதுமட்டுமல்ல, நான் இன்னொன்றையும் கூட நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த ராஜினாமா செய்துவிட்டு போராடுவேன் என்று பதவியை களைப் பார்த்து, இவர்களிடம் சம்பளம் வாங்குகிற என்.ஜி.ஓக்களை அரசாங்க ஊழியர்களைப் பார்த்துச் சொல்கிறார்களே, காவிரி நீர் தர மாட்டோம் என்று சொல்கிறார்களே, காவிரி எழுவோம், கதவுகளை உடைப்போம்' என்று பெங்களூர் அமைச்சர் திரு. காளி ... சொல்கிறார். திரு. நம்முடைய வீராவேசமாய்ப் பேசுகிறார். நம்முடைய ... புத்தனைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. முசிறிப் களாக மாறி, அந்தக் காலத்து மகாராஜாக்கள் போர் வீரர் பாதையில் எல்லாம் பேசுகிறார்கள். படையெடுப் காவிரி நீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, பதவியை ராஜினாமா செய்து போராடத் தயாரா? நான் கேட்கிறேன். உங்களோடு ஒத்துழைக்கத் தயார். நான் திரும்பவும் கேட்கிறேன். இன்றைக்கு காவிரி நீர் பிரச்னை மட்டும் அல்ல. பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன அவைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?



அது மட்டுமல்ல, இன்றைக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பல்வேறு பிரச்னைகளில் இந்த சர்க்கார் மெத்தனமாக இருந்து கொண்டிருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமா என்று கேட்கிறார். வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு நல்லதைச் செய்யுங்கள். யார் வேண்டாம் என்றது. யார் தடுத்தது? வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை வாழ வைக்க வேண்டுமென்பதற்காக மந்திரிகள் சம்பளம் வாங்காமல் இருக்கிறீர்களா? ரூ. 250 வீட்டு வாடகைப்படியை ரூ. 2,000 ஆக உயர்த்தவில்லையா? நான் கேட்கிறேன், ஹெலிகாப்டர் வாங்கவில்லையா? நான் கேட்கிறேன், கோழி வாரியம் வைத்து பலருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவில்லையா? நீங்கள் வைக்காத வாரியம் ஒன்றுதான். நாய் வாரியம் அதுகூட விரைவிலே வரக்கூடும். இந்தச் சட்டமன்றத்திலேகூட ஒரு உறுப்பினர் அதைப்பற்றி கேட்டார். ஆகவே, இன்றைக்குப் பறவையினங்களுக்குப் பணம் செலவழிக்கிறீர்கள், என்.ஜி.ஓக்களின் வயிற்றில் அடிக்கிறீர்கள். பெரியார் திடலில் நடந்த என்.ஜி.ஓக்கள் மாநாட்டில் கலைஞரும், கல்யாணசுந்தரமும் கலந்து கொண்டார்கள் என்பதற்காக, என்.ஜி.ஓக்கள் சங்க அங்கீகாரத்தை ரத்து செய்கிறீர்கள். செய்யலாமா? காமராஜர் காலத்திலே என்.ஜி.ஓக்கள் சங்க கூட்டத்திலே அண்ணா அவர்கள் கலந்து கொள்ளவில்லையா? நான் கேட்கிறேன் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போய்க் கலந்துகொள்ளவில்லையா? நான் கேட்க விரும்புகிறேன், இன்றைக்குக் கேரளாவிலே மந்திரியாக இருக்கிற வயலார் ரவி, என்.ஜி.ஓக்கள் மாநாட்டிலே கலந்து கொள்ளவில்லையா? அதற்காக அங்கீகாரத்தை ரத்து செய்யலாமா? 524 பேர்களை சஸ்பெண்ட் செய்கிறீர்கள். ஹைகோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கி வந்திருக்கிறார்கள். பஞ்சப்படி, சம்பளம் கொடுக்க வேண்டாமா? அந்த என்.ஜி.ஓக்களுக்கு இன்றைக்கு நீங்கள் செய்து இருக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல, இன்னொன்றும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை நகரத்தினுடைய தண்ணீர் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டாமா? நாங்கள் அமைச்சர் அவர்களுக்கு அறிக்கை மூலம் தெரிவித்தால், புழலேரி வறண்டிருக்கிறது என்று சொன்னால், தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்லியதைத்தான் சொல்கிறேன். 'சில்க் சுமிதாவைக் கொண்டு வந்து நடனம் நடத்திக் காட்டுகிறேன்' என்று சொல்கிறார். புழலேரி வறண்டிருப்பதற்கும் சில்க் சுமிதாவுக்கும் என்ன சம்பந்தம்? புழலேரியை அவராலே நிரப்ப முடியுமா? சில்க் சுமிதா என்ன கங்கா தேவியா? காவிரித் தாயா? ஏதாவது அர்த்தம் வேண்டாமா? நான் சபையின் கௌரவத்தைக் குறைப்பதற்காகச் சொல்லவில்லை. மந்திரி சொல்லிய வாசகத்தை, பதில் சொல்வதற்காக நான் சொல்கிறேன். மழைக்காக பிரார்த்தனை

செய்கிறீர்களே, குன்னக்குடி வைத்தியநாதனை வைத்து வயலின் வாசிக்கச் சொல்கிறீர்களே, இப்பொழுது மின்சார வெட்டு இருக்கிறதே, வயலின் வாசிக்கச் சொல்லுங்கள். மின்சார வெட்டு சரியாகிவிடுமா? பிரச்சனை தீர்ந்து விடுமா? இதிலேயிருந்து என்ன தெரிகிறது? பெரியாருக்கும், உங்களுக்கும் சம்பந்தம் இல்லை. பெயருக்கு பெரியாரை வைத்துக் கொண்டு ஏமாற்றுகிறீர்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.

அதுமட்டுமல்ல, கிருஷ்ணா நதி திட்டம் என்னவாயிற்று? இன்றைக்கு, ஆந்திரா முதலமைச்சர் திரு. என். டி. ராமாராவ், நம்முடைய முதலமைச்சரை, 'இவர்தான் என் அண்ணன்' என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய நாவலர் கூடக் கூறியிருக்கிறார், 'ஆந்திராவிலே ஒரு ராமர், தமிழ்நாட்டிலே ஒரு ராமர்' என்று. ரொம்ப மகிழ்ச்சி. அப்படியானால் இந்த ராமர் அந்த ராமரிடத்திலே பேசி, சீக்கிரமாக, கிருஷ்ணா நதி திட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் செய்ய வேண்டும். கட்டளைக் கால்வாய் என்று சொன்னீர்கள். அது என்னவாயிற்று?

தலைநகரைத் திருச்சிக்குக் கொண்டுபோக வேண்டுமென்று சொன்னீர்கள். ஏனென்றால் தலைநகரம் நடுவிலே இருக்க வேண்டுமென்கிறீர்கள். ஹைதராபாத் நடுவிலே இருக்கிறதா? பெங்களூர் நடுவிலே இருக்கிறதா? திருவனந்தபுரம் எங்கே இருக்கிறது? நடுவில ? டெல்லி நடுவிலே இருக்கிறதா? மூளை நடுவிலா இருக்கிறது? ஆகவே, அதிலேயிருந்து என்ன தெரிகிறது? 300 ஆண்டுக்காலமாக சென்னை நகரம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதைக் கொண்டு போக வேண்டுமென்று சொல்வது நியாயமில்லை.

சென்னை நகரத்திலே தண்ணீர்ப் பஞ்சம் எந்த அளவுக்கு இருக்கிறது? கருப்பநாயக்கன்பட்டியிலே தண்ணீர் என்று கேட்ட தாய்க்குலத்தைப் பார்த்து, தெய்வத் தாய் படத்திலே நடித்த முதலமைச்சர், தாய்க் குலத்தைப் பற்றிப் பேசுகிற முதலமைச்சர் ஆட்சியில், இன்றைக்குத் துப்பாக்கிப் பிரயோகம் – அங்கேயிருக்கிற தாசில்தார் நடராஜன் துப்பாக்கியால் சுட்டிருக்கிறார். தடியடிப் பிரயோகம் நடந்திருக்கிறது. வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கொள்ளைக் காரனுடைய—வெள்ளைக்காரன் ஆட்சியிலே கூட இப்படி நடக்கவில்லை. தாய்மார்களுக்கு எதிராக அக்கிரமம் நடந்திருக்கிறது. அதுபற்றி நான் இந்த நேரத்திலே கண்டித்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே இன்னொரு பிரச்னையையும் நான் இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏதாவது ஒரு பொறுப்பான திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்களா? மின்சாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் ரொம்பவும் கெட்டிக்காரர்



கெட்டிக்காரர் என்றால், அவர் 100 சதம் மின்சார வெட்டு கொண்டு வந்திருக்கிறார். ஏன்? அதற்கு மேல் கொண்டுவர முடியாது. பிறகு எதற்கு 100 சதவிதம் என்று சொல்கிறீர்கள்? முழுமையாக மின்சார வெட்டு என்று சொல்லிவிடுங்கள். 100 சதவிதத்திற்கு மேல் ஏதாவது பர்செண்ட் இருக்கிறதா? எதற்கு 100 சதவிதம் நெம்பர்? அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? ஏனென்றால் அவர் ரொம்பப் படிப்பு படித்தவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கஸ்டம்சில் 300 சதவிதம் Duty என்று சொல்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: இதற்கெல்லாம் காரணம் மழையா? சரி, இதற்கெல்லாம் காரணம் மழை. அதனால்தான் புனல் மின்சாரத்தில் சிக்கல் என்கிறார்கள். மகராஜன் ஆட்சியிலே இருக்கிறார். அதனால்தான் மழை பெய்தது என்று முன்பு சொன்னார்கள், இப்பொழுது மழை பெய்யவில்லை, இதற்குக் காரணம் யார் என்று நான் ஐயா வழியில் கேட்கிறேன். இதற்குப் பதில் உண்டா?

இன்னொரு பிரச்னை. புனல் மின்சாரத்திற்கு மழை இல்லாததுதான் காரணம் என்கிறார்கள். சரி, அனல் மின்சாரத்திற்கு என்ன ஆயிற்று? இயந்திரக் கோளாறு. அதைச் சரி செய்யவில்லை. நிலக்கரி வரவில்லை? ஏன் கப்பல் வாங்கவில்லை? கப்பலிலே கப்பலா? இதிலிருந்து எனக்கு என்ன தெரிகிறது என்றால் நீங்கள்தான் இதற்குக் காரணம் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை, மின் வெட்டைக் கொண்டு வருவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் இதற்கெல்லாம் ஒரேயொரு வழி இருக்கிறது. அதுதான், மரியாதையாக நீங்கள் பதவியை இராஜினாமா செய்வதுதான். அந்த வழியைச் செய்து விட்டால் சரியாகிவிடும். முடியவில்லை என்று சொல்வதற்கு ஒரு அரசாங்கமா? இதற்கு ஒரு அரசாங்கம் தேவையில்லை. காரணம், உங்களை நம்பி மக்கள் இருக்கிறார்கள். நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்து கேட்கிறோம், இதற்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இந்த அளவில் இருக்கிறது.

அடுத்து இன்னொரு பிரச்னையைச் சொல்ல விரும்புகிறேன் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளெல்லாம் இராஜினாமா செய்து கொண்டிருக்கிறார்கள். கங்கப்பா அவர்கள், நான் மனம் வருந்திப் போகிறேன். இராஜினாமா செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். கலைஞரின் முன்னாள் பி.ஏ. வாக இருந்த நாகராஜன், ஐ.ஏ.எஸ். அதிகாரியை சஸ்பெண்ட் செய்திருக்கிறீர்கள்.

[திரு. அ. ரகுமான்கான்] [1983 சனவரி 27

இராதாகிருஷ்ணன், சிட்டி சிவில் கோர்ட்டிலே கேஸ்
இருக்கிறது. அப்படி கேஸ் இருக்கும்பொழுது சஸ்பெண்ட்
செய்வீர்கள். உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் யாரையும்
சஸ்பெண்ட் செய்து விடுகிறீர்கள். நல்லவேளையாக
மகாத்மா காந்தி அவர்கள் இப்பொழுது இல்லை. மகாத்மா
காந்தியடிகள் உயிரோடு இருந்தால் அவர் மீதும் இந்த
சர்க்கார் கேஸ் போட்டால் அதில் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

பஸ் போக்குவரத்தில் ஆம்னி பஸ் ஊழலில் சம்பந்தப்
பட்டிருந்த அதிகாரியை 6 மாதங்களுக்கு முன் மேலும்
பதவிக்குக் கொண்டு வர வேண்டுமென்று அவரைக் கொண்டு
வந்து பதவியில் உட்கார வைத்தார்கள். வித்தியாசாகர் என்ற
அதிகாரியை, சஸ்பெண்ட் செய்யப்பட்ட அதிகாரியை மீண்டும்
ரீ—இன்ஸ்டேட் செய்திருக்கிறார்கள். பால் கமிஷன்
ரிப்போர்ட்டுக்குச் சம்பந்தமில்லாத சண்முகநாதனையும்,
சதாசிவத்தையும் சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள் சதாசிவம்
என்பவர் அரசாங்க ஊழியர். சண்முகநாதன் என்பவர்
கலைஞரின் பி.ஏ.வாகப் பணியாற்றியவர். அவர்களை
சஸ்பெண்ட் செய்துவிட்டு, இன்னும் அவர்கள் மீது சார்ஜ்
போடவில்லை. வருஷம் ஒன்றிரண்டு ஆகிவிட்டது.
வித்தியாசாகருக்கு ஒரு நீதி, சண்முகநாதனுக்கு ஒரு நீதியா?
ஆம்னி பஸ் ஊழலில் சம்பந்தப்பட்டவருக்கு ஒரு நீதி,
சதாசிவத்திற்கு ஒரு நீதியா? இது என்ன அக்கிரமம்?

அடுத்து, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று சொல்லு
கிறீர்கள். மாதவரம் பால் பண்ணையிலே வேலை பார்த்த
1,500 தொழிலாளர்களை வேலையிருருந்து விரட்டி விட்டு
குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லுகிறீர்கள்.
நான் கேட்க விரும்புகிறேன், இருப்பதைப் பிடுங்காமல்
இருக்கலாமே, இருப்பவர்களை வெளியே அனுப்பாமல் இருக்க
லாமே.

இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த நம்முடைய
தமிழர்கள் நெய்வேலி விவசாயப் பண்ணையில் வேலை
பார்த்தார்கள். அதை நஷ்டம் என்று மூடிவிட்டு ஆயிரக்
கணக்கான அந்த அகதிகளைத் தமிழ்நாட்டின் வீதிகளில் நடக்க
விட்டிருக்கிறீர்கள். அவர்கள் நியாயம் கேட்டார்கள். ஆனால்
அவர்கள்மீது கேஸ் போட்டு ஜெயிலில் வைத்தார்கள்.
இவ்வாறு செய்துவிட்டு இப்பொழுது குடும்பத்திற்கு ஒருவருக்கு
வேலை என்று சொல்கிறீர்கள்.

படகு கட்டும் தொழிலாளர்கள் வேலைப் பொறுப்பிலிருந்து
விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியிலே
சாக்கடையிலே வேலை பார்த்து வந்த தொழிலாளர்களை
வெளியேற்றி விட்டார்கள்.



1983 சனவரி 27] [திரு. அ. ரகுமான்கான்]

அரசு பொருள் போக்குவரத்துத் தொழிலாளர்களை நீக்கி
இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் விட்டுவிட்டு வேறு யாருக்கு
நீங்கள் வேலை கொடுக்கப் போகிறீர்கள்? குடும்பத்தில் ஒருவருக்கு
வேலை என்று சொல்கிறீர்கள்? படித்த பட்டதாரிகள் 60
இலட்சத்திற்கும் மேல் இருக்கிறார்கள். அவர்களுடைய
குடும்பத்திற்கு வேலை கொடுக்கப் போகிறீர்களா? அல்லது
படிக்காமல் வேலையில்லாமல் இருக்கிறார்களே அவர்களுக்கு
வேலையா? இது பர்மனென்ட் வேலையா அல்லது அடிஷனல்
ஆப்பர்சுனிட்டி என்று சொல்லுகிறார்களே அதுபோல் கூடுதல்
வேலை வாய்ப்பா? பாலம் கட்டும் வரையில் டெம்பரரி
வேலையா? இதன் நேச்சர் என்ன? இவைகளெல்லாம் தெளி
வாக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்ல
விரும்புகிறேன்.

பல்வேறு பதவிகளுக்கு அதிகாரிகளைப் போடவில்லை.
மதுரை சட்டக் கல்லூரியிலே முதல்வரே இல்லை. சென்னைச்
சட்டக் கல்லூரியில் ஏற்கெனவே கிடையாது. பொதுப்பணித்
துறையில் 3 சீஃப் என்ஜினியர்கள், அடிஷனல் ஜட்ஜ் போஸ்டுகள்
கிடையாது. ஹைகோர்ட்டிலே பல ஜட்ஜ் போஸ்டுகள் காலி
யாக இருக்கின்றன. நாகமணி, ஐ.ஏ.எஸ். என்ற அதிகாரிக்கு
வேலையே இல்லாமல் சம்பளம் கொடுத்து, இப்பொழுது
நியமித்திருக்கிறார்கள். இதற்குப் பெயர் நிர்வாகமா என்று
கேட்க விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டம் பிரமாதமாகப் பேசுகிறீர்கள். அது
பெரிய சாதனை என்று சொல்லுகிறீர்கள். கவர்னர் உரையிலே
கூட என்ன போட்டிருக்கிறீர்கள் என்று பார்த்தால் அறிவார்ந்
தவர்கள் இதைப் பாராட்டுகிறார்கள், விவரம் தெரிந்தவர்கள்
இதைப் பாராட்டுகிறார்கள் என்று. அப்படியானால்
இதைப் பாராட்டவில்லை என்றால் என்ன அர்த்தம்? அவர்கள்
அறிவில்லாதவர்கள், விவரம் கெட்டவர்கள் என்று அர்த்தமா?

நான் கையிலே வைத்திருப்பது ஆனந்தவிகடன் பத்திரிகை.
அதில் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரை சிவசங்கரி
அம்மையார் பேட்டி கண்ட விவரம் வந்திருக்கிறது. திரு.
எம்.ஜி.ஆர். அவர்களின் மதிய உணவுத் திட்டம்பற்றி
சிவசங்கரி அம்மையார் அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு
இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் ''இது அவருடைய
திட்டம் என்பதை நான் மறுக்கிறேன். பல வருஷங்களுக்கு
முன்னாலேயே பல மாநிலங்களில் புகுத்தப்பட்டு வந்த
திட்டம்தான் இது. நான் பிரதமர் ஆவதற்கு முன்பே சில
இடங்களில் மதிய உணவு திட்டத்தைத் துவக்கி இருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

....சில பள்ளி ள், சில இடங்களில் அன்று துவக்கினேன். அதை தமிழ்நாடு முழுவதும் இன்று எம்.ஜி.ஆர். நிமுகப்படுத்தி இருக்கிறார் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன் உங்களுக்கு தைரியம் உண்டா? அமைச்சர் காளிமுத்துவுக்குத் தைரியம் உண்டு எனக்குத் தெரியும், அவர் என் நண்பர். உங்களுக்கு தைரியம் உண்டா? அப்படியானால் நான் கேட்க விரும்புகிறேன், இந் ராகாந்த வரம் இல்லாதவரா? சொல்ல முடியுமா?

அதுமட்டுமல்ல, நான் சொல்ல விரும் கிறேன், இது உங்களுடைய திட்டம் ல்ல. உங்களுடைய ட்டம் என்று சொல்வதற்கில்லை. அதைத்தான் அவர்களும் சொல்லுகிறார்கள். வேண்டுமானால் இங்கே வாசித்துக் காட்ட தயாராக இருக் கிறேன். இந்தத் திட்டத்தை அவர்கள் ஆதரிக்கவில் ல. அவர் என்ன சொல் றார் என்றால் நினைத்து. நிதானித்து, நீண்ட காலம் பலனைத் தரக்கூடிய தொ ற்சாலைகள் போன்றவற்றைத்தான் துவங்கவேண்டும் என்ற ருத்தை அவர் வலியுறுத்தி இருக்கிறார். சந்தேகம் இருந்தா துணை சபா நாயகரிடம் கொடுக்கிறேன், படித்துப் பா ங்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர் களே, அவர்கள் ஆதரிக்கிறார்களா, இல் லயா என்பதல்ல. நீங்கள் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறீர்களா இல்லையா?

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, இதே சட்டசபையில் எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். குழந்தைகளுக்குச் சத்துணவு போட வேண்டும். முதியோர்களுக்குச் சத்துணவு போட வேலையில்லாதவர்களுக்குச் சத்துணவு போடவேண்டும். எளியவர்களுக்குச் சத்துணவு போட வேண்டும். ஏழை வீட்டிலே யாரும் சமைக்க வேண்டாம். காலையிலே முடிந்தால் சர்க்கார் கொடுக்கும். இலவச இட்டிலி, திட்டம் கொண்டு வாருங்கள். ஆதரிக்கிறோம். வேண்டாம் என்று சொல்லவில்லை. குழந்தைகளுக்குச் சோறு போடவேண்டும் என்ற திட்டத்தை யாருமே எதிர்க்கமாட்டார்கள். எதிர்ப்பது 'இன்-ஹிம னிட் டேரியன்'. ஆனால் யாரும் எதிர்க்கமாட்டார் ள். ஆனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால். இந்தத் திட்டத்தின் மூல மாக எதிர்பார்த்த பலன் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. படிப்பு பாழாகிறது. இரண்டாவது பிள்ளைகள் பிச்சைக்காரர் களாக ஆக்கப்படுகிறார்கள். மூன்றாவது அது சத்துணவா அல்லது வெற்றுணவா—அது வேறு விவகாரம். அதிலே கொள்ளை அடிக்கப்படுகிறதா இல்லையா என்பது வேறு விவகாரம். அதற்கு அடுத்தப் பிரச்சினை வாத்தியார்கள் எல்லாம் சமையல்காரர் களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வேறு விவகாரம். எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பார்கள். எங்கள்



ஊரிலே கூட, என்னுடைய ஆசிரியரைப் பார்க்கச் சென்றிருந்தேன் (மணி அடிக்கப்பட்டது). அந்த எழுத்தறிவித்த இறைவன் என்ன செய்து கொண்டிருந்தார் என்றால் பள்ளிக் கூடத்திலே முருங்கைக்கீரையை உருவிக் கொண்டிருந்தார். இறைவன் உருவிக்கொண்டிருந்தார்.

இந்தத் திட்டத்தை நாங்கள் ஒன்றும் குறைவாகச்சொல்ல வில்லை. நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் நான் சொல்ல விரும்புவது இதனுடைய பலன் போய்ச் சேரவேண்டியவர் களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதுதான். இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காக இன்றைக்கு ஏறத்தாழ நம்முடைய பிளான் அவுட் லே 845கோடி ரூபாய் என்று கருதுகிறேன். சிவராம ஐயர் தினமணியிலே எடிட்டோரியல் எழுதி இருக்கிறார். இதிலே 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுருக்கிறது என்று அப்படியானால் பாக்கி ரிசோர்ஸக்கு என்ன செய்யப்போகிறீர்கள். எங்கிருந்து பெறப்போகிறீர்கள். என்ன ஏற்பாட்டைச் செய்திருக்கிறீர்கள்.

ஆனால் இல்லஸ்டிரேடட் வீக்லியிலே, மந்திரிசபையிலே உறுப்பினர் என்று சொல்லப்பட்டு, அதிலே டிக்கப்பட்டு, தமிழக சர்க்கார் அதற்கு விளம்பரம் கொடுத்து மிகப்பெரிய அறிவிப் போடு வந்திருக்கக்கூடிய புகழ்பெற்ற அந்த இல்லஸ்டிரேடட் வீக்லி அந்த பத்திரிக்கை. நீங்கள் படித்து இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ரொம்பவும் சிறப்பான பத்திரிக்கை. அந்தப் பத்திரிக்கையிலே, இதற்கு நோபல் பரிசு கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். எதற்கு? சத்துணவுத் திட்டம் கொண்டு வந்ததற்கு. அப்படியானால் காமராஜர் கொண்டுவர வில்லையா? 20 லட்சம் மக்களுக்குப் போடவில்லையா? 225 நாட்களுக்குப் போடவில்லையா? மானியம் 25 பைசா என்று சொல்லவில்லையா? நம்முடைய முதல் அமைச்சர் தியாகராய செட்டியார் அவர்கள் போட்டார் என்று சொன்ன அவருக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டாமா? நம்முடைய முத லமைச்சரே சொல்லி இருக்கிறார், வெள்ளைக்காரனேகூட முயற்சித்தான். அவனுக்கு ஒரு சின்ன நோபல் பரிசு கொடுக்க வேண்டாமா? பாரதியார் விழாவிலேயும் இதைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். இதைக் கிண்டல் செய்வது என்னுடைய நோக்க மல்ல. மக்களுக்குப் பலன் போய்ச் சேரவேண்டும். பிள்ளை களுக்கு நல்லமுறையில் கிடைக்கவேண்டும். வாத்தியார்கள் கற்பிப்பவர்களாகத்தான் இருக்கவேண்டுமே தவிர, சமையல் காரர்களாக ஆக்கப்படக்கூடாது என்ற அடிப்படையிலேதான் இதைச் சொல்லுகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன். மருத்துவக் கல்லூரி அட்மிஷனிலே மிகப் பெரிய ஊழல் நடைபெற்று இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

யாரும் தவறாக இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். உடல் ஊனமுற்ற ஒரு பெண்மணி ஆவடியிலே இருக்கின்றவர், அட்மிஷ னுக்காக அப்ளிகேஷன் போடுகிறார், மருத்துவக் கல்லூரி அட் மிஷனுக்குசெலக்ஷன் கமிட்டி அந்த அப்ளிகேஷனை ரிஜக்ட் செய்கிறது. டாக்டர் சர்டிபிகேட், ஊனமுற்றவர் என்பதற்காக சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். அதை மறுத்த காரணத்தாலே அந்த ஊனமுற்ற பெண்மணி ஹைகோர்ட்டிலே அப்பீல் போடு கிறார், மன்னிக்க வேண்டும், ரிட் போடுகிறார். நீதிபதி சத்திய தேவ் அவர்கள் செய்தது தப்பு. ஏன் இப்ப செய்தீர்கள் என்று சொல்லி செலக்ட் கமிட்டியைக் கேட்கிறார். இல்லை, இல்லை, அந்தப் பெண்மணி ஊனமுற்றவர் அல்ல என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிச் சொன்ன உடனே அவர்கள் பாண்டிச் சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்கு அனுப்புகிறார். மெடிகல் எக்ஸ்பர்ட் ஊனமுற்றவர்தான் என்று தீர்ப்பு வழங்குகிறார்கள். உடனே அவர் சொல்கிறார். 24ஆம் தேதிக்குள்ளே அந்தப்பெண்மணிக்கு இடம் கொடுத்தாக வேண்டும் என்று சொல்லிவிட்டு, தம்முடைய மரியாதைக்குரிய (குறுக்கீடு) உங்களுடைய அனுமதியோடு, உங்களுடைய பெர்மிஷனோடு சொல்கிறேன். அவர் சொல்கிறார் "The Government may choose to take disciplinary action but past events had shown that in spite of judicial indictm nts, promotions were granted to persons or honours conffered on them without any action b eing taken. Hence the Court taking appropriate action need not be avoided, whether any disciplinary proceedings aganist the Committee members were taken or not, the Judge said.

என்ன அர்த்தம். இந்த சத்தியதேவ் சொல்கிறார்கள். அவர் சொல்லியதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே உயர்நீதி மன்றம் தீர்ப்பிலே குறிப்பிட்டிருப்பதை நீக்கவேண்டுமென்று சொல்கிறேன். யு எக்ஸ்பஞ்ச் தி ஸ்டிரிக்சர்ஸ் ஒரு வழக்கு நீதிமன்றத்திலே போடப்பட்டு அது பைசல் ஆகாமல இருக்கின்ற சூழ்நிலையில் இதை அவர்கள் அறிவிக்கலாமா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள். (குறுக்கீடு) அரை மணிநேரம் பேசிவிட்டார்கள். இப்போது மணியைப் பாருங்கள் (குறுக்கீடு) இன்னும் 7, 8 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்).

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களை, திரு. ரகுமான்கான் அவர்கள் இப்போது நீதிபதியினுடைய தீர்ப்பிலே இருக்கின்ற பகுதிகளைப்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைவழியாக அககூறப் பெற்றது.



படித்துக் காண்பித்தார். நீதிபதி சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதிகள் நீக்கப்படவேண்டுமென்று ஒரு தனி வழக்கு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. இ.பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த வழக்குக்கு மேல் ஒரு ரிட் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டு அது அட்மிட் ஆகியிருக்கிறது. தீர்ப்பை நீங்கள் வழங்கலாம்.

Just I am only b-inging that fact to your knowledge.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; ஒரு ரிட் அப்பீல் போட்டிருக்கிறார்கள். இதற்கு மேலே ... (குறுக்கீடு) நான் தீர்ப்பு கொடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்) நான் சட்டத்தி னுடைய அடிப்படையிலேதான் சொல்கிறேன். அதாவது ரிட்டிலே போட்ட ஸ்டிரிக்சர்ஸை நீங்கள் படித்தீர்கள். அதற்கு மேல்ஒரு ரிட் அப்பீல் போட்டிருக்கிறார்கள். அந்த அப்பீலிலே ஸ்டிரிக்சர்ஸ் ரிவர்ஸ் ஆகலாம். ரிட் அப்பீல் போட்ட உடனே சப்ஜூடிஸ் ஆகிவிடுகிறது. அதாவது நாங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு, அந்த ஸ்டிரிக்சருக்கு மேல் ரிட்அப்பீலுக்குப் போயிருக்கிறார்கள். அந்த தீர்ப்பு முடியும் வரை நாம் எதுவும் சொல்ல முடியாது. (குறுக்கீடு). பத்திரிகையிலே வருவதை நான் சொல்ல வில்லை. வெளியிலே வருவதைப் பற்றி நான் சொல்ல வில்லை.

திரு. துரைமுருகன் : ரகுமான்கான் அவர்கள் பேசியதும் இருக்கட்டும். மாண்புமிகு லா மினிஸ்டர் அவர்கள் சொன்னதும் இருக்கட்டும், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சத்தியதேவ் அவர்களின் தீர்ப்பின் மேலே அப்பீல் இருக்கிறது. அதனாலே அந்தத் தீர்ப்பு அவைக்குறிப்பிலே இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். (குறுக்கீடு)

(நண்பகல் 12.00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மருத்துவக் கல்லூரியிலே சேர்ப்பது பற்றிய ஒரு வழக்கிலே உயர்நீதிமன்ற நீதிபதிகள் கூறிய கருத்துக்களை எடுத்துக்கூறி, அவைகள் செய்தித்தாளிலே

ந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அந்த தீர்ப்பின் மீது மேல் முறையீடு (ரிட் அப்பீல்) அரசுத் தரப்பில் செய்துள்ளதாக மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இந்த இரண்டு கருத்துக்களும் இங்கே பதிவாகியிருக் கின்றன. ஆகவே, இதற்குமேல் அந்தப் பிரச்னை குறித்து மாண்பு மிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் விமர்சிக்கக்கூடாது. அதுபற்றிய கருத்துக்கள் சொல்லக்கூடாது. அவர் குறிப்பிட்ட கருத்துக்களும், அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கமும் இங்கே பதிவாகியிருக்கின்ற காரணத்தால், அந்தத் தீர்ப்பு அத்தோடு முடிந்து விடவில்லை, அதன் மீது ரிட் அப்பீல் போடப்பட்டு இருக்கின்றது என்று சட்ட அமைச்சர் கூறிய கருத்துக்களும் பதிவாகியிருக்கின்ற காரணத்தால் அந்தப் பிரச்னை குறித்து மேலும் விமர்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இங்கே பேசிய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அந்தத் தீர்ப்பின் மீது ரிட் அப்பீல் செய்துள்ளதாகச் சொன்னார்கள்.

(குறுக்கீடுகள்) First of all hear me and then give your ruling.

I will abide by it

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீதிபதிகள் தீர்ப்புக் கொடுக்கும்போது சொல்லியவற்றையெல்லாம் பூராவும் இங்கே பேசிக் கொண்டிருத்தல் முடியாது. இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. அவைக்குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள். அத்தோடு அந்தப் பிரச்னை முடிந்து விட்டது. வேறுபல கருத்துக்கள் கூறவேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களேயானால், அந்தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்ற நேரங்களில் அதை எடுத்துச் சொல்லலாம். இந்த நேரத்தில் அதனைத் தெரிவிக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாமன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டிலே இருப்பவர்கள் எல்லாம் பல்லே விளக்கவில்லை என்ற காரணத்தாலோ அல்லது ஏதோ நல்ல எண்ணத்தாலோ இந்த பல்பொடித் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதிலே கூட தவறு நடந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் கார்பரேஷன் மூலமாக பல்பொடி தயாரித்து அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுப்பது என்பது அறிவிப்பு. ஆனால் 37 தனிப்பட்ட நிறு வனங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 37 நிறு வனங்களில் 30 நிறுவனங்கள் ஆளும் கட்சிக்கு சொந்தக்காரர் களுடையவை. ஆண்டு ஒன்றுக்கு 300 இலட்சம் ரூபாய், அதா வது 3 கோடி ரூபாய்க்கு பல்பொடி வழங்கும் உரிமையாகும் அது. அது ஆளும் கட்சியினருக்குத் தரப்பட்டிருக்கிறது.

கோபால் பல்பொடி கம்பெனி ஒன்று மதுரையில் இருப்பது அனைவருக்கும் தெரியும். ஏறத்தாழ 40 டன்னுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. ஆனால், இடையிலே இரும்புத் திரைக்குப் பின்னாலே என்ன நடந்ததோ நான் அறியேன் பராபரமே.

அடுத்து, கும்பகோணத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த ஒருவர். அவர் பெயர் ஷாஜகான். அவரை பாதுஷா ஆக்குவதற்கான நல்ல வழிகளை எல்லாம் கண்டுபிடித்திருப்பவர்கள் இந்த அண்ணா தி.மு.க. ஆட்சியர். இந்த எஸ். பி. இன்டர்நேஷனல் நிறுவனம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, அதிலே எடை குறைவாக இருந்ததாக வும் அந்தப் பல்பொடியைப் பயன்படுத்தியவர்கள் வாய் எல்லாம் வெந்துபோய்விட்டதாகவும் அதிலே சுண்ணாம்பு அதிகமாகி வாய் வெந்திருப்பதாகவும் புகார்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிரு கின்றன. இதற்குப் பின்னாலே இருக்கின்ற சூழ்நிலையைப் பார்ப்போமானால் இந்த சாதாரண பல்பொடியிலே கூட அகில இந்திய அண்ணா தி.மு.க.வினர் தங்களுடைய திறமையைக் காட்டியிருக்கிறார்கள் என்று சொல்லி, இன்னும் ஒன்றைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்று, அடுத்த உறுப் பினர் அழைக்கப்பெற்றார்)

டாக்டர் கே. சமாசம்: மாண்புமிகு மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, 1983ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24-ம் நாள் இந்த இரு அவைகளும் சேர்ந்த கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியதற்கு முன்மொழிந்து மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை வழிமொழிந்து நான் எனது கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க முன்வருகிறேன்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

என்றுரைத்த வள்ளுவன் சொல்லை மனதிலே வைத்து;

''தனியொருவனுக்கு உணவில்லை யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்.

என்றுரைத்த பாரதியின் பாட்டையும் எண்ணிப்பார்த்து:

கூழுக்கு ஒருவன் அழுவானேயாகில்
அக்கோலை முறித்திடுவோம்.''

என்றுரைத்த கருத்தையெல்லாம் பரிசீலித்துத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு கருத்தினை மேதகு ஆளுநர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்: மொழிந்திருக்கிறார்கள்

நடை பெற்ற ஆளுநர் உரையிலே கொண்டு வந்திருக்கிற கருத்துக்கள் ஏராளம், இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு என்னென்ன அடிப்படைக் காரணங்களை முதன்முதலாகக் கொண்டுவர வேண்டுமோ அதை எல்லாம் ஏற்கனவே ஆண்டவர்கள் கொண்டுவர தவறியதால் இந்தத் திட்டங்களை இப்போது கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். திட்டங்களிலே மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருப்பவை

4 கூட்டுறவு நூற்பாலைகள்

அரிசனங்களுக்கு தனி நூற்பாலை

புதிதாக 5 தொழில்பேட்டைகள்

இரண்டு சர்க்கரை ஆலைகள்

50 கோடி ரூபாயிலே இரசாயனத் தொழிற்சாலை

15 கோடியிலே குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு பேரூராட்சிகளுக்குத் தன்னிறைவுத் திட்டம்

நிலச் சீர்திருத்தத் திட்டத்தைச் செயல்படுத்த தனி நடுவர் மன்றம்

சத்துணவுத் திட்டம் மேலும் சிறப்பாக அமைய 112 கோடி ரூபாயிலே திட்டம்

இப்படி பல்வேறு திட்டங்களை இந்த ஆளுநர் உரையிலே நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஆனால் இங்கே பேசுகின்ற போது எதிர்கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் பல்வேறு விஷயங்களைச் சொன்னார்கள். ஆளுநர் உரை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கூட சிலர் வெளியேறினார்கள். சட்ட மன்றத்தைக் கூட்டுங்கள் என்று சொல்வதும் அவர்கள்; கூட்டிய உடன் வெளியேறுவதும் அவர்கள். வெளியேறுகின்ற போது இது விதி, இது மரபு, இது ஏற்கெனவே ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்று என்கிறார்கள்.

திரு என் சங்கரய்யா சட்டமன்றத்தைக் கூட்டுங்கள் என்று சொல்வது. சட்டமன்றத்தைக் கூட்டி பல விஷயங்களை விவாதிப்பதற்காக, சட்டமன்றத்தில் வெளிநடப்பு என்பது குறிப்பிட்ட நடவடிக்கையை எதிர்த்து கண்டிப்பதற்காக. இந்த வித்தியாசங்கூட தெரியாமல் பேசுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது.





டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே நான் தெரியாமல் பேசவில்லை. ''கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை'' என்ற நிலையிலே இருக்கிறார்கள் என்று சொல்ல வருகிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. ஆளுநர் உரையை நீங்கள் பகிஷ்கரிப்பது பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அது உங்கள் மரபு. ஆனால் நியாயங்கள் இந்த நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன: அதன்மீதுதான் நீங்கள் வியாபகம் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்பதற்காக சொன்னேனே தவிர வேறல்ல.

மரபு என்பது வேறு: விதி என்பது வேறு: இந்த நாட்டிலே ஜனநாயகத்தால் சொல்லியிருக்கிற கருத்து என்பது வேறு. நடைமுறையிலே நாம் அதை எப்படி அனுபவிக்கிறோம், அனுபவத்தில் கண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் பல்வேறு விஷயங்களைச்சொல்லும் போது சில விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இங்கே தன்னிறைவுத் திட்டத்தை இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது

(பிற்பகல் 12-10)

இதுவரையிலும் காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த அரசாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் எம்.எல்.ஏ. யானாலும் சரி, தி.மு.க. எம்.எல்.ஏ. ஆனாலும் சரி, முஸ்லீம் லீக் எம்.எல்.ஏ. ஆக இருந்தாலும் சரி, ஜனதா எம்.எல்.ஏ வாக இருந்தாலும் சரி அவர்களாக முயற்சி செய்யாமலேயே கோரிக்கை வைக்காமலேயே நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு திட்டத்தை. இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலமாவது கொண்டு வந்தது உண்டா? அப்படிப்பட்ட திட்டம் இந்தத் தன்னிறைவுத் திட்டம்.

பள்ளிக்கூட கட்டிடம் இல்லாத கிராமங்கள் இல்லை. அங்கே குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள் இல்லை. நல்ல பாதைகள் இல்லாத கிராமங்கள் இல்லை. அதிலே தேர்ந்தெடுக்கப்பெற்ற பாதைகளிலே போக்கு வரத்துக்கள் செல்லாத நிலையில்லை என்ற நிலைமையை இன்று உருவாக்கி மக்களாட்சி தத்துவத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல, ஜாதி மத பேதங்களை அகற்றுவதற்காக ஜாதி மத பேதங்களை நீக்குவதற்காக ஜாதி மத வித்தியாசங்களை ஒழிப்பதற்காக எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும் அடிப்படையில், (குறுக்கீடு)

திரு ஜே எஸ் இராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அரசாங்கம் எந்த ஒரு திட்டந் தைக் கொண்டு வந்தாலும் நாடு முழுவதிலும் தான் அது நிறைவேற்றப்படும். ஏனெனில் நாட்டு மக்கள் அனைவருமே அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறார்கள். என்பதை தெரியப் படுத்த விரும்புகிறேன்.

டாக்டர் கே சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகப்பெரிய ஞான உபதேசம் செய் திருக்கிறார்கள். வாழ்க. இதுவரையிலும் எந்தத் திட்டமும் அப்படி எல்லாப் பகுதிகளுக்கும் போய்ச் சேர்ந்ததாக சரித்திரமே இல்லை. எக்செப்ட தன்னிறைவுத் திட்டம். சத்துணவுத் திட்டம் நினைவு படுத்திக்கொள்ளுங்கள்.

ஆக அந்த அடிப்படையில் ஜாதி மத பேதங்களை ஒழிக்கக் கூடிய வகையில் மிகப் பிரதானமான அடிப்படையாகக் கொண்டு வந்த திட்டம் இந்தச் சத்துணவுத் திட்டம். ஆனால் அதைப்பற்றியெல்லாம் கூட குறை சொன்னார்கள். நண்பர் ரகுமான்கான் அவர்கள் கூட சொன்னார். பிரதம மந்திரி அவர்கள் ஏதோ சொன்னார் என்று அப்படி யானால் அவர்கள் எல்லாம் அறிவில்லாதவர்களா என்று கூட சொன்னார்கள்.

''மாடு மேய்க்கும் மகாலட்சுமி மதி நிறைந்தவள்'' என்று நாங்கள் சொல்லுகிறோம். ''கோடி விட்டிலேயிருக்கக் கூடிய கோமளவல்லி கோணபுத்திக்காரி'' என்று நீங்கள் எடுத்துக் கொண்டால், அதற்கு நாங்கள் எப்படி குற்றவாளிகளாக முடியும். அது மட்டும் அல்ல, அவர்களே இல்லஸ்டிரேட்டட் வீக்லி என்ற பத்திரிகையினையும் வைத்து அவர்களாகவே பதிலையும் சொல்லிவிட்டார்கள். ஆகவே, எதையாவது சொல்லவேண்டும் என்பதற்காக சொல்வது வேறு, நியாயங் கள் வேறு. அதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னைப் பொறுத்தவரையில் இங்கே எடுத்து வைக்கிற வாதங்கள் ஆகும்.

தமிழன் என்ற ஒரு இனம் உண்டு தனியே அதற்கொரு குணம் உண்டு என்பதை எடுத்துக்காட்டத்தான் இந்தச் சத்துணவுத் திட்டம். தாய் முதலாக தொழில் முறையா னாலும் காத்து அளிப்பது தமிழ்நாடு முதன்முதலாக நல்ல வையாக முயன்று முடித்து வைப்பது தமிழ்நாடு இதற்கு எடுத்துக்காட்டுத்தான் தன்னிறவுத் திட்டம். இல்லை என்று மறுத்துவிட முடியாது. ஆகவேதான் இப்படிப்பட்ட இந்திய ஒருமைப்பாட்டினைக் காப்பாற்றக்கூடிய திட்டத்தைக் கொண்டு வந்தோம். 20 அம்சத் திட்டம் என்று சொல்லக் கூடிய திட்டத்தினை உண்மையிலேயே





திட்டம் இது என்பதைத் தயவுசெய்து மனதில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும் நமது தேசிய நண்பர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சிலர் சில பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள் வறுமையைப் பற்றி, வறட்சியைப் பற்றி, அரிசியைப் பற்றி யும் சொன்னார்கள். 1982 ஜூன்னிலேயிருந்து டெல்லி அரிசி அனுப்பவில்லை. அரிசியின் விநியோகம் சரியாக இருக்கிறது. இந்த நாட்டிலே சத்துணவுத் திட்டம் உள்ளது. முதியோர்களுக்கும் உணவு வழங்குகிறோம். தென்மேற்கு பருவ மழை 2 வருடங்களாக பொய்த்துவிட்டது. வட மேற்குப் பருவமழை 3 வருடங்களாக கைவிட்டு விட்டது.

கர்நாடகம் காவிரியின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டியது அப்படி அது அணை கட்டிய அந்த நேரத்தில், இப்படி ஒரு வறட்சி வருமே என்று யாராவது தெரிந்தவர்கள் எதிர்த் தார்களா? அது யார் குற்றம்? ஆண்டவன் குற்றமா? இந்த நாட்டை 7 ஆண்டுகள் ஆண்டார்களே அவர்களுடைய குற்றமா நம் நாட்டிற்கு வரவேண்டிய தண்ணீர் தடுக்கப்பட்டிருக்கிறது தண்ணீர் வரவேண்டிய அந்தப் பகுதியிலே அணை கட்டப் பட்டது, அப்போது அதைத் தடுத்து நிறுத்தாதது யார் குற்றம் இன்றையதினம் வறுமை, வறட்சி என்று பேசுகிறார்களே அவர்களது குற்றம். உங்களுடைய கையில் ஆட்சி பொறுப்பு இருந்த அந்த நேரத்தில் பேசாமல் விட்டு விட்டீர்களே அது குற்றமா இல்லையா என்பதை' நீங்களே நெஞ்சுக்கு நீதி எழுதிக்கொள்ளுங்கள்.

''அதுமட்டுமல்ல தஞ்சைக்கு தண்ணீர் இல்லை, தமிழ் நாடே வறட்சி, நல்ல தங்காள் கதை மீண்டும் நடக்குமா என்று சிலர் நினைக்கிறார்கள் குசேலர் புராணம் மறுபடியும் வருமா என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.'' ஆனால் இப்படிப்பட்ட இந்த நேரத்திலேயே கூட, இந்த நாட்டிலே கஞ்சித்தொட்டி இல்லை. கஞ்சித் தொட்டியை இன்னொருவர் வைத்து நடத்த வேண்டிய கட்டாயம் இல்லாமல் நாட்டை காப்பாற்றியிருக்கிறோம். கத்தாழை தின்பது இல்லை மக்காச்சோளம் வாங்க கடை திறக்கப்படவில்லை இதனை அனைவரும் அறிவார்கள் அரிசி எங்கேயிருந்தும் இறக்குமதி செய்யப்படவில்லை அதையும் உணர்வார்கள். ',கல்லும் மண்ணும் கலந்த அரிசி கறுப்பாக உளுந்து கலந்த கம்பு அரிசியைத் தின்று வம்பு வந்தது அந்த ஆட்சியில் அரிசி முல்லைப்போன்ற அரிசிமூட்டைக் கணக்கில் வாங்கிப் போட்டு மூக்குவரைக்கும் சாப்பிடுவது இந்த ஆட்சியில்'' ஆனால் இங்கே ஏன் அரிசி யைப் பற்றிப்பேசுகிறார்கள், இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிக அளவில் வெளியிலிருந்து அரிசி எதுவும் வாங்காமல்

மிகவும் சிறப்பான வகையில் ஒரு ஆட்சியை இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதை எண்ணிப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்)

திரு. நா. சுந்தரராஜ்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு ஆட்சியில் கஞ்சித்தொட்டி எல்லாம் அமைக்கப்பட்டு அதனால் மக்கள் வறுமையில் வாடினார்கள் என்பது போல சொல்லுகிறார்கள். ஆனால் இந்த ஆட்சியில் இதுபோன்ற நிலைமை எல்லாம் இல்லை. நாங்கள் எல்லாம் சீரோடும் சிறப்போடும் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதனால் வறட்சியே நாட்டில் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தேசிய பாரம் பரியம் மிக்க அருமை நண்பர் அவர்கள் என்னுடைய உரை முழுவதையும் கேட்டுவிட்டு கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனச்சாட்சியை அடகு வைக்காமல் ஆட்சி செய்து கொண் டிருக்கக் கூடிய ஒரு அரசு இது என்பதை விளக்க வருகிறேன் ஏழ்மையிலும் ஓரளவுக்குத் திருப்தி ஏற்படுத்துகின்ற அளவிலே இந்த ஆட்சி நடக்கின்றது என்பதை நாம் உணர முடிகின்றது வருடத்திலே 325 நாட்கள் என்றும் 275 நாட்கள் என்றும் போராட்டத்தை வைத்துக்கொண்டு, மத்திய அரசு காவிரி யாற்றுத் தண்ணீரை வாங்கிக் கொடுக்க மறுக்கின்ற நேரத்திலே இந்த ஆட்சி நடத்தவேண்டிய நிலைமை இருக் கின்றது என்பதைச் சொல்ல வந்தேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதுமட்டுமல்ல ஒரு ரூபாய் எழுபத்தைந்து காசுக்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கிறோம். இந்த நேரத்திலே தேவை யான அரிசி கிடைக்கின்றது சர்க்கரை கிடைக்கின்றது. ண்ணெய் கிடைக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் இருக் கிறோம் இது மேலும் தேவை என்பது வேறு விஷயம். ஆனால் இருக்கின்ற நிலைமையை வைத்து நாம் எந்த அள வுக்குத் திருப்தியை ஏற்படுத்துகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது உற்பத்தி குறைவு. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 35 லட்சம் டன் உற்பத்தியானது. பின்னர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் 65 லட்சம் டன் உற்பத்தியானது ஆனாலும் அப்போது அரிசி 2 ரூபாய் 10 ரூபாய் என்று விற்கிறது. ஆனால் இப்போது உற்பத்தி குறைந்திருக்கின்றது. எனினும் விலை ஏறவில்லை. இதுதான் புரட்சித் தலைவரின் சாதனை என்று சொல்கிறோம். கோபமாக, இருக்கிறதா. இந்த ஆட்சியிலே இல்லாமை இருக்கின்றது. ஆனாலும் திருப்தியை உண்டாக்குகிறோம். வருத்தமாக இருக்கிறதா? இந்த நாட்டிலே எத்தனை பிரச்சினை?



இந்த நிலைமையில் தமிழ்நாடு அரசு இப்போது ஆட்சி செய்துகொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. மைய மாநில அரசுகள் சுமுகமான நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது முறையான பரிவர்த்தனை நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் முன்பு எதிர்க்கட்சிகள் போராட்டம் இந்த நாட்டிலே இல் லாமல் இருந்தது, அப்படி இருந்தும் கூட அந்த நேரத்திலே செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தவறிய காரணத் தால் வறட்சி வந்திருக்கின்றது. அந்த நேரத்திலே ஒழுங் காகச் செய்திருந்தால் வறட்சி வந்திருக்காது.

அடுத்து மின்சாரத்தைப் பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். 100 சதவீதம் என்று வந்துவிட்டபின் ஏன் முழுவதும் என்று சொல்லிவிட வேண்டியதுதானே என்று சொன்னார்கள். நான் அவர்களைப் பற்றி ஒன்று சொல்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு சமரசம் அவர்கள் பேசும்போது *அதுபோன்ற வாசகங்கள் அவைக்குறிப்பிலே வரலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இலக்கியம் எல்லாம் இப்போது வேண்டாம். எனவே அவர் அவ்வாறு குறிப்பிட்ட வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

டாக்டர் கே. சமரசம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் சில விவரங் களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியினை ஆரம்பிக்கும்போது இருந்த மின்சாரத்தை விட பின்னர் அதனை நல்ல முறையிலே வளர்ச்சி பெறச் செய்திருந்தால் இந்த நிலை இப்போது வந்திருக்காது. ஒகனேக் கல் திட்டம் எப்போதோ போடப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தினை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிறை வேற்றி இருந்தால் மேலே அணையையே கட்டி இருக்க முடியாது தடுத்து நிறுத்தி இருக்க முடியும். அதுமட்டுமில்லாமல் கபினி ஹேமாவதி ஆகியவற்றைக் கட்டுகின்ற போது அதை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தடுக்கவில்லை.

அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே இந்த காவிரியாற்றுப் பிரச் சனை வந்தபோது வழக்கு மன்றத்தில் வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார்கள். அதனால் இன்றைய தினம் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தப் பிரச்சினை குறித்து சட்டத்தின் மூலமும் அணுகமுடியாமல் சமுதாய நெறி என்ற அடிப்படையிலும் அணுக முடியாமல் சித்திரவதைக்கு ஆளாகிக்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமையினை உருவாக்கியது ஏற்கெனவே ஆண்டவர்கள்தான். இதை நீங்கள் உணரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

அடுத்து சமயநல்லூர் அனல் மின் நிலையம் விற்கப்பட வேண்டிய நிலைமை வந்தது ....

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சனையில் என்ன முடிவுகளை மேற்கொண்டதோ அதைத்தான் இன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் வலியுறுத்துகின்றது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களிலும், கமிட்டிகளிலும் கூடச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை நினைவுப்படுத்திப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடுத்த முடிவு வேறு, வாபஸ் வாங்கியது வேறு. வாபஸ் வாங்கியதைப் பற்றிப் பேசவில்லை. அதைப் பற்றி எனக்கும் தெரியும். விரிவான நேரம் கிடைக்கும்போது விவரமாகப் பேசுவதற்கு நானும் தயார். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் 1924–ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை வாபஸ் பெறவேண்டிய நிலைமை வந்தது. ஆகவே நாம் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

(பிற்பகல் 12–20)

ஆகவே கடந்த கால ஆட்சி தேவையான அடிப்படைத் திட்டங்களை உருவாக்கத் தவறிய காரணத்தினால் இந்த அளவுக்கு இப்படிப்பட்ட சோதனைகளுக்குத் தமிழ்நாட்டு மக்கள் ஆளாக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு தலைசிறந்த நிர்வாகியாக, மேதாவியாக, தொழில்நுட்ப வல்லுநராக இருந்தார் திரு. அப்பாதுரை முதலியார் அவர்கள். அவர் மிகுந்த அருமையான திட்டங்களை மின் துறையைப் பற்றி கொடுத்தார். ஒன்று இரண்டு அவர் கொடுத்ததால்தான் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது, உயிர் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறது அப்போது இருந்த மாநில அரசு அதை பயன்படுத்திக் கொள்ள தவறிய அவருடைய அறிவை பயன்படுத்தி அரசுகள் மிக நல்ல முறையில் வளர்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கினோம் என்பது கூட இந்த நேரத்தில எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் நிலக்கரி தாராளமாகக் கிடைத்தது. அப்போது பூம்புகார் கார்ப்பரேஷன் உருவானது. அப்படிப்பட்ட நேரத்தில் தேவையான நிலக்கரியைப் பெற்று நல்ல முறையில் மின் உற்பத்தியைப் பெருக்கியிருக்க முடியும் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிகப் பெரிய சரித்திரம் நமக்குச் சொல்கிறது சந்திரகுப்தன் வடக்கே போரசு நடத்தி பஞ்சம் ஏற்பட்டு காப்பாற்ற முடியாத நிலையில் சந்நியாசமாக வந்து சரவண பேல குலாவுக்கு வந்து பிரயோபதேசம் இருந்து உயிர் விட்டார் என்பது சரித்திரம்.



அப்படிப்பட்ட சூழ்நிலை வந்து கூட இந்திய அரசின் தமிழ்நாடு அரசு மிக நல்ல முறையில் திட்டத்தை மனதில் வைத்து இன்றைய தினம் நிறைவேற்றி வருகிறது என்பதைச் சொல்ல நான் விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டிருக்கிற ஆளுநர் உரையை வரவேற்பது நம்முடைய கடமை என்பதைச் சொல்லி அதே நேரத்தில் மத்திய மாநில அரசுகளின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தி வேண்டுமா, இந்தியா வேண்டுமா என்பதை இந்தியத் துணைக் கண்டம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தொழில் துறையில் தமிழ்நாட்டை விட்டு மற்ற மாநிலங்களுக்கு மட்டும் இப்போது முன்னுரிமை கொடுப்பது சரிதானா என்பதை எண்ணிப் பாரக்க வேண்டும். வன இலாக்கா, கல்வித்துறை, நிதி அத்தனையையும் மறு பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியம் வந்து விட்டது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அது மட்டும் அல்லாமல் தேசிய ஒருமைப்பாடு என்பதற்கு இலக்கணமாக அனைத்திந்திய அண்ணா தி. மு. க. இருக்கிறது. இங்கே இருக்கிற ஹீரா சந்த், எம் பி., இங்கே இருக்கிற உகம்சந்த், எம். எல். ஏ., இதிலிருந்து தேசிய நண்பர்கள் எங்களைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும். அண்ணாவின் கொள்கையை இந்த நேரத்தில் எந்த அளவுக்கு இந்த அரசு அமுல்படுத்தி வருகிறது. அந்த அளவுக்குத் தேசிய ஒருமைப்பாடு கொள்கையிலும் இந்த அரசு எல்லா வகையிலும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இப்படிப்பட்ட அரசை பலவீனப்படுத்தி, சிதறடிக்கப்படுவது அல்லது ஏமாற்றப்படுவது நியாயம்தானா என்பதைத் தேசிய நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிலைமை மாறாவிட்டால் இந்த நாடு எங்கே போகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாநில அரசு அத்தனைகளிலும் அதிகப்பற்று வாங்காத அரசு அண்ணாவின் அரசு அனைத்திந்திய அண்ணா தி. மு. க. தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மாநிலங்கள் எல்லாம் ஓவர் டிராப்ட் ஏராளமாக வாங்கியிருக்கின்றன. அந்த நிலைமை இங்கே இல்லை. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கிற இந்த அரசுக்கு இந்திய அரசு உதவி செய்ய முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபனத்தின் சார்பாக ஆளுநர் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரையில் 23 பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள், கடைசி பாராவில் இவ்வரசு எய்தியுள்ள சாதனைகளையும், எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், [illegible] திட்டங்களையும் நான்

[திரு. எல். இளையபெருமாள்] [1983 சனவரி 27

உங்கள் முன் வைத்துள்ளோம் என்று ஆளுநர் அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். இந்த அரசு செய்திருக்கிற சாதனைகளை
எடுத்துக் கொள்வதிலே நான் மிக வருத்தத்தோடு சொல்ல
வேண்டி இருப்பதாவது, சாதனை மட்டும் அல்ல வருமானம்
என்பதையும் எண்ணிக் கொண்டு நடத்துகின்ற ஒரு அரசாங்கமே
இருக்கிற போது வறட்சி என்ற நிலையை எடுத்துக் கொண்
டால் வானம் பொய்த்து விட்டது உண்மை. தண்ணீர் கிடைக்
கவில்லை என்பது உண்மை. அது இயற்கையின் நியதி என்பதில்
யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது ஆனால் இந்த
வறட்சித் தன்மை பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு 1983-ஆம்
வருடம் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி தான் தகவல் அனுப்பியிருக்
கிறீர்கள் என்று சொன்னால் இந்த அரசு தமிழகத்திலே இருக்கிற
நாலரை கோடி மக்களுடைய வருங்காலத் திண்டாட்டத்தைப்
பற்றி அக்கறை உள்ள அரசா? ஒரு நேர்மையான அரசா?
மந்திரிக்கு அழகு வரும் முன் உரைத்தல் என்று முன்னோர்கள்
சொன்னார்கள். ஆனால் நம்முடைய மந்திரிகள் இந்த வறட்சி கடந்த
4,5 மாதங்களாக பருவக்காற்று, தென்மேற்குப் பருவகாற்று வட
கிழக்குபருவக்காற்று இவை அத்தனையும் பாய்த்து விட்டது என்று
தெரிந்தும் கூட 4, 5 மாதங்களுக்கு முன்பாக மத்திய அரசுக்கு
மாநில அரசு இந்தத் தகவலைக் கொடுக்கவில்லை என்றால் இந்த
அரசு தன்னுடைய கடமையில் தவறி விட்டது. இந்த அரசு
வருங்கால மக்களைக் காக்க வேண்டிய நிலமையில் தவறி
விட்டது. கடமையில் தவறி விட்டது இந்த அரசு. இந்த
அரசு ஒரு தகுதியான நேர்மையான உண்மையை சொல்வதற்கு
தகுதியற்ற அரசாங்கம் என்று சொல்வதில் நான் வருத்தப்படு
கிறேன். அது மட்டுமல்ல, சாதனை என்று சொல்கிறீர்கள்.
என்ன சாதனை? ஏழைகளுடைய கட்சி என்று சொல்கிறீர்கள்,
ஏழைகளுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்கிறீர்கள். பின்
தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடமையைச் செய்கிறோம்
என்று சொல்கிறீர்கள், ஆனால் என்ன நிலைமை இன்றைக்கு?
கள்ளுக்கடை, சாராயக்கடையைத் திறந்து. பள்ளிக்கூடம்,
கோவில் இவைகளுக்குப் பக்கத்திலே வைத்து வெறும் கள்ளுக்
கடை என்று மட்டுமில்லாமல் பிராஞ்ச் கடை என்று சொல்லி
ஆதாரமுள்ளவர்களுக்கும் கொடுத்து, ஆதாரமில்லாதவர்
களுக்கும் கொடுத்து விஷ சாராயத்தை உண்டாக்குகிறவர்கள்
என்று தெரிந்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் ஆட்சிப்
பொறுப்பை வைத்துக் கொண்டு இருக்கும் உங்களுடைய
சாதனை வறட்சிக்கு அடுத்து ஆபத்துள்ள ஒரு கேவலமான
நிலைமை நடப்பதை கண்டும் காணாதது போல் இருக்கின்ற
அமைச்சர்கள் இருக்கின்ற அமைச்சரவை தகுதியற்ற நிலை
மையை விளக்கத் துணிவில்லாத நிலைமை. உண்மையை ஒத்துக்
கொள்ளக் கூடிய இருதயம் இல்லாத நிலைமை, நெஞ்சத்திலே
வஞ்சகம் இருப்பது என்பதுதான் உண்மை என்று சொல்வதை
தமிழ்நாட்டு மக்கள் இன்று இல்லாவிட்டாலும் வருங்காலத்திலே
நிச்சயமாக இந்த அரசு பெருந்தவறைச் செய்திருக்கிறது
என்பதை உணருகின்ற நாள் வந்தே தீரும் என்பதை சொல்ல
வேண்டிய கடமை என்பதால் நான் சொல்கிறேன்.



1983 சனவரி 27] [திரு. எல். இளையபெருமாள்]

அடுத்து பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்கள் நிலைமை.
'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்,' என்று சொல்லிய
தமிழகத்திலே இன்றைக்குப் பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு உணவு
கொடுப்பதை யாரும் குறை கூறவில்லை ஆசிரியர்களுடைய
நிலைமை என்ன? அங்கே மக்கள் குழு வைத்திருக்கிறார்கள்,
அந்த மக்கள் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு உணவு கேட்டு
கொடுக்க மறுத்ததால் அந்த வாத்தியார்கள் அடிபட்டு
கோர்ட்டு வரைக்கும் போய் கேஸ் இருக்கிறது என்பது அரசுக்
குத் தெரிந்திருக்கும். ஜனவரி மாதம் 15 ஆம் தேதிக்குள் அவர்
களுக்கு அந்தப் பணியிலிருந்து விடுதலை கொடுப்போம் அவர்
கள் கல்வியிலே நல்ல கவனம் செலுத்தலாம் என்று உறுதிகொடுத்
தும் அதற்காக உதவியாளர்கள் எல்லாம் தேர்ந்து எடுத்து தேர்ந்
தெடுக்கப்பட்டவர்களுக்கு உத்திரவு அனுப்பி, அவர்கள்
டிரெயினிங் சென்று அந்த நிலையில் அவர்களுக்கு அந்த
உத்திரவுகளை கொடுக்க வேண்டாம், நிறுத்தி வையுங்கள் என்று
சொல்லி ஆசிரியர்களை பணி செய்யுங்கள் என்று சொல்கிற
தாக்கல் வந்திருப்பதாக மாவட்ட அதிகாரிகள் சொல்லியிருக்
கிறார்கள். இதில் எது உண்மை? ஜனவரி 15 ஆம் தேதியிலிருந்து
ஆசிரியப் பெருமக்களுக்கு விடுதலை கொடுப்போம். பட்டினி
யோடு ஏழைப் பிள்ளைகள் கல்வி பயிலும் நிலைமை மாறி பட்டினி
யற்ற மக்களாக உணவை உண்டு கல்வி பயிலக்கூடிய நிலைமை
ஏற்படுத்தப்பட்டு அவர்கள் வருங்காலத்திலே நல்ல குடி
மக்களாக வேண்டும் என்ற எண்ணத்திலே போடப்பட்ட திட்டம்
என்றாலும் இன்னும் ஆசிரியர்களுக்கு விடுதலை கொடுக்கப்பட
வில்லை. அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்
இந்த உணவுத் திட்டத்திற்காக செலவழித்திருக்கிறோம்.
அரசாங்கம் நல்ல திட்டம் கொண்டு வந்திருக்கிறது என்பதற்காகத்
நாம் ஆதரவு கொடுத்தோம். அந்தத் திட்டத்திற்காக இரண்டு
கோடி ரூபாய் நன்கொடை வந்திருப்பதாக ஆளுநர் உரையிலே
குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பணம் அரசாங்கக்
கணக்கிலே வைக்கப்படுகிறதா அல்லது முதலமைச்சர் உதவி நிதி
கணக்கிலே வைக்கப்படுகிறதா என்று தெரியவில்லை. முதலமைச்சர்
உதவி நிதித் தொகையிலே கணக்கு வைக்கப்பட்டால் இந்தச் சட்ட
மன்றத்திலே அதைப் பற்றி விவாதிக்க முடியாது. அதைப்பற்றி
ஆடிட்டர் ஆடிட் செய்யமுடியாது. ஆடிட்டர் ஜனரல் அதைப்
பற்றிக் கேட்கமுடியாது. ஏனென்றால் முதலமைச்சருடைய
உதவி நிதி இந்தச் சட்டமன்றத்தினுடைய வாக்குவாதத்திற்கு
உட்படாத நிதி, அந்தக் கணக்கு யாருக்குத் தெரியும்? இந்த
ஆண்டு இந்தத் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்
கிறோம், வருங்காலத்திலே அதற்காக இன்னும் அதிகமாக
ஒதுக்க இருக்கிறோம். அதற்காக வரக்கூடிய பணத்தை அந்தக்
கணக்கிலே வைப்பதுதானே முறை. மக்களின் கல்விக்காக இருக்
கின்ற கணக்கிலோ அல்லது சமூக நலத்துறை என்ற கணக்கிலோ
தான் அது வரவேண்டும். அப்படியில்லாமல் முதலமைச்சர் உதவி
நிதிக் கணக்கிலே போடுவது என்றால் வரவு-செலவுக் கணக்கு
யாருக்கும் தெரியாமல் போய்விடும், அதைப் பற்றிக்கேட்கயாருக்கும்
உரிமை இல்லை, சட்டமன்றத்திலேயும் விவாதிக்க முடியாது. என்

இந்த அரசு வஞ்சகமாக இருக்கிறதா? தெரிந்தும் இப்படிச் செய்கிறதா அல்லது தெரியாமல் இருக்கிறதா? முதலமைச்சர் இங்கே இருப்பதால் நிச்சயமாக அவர்களுடைய பதிலுரையிலே விளக்கம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.30)

மேலும் மக்கள் குழு அமைத்திருக்கிறோம் என்றும் சமத்துவம் என்றும் சொன்னார்கள். அதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் இரக்கம் உள்ளவர்கள் என்று 30 ஆண்டுகளாக தெரியும். ஆனால் அரசாங்கப் பதவிக்கு வந்த பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசியல்வாதி என்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு அவலம் வருகிறபோது கண்டும் காணாமல் இருக்கிறார் என்பதைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சமத்துவத்திற்கு சத்துணவுத் திட்டம் என்று சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்திலே, ஒதுக்கப்பட்டிருக்கிற விகிதாச்சாரப்படி வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை.

*  *  *  *

அப்படி சொல்கிற இடத்திலே ஓட்டு என்ற ஒரே காரணத்தில் காரணமாக............

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் கருத்தைச் சொல்வதை நான் தடுக்கவில்லை.
*  *  *  * என்ற வார்த்தையைச் சொல்லி, மக்கள் அப்படி இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை உருவாக்குவது நல்லதல்ல. அதை வேறு வார்த்தையிலே சொல்லுங்கள். மறுக்கப்படுகிறது என்று சொல்லுங்கள். அப்படி குறிப்பிலே இருக்கட்டும்.

திரு. எல். இளையபெருமாள்: முதலமைச்சர் அவர்கள்
*  * மறுக்கப்படுவதாகச் சொல்லுங்கள் என்று சொல்கிறார். எப்படி கருத்தைச் சொன்னாலும் உண்மை தெரியும் * * முதலமைச்சருக்கு தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தவறிவிட்டது.

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன். பத்திரிக்கையிலே இந்தச் செய்தி வருவது நம்முடைய திட்டத்திற்கு உதவியாக இருக்காது. சொல்கிற முறையை நீங்கள் மாற்றிச் சொல்லுங்கள். கருத்தை விட்டு விட வேண்டும் என்று சொல்லவில்லை. குற்றம் காட்டுங்கள், நாங்கள் பதில் கூறுகிறோம். அதற்காகத்தான் இருக்கிறோம். பதில் சொல்வோம். சொல்ல வேண்டிய நேரத்திலே, சொல்ல வேண்டிய முறையிலே பதில் கொடுப்போம். ஆனால் நீங்கள் வெளியிடுகிற செய்தி சிலருக்கு மேலும் துணிச்சலையும், அவர்கள் காரியம் செய்யலாம் என்ற தூண்டுதலையும் உருவாக்குவதற்கு நீங்கள் உதவி செய்வதாக இருந்து விடக் கூடாது.

என்று சொன்னீர்களானால் ஏன் நாமும் செய்யக் கூடாது என்று தோன்றும். அதற்கு இடம் ஏற்படக் கூடாது என்பது தான் என்னுடைய நோக்கம். ஆகவே இவைகளை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்து விடுங்கள். பதிலில் நான் சொல்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: சட்டப்படி இதில் எதுவும் அன்-பார்லிமெண்டரி வார்த்தை இல்லை......

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு க. பாலசுப்பிரமணியன்)

என்ற வார்த்தைகள், அதற்குத் தொடர்பான வார்த்தைகள் முதலியவற்றை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரைமுருகன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இந்த அமைப்பிலே சில குறிப்புகளை நீக்க வேண்டுமென்றால் அது பார்லிமெண்டரி முறைக்கு ஒவ்வாத கருத்துக்களைச் சொன்னாலோ, வார்த்தைகளைச் சொன்னாலோ நீக்கலாம். நாட்டிலே இருக்கிற நடப்புகளை சட்டமன்றத்திலே பிரதிபலிக்க வேண்டியது ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய கடமை. மதிப்பிற்குரிய இளையபெருமாள் அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமை நாட்டிலே இருக்கிறது என்று சொல்ல அவருக்கு உரிமை உண்டு. அப்படி நடைபெறவில்லை என்று மறுக்க முதலமைச்சருக்கு உரிமை உண்டு. இருவரின் கருத்துக்களின் மோதலில் ஏற்படுவது தான் தீர்வே தவிர அப்படிப்பட்ட கருத்துக்களை இருட்டடிப்பு செய்வது ஒரு ஜனநாயக காரியம் ஆகாது

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பிரமுகர், வழக்குரைஞர் துரைமுருகன் அவர்கள்....

திரு. துரைமுருகன்: ஐ ஆம் ஒன்லி ஏன் ஆர்டினரி மெம்பர், பிரமுகர் அல்ல.

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன் : அவர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள் வழக்குரைஞர் என்று. ஆகவே நான் குறிப்பிடுவது அவரை மரியாதைக் குறைவாக பேசுவதாகாது.

திரு. துரைமுருகன் : சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லுங்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பிரமுகர் என்பது புகழ் வதைப் போல இகழ்வதாக வஞ்சப்புகழ்ச்சி அணி அதிலே தொக்கி இருப்பதாக நான் கருதுகிறேன். நான் முதலமைச்சரை வஞ்சப் புகழ்ச்சி அணியோடு குறிப்பிட்டதாக நினைவில்லை. ஆனால் அந்த அணி எனக்கும் தெரியும் என்பதை முதலமைச்சருக்கு ஞாபகப்படுத்துவது என்னுடைய கடமை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எப்பொழுது இப்படிப்பட்ட விளக்கம் சொல்கிறீர்களோ, அப்பொழுதே உங்களுக்கு அது பழக்கமான ஒன்று என்பது எனக்குப் புரிகிறது. நீங்கள் அதை அப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம். எதிர் காலத்தில், எனக்கு ஆட்சேபனை இல்லை.

நான் இங்கே குறிப்பிடுவது நாட்டு நிலைமையை உத்தேசித்து சில சமயம் சில கேள்விகளுக்கு விளக்கம் தரவேண்டிய அமைச்சர் நாட்டு நலனை முன்னிட்டு இதற்கு விரிவாகப் பதில் சொல்ல நான் விரும்பவில்லையென்று சொல்வதுண்டு. அதை அவை ஏற்றுக்கொள்வதுண்டு. அதுபோல், இன்றையதினம் இளைய பெருமாள் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிடுவது, ஏதோ ஒரு இடத்தில் தவறுகள் நடந்திருப்பதாக உண்மையாகவே, அதை வாதத்திற்காக ஒத்துக்கொண்டாலும்கூட, அதைச் சட்டமன்றத் தில் பேசி, பத்திரிகைகளில் வெளியிடுவதன் மூலம் வாய்ப்பு கிடைக்காதா என்று யாராவது அங்கங்கே ஏங்கிக் கொண்டிருப்ப வர்களுக்கு, ஓகோ, சில இடங்களில் நடந்திருக்கிறது, ஆகவே, நாமும் தொடங்கினால் என்ன என்று துணிச்சல் ஏற்படுமானால், நம்முடைய முழு நோக்கமும் கெட்டுவிடும் என்கிற எண்ணத்தில் தான் அதைச் சொல்கிறேனே தவிர, சட்ட மன்றத்தில் உரிமை பெற்றுள்ள மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்கள் அதைச் சொல்ல உரிமையற்றவர்கள் என்கிற கருத்தை நான் இங்கே வெளியிடவில்லை என்பதை இங்கே நான் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நடந்திருப்பதைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய நம்பிக்கைக்கேற்ப உண்டா, இல்லையா என்பதையும் அது ஏன். அப்படி நடந்தது என்பதையும். நடக்கவே இல்லை என்பதையும், ஆதாரத்தோடு சொல்ல வேண்டியது என்னுடைய வேலை, என்னுடைய பதில். அதை நான் பொதுவாகச் சில இடங்களிலே குறிப்பிட்டுச் சொல்வேனேயானால். அது பிரச்னையாக இருக்காது. ஆனால், குற்றச்சாட்டு அல்ல,





குறைகள் என்று வரும்போது, நாட்டிலே இந்த மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொள்வதைப் போலச் சொல்வது, மற்றவர்களைத் துணிச்சல் உள்ளவர்களாக மாற்றுவதாக்கினால், அது நாட்டிற்கு நல்லதல்ல என்ற ஐயத்தில் சொல்கிறேன். ஆகவேதான் அது குறிப்பேட்டில் வரவேண்டாம், பத்திரிகைகளில் வரவேண்டாம் என்று சொன்னேனே தவிர, இந்த ஆட்சியைக் குறை சொல்வது வெளியே தெரியக் கூடாது, இருட்டடிப்பு செய்து அதனால் நாங்கள் வெளிச்சத்தைக் கண்டு மகிழ்வதற்காக வெளிச்சம் போட விரும்புகிறோம் என்று யாரும் தவறாக எண்ணிவிடக்கூடாது. நான் மேலும் பேச வேண்டுமென்று விரும்பவில்லையென்றாலும், மாண்புமிகு இளையபெருமாள் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் சட்டமன்றத்திலே நன்கு அனுபவம் பெற்றவர்கள், 30 ஆண்டுகளாக என்னைத் தெரியும் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பதவிக்காக அரசியல் வாதியாக நடிக்க நான் தயாராக இல்லை. அது வேலையும் இல்லை, எனக்கு அந்த வேலையும் தெரியாது. ஒருவேளை நடிகனாக இருக்கும்பொழுது நான் அரசியல்வாதியாக இருந்திருப் பேன், அப்பொழுது நடித்திருக்கிறேன், தொழிலுக்காக. ஆனால், அரசியலிலே நடித்ததில்லை. ஆகவே, இங்கே நான் நடிக்கவில்லை. உண்மையாகவே, நான் சொல்லுகிறேன், இந்தத் திட்டம், நியாயம், சரி என்று நீங்கள் கருதுவீர்களேயானால், இதற்கு என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்பதை நீங்கள் சொல்லுங்கள். அப்படிப்பட்ட குறைகள் எங்கேயாவது இருக் கிறது என்று நாங்கள் கேள்விப்படுகிறோம் என்று நீங்கள் நம்புவீர்களானால் கேள்விப்படுகிறோம் என்று சொல்கிற நேரத்தில் அப்படி நேராமல் பார்த்துக்கொள்ள இந்த வழியைப் பின்பற்றுங்கள்; அதை நீங்கள் செய்யுங்கள் என்று சொல்வது பொருத்தம் உடையதாகவும் மற்றவர்களுக்கு எச்சரிக்கை தருவ தாகவும் இருக்கும் என்று நான் தெரிவிக்கின்றேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நல்லெண்ணம் இருப்பதாகவும், நடிக்கவில்லை என்றும், நான் உண்மையாகச் சொல்கிறேன் என்றும் சொன்னதனால் நான் மகிழ்ச்சி அடைந் தாலும், குறிப்பாக நான் கேள்விப்பட்டதை அல்லது தெரிந்த உண்மையைச் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். இராமநாதபுரம் ஜில்லாவிலே, திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனிய னிலே காரையூர் என்ற ஊரிலே இந்தக் கொடுமை. உத்தியோக உயர்வு கொடுக்கப்படாத நிலைமை—உத்தரவு இருந்தும், தென்னாற்காடு மாவட்டத்திலே, வல்லம் பஞ்சாயத்து யூனியனிலே காட்டுமன்னார்குடி பஞ்சாயத்து யூனியனிலே அவர் களுக்கு, நாம் ஒத்துக்கொண்ட திட்டப்படி 18 சதவீதம் உத்தி யோகம் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, கொடுத்ததாக [illegible]

கொடுக்கவில்லை, இன்னொருவருக்குக் கொடுக்கிறேன் என்று ஒருவருக்குக் கொடுத்ததை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்ததை பற்றி நான் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருக்கிறேன். ஆனால், அந்தக் கடிதம் கிடைத்ததோ, கிடைக்கவில்லையோ எனக்குத் தெரியாது. எனக்கு உண்மை தெரிந்த விஷயம் என்று மீண்டும் சொல்லி, நல்லெண்ணத்தோடு முதலமைச்சர் வேண்டுகோளை விடுகின்றபொழுது, அதிலே எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், நல்லது நடக்கவேண்டுமென்ற எண்ணத்தில், இந்தச் சத்துணவுத் திட்டம் நடக்க வேண்டுமென்று நினைக்கும்போது, இந்தத் திட்டத்திற்குக் கொடுக்கக் கூடிய பணம், ஒழுங்கான முறையிலே, சட்டரீதியாக கணக்கிலே வரவேண்டுமென்பது ஒன்று. மற்றொன்று, 18 சதவீதம் கொடுக்க வேண்டுமென்ற உத்திரவுப் பிரகாரம் அவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை. அது கொடுக்கப்பட வேண்டும், அமுல்படுத்தப்பட வேண்டுமென்பது மற்றொன்று. மூன்றாவதாக, ஆசிரியப் பெருமக்கள், அந்தச் சாப்பாட்டுக்குத் தேவையான அரிசி வாங்குவதும், கீரை வாங்குவதும், காய்கறி வாங்குவதும் என்ற அவல நிலைமையை எடுத்து, அவர்களுக்கு உதவியாளர்களை ஜனவரி 15-க்குள் நியமிப்போம் என்று சொன்னது, அந்த உத்தரவு நிறுத்தப்பட்டு விட்டதே, அதை அமுல்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.40)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அந்த ஆசிரியப் பெருமக்களை இந்த மாதம் 31 ஆம் தேதி வரையிலும் அதில் பயன்படுத்த எங்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். 31 ஆம் தேதிக்குள் 33,500 பேர்கள் நியமிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அடுத்தபடியாக, ஆளுநர் உரை மீது ஆளுங்கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் பேசும்பொழுது தேசிய நீரோட்டம் என்று சொன்னார்கள். அது வரவேற்கக் கூடியது; முதலமைச்சர் தலைமையில் இருக்கின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இப்படிச் சொன்னதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் இந்திய தேசிய மொழிகள் பதினான்கையும் தேசிய மொழி என்று சொல்லப்பட்ட பிறகு ஒரு தேசிய மொழியை வெறுப்பதோ, கேவலமாகப் பேசுவதோ, வரவே கூடாது என்று சொல்வதோ, வந்தால் எதிர்ப்போம் என்று சொல்வதோ, நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று சொல்வதோ, அப்படி அதை எதிர்த்து இறந்தவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறோம் என்று சொல்பவர்கள் தேசிய நீரோட்டம் என்று சொல்வது சரியா?

திரு. துரைமுருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மொழிப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொல்கிறார்கள்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தப் பிரச்னையாக இருந்தாலும் தங்களுக்குச் சந்தர்ப்பம் வரும்பொழுது பதில் சொல்லலாம்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : வீர வணக்கம் செலுத்துவதைப் பற்றிப் பேசுகிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தேசிய நீரோட்டம் என்று நாங்களோ அல்லது ஆளுங்கட்சி நண்பர்களோ சொல்வது இந்த இந்தியா என்பது ஒன்றாக இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்திலேதான். அப்படிப்பட்ட நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கின்ற எங்கள் மீது சவாரி செய்யலாம் என்று, 14 மொழிகளையும் தேசிய மொழிகளாக அறிவித்துவிட்டு இந்தியை அரியணை ஏற்றுகின்ற கபட நாடகத்தை மத்திய அரசு செய்யும் பொழுது அதை எதிர்ப்போம்; அதை எதிர்த்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செய்வோம். அதைச் செலுத்துபவர்கள்தான் பெரியாரின் சிஷ்யர்கள், அண்ணாவின் தம்பிகள், திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள், அதில் ஒன்றுபட்டு நிற்போம், உறுதியாக நிற்போம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் மிக்க வீர உணர்ச்சியோடு அண்ணாவின் தம்பிகள் என்றும், திராவிடன் என்றும் சொன்னார்கள். இதில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றாக இருப்பதைப்போல் நானும் தமிழன் அல்லது திராவிடன் என்ற முறையில் அந்தக் கருத்தை ஏற்பேன். ஆனால் அது வெறியாக மாறுவது நல்லதா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நண்பர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் என்ன வெறியை திரு. இளையபெருமாள் அவர்கள் கண்டுவிட்டார்கள் என்பதை அறியவிரும்புகிறேன். வெறி என்பது ஒரு மொழி மீது இன்னொரு மொழியைத் திணிப்பதுதானே தவிர, ஒரு மொழிக்குச் சமமாக எங்கள் மொழி இருக்க வேண்டுமென்று சொல்வது வெறியல்ல; அது உரிமை. அதை மட்டும் திரு. இளையபெருமாள் அவர்கள் தெரிந்துகொண்டு, மீண்டும் பிரச்னைகளை இங்கே எடுக்காமல் தமிழ்நாட்டிற்குள்ள பிரச்னைகளை மட்டும் செல்லுங்கள்; வீர வணக்க நாளை நீங்கள் கேவலம் செய்தால் தியாகிகளைப் பற்றி மற்றவர்கள் சொல்வதற்கு வெகு நேரம் ஆகாது. இறந்து போனவர்களை மதிக்கின்றவர்கள் நாம். ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்க வேண்டும். அவர்களைப்பற்றி விமர்சனம் செய்யும் நிலைமைகளை இங்கே தயவு செய்து ஏற்படுத்த வேண்டாம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, நான் யாரையும் இழிவுபடுத்திச் சொல்லவில்லை. நான் முழுவதும் பேசுவதற்கு முன்னாலே முதல்வரவர்களும், துரைமுருகன் அவர்
[redacted]

மத்திய அரசு காரணம் இல்லை என்பதை சொல்லுகின்ற ஒரு பாவமான எண்ணத்திற்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் வருங்காலத்திலாவது கடைப்பிடிக்க வேண்டும். வருங்காலத்திலே வாய்ப்பு கிடைக்கும் போது நமக்குக் கிடைக்கவேண்டிய கடமைகளைத் தவறாமல் எடுத்துகூறத்து மத்திய அரசிடம் நம்முடைய பங்கை வாங்குவதிலே பின்தங்கக் கூடாது என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு இளையபெருமாள் அவர்கள் விரைவில் முடித்துக் கொள்ளவேண்டும். ஏற்கனவே 22 நிமிடம் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) எல்லா குறுக்கீடுகளையும் சேர்த்துதான் இந்த நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பேச வேண்டியிருக்கிறது. விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் மன்னிக்க வேண்டும். சில குற்றச்சாட்டுகளைச் செல்லுகிறார்கள். உண்மைக்குப் புறம்பாக. அது மக்களுக்கு செய்தியாகப் போகும்போது அது உண்மையல்ல என்பதை இங்கே சொல்ல வேண்டாமா? அதற்காகதான். 24-ந் தேதிதான் அனுப்பினோம் என்றால், சென்ற ஆண்டு இப்படிப்பட்ட நிலைமை வந்தபோது கூட, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அனுபவத்தை அவர்கள் என்னென்ன ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள், என்னென்ன நிலைமை என்ற விளக்கத்தைப் பெற்றுத்தான் நாம் அனுப்பியிருக்கிறோம். ஆகவே இந்த ஆளுநர் உரையில் கூட, முதலிலே இடைத்தவணைக் கொடுத்துவிட்டு. அதற்குப் பிறகு என்ன அனுப்பவேண்டுமோ அதை டீட்டெயிலாக 190 கோடி ரூபாய்க்கு அனுப்பி இருக்கிறோம். மற்றவர்கள் அனுப்பிவிட்டு பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள். தமிழக அரசு மட்டும்தான், சென்ற ஆண்டு ஏறத்தாழ 50 கோடிக்கு மேல் பெற முடிந்தது என்றால், இதுதான் காரணம்.

(பிற்பகல் 12.50)

திரு. எல். இளையபெருமாள்: நான் சொல்வதானது மத்திய அரசுக்கு அனுப்பியது காலம் கடந்ததால் நமக்குக் கிடைக்க வில்லை என்று சொன்னேனே தவிர நம்முடைய அரசாங்கம் கொடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன். காலம் கடந்தல்ல. உண்மையைச் சொல்வதற்கு நேரம் வேண்டும் என்றால், உண்மையைச் சொல்லியதை நீங்கள் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். உண்மை வருகிற வரையில் காத்திருக்க வேண்டும்.





திரு. எல் இளையபெருமாள்: அந்த உண்மைகளை, மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்ற நிலையிலே, முன் கூட்டியே ஏன் செய்யவில்லை என்ற எண்ணத்தினாலேதான் நான் கேட்கிறேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நமது நாட்டில் இன்னும் அரச பரம்பரை இருக் கிறது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. ஆகவே உறுப் பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கும் மந்திரிகள் தான். இங்கும் மந்திரிகள் தான்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலே அரசர்க்கு அடுத்து இவர்கள்தான் மந்திரிகள், இவர்கள்தான் அரசர்கள் என்று பாமர மக்கள் உட்பட எண்ணித்தான் உங்கள் கையிலே நல்லது கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே அரசனாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அரசாங்கம் ராஜவம்சம் இல்லாவிட்டாலும். அமைச்சர்கள்தான் இருக்கிறார்கள், அவர்கள் செய்வார்கள் என்ற அடுத்த பங்கை நீங்கள் வகிப்பதனால் தான், வரும் பொருள் உரைத்தல் என்று சொன்னேனே தவிர....

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்குக் காரணம், சான் னதையே திருப்பிச் சொல்லாமல் இருந்தால் நம்முடைய அவையினுடைய நேரம் மிச்சப்படும் என்பதற்காகத் தான் சொல்கிறேனே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் வறட்சி வருகிறதா இல்லையா என்பதை, வடகிழக்கு. தென்மேற்கு என்ற இரண்டு பருவகாற்றைப் பொறுத்துத்தான் நாம் அறிக்கையை அனுப்பி இருக்கிறோம். தென்மேற்கு பருவக்காற்று எப்படி மழை பெய்தது. எவ்வளவு குறைவாக இருக்கிறது என்று பார்த்துவிட்டுத் தேவைக்குத் தேவை அப்போதைக்கப்போது கடிதங்கள் எழுதப்பட்டிருக் கின்றன. வடக்கு பருவக்காற்று அக்டோபர் மாதத்திலே ஆரம்பிக்கிறது. டிசம்பர் மாதம் வரைக்கும் மழை பெய்யும். நவம்பர் மாதத்திலே புயல் அடித்திருக்கிறது. நீங்கள் கூறியபடி மூன்று மாதத்திற்கு முந்து அனுப்பவேண்டும் என்றால் நவம்பர் மாதத்திலே புயல் அடித்து இருக்கிறது ...தில் காலதாமதம் காலதாமதம் என்றால் டெல்லியிலே உள்ளவர்கள் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஏதோ தமிழ்நாட்டிலே அப்போது மழை பெய்தது அவர்களுக்குத் தெரியாது என்று. தமிழ் நாட்டிலே இருந்து கொண்டு, தமிழ்நாட்டிலே உள்ள நிலைமை களைப் புரிந்துகொண்டு. வடகிழக்கு பருவக்காற்று மழை எப்போது எந்த மாதத்துடன் முடிகிறது என்று தெரிந்திருந்தால், இதைச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்,

இருந்தேன் என்பதைச் சொல்லி விடுகிறேன். மொழி சமத்துவம்
வேண்டும் என்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. தமிழ்
அழிக்கப்பட வேண்டும், தமிழ் நிறுத்தப்பட வேண்டும், தமிழ்
வளர்ச்சி தடை செய்யப்பட வேண்டும் என்று யார் வந்தாலும்
அதை எதிர்க்கும் உரிமை தமிழர்களாகப் பிறந்த அத்தனை
பேர்களுக்கும் உண்டு. அதில் நான் யாருக்கும் சற்றும்
சளைத்தவன் அல்ல. ஆனால் நாம் சொல்வதெல்லாம்
வெறி உணர்ச்சி இருக்கிற அடையாளமாகக் காரியங்களை வருங்
காலத்திலே செய்யக் கூடாது என்பதுதானே தவிர தியாகம்
செய்தவர்களை இழிவு படுத்துவதோ அல்லது குறை கூறுவதோ
என்னுடைய வாழ்க்கையிலே இருந்ததும் இல்லை, இனி இருக்கவும்
இருக்காது என்பதை முதலமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்
கிறேன். நான் சொல்வது, ஆந்திர மாநிலத்திலும், கர்நாடக
மாநிலத்திலும், கேரள மாநிலத்திலும் உள்ள மக்கள் வேலை
வாய்ப்பைத் தேடி இந்திய மண்ணில் எங்கு சென்றாலும் பிழைப்
போம் என்ற நிலைமையில் அதிகப்பட்டவர்கள் பேசும் மொழியைப்
படித்து, புத்திசாலி மக்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரத்தில்
உள்ள மக்கள் தங்கள் வேலை வாய்ப்புக்காகப் பயன்படுத்திக்
கொள்ளலாம் என்ற உணர்வோடு அந்த மாநில அரசாங்கங்கள்
எதிர்காலச் சிந்தனையோடு செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே, இதை நல்ல விவாதமாக அவர் உருவாக்கிவிட்டதால்,
எல்லோருக்கும் வாய்ப்பு கொடுத்தால் கூட நல்லது என்று நான்
கருதுகிறேன். ஆகவே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு
தொடங்கி வைக்கிறேன். வட இந்தியாவில் இருக்கின்ற இந்தி
பேசுகின்ற அத்தனை பேர்களுக்கும் வேலை வாங்கிக் கொடுத்து
விட்டீர்களா? அங்கே வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை
எவ்வளவு? இந்த நிலையில் இந்தி படித்தால்தான் வேலை
கிடைக்கும் என்று சொல்லுகின்ற காரணம் மிக மிக உளுத்துப்
போன காரணம். அது உத்தரத்திற்கு உதவாது என்று கருது
கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கின்ற பிரச்சினை மற்ற
எல்லாப் பிரச்சினைகளையும் விட முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சரே சொல்லி
விட்டார். நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன் : தயவு செய்து எனக்கு பேச வாய்ப்பு
கொடுங்கள். முதல்வர் அவர்கள் துவக்கிவைத்ததை செகன்ட்
செய்யும் வாய்ப்பாவது கொடுங்கள்.

I humbly request you, Sir, to pleas: permit me to speak for one
minute.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தான் எல்லாவற்றை
யும் முதலிலேயே சொல்லி விட்டீர்கள். எனவே உட்காருங்கள்.

THIRU DURAIMURUGAN: It is my duty to say something
no behalf of my party, in this regard.





திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகுபேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தநேரத்திலே
மிகநல்லகருத்தனை சொன்னதற்கு மிகவும் நன்றி. தமிழ்படித்த
அத்தனை பேர்களுக்கும் இந்த மாநிலத்தில் நம்மால் வேலை
கொடுக்க முடிந்து விட்டதா அல்லது வருங்காலத்தில் உள்ளவர்
களுக்காவது கொடுக்க முடியுமா? ஆகவே நான் சொல்லுகின்ற
பிரச்சினையானது வேலைவாய்ப்புக்காக மட்டுமல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே வருங்காலத்தில் கொடுக்க
முடியுமா என்கிறார்கள். இந்தப் பரம்பரையும் வருங்காலத்தில்
வருகின்ற தலைமுறையும் நிச்சயமாக இதைச் செய்து
முடிக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சருடைய எண்ணம்
வெற்றி பெறட்டும் என்று நானும் வாழ்த்துகிறேன். ஏனென்
றால் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்குமேயானால்
நிச்சயமாக எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால்
கிடைக்குமா என்பதைத் தெரிந்து சொல்லவேண்டும் என்பதற்
காகத்தான் சொல்லுகிறேன். முதல்வர் அவர்கள் இந்த
நாட்டை ஆளுகின்றவர்கள். அவருக்குத்தான் இன்றைக்கு
நிலைமைகள் தெரியும். படித்த மாணவர்களின் எண்ணிக்கை
தெரியும். வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படுகின்ற
மக்களின் நிலைமை தெரியும். காபந்து பண்ணவேண்டும் என்ற
எண்ணத்திலே ஆளுகின்ற அரசுதான் இதை செய்யவேண்டும்.
அவர்கள் உறுதி கொடுப்பதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள்
அவர்கள் இருப்பார்கள். நிச்சயமாக அவர் வெற்றி பெற
வேண்டும் என்று வாழ்த்துகிறேன். நான் மீண்டும் சொல்வேன்,
இதிலே வெறி இருக்கக் கூடாது. படிக்க விரும்பியவர்கள்
எத்தனை படித்தாலும், எந்த மொழியைக் கற்றாலும், பிரெஞ்சு
கற்றாலும் ஆங்கிலம் படித்தாலும், ரஷ்யன் படித்தாலும்
அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டியது, ஜனநாயக
மரபிலே இருக்கின்ற அமைச்சர்கள் செய்யவேண்டிய கடமை
என்பதையும், வருங்காலத்தில் தவறாமல் செய்யவேண்டும்
என்று சொல்வது என்னுடைய கடமை என்பதையும் தெரி
வித்துக் கொள்கிறேன்,

இந்த அரசு வறட்சி நிலைமையிலே அறிக்கை அனுப்பு
பிறகு, இந்த அரசு வறட்சி நிலைமையிலே அறிக்கை அனுப்பு
வதற்கு காலம் கடந்து, கடந்த ஜனவரி மாதம் 24-ந் தேதிதான்
அனுப்பப் பட்டதாகச் சொல்வதாவது, தமிழகத்து மக்களுடைய
தலைவிதியிலே நாம் அலட்சியமாக இருக்கிறோமா அல்லது
மறந்திருக்கிறோமா? இந்த அவல நிலை ஏன் ஏற்பட்டது
என்பதை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க
வேண்டும். காலம் கடந்து போனதால் நம்முடைய பங்கு
நமக்குக் கிடைக்க வேண்டிய நிவாரண நிதிகள் கிடைக்க
கேடான நிலைக்கு இந்த அரசுதான் காரணம்,
ாமல் போகி

32. The need to discover new and reliable sources of energy cannot be over-emphasised. Energy Planning is an important area which needs the attention of the Government, if the growing gap between the energy demand and supply is to be met. A suitable mix of energy technology for each location, after taking into account the available energy resources, is absolutely necessary for the development of the State, particularly the rural areas. Altohugh several experiments and research studies have been carried out in various technical institutions regarding Energy Planning very little has been done to implement the results of these projects in the field. This Government has decided to take up a project on Energy Planning, during the next financial year, in a few select areas with the hope that it would signal the beginning of a comprehensive energy system for the whole State.

33. Before I conclude, I would like to reiterate this Government's commitment to Anna's two language formula. In spite of assurances given to the people of this State by the late Prime Minister Pandit Jawaharlal Nehru and Prime Minister Thirumathi Indira Gandhi, that Hindi would not be imposed on non-Hindi speaking people, it is felt that insistence by the Railway Administration that its employees should pass the Hindi examination to qualify for annual increments and the increasing importance given to Hindi in AIR and TV amount to direct and indirect imposition of Hindi by some departments and are inconsistent with the assurances given. This Government would therefore like to urge upon the Government of India to take necessary steps for adhering to the assurances given earlier.

34. I have placed before you, in my address, achievements of the Government, the difficulties confronting it and the programme the Government has in mind for the future. I do hope that all of you would jointly strive to help the Government in implementing the Plans and the Programmes for the welfare of the people of Tamil Nadu.



## இணைப்பு III.

(82 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண் .)

தமிழ்நாடு ஆளுநர் திரு. சுந்தர் லால் குரானா அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்ற கூட்டு அவையில் 1983ம் ஆண்டு சனவரி
திங்கள் 24ம் நாள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்
மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

இம் மாநிலத்தின் ஆளுநராக நான் பொறுப்பேற்ற பின்னர்
உங்கள் அனைவரையும் கூட்டு அவையில் சந்திப்பதற்கு இதுதான்
எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு. முதற்கண் உங்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தும் பொங்கல் வாழ்த்தும்
அளிக்க விழைகிறேன்.

2. இம் மாநிலத்தில், வெவ்வேறு நடவடிக்கைத் துறைகளில்
பல்வேறு திட்டங்கள் 1982 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகச்
செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத் தகுந்த
மாபெரும் சாதனை அடைந்துள்ள திட்டம். முதலமைச்சரின்
சத்துணவுத் திட்டமாகும். இத் திட்டம் இம் மாநிலத்தின்
சிற்றூர்ப் பகுதிகளில் 1-7-1982 முதல் தொடங்கப்பட்டது.
அதன்பின், இத்திட்டம் 15-9-1982 முதல் நகரப் பகுதிகளுக்கு
நீட்டிக்கப்பட்டது. இரண்டு வயது முதல் நான்கு வயது வரை
யுள்ள 23 இலட்சம் குழந்தைகள் 27,8 0 குழந்தை நல
நிலையங்களிலும், ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள
42 இலட்சம் குழந்தைகள் 33,700 பள்ளி நிலையங்களிலும்,
அன்றாடம் முழுமையான, நல்ல சத்துணவு அளிக்கப்பட்டு
வருகின்றனர். பள்ளிக்கூடங்கள் மூடப்படும் முக்கியமான
அரசு விடுமுறை நாட்கள் ஒரு சில நீங்கலாக, ஆண்டு முழுவதிலும்
எல்லா நாட்களிலும் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு
வருகிறது. ஆனால், இந்த விடுமுறை நாட்களுக்கு முதல் நாள்
மாலையிலேயே அவர்கள் பள்ளி விட்டுச் செல்கையில்,
முன்னதாகச் சமைக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள், வீடு
களுக்கு எடுத்துச் சென்று அடுத்த நாள் உட்கொள்வதற்காக,
அவர்களிடம் கொடுக்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டினால் ஆண்டு
முழுவதிலும் எல்லா நாட்களிலும் அவர்கள் சத்துள்ள உணவு
உட்கொள்கின்றனர். இத் திட்டத்தின் காரணமாக, பெரிதும்
கிராமப்பகுதிகளில் 1,40,000-க்கு மேற்பட்டவர்களுக்குக் கூடுதல்
வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது; இவர்களில் பெரும்பாலோர்
மகளிர் ஆவர். ஏராளமான கைம்பெண்கள், ஆதரவற்றோர்,
பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிடர்கள்,
மலைக்குடியினர் ஆகியவர்கள் இத் திட்டத்தின் காரணமாக
...ய வேலை வாய்ப்புகளால் பயனடைக்
கப்பட்டுள்ள

வடகிழக்கு பருவக் காற்று அக்டோபர் மாதம்தான் மழ
ஆரம்பிக்கிறது. டிசம்பர் முடிய மழை பெய்கிறது. அறிக்கையை
மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம், நாங்கள் கேட்கிறபோது,
டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரையிலும்
நாட்டினுடைய நிலைமைகளைத் தெரிந்து எழுத வேண்டு
மென்று அரசு சார்பாக கடிதம் எழுதப்பட்டது ஆகவே
டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரையிலும் மாவட்டங்
களினுடைய நிலைமைகளைத் தெரிந்து எங்களுக்கு
ஜனவரி மாதம் 7 ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டுமென்று
நாங்கள் எழுதி இருக்கிறோம். அது வந்தபிறகு அவைகளை
நன்றாக எந்தெந்த மாவட்டத்திற்கு எந்தெந்த துறைக்கு எப்படி
எப்படி பணம் வேண்டும் என்பதை முறையாக அச்சடித்து
அனுப்பப்பட்டது 24 ஆம் தேதி. 24 ஆம் தேதியாக இருந்தாலும்
இதற்கு முன்னாலே நாங்கள் செயலாளர்களைக் கூட்டிவைத்து.
துறைத் தலைவர்களை கூட்டிவைத்து எவ்வளவு செலவாகும்
என்பதை கவர்னர் உரைக்கு முன்னாலேகூட 190 கோடி
தேவை என்று தந்தி மூலம் கொடுத்திருக்கிறோம். இதில் கால
தாமதம் எதுவும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்
கிறேன். நான் இப்போது சொல்லப் போவதைப் பத்திரிகையிலே
போடக்கூடாது என்று நான் நினைக்கிறேன்.

* * *

நீங்கள் இந்த நாட்டினுடைய, இந்த மக்களுடைய நலனுக்
காக நீங்கள் செய்கிறீர்களா, இல்லை இங்கே விவரங்களைச்
சொல்ல வேண்டுமென்று சொல்கிறீர்களா என்று எனக்குத்
தெரியாது. ஆகவே உடனே......

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது
மக்களுடைய நன்மைக்காக சொல்கிறார்களா அல்லது எதற்
காகச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை என்று சொன்
னார்கள். நான் மக்களுடைய நன்மைக்காகத்தான், நிவாரணம்
கிடைக்க வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர ஏதோ
எதிர்க் கட்சி உறுப்பினர் என்ற முறையிலே நான் சொல்ல
வில்லை. மழை பெய்யவில்லை. பருவ மழை பொய்த்து
விட்டது. தண்ணீர் கிடைக்கவில்லை என்கிற கவலை நமக்கு
இருப்பது போல், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தக்
கருத்தை ஏற்றுக்கொண்ட காரணத்தால், இவற்றை எடுத்துச்
சொன்னேனே தவிர, எதிர்க்கட்சி என்ற முறையில் அதை
எடுத்துச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி சோமசுந்தரம்: தலைவர்
அவர்களே, மத்திய அரசுக்கு வறட்சி குறித்த அறிக்கையை
24 ஆம் தேதி நாம் அனுப்பியிருந்தாலும், அதற்கு முன்னாலே

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



அரசு தன்னால் முடிந்த அளவிற்கு பணிகளைச் செய்து இருக்
கிறது. கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் அதற்காக நாம்
ஒதுக்கீடு செய்து. 10–15 கோடி ரூபாய் அளவிற்கு செலவு
செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இன்னும் சொல்லப்போனால், கடந்த 10-20 ஆண்டுகளில்
இந்த அளவிற்கு வேகமாகக் காரியங்களை எந்த ஒரு அரசும்
இதற்குமுன்னால் செய்யவில்லை. அந்த அளவிற்குவேகமாக நாம்
இந்தக் காரியங்களைச் செய்து இருக்கிறோம் என்பதைப்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பேசுகிறபோது, பத்திரிகையில் போடவேண்டாம்
என்று கூறி ஒரு கருத்தைச் சொன்னார்கள் அந்தக் கருத்து
அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறவேண்டும் என்று ஆணை
யிடுகிறேன். அந்தக் கருத்தை பத்திரிகைகளிலும் வெளியிடக்
கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மின் உற்பத்தியிலே நாம்
மிகவும் குறைவாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின்சார வாரியம்
குறித்து இரண்டு நாட்கள் விவாதம் வைத்து இருக்கிறோம்.
அன்றைக்கு இதைப் பற்றி பேசிக் கொள்ளலாம்.

திரு. எல். இளையபெருமாள்: நான் கடைசியாகச் சொல்ல
விரும்புவது. மாநில அரசு கோரியுள்ள தொழில் அனுமதி
விண்ணப்பங்களை—கிட்டத்தட்ட 300க்கு மேற்பட்ட அனுமதி
விண்ணப்பங்களை—மத்திய அரசு தூக்கிப்போட்டு விட்டது.
அதற்கான அனுமதி அளிக்கப்படவில்லை, தொழில் துறை
தமிழகத்தில் துவங்க வேண்டாம், வேறு மாநிலங்களில்
துவங்குங்கள் என்று மத்திய அமைச்சர் கூறியதாக கருத்து
வருகின்ற வகையில் மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர்
அவர்கள் இங்கே கருத்து வெளியிட்டார்கள். நம்முடைய
விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட
கருத்தைத் தெரிவித்த மத்திய அமைச்சர் யார் என்பதையும்
இங்கே வெளியிட்டார்கள். இன்றைய தினம் இதுபோன்ற விஷயங்
களில் பதில் சொல்லும் பொறுப்பு யாரிடத்தில் உள்ளது
என்பதை நான் தெரிந்து கொண்டேன். அவர் அதைச் சொல்கிற
போது பயன்படுத்திய வார்த்தைகள் எத்தகைய எதிர்ப்பு
களையும் ஏற்றுக் கொள்ளத் தயார் என்கிற வகையில் அமைந்து
இருந்தது. அவர் ஒரு துடிப்புள்ள இளைஞர். மத்திய மந்திரி
திவாரி அவர்கள் அப்படிச் சொன்னதாக அவர் குறிப்பிட்டார்,
மத்திய மந்திரி திவாரி அவர்கள் எப்போது இதைச் சொன்
னார். அது எந்தப் பத்திரிகையில் வந்துள்ளது, எந்தத் தொழில்
அதிபரிடத்தில் அப்படிச் சொன்னார். என்ன தொழில் துவங்க
அனுமதி அவரிடத்தில் கேட்டபோது இப்படி சொல்லப்பட்டது

என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது சட்டமன்றத்தில் தெரிவித்தால் நல்லது. நானும் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலும், தமிழன் என்ற முறையில் திராவிடன் என்ற முறையிலும், மத்திய அரசை இது குறித்து கேட்க முடியும், ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்க முடியும். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் அந்தத் தகவல்களைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் பென்ஷன் காமராஜர் காலத்தில் ஏற்படுத்தப் பட்டது. அது இன்றைக்குத் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த முதியோர்களுக்கும் ஆகாரம் கொடுக்கப்படும் என்று சொல்லி யிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் நிதி நிலைமையை எண்ணிப் பார்க்கிறபோது, எத்தனை பேர்களுக்கு இந்த வசதி கொடுக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இப்போது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள முதியோர்களுக்குத் தான் பென்ஷன் தொகை ஒதுக்கப்படுகிறது. ஒரு ஊரில் 5 பேர் அல்லது 10 பேர்கள் தான் இப்படி பென்ஷன் வாங்குகிறவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் இந்த பென்ஷன் தொகையைப் பெறுவதற்கு யோக்கியதை பெற்றவர்களாக இருந்தாலும், போதுமான நிதி இல்லாத காரணத்தால் அவர்களுக்குக் கொடுப்பது இல்லை. ஏற்கனவே வாங்கிக் கொண்டு இருப்ப வர்களில் யாரேனும் இறந்து விட்டால்தான் அவர் இடத்தில் வேறு ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த வகையில் ஓரிருவர் புதிதாக வரலாம். ஆனால் முதலமைச்சர் அவர்கள் முதியோர்களுக்கு உணவு வழங்கப்படும் என்று கூறியதைப் பார்த்துவிட்டு, எல்லா முதியோர்களும் அந்த உணவுக்கூடத்தின் முன்வந்து நின்றுவிடுகிறார்கள். தங்களுக்கும் உணவு கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த நிலையத்தில் உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், யார் முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவதற்கான ஆணையை வைத்து இருக்கி றார்களோ அல்லது முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகிறார் களோ அவர்களுக்குத்தான் இந்த உணவு அளிக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதனால் அங்கே வாக்குவாதம் ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் முதியோர்களுக்கு உண்மையாகவே நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டு இருந்தால், கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். இப்படி சோறு போடும் திட்டம் கொண்டு வருவதால் சாப்பிடுகிறவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலைமையும் ஏற்படும். முதலமைச்சர் அவர்கள் என்னைவிட மக்களை நன்கு அறிந்தவர்கள். ஆகவே, உணவு சாப்பிட வேண்டும் என்று எல்லாம் ஏற்படுகின்ற வகையில் திட்டம் கொண்டு வரவேண்டும். நீங்கள் சொல்வது ஒன்று, ஆனால் அங்கே நடப்பது வேறு ஒன்று. ஆகவே, எல்லா முதி யோர்களுக்கும் இந்த உணவு, ஓய்வூதியமும் கிடைக்கின்ற வகையில் திட்டங்களைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்)



(பிற்பகல் 1.00)

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கலந்து கொண்டு நானும் சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்ற கொள்கைகளை யும் திட்டங்களையும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தமிழக மக்களுடைய நல்வாழ்விற்கான முன்னேற்றப் படிகளாக இருப்பதைப் பார்க் கிறோம். இருந்தாலும் அந்தத் திட்டங்களையும் கொள்கை களையும் நிறைவேற்றுவதில் உள்ள சங்கடங்களை நாம் உணராமல் இல்லை.

அரசியல் சட்டத்தினுடைய அதிகாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு நந்தியாக உருவாகியிருக்கிற மத்திய அரசைப் பார்த்து 'அரிசி கொடு, மண்ணெண்ணெய் கொடு, தமிழகத்தை வாழ விடு' என்று சொல்லத்தக்க அளவிலே, நந்தனார் என்ற நிலையிலே இன்றைக்கு தமிழகம் இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

ஆளுநர் உரையின் மூலம் நாம் மத்திய அரசுடைய கதவைத் தட்டியிருக்கிறோம். இனி திறக்க வேண்டியது மத்திய அரசே அல்லாமல் வேறு யாருமல்ல. நாம் பல்வேறு கருத்துக்களை, இந்தக் கருத்துக்களை எல்லாம் பலமுறை எடுத்துச் சொல்லியும் அவை "செவிடன் காதில் ஊதிய சங்காக" இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு உள்ள இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு செவிசாய்க்கும் என்ற நம்பிக்கையோடு இந்த விவாதத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்போது மின்சாரப் பற்றாக்குறை பற்றியும், இந்த மின்சாரப் பற்றாக்குறைக்கு இன்றைக்கு இருக்கிற தமிழக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும் கருத்துக்களைச் சொன்னார்கள்.

நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவ தெல்லாம், இன்றைக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்தாலும் இதை கருத்தில் கொண்டு நம் முடைய அரசு போட்ட அல்லது தீட்டிய திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்குமானால் இன்றைக்கு இந்த நிலை

அது மட்டுமல்ல, புதிதாக சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்களை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டு, நாம் போட்டு அனுப்பியத் திட்டங்களை மத்திய அரசு கிடப்பிலே போட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒகேனகல் நீர் மின் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நம்முடைய திட்டங்கள் இப்படி நிறைவேற்றப்படாமல் இருக்கின்றபோது மற்ற மாநிலங்களில் 'சூப்பர் தெர்மல் பவ்வர் ஸ்டேஷன்', 'சூப்பர் ஹைட்ரோ பவ்வர் ஸ்டேஷன்' அமைக்கும் திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று தொழில் துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழக அரசு சொல்லுகின்ற திட்டங்களுக்கு அனுமதி அளிக்காமல் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப்போல, இன்றைக்கு மத்திய அரசு பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்திருக்கிற 87 மாவட்டங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மாவட்டம் கூட இல்லை என்பதை இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவியேற்றதிலிருந்து தமிழ்நாட்டில் எந்த பெரும் தொழிலுக்கும் இதுவரையில் அனுமதி அளிக்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சேலம் உருக்காலை என்ற திட்டத்தைச் சொல்லி, இன்றைக்கு அது கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாகி விட்டது. இன்று அது ஒரு உருட்டுப்பட்டறையாக ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன்.

அதைப்போன்று காவிரி நீர்ப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் அதை தீர்த்து வைக்க மத்திய அரசு மிகுந்த மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கிறது. அது மட்டுமல்ல. மேற்கு நோக்கு ஓடும் நதிகளிலுள்ள உபரி நீரை திருப்பி விட வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லியும் அந்தப் பிரச்சனை தீர்க்கப்படவில்லை. அந்தப் பிரச்சனை தீர்க்கப் பட்டிருந்தால் இன்றைக்கு வேளாண்மைத் துறையில் நாம் பெரும் வளர்ச்சியடைந்திருப்போம்; மின்சாரப் பற்றாக்குறையையும் போக்கியிருக்க முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம்



நமக்கு ஏற்பட்டபோதிலும் தமிழக அரசு நல்ல பல திட்டங்களை சோதனைகள் நேரிட்ட போதிலும் சாதனையாக்கிக் கொண்டு, நல்லமுறையிலே நிறைவேற்றி வருகிறது என்பதை மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைய தினம் ஒரு சில எதிர்க் கட்சிகள் உள்ளபடியே ஆட்சிக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் ஏந்தா கேலியாகவும் கிண்டலாகவும் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிற நிலைமையை நாம் இன்றைய தினம் பார்க்கி றோம். எனவே நான் எதிர்க்கட்சி உறுப்பினர்களை கேட்டுக் கொள்வதெல்லாம் தமிழகத்தினுடைய திட்டங்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் அல்லது உதவ முடியா விட்டாலும் உபத்திரவமாவது கொடுக்காத ஒரு சூழ்நிலைக்கு உங்களை நீங்கள் ஆளாக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழகத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். எரிகிற வீட்டிலே பிடுங்குவது வரை லாபம் என்று. எனவே இயற்கை யின் சூழ்நிலையினால் ஏற்பட்டிருக்கிற நிலைமையை நீங்கள் சாதகப்படுத்திக் கொண்டு, இந்த ஆட்சிக்கு உங்களுக்குச் எதிராகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எதிராகவும் எந்த நடவடிக்கையை எடுத்தாலும், அது தமிழக மக்களுக்கு நீங்கள் செய்கிற துரோகம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எனவே நான் வேண்டி விரும்பி பணிவோடு கேட்டுக் கொள்வ தெல்லாம், தயவுசெய்து எங்களை ஆளவிடுங்கள், அதன்மூலம் தமிழக மக்களை வாழ விடுங்கள் என்பதுதான். இந்தப் பணி வான வேண்டுகோளைத்தான் நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஒரு ஆட்சியி னுடைய திட்டங்கள் எப்படி அமைய வேண்டும் என்று சொல்கிறபோது, கோட்டையிலே போடப்படுகிற திட்டங்கள் குடிசையிலே உள்ள குடும்பங்களினுடைய கதவை அந்த திட்டங் களின் பயன்கள் சென்று தட்ட வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு, எந்த ஒரு திட்டத்தைப் போட்டாலும் அது ஏழை எளிய மக்களுக்கு அதன் பயன்கள் செல்லுகிற வகையில் போய்க்கொண்டிருக் கிறது. அந்த அடிப்படையில் தான் சத்துணவுத் திட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம், பாது

காப்புக் குடிநீர் திட்டம், நன்னிறைவுத் திட்டப் பணிகள் என்று அந்தச் செயல்களை எல்லாம் அரசு சீரோடும் சிறப்போடும் செய்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சத்துணவு திட்டத்தின் மூலம் என்னுடைய தொகுதியிலே ஏற்பட்டிருக்கக் கூடிய மகத்தான மாற்றத்தையும் எழுச்சியையும், அதை நேரிலே கண்டவன் என்ற முறையில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சத்துணவுத் திட்டத்தை, சரித்திரம் ஒரு புதிய வரவாக ஆக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பசித்தவன் முன்னால் உணவு கடவுளுக்குச் சமம் என்ற காந்தியடிகளின் உள்ளம் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதுபோலவே பசித்தவன் முன்னால் தத்துவம் பேசாதே என்ற ஜவகர்லால் நேருவின் உள்ளமும் புரட்சித் தலைவர் அவர்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவம் இன்றைக்கு நடைமுறைப் படுத்தப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். திருவள்ளுவர் அவர்கள் ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்கிற போது,

''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு''

என்று சொல்கிறார். எனவே ஒரு நாட்டிலே பசிப்பிணி போக்கப்பட்டாக வேண்டும் என்ற அந்த தத்துவங்கள் வகைப் படுத்தப்படுகிறபோது, அவைகள் இன்றைக்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே குழந்தைகள் பெற்றோர்களின் சொத்து மட்டும் அல்ல; இந்த நாட்டினுடைய பெருஞ்செல்வங்கள் அவர்களை வாட்ட முறாமல் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தோடு இந்த திட்டத்தினை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்று முழங்கிய அந்தப் பாரதியின் அந்த மகானின் வார்த்தையை உண்மையாக்க வேண்டும் என்று தான் புரட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்மிடையே வாழ்ந்து மறைந்த அமர கவி, நம்முடைய ஆஸ்தான கவியாகவும் இருந்த கண்ணதாசன் அவர்கள் கூட 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாது போகவேண்டும்' என்ற பாடல் வரிகளைப்



இன்றைக்கு இந்த அரசினுடைய குறிக்கோளாக மாறியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1.10)

எனவே இப்படிப்பட்ட நல்ல பல காரியங்களைச் செய்து வருகின்ற இந்த ஆட்சியினுடைய திட்டங்களையும் கொள்கைகளையும் விளக்குகின்ற வகையில் இன்றைக்கு இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கின்றது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பருவமழை பொய்த்ததன் காரணத்தால் இன்றைக்கு வறட்சி நிலைமை ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சேலம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக ஆக்க வேண்டும் என்று இந்த அரசுக்கு பரிந்துரை அனுப்பி இருப்பதாக தகவல் வந்திருக்கின்றது. எனவே அப்படிப்பட்ட நிலையில் வறட்சியைப் போக்குவதற்காக அரசு நிதியுதவி செய்கின்றபோது சேலம் மாவட்டத்திற்கு அதிக நிதியுதவி அளிக்க வேண்டும் என்று அந்த சேலம் மாவட்ட மக்களின் சார்பிலே நான் வேண்டி விரும்பி மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்தச் சூழ்நிலையில் சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நில வரியினை ரத்து செய்யவேண்டும் என்றும், கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதை ஒத்தி வைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் எந்த அளவுக்கு நம்முடைய அரசு நல்ல பல திட்டங்களை சிறப்பாகச் செய்து வருகின்றது என்ற கருத்தினை எடுத்துச் சொல்லி ஆளுநருடைய உரைக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து வாழ்த்தி நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆளுநர் உரை தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உண்மையான நிலைமையினை எடுத்துச் சொல்வதற்கு அஞ்சுகிறது என்று நாங்கள் கருதுகிறோம். வேதனையோடு இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்களுடைய உண்மையான நிலைமையினைக் கொண்டதாக ஆளுநர் உரை அமையவில்லை. வறட்சி ஒரு பக்கம் வாட்டுகின்றது. மின்வெட்டு ஒரு பக்கம் மிரட்டுகின்றது. கடுமையான நூல் விலையேற்றம் இன்று நெசவாளர்களைத் தவிக்க வைத்துக்கொண்டிருக்கின்றது. விலைவாசி உயர்வும் வேலையில்லாத் திண்டாட்டமும் நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அந்த உண்மையான நிலைமையினை எடுத்துச்

சொல்வதற்கு அஞ்சுவதால்தான் இன்று அமைச்சர் பெருமக்கள் கூட பொது மேடைகளில் பேசுகின்ற அளவுக்குக் கூட இந்த ஆளுநர் உரை அமையவில்லை என்று சொல்லவேண்டி இருக்கின்றது.

மேலும் இந்த ஆளுநர் உரையிலே இருக்கக்கூடிய 34 பாராவிலே ஒரு பாராவிலே கூட தொழிலாளர்களைப் பற்றிச் சொல்ல முடியவில்லை. ஒரு பாராவிலே கூட விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிச் சொல்ல முடியவில்லை. ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைத்திருக்கிறோம். என்பதோடு நிறுத்திக் கொள்ளவேண்டிய கடுமையான நிலைமைக்கு உங்களுடைய கொள்கை உங்களைக் கொண்டு சென்றிருக்கின்றது என்பதை நான் எடுத்துக்காட்டியாக வேண்டும் இந்தத் தமிழ்நாட்டின் எல்லைக்குள் இருந்துகொண்டு ஏதோ ஒரு காரியத்தை நிறைவேற்றலாம் என்று நினைக்கக் கூடிய மெத்தனமான எண்ணத்தில் அமைந்திருக்கின்றது இந்த அறிக்கை என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்போது நாம் 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டிலே நாம் இருக்கிறோம். அது தோல்வியில் சென்று கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள். அது இந்தத் தமிழ்நாட்டு எல்லையினைத் தாக்கவில்லையா? இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் பதினைந்து மடங்கு கறுப்புப் பணம் உயர்ந்திருக்கின்றது. அது தமிழ்நாட்டு எல்லையைத் தாக்க வில்லையா? விலைவாசி கோபுரமாக உயர்ந்து இன்றைக்கு இறக்கை கட்டி பறந்து கொண்டிருக்கின்றது. அது தமிழ்நாட்டிற்கு வரவில்லையா? இன்று ஐ.எம்.எப். லோன் அதாவது உலக வங்கியிடமிருந்து வாங்கிய கடன் 2,500 கோடி ரூபாய் வந்ததற்குப் பிறகுதான் திட்டங்கள் விரிவடைந்துகொண் டிருக்கின்றன என்று இந்த அரசியல் பெருமக்களும், நிபுணர் களும், அரசியல்வாதிகளும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே அது தமிழ்நாட்டு எல்லைக்கு வரவில்லையா? அப்படியானால் இந்த அறிக்கையில் என்ன வருகிறது? 15 கோடி ரூபாயிலே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லப்படுகின்றது. அதிலே இருந்துதான் வேதனையே வருகின்றது. இந்த நாட்டிலே 22 மாநிலங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலமும் 15 கோடி ரூபாயினை ஒதுக்கி விட்டால் மொத்தம் 330 கோடி ரூபாயிலே மத்திய அரசு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். எனவே நீங்கள் உட்கார்ந்து உண்மையைப் பார்க்கத் தவறி இந்த மாநிலத்திற்கு உள்ளேயே ஒரு குதிரையிலே ஓடிக்கொண்டிருக்கக்கூடிய ஆட்சி என்ற முறையில் உங்கள் அறிக்கை அமைந்திருக்கின்றது. உங்களுக்கு மேலே ஒரு சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கின்றது. அது உங்களை மிரட்டி ஆட்டிக் கொண்டிருக்கின்றது. மின்வெட்டு ஒருபக்கம் வாட்டுகின்றது. வறட்சி ஒரு பக்கம் வாட்டுகின்றது. நிலக்கரி கிடையாது.



மாநில அரசுகள் இன்றையதினம் நிதி பற்றாக்குறையில் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் சொன்னார்கள் நாங்கள் அதிக பற்று வாங்கவில்லை என்று. அதிக பற்று வாங்குவது என்ன பாவமா? நம்முடைய நாட்டு மக்கள் கொடுக்கிற வரிப் பணத்திலிருந்துதான் பெறுகிறோம் அது என்ன பாவமா? நீங்கள் செய்த உபதேசமோ என்னமோ அதனால் தான் அவருக்கு அந்த எண்ணம் ஏற்பட்டிருக் கிறது. ஆகவே நாங்கள் சொல்ல விரும்புவது எல்லாம் மக்கள் முன்னால் எடுத்துச் சொல்லுங்கள் மறைக்காதீர்கள். உங்களுக்குள்ள தவறை நாடு பார்க்கும், கண்டிக்கும், திருத்தும் திருந்தாவிட்டால் தூக்கி எறியும். அது வேறு. இன்று உண்மையை மறைத்து என்ன செய்வீர்கள் நம்முடைய மின்சார அமைச்சர் அவர்கள் ஓலம் இடுகிறார்கள் பத்திரிக்கையிலே. இதில் என்ன இருக்கிறது. அந்த பத்திரிக்கை கட்டிங் கொண்டுவரவேண்டுமா? நம்முடைய ஆர். எம். வீ. அவர்கள் பேசியிருக்கிறார்கள் அழுத்தம் திருத்த மாக உணவு கொடுக்கவில்லை நிலக்கரி கொடுக்கவில்லை என்று. நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் பலசமயங்களில் பத்திரிக்கையில் கருத்துக்களை சொல்லி வருகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாக இருக்கவேண்டும். 5 ஆண்டு இருக்கக்கூடிய ஆளுநர் உரையை நீங்கள் இன்றைக்கு வைத்து படித்துப் பாருங்கள். அதில் இருக்கக்கூடிய கருத்துக் களைக் கூட இங்கே எடுத்திருக்கிறீர்கள். மத்திய அரசு கர்நாடகத்தில் ஓடுகிறபோது, ஆந்திராவில் ஓடுகிறபோது இன்றைக்கு உங்களுக்கு இந்த தயக்கமோ தேக்கமோ, ஏமாற்றமோ ஏன் ஏற்பட வேண்டுமென்று நான் கேட்கிறேன். ஆகவே நீங்கள் பிரச்சனையை அணுகினால் சத்துணவு திட்டத்தையே சுற்றிக்கொண்டிருப் பீர்கள் நல்லதா, கெட்டதா? அதில் சாப்பாடு இருக்கிறதா? பல்லி விழுகிறதா? வஞ்சப் இருக்கிறதா? ஊழல் இருக்கிறதா? அது எப்படிப்பட்ட நாயகம் செய்தது என்பதில் தான் நீங்கள் நினைப்பீர்களே தவிர வேறு வழி தெரியாத நிலையில் ஆளும் அரசு இருக்கிறது என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி திட்ட வட்டமாக கூற விரும்புகிறது. நவம்பர் மாதம் 1 ஆம் தேதி ஆரம்பித்து இன்றைய தினம் 87 நாட்களிலே அரசு தோட்ட தொழிலாளர்கள் குமரி மாவட்டத்தில் போனஸ் வேண்டும் என்று தங்களுடைய வாழ்க்கை நிலைமையை அமைத்துக்கொள்ள போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மறியல் ஆரம்பித்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக உங்களுடைய கொள்கை என்ன? சிம்கோ தொழிலாளர்கள் கடந்த 9 மாதங் களாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதிலே உங்கள் கொள்கை என்ன? குமரி மாவட்டத்தில் 50 ஆயிரம் முந்திரி தொழிலாளர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள் அதில் உங்களுடைய கொள்கை என்ன? தலையிட வேண்டாமா? அதையெல்லாம் விட்டுவிட்டு நீங்கள் கவனிக்க வேண்டாமா.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்றால் இருக்கிற வேலையே போய் கொண்டிருக்கிறது. லே-ஆப் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசுக்கு காத்து இருக்கிறதா? இல்லையா தெரியாது. நமக்கு மின்சாரம் இல்லை. லே-ஆப் விடுகிறோம். நீங்கள் எல்லாம் சொன்னீர்கள் அந்த திட்டம் கொடுக்கவில்லை, இந்த திட்டம் கொடுக்கவில்லை என்று. சோளாறு என்றால் அது வேறு விஷயம். அதனால் நாம் லே-ஆப் விடவேண்டியிருக்கிறது. பொதுவாக இன்றைக்கு கிடைக்கக்கூடிய கூலியிலே வாழ்க்கையை நடத்தமுடியவில்லை விலை ஏறிக்கொண்டேயிருக்கிறது. பறந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் இந்த கொள்கையில் மாறுதல் வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். இந்த கொள்கையை வைத்துக்கொண்டு இந்த பிரச்சனையை உங்களால் தீர்க்க முடியாது. வெறும் சமாதானம் தான் சொல்லலாம் என்று கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்து. வறட்சி. நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததை நான் கவனமாக கேட்டேன். என்ன காலத்தில் ரிப்போர்ட் அனுப்பபபட்டது என்பது. என்ன நாம், என்ன பரிய அரசர்கள் காலத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மாதம் மும்மாரி பொழிந்ததா என்று நாடகத்தில் நடப்பது போல் மத்திய அரசாங்கமே தெரிந்து காள்ளவேண்டும் நமக்கு உதவி செய்ய வேண்டும். அது அல்ல பிரச்சினை. தென் மேற்கு பருவ மழை எப்போது தவறி விட்டது வட இழக்கு பருவ மழை எப்போது தவறி விட்டது? கிட்டத்தட்ட நான் கேட்கிறேன் அமைச்சர் அவர்கள் ஒரு வெள்ளைப்பேப்பர் காடுத்தால் நான் சொல்வேன் 8 மாதங்களுக்கு முன்னாலே தமிழ்நாட்டில் புஞ்சை நாசம் ஆகி விட்டது உங்களுக்குத் தெரியாதா? புஞ்சை நாசமாகி நமக்கு சிறு தானியம் இல்லாவிட்டால் எப்படி நாம் சமாளிக்கமுடியும். வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 40 சதவிகம் உற்பத்தி குறைவு என்று. நான் 50 சதவீதம் என்று வைத்துக்கொள்கிறேன் உங்கள் கையில் ஸ்டாக் இருக்க முடியாது. கஷ்டம் இருக்கிறது. நான் ஏற்றுக்கொள்கிறேன். உண்மையில் இந்த பணிக்கு நீங்கள் 50 கோடி 100 கோடி ரூபாய் ஒதுக்கி ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதில் தவறு செய்திருக்கிறீர்கள். கவனக்குறைவாக இருந்திருக்கிறீர்கள். ஒருவேளை மழை பெய்யும் பெய்யும் என்று இருந்திருக்கலாம். மழை பொழிந்தாலும் புஞ்சை வராது. உங்களுக்கு தென்மேற்கு பருவ மழை பொய்த்து விட்டது என்று சொன்னால் புஞ்சை வரும் என்பதற்கு இடமே கிடையாது. புஞ்சை தானியம் தமிழ்நாட்டில்-நம்முடைய நீர்ப்பாசன அமைச்சர் எனக்கு விளக்கம் சொல்லவேண்டும். 4-ல் 3 பகுதி மானம் பார்த்த பிரதேசத்தில் தமிழ்நாடு இருக்கிறது. அதுவும் தெரியும். நதி நீர்ப் பாசனத்தில் இங்கே இருக்கிறார்கள். குளத்து பாசனத்தில் இங்கே இருக்கிறார்கள். ஏரி பாசனத்தில் இங்கே இருக்கிறார்கள், நான்கில் ஒரு பகுதிதான். காவேரியில் ஆகராறு வந்து ஆகிவிட்டது. இன்றைக்கு பெரியார் வைகை



கிடைக்கவில்லை. அதற்கு போதுமான
தண்ணீர் நமக்கு இன்றைக்கு நமக்கு பலவிதமான
தண்ணீரும் இல்லை. மதுரை மாவட்ட ஆட்சித்
கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 3 லட்சம் ஏக்கர் பயிரர்க்க
தலைவர் அறிக்கை இருக்கின்றன. கிட்டத்தட்ட 90 ஆயிரம்
இந்த ஆண்டு ஏற்பாடு செயம்தாம். சந்தேகம் என்று மதுரை
ஏக்கர் வருமோ என்று இப்போது இருக்கிறது. 1100
மாவட்ட கலெக்டர் அறிக்கையில பட்டு போய்விட்டது
பஞ்சாயத்துக்களில் 750 பஞ்சாயத்துக்கள் தலைவர் ரிப்போர்ட்
என்று மதுரை மாவட்ட ஆட்சித் மாவட்டத்திற்கு
23 கோடி ரூபாய் என்னுடைய இருக்கிறது. அப்படி
இருக்கிறது. கலெக்டர் அறிக்கை இன்றைக்கு முளைத்த
தேவை என்று நேற்றைக்கு வந்து இருக்கக்கூடிய
என்றால் இது 6 மாதங்களாக வளர்ந்து திட்டவட்டமான
கதையாக இல்லை. தீர்ப்பதற்கு ஒரு நிவாரணம்
கதை. ஆகவே அதை திட்டவட்டமாக கிணறு
கொள்கை உங்களுக்குத் தேவை. புதிய கடன் அவனுக்குத் தேவை. நடத்த
இன்றைக்கு தேவை. இல்லாவிட்டால் அவனால் வாழ்க்கை மாவட்ட
வெட்டவேண்டும். இன்றைக்கு நான் தென் ஆற்காடு வேலை
முடியாது. 7 லட்சம் தொழிலாளர்கள் மதுரை
செய்தியைப் படித்தேன என்று. அதேபோல் அதில்
இல்லாமல் இருக்கிறார்கள் அறிக்கையை படித்தேன். இருக்கிறார்கள்
மாவட்டத்தில் கலெக்டர் வேலை இல்லாமல்
7 லட்சம் தொழிலாளர்கள்
என்று இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

மேல் தொழிலாளர்கள்
தமிழ்நாட்டிலே ஒரு கோடிக்கு 70, 80 லட்சம் பேர்கள்
இருக்கிறார்கள் என்றால் இன்றைக்கு என்றால் என்ன நிலைமை
வேலையில்லாமல் இருக்கிறார்கள் அரிசி போட்டாலும இன்றைக்கு
என்பதை எண்ணிப் பாருங்கள். அரிசி வேண்டும்,
அவர்கள் கையிலே காசு இல்லை வாங்குவதற்கு. பிரயோசனம் இல்லை.
அரிசி வேண்டும் என்று ஓலமிடுவதுலே மத்திய அரசை
அரிசி அதனால் வந்துவிடாது. உடனடியாக இந்த மாமன்றத்திலேயே
வற்புறுத்த கிளர்ச்சி தேவைப்படுகிறது. தீர்மானத்தைக் கொண்டு
அதை வற்புறுத்துகின்றமுறையியே ஒரு இரண்டு, முழு வரி
வரவேண்டும். ஒன்று கடன் ஒத்தி வைப்பு, இவைகளிலே
வஜா, மூன்று மாட்டு தீவனம் வழங்குதல். தீவிரமான வறட்சி
மக்களுக்கு உதவி செய்யவேண்டும். மத்திய சர்க்காரிடம்
நிவாரணப் பணிகளைத் வக்கவேண்டும்.
வாதிட்டுப் பெறவேண்டும்.

யாவட்டத்திலே பயிர்கள்
இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்திலே,
காய்ந்து கிடக்கின்றன. தென் ஆற்காடு இராமநாத
பயிர்கள் காய்ந்து கிடக்கின்றன. புதுக்கோட்டை, இருக்கிறது.
புரம் ஆகிய மாவட்டங்களிலே வறட்சி கடுமையாக இருக்கிறது.
மதுரை மாவட்டத்திலே வறட்சி கடுமையாக பாதிக்கப்
திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு பகுதி வறட்சியால் அதிக
பட்டிருக்கிறது. கடந்த 25 ஆண்டுகளாக வறட்சியால் இன்று
மாகப் பாதிக்கப்பட்டாக கன்னியாகுமரி மாவட்டத்திலே

சொன்னால் இதற்கு மேல் நான் உங்களுக்கு என்ன சொல்ல வேண்டும்? ஆகவே இதிலே ஒரு தீவிரமான முடிவு எடுக்க வேண்டும், தெளிவான முடிவுக்கு நீங்கள் உடனடியாக வந்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உணவு நிலைமை. இன்றைக்கு சரியான கொள்கை உங்களிடத்திலே இல்லாததால் தள்ளாடிக் கொண்டிருக்கிறீர்கள். நெல் கொள்முதல் செய்கிறபோது வறட்சியை முன்னிட்டு குவிண்டாலுக்கு ஒரு 15 ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்கினால் போதாது. ஒரு குவிண்டால் 150 ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். நீங்கள் உங்கள் கையிருப்பை அதன்மூலமாகப் பெருக்கிக்கொள்ள வேண்டும். அப்படிப் பெருக்காவிட்டால் இன்றைய தினமே பத்திரிக்கைகளிலே பார்க்கிறோம் ஒரு கிலோவிற்கு 50 காசுகள், 60 காசுகள் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று. நம் நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலையின் காரணமாக வர்த்தக மோசடிகள் நடைபெறும் கையிருப்புக் குறைகிறபோது அவைகளிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் விலையை ஏற்றுவார்கள். அப்போது நிலைமை மோசமாகப் போகும். இங்கே குறள் படிப்பதிலே பிரயோசனம் இல்லை. பாரதியின் பாடல்களை, பாரதிதாசன் பாடல்களை படிப்பதிலே பிரயோசனமில்லை. உங்கள் கையிருப்பு போதுமான அளவிற்கு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் விலை ஏறும். அப்படிப்பட்ட நிலைமை பக்தவத்சலத்தின் ஆட்சியில் பார்த்தோம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் பார்த்தோம். அவர்களுக்கு விருப்பம் இல்லாமல் இல்லை, கொள்கை சரியாக இல்லாததால் விலையேறி விட்டது. இந்த நிலையில் இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலே மக்களை பயமுறுத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். உற்பத்தி அதனால் செய்யமுடியவில்லை. இந்த நிலையில் 137 ரூபாய்க்கு குவிண்டால் நெல்லைக் கொடுக்க வேண்டுமென்றால் அந்த விலைக்கு நெல்லைக் கொடுத்துவிட்டுப் போ என்றால் அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே உணவுக் கொள்கையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். 150 ரூபாய் குவிண்டாலுக்குக் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் இந்த சட்ட சபையிலே சென்ற ஆண்டே சொன்னோம். மேற்கு வங்க அரசு அங்கே வண்டிச் சத்தம் என்ற பெயரில் 10, 15 ரூபாய் கொடுத்து வாங்குகிறது. ஆனால் இங்கே நம்முடைய நியமைச்சர் மத்திய சர்க்கார் பயமுறுத்துகிறது என்று சொல்வார்கள். ரிசர்வ் வங்கி பணம் தராது என்றார்கள். நீங்கள் என்ன கெஞ்சினாலும் கூத்தாடினாலும் 27 தடவை போய் கேட்டாலும் நடக்காது. அங்கே அவன் அண்டாகாலி. அவன் உலகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். உலக ஏகாதிபத்தியம் நெருக்கடியை அவன்மேல் திணித்துக் கொண்டிருக்கிறது.



குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் திரு. சோலங்கி சொன்னார். எங்கள் மாநிலத்தில் எலக்ட்ரிக்கல் பார்ட்ஸ் செய்யக்கூடிய தொழிற்சாலை இருக்கிறது. நீங்கள் உங்கள் வங்கியோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் இறக்குமதி செய்வதால் எங்கள் தொழிற்சாலை பாதிக்கப்பட்டு மூடப் பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சரே சத்தம் போடக்கூடிய நிலைமை இருக்கிற தென்றால் நீங்கள் கர்நாடகத்தில் ஆதரித்து என்ன செய்வது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். உணவுக் கொள்கையை உருப்படியாக நீங்கள் மாற்றியாக வேண்டும். கிராமங்களிலே, லாரிகளிலே கொண்டுபோய், சந்தைகளிலே கொண்டுபோய் நவதானியங்களைக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் கம்பன் பாடிய பாடல்களை இங்கே சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே மின்சார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. மின்சார பட்ஜெட் வருகிறபோது விளக்கமாக பேசலாம் என்றாலும் இப்போது அதுபற்றிச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பெரிய தோல்வி இதற்கு முன்னாலே தமிழ் நாட்டிலே ஏற்படவில்லை என்று நம்முடைய அறிக்கையின் பார்க்க முடிகிறது. அப்படியென்றால் என்ன காரணம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய சர்க்கார் அதிக மின்சாரத் திற்கு வைத்த இலக்கு என்ன? 19,966 மெகாவாட் இந்தியாவிலே உற்பத்தியாகும் என்று வைத்தார்கள். இப்போது எங்கே வந்து நிற்கிறார்கள்? கிட்டத்தட்ட அவர்களுடைய மின்சார உற்பத்தியை கணக்கிட்டுப் பார்த்தால் 6,300 மெகாவாட் தான் மூன்று வருடத்திலே வந்திருக்கிறது. அப்படியென்றால் தமிழ் நாட்டிலே எப்படி மின்சாரம் இருக்க முடியும். மத்திய சர்க்காருடைய கொள்கையே சரியில்லை. இன்றைக்கு நமக்கு மின்சாரம் இல்லை. நம்முடைய நிர்வாகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு கோளாறுகள் சேர்ந்து மின்சார நெருக்கடியை உண்டாக்கி இருக்கிறது. இதையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்த மின்சார வாரியத்திலே மூன்று தலைவர்கள் மாறியிருக்கிறார்கள்? முதலில் அம்புரோஸ் இருந்தார், பின்னர் முராரி வந்தார், இப்போது விஜயராகவன் என்பவர். இவர்கள் எல்லாம் ஐ.ஏ.எஸ். ஆபீசர்ஸ். டெக்னிக்கல் ஆபீசர்ஸ் அல்ல. ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் போல ஒவ்வொரு வருடமும் இந்த அதிகாரிகளை மாற்றினால் இந்த போர்டு எப்படி இருக்கும்? இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற மத்திய சர்க்கார் நிறுவனமாக இருந்தாலும் கூட 'பெல்' நிறுவனத்தை உபயோகித்துக் கொண்டு, அவர்களுடைய நிபுணர்கள் உதவியைப் பெற்றுக்கொண்டு இருக்க வேண்டும்.

என்னூர் இன்றையதினம் ஓர்க் பண்ணவில்லை. இன்றைக்கு தூத்துக்குடி ஒரு பிளான்ட் ஓர்க் பண்ணவில்லை. இன்னொரு பிளான்ட் கீழே விழுகிறது. ஆக இருக்கக்கூடிய நிர்வாகக் கோளாறுகள் சேர்ந்து மின்சார நெருக்கடியை அதிகப்படுத்தியிருக்கிறது.

திரு. மு அம்பிகாபதி : அமைச்சர் அவர்களுக்கு டெக்னிக்கல் தெரியும் என்ற காரணத்தினால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக பேட்டுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மின்சார நெருக்கடியை பற்றி துரிதமாக நடவடிக்கை எடுக்கிறபோதே விநியோகத்தில் இருக்கிற தவறுகளை களைவதற்கு முயற்சிக்க வேண்டும். விவசாயி எந்த நேரத்தில் மின்சாரம் கிடைக்கும், கிடைக்காது என்று தத்தளிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. சிறிய தொழில்களை கவனிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது லைசென்ஸ் பெற்றிருக்கக் கூடிய 23 ஆயிரம் தொழில்கள் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நெருக்கடி ஒரு கட்டத்தைத் தாண்டிக்கொண்டிருக்கிறது. பொங்கல் விழா தமிழனுடைய தலை சிறந்த திருவிழா, நாம் எல்லாம் கொண்டாடலாம். அவனால் கொண்டாட முடியுமா? இந்த ஆண்டு கூட்டுறவு சொசைட்டி மூலம் மொத்த கைத்தறித் துணி விற்பனை 6 கோடி ரூபாய் தான் ஆகியிருக்கிறது. சென்ற ஆண்டு இதே பொங்கல் விழா நேரத்திலே 20 கோடி ரூபாய் விற்றிருக்கிறது. ஆகவே தமிழனுடைய நெருக்கடி அதிகமாகி இருக்கிறது என்பதற்கு இதற்கு மேலே என்ன சொல்ல வேண்டும். இதற்கு மேலே நூல் விலையேற்றம் மூன்று மாத காலத்திலே 20-ம் நம்பர் நூல் ஒரு கட்டிற்கு 20 ரூபாய் விலையேறியிருக்கிறது. 100-ம் நம்பர், 60-ம் நம்பர் நூல் கட்டிற்கு 50 ரூபாய் விலை ஏறியிருக்கிறது. மதுரை, கரூர் பகுதிகளில் கைத்தறித் தொழில் ஓடவில்லை. பல்வேறு மாஸ்டர் வீவர்ஸ் தொழில் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அரசு இப்போது என்ன அறிவித்திருக்கிறது என்று பத்திரிகையிலே பார்க்க முடிகிறது. கதர் நூலை கைத்தறிக்கு கொடுப்பதாக சொல்கிறார்கள். மார்க்கெட்டிலே 103 ரூபாய்; நீங்கள் 110 ரூபாய் என்று கொடுத்திருக்கிறீர்கள். இந்த 20-ம் நம்பர் நூல் கைத்தறிக்கு ஒத்து வராது. அது உறுதியாக சீராக நூற்கப்பட்ட நூல் அல்ல. ஆகவே கைத்தறிக்கு உதவி செய்ய முடியாது. ஆகவே கைத்தறியை பாதுகாக்க வேண்டுமானால் அவர்களை கூப்பிட்டு நீங்கள் பேச வேண்டும். அந்த நிலைமையில் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலும் என்று வற்புறுத்துகிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டம், அதிலே நீங்கள் மிகவும் உஷாராக இருக்க வேண்டும். எவ்வளவு குழந்தைகளுக்குப் போடுகிறோம், எவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்கிறோம்



என்று கவனமாகப் பார்க்க வேண்டும். இவை எல்லாம் தர்ம காரியம் என்று தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இதற்கெல்லாம் என்ன காரணம்? இந்த 37 ஆண்டுகாலமாக நாசமாகப் போய் இருக்கிறது. வறுமை வளர்ந்து தட்டை தூக்குகிற அளவிற்கு நம்முடைய திட்டங்கள் போய் இருக்கிறது. நாம் உதவி பண்ணுகிறோம், கைத்தூக்கி விடுகிறோம். தர்ம காரியங்கள் செய்கிறோம். இதில் இரண்டு தவறுகள் செய்வதாக மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது. அதுதான் சோஷலிசம் என்று சொல்கிற அமைச்சர்கள் கூட இருக்கிறார்கள். அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் பிரசங்கத்தை படித்தேன், அதிர்ச்சி அடைந்தேன். உலகத்தின் மகத்தான மேதை மார்க்ஸ் நூற்றாண்டு விழா மார்ச் 13-ம் தேதி தொடங்குகிறது. மறந்து விட வேண்டாம். உலகத்திற்கு சோஷலிசத்தை பறைசாற்றியவன். அவன் என்ன சொன்னான் என்றால் ஒரு தாய் அல்லது ஒரு தகப்பன் தன்னுடைய குழந்தையைச் சுரண்டுவதைக் கூட என்னுடைய சமுதாயம் எதிர்க்கும் என்று கம்யூனிஸ்ட் மானிபெஸ்ட்டிலே உலகத்திற்கு வெளியிட்டான். மறந்து விட வேண்டாம். நீங்கள் சோஷலிசத்தை ஏன் இவ்வளவு கேவலப் படுத்துகிறீர்கள்? சத்துணவு சுரண்டலை ஒழிக்காது; துன்பத்தைத் தீர்க்காது; வறுமையை நீக்காது. இன்னொன்று என்ன செய்கிறீர்கள் என்றால் துன்பப்படுகிற மக்கள் எழுச்சியடைகிற போது, ஒன்று படுகிறபோது அதற்கு குறுக்கே நிற்கிறீர்கள். என்னுடைய அரசாட்சிக்கு கேடு விளைவிக்கிறார்கள், கவிழ்க்க நினைக்கிறார்கள் அதனால் தான் அரசு ஊழியர்களை தாக்குகிறீர்கள், வேலை நிறுத்த தடைச் சட்டத்தைப் போடுகிறீர்கள்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. ரமணி) : அவையின் அனுமதியோடு, அலுவல் நேரம் இரண்டு நிமிடம் நீடிக்கப்படுகிறது. இரண்டு நிமிடங்களுக்குள் அங்கத்தினர் அவர்கள் தன் உரையை முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு என். வரதராஜன் : 5 நிமிடம் கொடுங்கள். இன்று நான் வற்புறுத்த விரும்புவதெல்லாம், சத்துணவுத் திட்டம் என்ற அந்தக் கொள்கையை நாம் அமுல் நடத்துகிறபொழுது இன்று உஷாராய் இருக்க வேண்டும். இத்திட்டத்தினால் கிடைக்கக் கூடிய ஆதரவை மக்களுடைய போராட்டத்திற்கு எதிராகத் திருப்பக் கூடாது.

இன்றைக்கு நம்முடைய கொள்கை என்ன என்று நம்முடைய மாநில சர்க்கார் எழுதியிருக்கிறது. அமைச்சர் சாளிமறுத்து மறுக்க முடியாது. ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்ய ரூ. 148 செலவாகிறது என்று நாம் எழுதியிருக்கிறோம். ஆனால், நம்முடைய முதலமைச்சர் தவறாகப் பேசுகிறார். விவசாயிகளுக்கு விலையை ஏற்றிக்கொடுத்தால், இன்றையதினம்

விளைபொருள்கள் விலை ஏறத்தானே செய்யும். அப்படியானால், இந்த 35 ஆண்டுக்காலத்தில் விவசாயிகளுக்கு விலை ஏற்றிக் கொடுத்ததனால் விலை ஏறியதா? இந்த நாட்டில் பெரும் பணக்காரர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கையில்தான் ரூ. 30,000 பாங்கில் கையிருப்பு இருக்கிறது. அவர்கள் ஏற்றுவார்கள், இறக்குவார்கள், மனித உயிர்களைப் பறிக்கும் எமன் எருமைக் கடாவின் மேல் இல்லை. இவர்கள் இருக்கிறார்கள், இப்பொழுது இந்தியாவிலே இவர்கள்தான் விலையேற்றுகிறார்கள். அதை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, நீங்களே எழுதிவிட்டு இந்தமாதிரி செய்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, நெல்லுக்கு விலை கிடைக்கவில்லை. அவனுக்குச் சாதாரண பருத்திக்கு விலை கிடைக்கவில்லை. பருத்தி விலை இறங்கும்போது, நூல் விலை ஏறுகிறது. பாருங்கள். நம்முடைய நாட்டின் சோஷலிசம், அது. அப்படித்தான் உயரும். ஆகவே, அப்படிப்பட்ட நிலையிலே சத்துணவுத் திட்டத்தினால் பிரச்னை தீர்ந்துவிடுமா? அப்படியானால் ஜனங்கள் வருகிறார்கள், விவசாயிகள் வருகிறார்கள், தொழிலாளி வருகிறார், மாணவர் வருகிறார் நடுத்தர வர்க்கத்தார்கள் வருகிறார்கள். அவர்கள் தலைவிதி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவிதி ஒன்று நீங்கள் ஏகபோக முதலாளித்துவ மத்திய ஆட்சியோடு உறவோடு இருக்க வேண்டும் அல்லது இந்தத் தமிழ் மக்கள், உழைக்கும் மக்கள், நடுத்தர மக்களுடைய நண்பனாக இருக்க வேண்டும். நீங்கள் இரண்டுக்கும் மத்தியிலே ஊசல் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள் இப்பொழுது. இது எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிர்ணயிப்பு. அது கொஞ்சம் தவறாகப் போய், கொஞ்சம் தடியடிப் பிரயோகம் செய்யக்கூடிய அளவுக்கு நீங்கள் போயிருக்கிறீர்கள்.

நான் கடைசியாக வற்புறுத்த விரும்புவது, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, திண்டுக்கல் நகரம், 2, 3 இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய பெரிய நகரம். குடி தண்ணீர் . . . . . .

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுரண்டவே கூடாது. அதுவும் தன்னுடைய குழந்தையாக இருந்தாலும், தகப்பனே கூட சுரண்ட கூடாது என்று சொன்னார். இப்பொழுது எங்களுடைய நேரத்தையெல்லாம் சுரண்டலாமா என்பதைத்தான் தாங்கள் கூறவேண்டும்.

திரு. என். வரதராஜன் : என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்ல வேண்டும். வேறு பாய்ண்டுக்கு நான் பேசவில்லை. திண்டுக்கல் நகரத்தினுடைய குடிநீருக்காக, காமராஜர் நீர்த் தேக்கத்திலிருந்து, சத்தியன் கோட்டை என்கிற அணையிலேயிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும். அங்கு தண்ணீர் பஞ்சம் பூரணமாகத் தீர்ந்துபோயிற்று. 2, 3 இலட்சம் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலைமையிருக்கிறது. வைகைப் பேரணை



யிலேயிருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டும். உடனடி நிவாரணம் வேண்டுமென்று அந்த மக்கள் இன்று அனைத்துக் கட்சி மக்கள் அ.தி.மு.க. உட்பட கேட்டிருக்கிற பரிதாபமான நிலையிருக்கிறது. உடனடி நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். திண்டுக்கல்லில் புகழ்பெற்ற அரண்மனைக்கூடம் என்ற ஒன்று இருக்கிறது. தமிழ்நாட்டில் எது பெருகுகிறதோ இல்லையோ, கொசுக்கள் பெருகுகிறது. 1 இலட்சம் மக்கள் இன்று கொசுத் தொல்லையினாலே அவதிப்படுகிறார்கள். நவீன வசதிகளோடு இந்தக் கொசு ஒழிப்புப் போராட்டம் நடத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. ரமணி) : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 28–1–1983 காலை 9-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

111 தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரிய விதிகள்—பொதுவிதிகள் பகுதி-2ல் திருத்தமொன்று செய்வது குறித்து 19.8.1982 ஆம் தேதியிடப் பெற்ற வீட்டுவசதி-நகர்ப் புற வளர்ச்சித்துறையின் 831 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

112. தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு குடிசைமாற்று வாரிய சார்நிலைப் பணியாளர் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 13.7.1982 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 584ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

113 தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) விதியில் திருத்தமொன்று செய்வது குறித்து 22.7.1982 ஆம் தேதியிடப் பெற்ற கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் 1613 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) 54(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

114. அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழுவின் உறுப்பினர்களாக அரசு அதிகாரிகளை நியமிப்பது குறித்து 23.6.1982 ஆம் தேதியிடப்பெற்ற கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையின் 1321 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978 43 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

115. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சி பொதுப்பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 19.11.1981 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக-வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1909 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V 1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

116. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணிகள் விதிகளிலும், தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிப் பணி விதிகளிலும் சில திருத்தங்கள் செய்வது குறித்து 29.12.1981 ஆம் தேதியிடப் பெற்ற ஊரக-வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 2146 ஆம் எண் அரசாணையில் வெளியான் அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V, 1920) 304 (2) பிரிவின்கீழ், மற்றும் 1971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1981) 432 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

117. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி விதிகளில் திருத்தமொன்று செய்வதுகுறித்து 6.11.1982 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 1811 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

118. தமிழ்நாடு மரத்தடிகள் போக்குவரத்து விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 20.11.1981 ஆம் தேதியிடப் பெற்ற வன மீன் துறையின் 1361 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882 64-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).



அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V, 1920) 304(2) விதியின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

120. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

121. 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31-3-1981 ஆம் தேதிவரையிலான ஐந்தொகைக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) 1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54 1948) 69(5) (அ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

122. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்) (ஆங்கிலம்) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை,

இணைப்பு-1

74-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 20க்கான விடையைக் காண்க)

(அ) ஆம்;

(ஆ) உதவி இயக்குநர்கள் பதவியில் உள்ளவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுகிறார்கள். இப்பதவிகளுக்கு எந்த ஒரு சிறப்புக் கல்வித் தகுதிகளும் நிர்ணயிக்கவில்லை. இவர்கள் தனிப்பட்ட விஷயங்கள் எதிலும் ஸ்பெஷலிஸ்ட் ஆக தேர்ச்சி பெற தேவையில்லை. இவர்கள் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களின் மண்டல இணை இயக்குநர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக பணிபுரிகிறார்கள்.

(இ) கால்நடை பராமரிப்புத் துறையில் உதவி இயக்குநர்கள் ஆளுகையின்கீழ் அவ்வப்போது எழுகின்ற தனிப்பட்ட முக்கிய பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்களால் தீர்வு காண முடியாத நிலை ஏற்படும்போது மேற்படி பிரச்சினைகளில் தீர்வு காணும் பொருட்டு மண்டல இணை இயக்குநர் தங்களது அலுவலகத்தில் பணியாற்றும் வல்லுநர்களை (Specialists) அனுப்ப வேண்டும். மேலும் மேற்படி வல்லுநர்கள் மண்டல அலுவலகங்களில் மண்டல இணை இயக்குநர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக பணிபுரிவதோடு மண்டல இணை இயக்குநர்கள் வெளியூர் (முகாம்) சென்றுள்ள காலங்களில் அலுவலகத்தின் [illegible] பணிகளையும் கவனித்து

(ஈ) நோய் ஆய்வுப் பிரிவு கால்நடைப் பராமரித் துறையில் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன.
(1) வேலூர், (2) கடலூர், (3) திருச்சிராப்பள்ளி, (4) சிவகெங்கை, (5) மதுரை, (6) கோயமுத்தூர் (7) உதகமண்டலம், (8) திருநெல்வேலி.

மேலும் நோய் ஆய்வுப் பிரிவில் உள்ள உதவி இயக்குநர்கள் பயணம் செல்லும் அலுவலர்கள் ஆவார்கள். அவர்கள் தங்களுக்கென ஒதுக்கியுள்ள நோய் ஆய்வுப் பிரிவில் மட்டும் சிறப்பாக செயல்பட்டு ஆய்வுக்கூடங்களி பரிசோதனையின் மூலம் கால்நடைகளுக்கு வரும் நோய்களின் தன்மையை கண்டறிந்து அவற்றை ஒழிக்க தேவையான நடவடிக்கைகளில் மட்டும் முனைப்புடன் பணியாற்றி வருகின்றனர். அதனால் மேற்படி அலுவலர்களை வேறு எந்த பணிக்கும் பயன்படுத்துவது உகந்ததல்ல.

மேலும் வல்லுநர்களின் பணி, (நாய் ஆய்வுப் பிரிவு உதவி இயக்குநர்களின் பணிக்கு முற்றிலும் மாறுபட்டது ஆகும்.

அதனால் ஸ்பெஷலிஸ்ட் பதவிகள் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் சிறந்த முறையில் பணியாற்ற அவசியமாகும்.

## இணைப்பு.-II

(..82ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

Address by Thiru Sunder Lal Khurana at the Joint Session of the Tamil Nadu Legislature on 24th January 1983.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, இம்மாநிலத்தின் கவர்னராக நான் பொறுப்பேற்ற பின்னர், உங்கள் அனைவரையும் கூட்டு சபையில் (கரவொலி) சந்திப்பதற்கு இதுதான் எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு. முதற்கண் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தும், பொங்கல் வாழ்த்தும் அளிக்க விழைகிறேன். (கரவொலி)

May I have the permission of the hon. Members to switch over the English text of my speech

The year 1982 has witnessed the successful implementation of various schemes in the State, in different spheres of activity. The most striking achievement has been the implementation of the Chief



subsequently extended to the urban areas from 15th September 1982. At present, around 23 lakh children in the age group two plus to four plus in 27,800 pre-school centres and 42 lakh children in the age bracket five plus to nine plus in over 33,700 school centres, are daily fed a nutritious and wholesome meal. The feeding is conducted on all the days of the year excepting on certain important Government holidays when the centres remain closed. But on the eve of these holidays the children are given pre-cooked carry home food packets, to ensure that they get the nutritious food on all the days throughout the year. This programme has created additional employment opportunities for over 1,40,000 persons largely in the rural areas, most of whom are women. A large number of widows, destitutes and those belonging to the Backward Classes, Adi-Dravidar communities and Scheduled Tribes have benefited from the fresh employment opportunities generated under this scheme.

3. In order to relieve the Headmasters and the teachers from the responsibility of the feeding programme in schools and to enable them to concentrate exclusively on academic activities, it has been decided to appoint organisers in the various school feeding centres. Apart from giving complete relief to the Headmasters and the teachers this move will give employment to about 35,000 persons. The CMNMP has conferred immense benefit on the poorer sections of the society. Thanks to this scheme, now, after decades of independence, the poor young children are in a position to enjoy one square meal once a day, unknown to many of them before. The parents are now able to engage themselves in full time work without having to worry about feeding or taking care of their young children during working hours. As mentioned earlier, employment opportunities have been provided to many people, mainly in their own places of living, which normally would not have been possible in any other scheme and that too in such large numbers. The State will also gain by having a new generation of well fed and well-taught healthy children. The additional enrolment of 2.63 lakh students in the schools during this year has been mainly due to the impact of this scheme.

4. This Programme has drawn appreciation from all sections of the enlightened public and the press. Generous donations from various people are also pouring in and as on date, over Rs. 2 crores have been received as contribution towards the Chief Minister's Nutritious Meal Fund. This welfare programme has also been extended to the old age pensioners in the State from 15th January 1983.

s likely to cost about Rs. 112 crores during the current financial year. The Government is convinced, that this amount is well spent for a very noble cause. In view of the magnitude of the programme, a constant vigil is being maintained and the programme is being regularly monitored by a high power committee headed by the Chief Minister himself.

6. Yet another landmark in 1982 was the culmination of Mahakavi Subramania Bharathiar Centenary celebrations. The Centenary year from December 1981 to December 1982 was declared by the Government as the National Integration Year. It is heartening to note that many other States of the country have also organised functions to celebrate this centenary. Cultural troupes have also been sent to various countries as part of these celebrations.

7. Again, during 1982, the State Government won laurels in the field of education. The efforts of the State Government in eradicating illiteracy and the excellent work done in the field of adult education got international recognition when UNESCO selected Tamil Nadu for the prestigious Krupskaya Literacy Award for 1982.

8. While every effort has been made to increase the employment opportunities in the State during the last few years, the Government feels that a new thrust is necessary to give further impetus to create fresh job openings. It has now been decided to start a massive scheme to provide one job for each family. A beginning will be made in this direction, during the next financial year, with a budget provision of Rs. 15 crores.

9. The Self-Sufficience Scheme which was launched in the rural areas during 1980-81 for creating infrastructural facilities in the villages for the speedy socio-economic development, will be phased out during 1982-83. While 69 blocks were covered in the first year, 150 block came under this programme during 1981-82 and 159 blocks during 1982-83. Hence all the 378 blocks in the State have been fully covered. As a next step, the Self-Sufficiency Scheme was extended to town panchayats with minor modifications and during the current year, 146 town panchayats were taken up with a provision of Rs. 5 crores. During the next financial year, this will be increased to Rs. 10 crores.

10. A massive scheme of the construction of public conveniences in every revenue village, primarily for women, was formulated during the current year at a total cost of Rs. 22.76 crores. It is expected that these constructions would be completed by the end of the next financial year.





11. While various welfare measures for the economic uplift of the weaker sections of the society have been undertaken by the Govern-
ment, the consecutive failure of monsoons has created serious
problems in this State. The Hon'ble Members are fully aware that
both the south west monsoon and the north East monsoon have
failed during 1982. Water has become scarce not only for generation
of electricity and for irrigation but even for drinking purposes. As
soon as the failure of the south-west monsoon was evident the
Government started works for providing water to the public. The
Tamil Nadu Water-Supply and Drainage Board has installed over
7,500 bore wells fitted with hand pumps, costing over Rs. 17.50
crores, in rural and municipal areas, from August 1982 till the begin-
ning of this month. In addition, in the metropolitan city of Madras
tube wells, deep bore wells, etc., have been sunk for increasing the
water supply to the city. Further the Collectors have been authorised
to deepen the public drinking wells and to form ring wells and mini-wells
in the coastal districts. An amount of Rs. 1.50 crores has also been
sanctioned for the construction of separate feeder power lines for the
water supply works in the municipalities. The Government recently
sanctioned yet another sum of Rs. 1,50 crores for grant of loans to
small and marginal farmers for sinking one thousand filter point tube
wells to save the standing crops in Thanjavur district. A comprehen-
sive drought relief programme costing Rs. 190 crores has been worked
out and the Government of India have also been informed about this.
Considering the seriousness of the drought situation prevailing in the
State which is one of the worst in recent memory, it is hoped that the
Central Government will render assistance on a generous scale to
tackle this natural calamity. This situation is undoubtedly
serious; but everything possible is being done by the State
Government to alleviate the sufferings of the people.

12. With regard to the sharing of Cauvery water between
the Tamil Nadu and Karnataka, this Government has always
held and continues to hold the view that the 1924 agreement
is valid under law and is also enforceable till a new agree-
ment is reached. In a situation wherein, the Cauvery delta is
experiencing drought condition due to scarcity of water, the
Karnataka Government is attempting to block and deny Tamil
Nadu its legitimate share of Cauvery waters. It is the
view of this government that the Centre, apart from
mediating in this dispute, should find solution to this
problem at the earliest. Further this point was also
stressed by the Chief Minister during the conference of the
State Ministers of Irrigation held in Madras on 5th December
1982 which the Union Minister for Irrigation had agreed to
take early steps in this direction.

With a view to mitigating partially, the hardships faced by the people, the government is also considering the question of buildnig dame across the tributaries of Cauvary lying within the limits of Tamil nadu with a view to utilising the available water for their benefit.

13. The power sitution in the State has Suffered a serious set back due to the successive failure of monsoons, lower releases of water from Karnataka, non-availabity of power from Kerala, etc. Conqequently the government had no alternative excepting to impose power cut on all categories of consumers, the as being thigh as, 75 per cent on demand and 60 per cent on energy, on HT industries. Till the onset of the next monsoon, the power position is boundto be difficult. However, the government is doing its utmost to ensure maximum generation of power at the thermal stations But this continuing power cut which the State is experiencing for many years now can be solved only by setting up fresh thermal units in various parts of Tamil Nadu.

In order to achieve this objective, the State government has drawn up several schemes to step up power generation, which the Central Government is also emphasising. For the successful implementation of this programme and for ensuring the efficient operation of the existing units, the co-operation and assistence of the Government of India and its agencies, are of considerable importance. For instance, it is now noticed that the supply of coal to the thermal stations falls short of the linkage allowed by the government of India to fulfil the needs of stations. The quality of coal supplied is also not good. In view of these reasons, the State thermal units have been forced to switch over, party, to the costly process of generation of electricity though fuel oil. The proposal of the State Government for, a one time, import of coal to serve as buffer stock has not yet been accepted. It is earnestly hoped that the Government of India would take an early decision to help the State Government in this regard.

14. In this connection it must also be remembered that establishing a thermal station is a very expensive proposition. The cost of producting thermalpower, as is well known, is much more than the cost producing hydel power, The State hasexhausted almost all the available hydel sources and the options now left for the State are to go in either for thermal or for atomic power projects. It is hoped that the Government of India would start atomic power projects in Tamil Nadu to help the State out of its difficulties. As for the thermal stations, the State Govern-



ment would have to make heavy investments. The financial resources of the State need to be strengthened before venturing on these projects. At present, the total electricity charges collected from the consumers, do not meet even the cost of production. While presenting the Budget for the current financial year, the Finance Minister had indicated that the Electricity Board would require Rs. 271 crores to meet its commitments. Hence the Government has no choice but to take recourse to the difficult option of increasing the power tariff, to make good, part of the spiralling annual deficit of the State Electricity Board, running to crores of rupees. The Union Planning Commission has also been urging the State Government to go in for an upward revision of electricity rates. The Government has necessarily to accept this advice, as it is inevitable.

15. At the moment, the State is passing through a critical food situation. Honourable Members are aware that the successive failure of monsoons, in the last two years, has resulted in a steep fall in foodgrain production. It has been estimated, for example, that the area under Kuruvai cultivation in 1982 fell by about 20 per cent. The position relating to Samba crop is not very encouraging either. Hence, over a period of time, rice production in the State has been showing a distinct downward trend. The problem on the food front has been accentuated by the higher off-take through the public distribution system. During April 1982, the off-take was of the order of 36,000 tonnes, it has now shot up to 86, 000 tonnes. This higher indent on the public distribution system by the consumers is likely to continue in the future months as well. The combination of low production and the high off-take has caused the depletion of rice stocks on hand. At the moment, it is just about 1 lakh tonnes of rice and 2 lakh tonnes of paddy and these stocks are not likely to last long. In spite of the continuous and persistent efforts taken by the State Government and the Tamil Nadu Civil Supplies Corporation with Government of India, at the official and ministerial levels, there has been no allocation of rice whatsoever, to the State, from June 1982 onwards. It is hoped that the Government of India would come forward at this stage to lend a helping hand to the State Government, in its hour of need, without any further delay and immediately allocate foodgrains in sizable quantities. At the same time, I would also like to assure the Honourable Members that the State Government is doing its level best to keep the food situation under control.

16. In spite of the difficult conditions confronting the Government like failure of monsoons, non-availabiltity of raw materials like coal, cement, etc., developmental works have been going on at a rapid pace. While the approved Plan Outlay for the current year is Rs. 711 crores, the plan performance is likely to exceed this figure. Recently, after discussions with the Union Planing Commission, the Plan Outlay for 1983-84 has been finalished at Rs. 845 crores registering a 18. 87 per cent increase over the approved outlay for the current year. The State has the distinction of performing far in excess of the approved plan outlay during the last few years. This happy trend is likely to continue in the coming years also.

17. This Government fully supports the new 20 point Economic Programme of the Prime Minister of India. The progress of the programme is being closely monitored by the Chief Minister himself and a regular review is undertaken, to see that tempo of development does not slacken.

18. I would now like to refer to certain important spheres of economic activity in the State. Agriculture, which provides occupation for the majority of the State's population continues to receive special attention from the Government. The Training and visit system, a World Bank aided scheme which aims at improvement of the extension system in Agriculture, has now been extended to the entire State from July, 1982. As a logical follow up of the extension work, the State has providing marketing facilities to the agriculturists through construction of rural godowns within regulated markets. This will go a long way in enabling the farmers to bring their produce and store them properly till they get an attractive price.

19. The State has embarked on a Rs. 44 crores "Operation Flood-II Programme" aided by the Indian Dairy Corporation and technically assisted by the National Dairy Development Board. The districts of Chengalpattu, North Arcot, South Arcot, Dharmapuri, Salem, Periyar, Coimbatore, The Nilgiris and Madurai which are covered under this Programme will have 5,000 Milk Producers, Co-operative Societies by the 1984-85. Under the Hill Area Development Programme, and Drought prone areas programme, seed two dairies are being set up at Uthagamandalam and Krishnagiri. To increase the supply of quality seeds, 2 new Farmas have been sanctioned at cost of Rs. 80 lakhs. The Government have also order establishment of three more seed processing units during the current financil year. On farm development works being extended to the areas in the Lower Bhavani ...



Command, the Cauvery Command and the Periyar-Vaigai Command. Horticulture is also being developed and new farms at Coimbatore and Tiruchirappalli are being started. With this, there will be one Horticulture Farm in each of the districts of Tamil Nadu.

20. The Government is committed to the implementalation of progressive land reform measures to help the agriculturists. In order to speed up the implementation of the land ceiling legislation, the Government has decided to constitute a Special Appellate Tribunal under Article 323 (*b*) of the Constitution of India. This Tribunal is vested with appellate powers against the proceedings of Land Tribuual, Land Commissioners and Land Board. Necessary legislation in this regard, will be undertakan shortly.

21. The updating registry scheme which has been found be very helpful to the ryots, has been extended to the entire State excepting to the recently re-surveyed areas and the areas covered under the intensive sub division scheme. For this, the Goverement have sanctioned 80 new units besides strengthering the existing 28 units, involving an expenditure of Rs. 5. 17 crores.

22. The forestation and reckless cutting down of trees have caused ecological imbalance and undesirable consequences. The Government is very keen to undertake planting of trees as extensively as possible. In spite of poor south west and north east monsoons, 8.2 crores of seedlings have already been planted. Every possible effort being taken to achieve the target of 11 crore seed lings.

23. Various schemes for the development of fisheries are already under execution. To provide the infrastructural facilities, the State Government had forwarded a proposal for the establishment of a landing jetty at Pazhayar in Thanjavur district involving an outlay of over Rs. 67 lakhs. This has been cleared by the Government of India and the work is expected to start soon.

24. A well laid out network of roads is very important for the economic development of a sizable amount of money on the development of roads. During the current finacial year, 500 K.M. of rural roads will be improved at a cost of link roads have been constructed and improved at a cost of over Rs. 43 crores under the Self Sufficiency Programme. Taking into account the economic importance of the inter-State road system, the Government of India have approved a scheme, costing Rs. 300 lakhs for improving certain stretches of the East Coast Road, 50% of the cost being financed by them, through a loan to the State Government, the balance amount being met by the State itself.

25. Development of the industrial sector is very vital for the economic growth of the State. Central investment in this State has been coming down over the year. The State Government was hopeful that the colour film unit of the Hindustan Photo Films would be located in Uthagamandalam, but we now understand that it is likely to be established in another State. South India produces more than 50 per cent of the films in the Country and location of the unit here, according to expert opinion, would have the great advantages of a ready contiguous market and supportive infrastructure. In view of these facts, the State would urge the Central to locate this unit and some other units with adequate investment in this State.

On its side, the State is doing its best to step up the pace of industrialisation. Approval has been given to set up 5 more industrial complexes the industries to be set up in these locations will be eligible for construction that have been given to units set up in backward areas. They will also be free from power cut for an initial period of 5 years. The response of entrepreneurs to this programme has been very encouraging and it is expected that these industrial complexes would be established soon.

26. Based on the recommendations of the State Government of India have issued a letter of intent to TIDCO for setting up a unit to produce Linear Alkyl Benzene, with a capacity of 50,000 tonnes, costing around Rs. 50 crores. Work on the setting up of co-op rative spinning mills at Ettayapuram, Dharmapuri, Pudukkotti and Theni is going on according to schedule. One more spinning mill for the benefit of providing employment to Adi-Dravidars, has been set up at Kamuthi in Ramanathapuram district. The Electronics Corporation of Tamil Nadu, a Public Sector Corporation has obtained a letter of intent for manufacture of Aluminium Electroly it Capacitors. The cost of the project is expected to be about Rs. 179 lakhs.The trial production is continuing and commercial Production is likely to start by March-April of this year. The Government has also obtained letters of intent for setting up two sugar mills in the State.

27. As a part of the multi-faceted strategy for the uplift of the Adi-Dravidars, the Government is implementing the Special Component Plan. Since 1980-81, the Government is following the objective of, helping 50 per cent of the Adi Dravidar families to cross the poverty line during the Sixth Five Year Plan period and for providing basic amenities and facilies in the Adi Dravidar colonies. This is ensured by mobilising the resources and efforts of all the agencies of the Government. The size of the Special Component Plan during the next financial year is Rs. 104.84 crores and during the next financial year it is expected to touch a figure of Rs. 1[illegible]



crores. To diversify the occupational pattern of the Adi Dravidars small industries, group projects and Family Oriented Economic Development Programmes, etc., are encouraged by extending liberal financial assistance. This is done mainly through special Central assistance released by the Government of India. During the current year, this assistance is expected to be Rs. 10.20 crores while during the next financial year, it is likely to be Rs.11.20 crores.

28. A survey was conducted to find out the infrastructural requirements of the Adi-Dravidar colonies so that the minimum needs of these colonies can be met by the end of the Sixth Plan period. Futher, financial assistance is also being extended to them for the construction of house in the sites assigned to them.

29. Likewise, the uplift of Tribals has also been taken up on a priority basis. The Tribal Sub-Plan will be implemented with the objective of helping 4,200 Scheduled Tribe families, to cross the poverty line during 1983—84 and also to improve the tribal areas. A sum of Rs. 6.50 crores is expected to be spent during 1983—84 under the Tribal Sub-Plan. All tribal habitations will be provided with drinking water facilities within two years. Many schemes for the benefit of the Backward Classes, continue to be implemented by the Government. The Tamil Nadu Backward Class Economic Development Corporation Limited has now been established for the economic develpment of the Backward Classes. The Government have also constituted a Backward Classes Commission to review the existing list of Backward Classes, reservations, etc.

30. There are about 2, 700 wakfs which are financially weak. The State Government, over a period of time has given financial assistance to about 650 wakfs for repair and renovation of their properties. With a view to helping the remaining wakfs, the Government has decided to undertake a crash programme through a financial grant of Rs. 1 crore in a period of two years.

31. Tourism Devlopment has always received special treatment at the hands of the Government. The Government has drawn up Master Plans for providing infrastructural facilities in identified major tourist centres like Mamallapuram, Kanniyakumari, Rameswaram and Uthagamandalam. The total outlay required for these Master Plans is likely to be about Rs. 80 crores. The Government of India has been approached for financial assistance for the implementation of these Plans. Pending assistacne from the Government of India the State Governments trying to accommodate as many schemes from the Master Plans as possible, in the Budget of the various department falling within their purview for

3. பள்ளிகளில் உணவளிக்கும் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பொறுப்பினின்றும் தலைமை ஆசிரியர்களையும், ஏனைய ஆசிரியர்களையும் விடுவிப்பதற்காகவும் அவர்களைக் கல்வி கற்பிக்கும் பணியிலேயே ஆழ்ந்து ஈடுபடச் செய்யும் பொருட்டும், உணவு அளிக்கும் பள்ளி நிலையங்கள் பலவற்றிலும் அமைப்பாளர்களை அரசு நியமிக்க முடிவு செய்துள்ளது. தலைமை ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் புதிய பொறுப்பு முழுவதும் நீங்குவதுடன், இதனால் 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். சமுதாயத்தின் வறிய நிலையிலுள்ள ஏழை மக்களுக்கு இத் திட்டம் பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது. நாடு விடுதலை அடைந்து பல பத்தாண்டுகள் ஆன பின்னர் இப்போதுதான், இத் திட்டத்தின் காரணமாக, ஏழை இளஞ் சிறார்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளையாகிலும் நல்ல சத்துள்ள உணவை உட்கொள்ள முடிகிறது. இந்த ஒரு வேளை உணவுகூட அவர்களுக்கு இதற்குமுன் வயிறாரக் கிடைத்ததில்லை. அவர்களுடைய பெற்றோர்கள் பணி புரியும் நேரங்களில் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டுமே, அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையின்றி, தங்கள் பணிகளில் முழு மூச்சுடன் இத் திட்டத்தினால் ஈடுபட முடிகிறது. ஏற்கெனவே சொல்லியுள்ளதுபோல், ஏராளமான மக்களுக்கு அவர்கள் வாழும் இடங்களிலேயே இத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. வேறெந்தத் திட்டத்தின் மூலமாகவும் சாதாரணமாக இவ்வாறு செய்திருக்க முடியாது; அதுவும் இவ்வளவு பேர்களுக்குச் செய்திருக்க முடியாது. சத்துள்ள உணவு உட்கொண்ட, சிறந்த முறையில் கல்வி கற்பிக்கப்பட்டுள்ள, உடல் நலமுள்ள குழந்தைகளைக் கொண்ட புதிய தலைமுறை கிடைப்பதால் இம்மாநிலமும் இத் திட்டத்தினால் பயனடையும். இந்த ஆண்டில், முக்கியமாக இத் திட்டத்தின் காரணமாக, 2·63 இலட்சம் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4. மக்களில் விவரம் தெரிந்த, அறிவார்ந்த எல்லாப் பிரிவினரும் பத்திரிகையாளர்களும் இத் திட்டத்தை உளமாரப் பாராட்டியுள்ளனர். இத் திட்டத்திற்கென பல்வேறு மக்களிடமிருந்தும் தாராளமாக நன்கொடை கிடைத்துள்ளது. இந்நாள் நிலவரப்படி, முதலமைச்சர் சத்துணவுத் திட்ட நிதிக்கு மக்களின் நன்கொடையாக ரூ 2 கோடிக்கு மேல் கிடைத்துள்ளது. இந்த மக்கள் நலத்திட்டம், இம் மாநிலத்தில் முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களுக்கும் 15–1–1983 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.



காரணமாக, இந்த நிதி ஆண்டில் ஏறக்குறைய ரூ. 112 கோடி செலவாகக் கூடும். இத்தொகை மிக உன்னதமான பணிக்கு நல்லமுறையில் செலவிடப்படுகிறதென, இவ்வரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மாபெரும் தன்மை காரணமாக, இத்திட்டம் செயல்படுத்தப்படுவது தொடர்ந்து உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. மேலும், முதலமைச்சர் தலைமையிலான உயர் அதிகாரக் குழுவால் இத் திட்டத்தின் செயல்பாடு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

6. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் 1982 ஆம் ஆண்டில் நிறைவெய்தியது மற்றொரு சிறப்பு நிகழ்ச்சியாகும். 1981 டிசம்பர் முதல் 1982 டிசம்பர் வரையுள்ள நூற்றாண்டு விழா ஆண்டு இந்த அரசால் தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டது. இந் நாட்டிலுள்ள வேறு பல மாநிலங்களும், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நிகழ்ச்சிகள் பல்வற்றை நடத்தியுள்ளதும் மனநிறைவளிப்பதாக உள்ளது. இக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, பல்வேறு நாடுகளுக்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

7. கல்வித் துறையில் 1982 ஆம் ஆண்டில் இம் மாநில அரசு பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. எழுத்தறிவின்மையைப் போக்குவதில் இம் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளும் முதியோர் கல்வித் துறையில் ஆற்றிய சிறந்த பணியும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளன. ஒப்புயர்வற்ற க்ரப்ஸ்காயா கல்விப் பரிசினை அளிக்க யுனெஸ்கோ 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைத் தெரிந்தெடுத்துள்ளது.

8. இம் மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாக வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கையில், புதிதாக வேலைவாய்ப்பு ஏற்படுத்த மேலும் ஊக்கமளிக்கும் வகையில் புதிய உத்வேகம் அளிப்பது அவசியமென்று இவ்வரசு கருதுகிறது. குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்க மாபெரும் திட்டமொன்றைத் தொடங்குவதெனத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 15 கோடி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுடன் இப் பணி தொடங்கப்படும்.

9. கிராமங்களில் சமூக, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, கிராமங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காக 1980–81 ல் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம், 1982–83-ல் நிறைவெய்தும். முதலாம் ஆண்டில் 69 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. 1981–82-ல் மேலும் 150 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் வந்தன. 1982-83 ல் மேலும்

159 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் வருகின்றன.
ஆகவே, இம் மாநிலத்தில் உள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள்
அனைத்தும் இத் திட்டத்தின்கீழ் வந்துள்ளன.
நடவடிக்கையாக. தன்னிறைவுத் திட்டம் ஒரு சில மற்றும் அடுத்த
களுடன் பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டு,
146 பேரூராட்சிகளில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கத்துடன் நடப்பாண்டில்
திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இத்
இத் தொகை ரூ. 10 கோடியாக உயர்த்தப்படும்.

10. ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் பொதுக் கழிப்
பிடங்களைக் குறிப்பாகப் பெண்களுக்குக் கட்டித் தருவதற்காக
மொத்தம் ரூ. 22.56 கோடி செலவாகும் பெருந்திட்டம் ஒன்றும்
நடப்பாண்டில் வகுக்கப்பட்டுள்ளது. பொதுக் கழிப்பிடங்கள்
அடுத்த நிதி ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.

11. சமுதாயத்தில் நலிவுற்ற பாமர மக்களின் பொருளாதார
மேம்பாட்டுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அரசு மேற்
கொண்டிருந்த போதிலும், இம் மாநிலத்தில்
தொடர்ந்து பெய்யத் தவறியது கடுமையான பருவமழை
உருவாக்கியுள்ளது. 1982 ல் தென்மேற்குப் பிரச்சினைகளை
வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டதை பருவமழையும்
உறுப்பினர்கள் நன்கு அறிவர். மின் உற்பத்திக்கும் மதிப்பிற்குரிய
திற்கும் மட்டுமல்லாமல், குடி நீருக்கும் தண்ணீர் பாசனத்
ஏற்பட்டுள்ளது. தென்மேற்குப் பருவமழை தட்டுப்பாடு
வுடனே, பொது மக்களுக்குக் குடிநீர் பொய்த்துவிட்ட
அரசு தொடங்கிவிட்டது கிராமப் பகுதிகளிலும் வழங்கும் பணிகளை
பகுதிகளிலும் 1982 ஆகஸ்டு தொடங்கி 1983 ஜனவரி நகராட்சிப்
ரூ. 17.50 கோடி செலவில் தமிழ்நாடு, வரையில்
வாரியம் 7,500 துளைக் கிணறுகள் இறக்கி, குடிநீர்—வடிகால்
பொருத்தியுள்ளது. சென்னை மாநகருக்குக் கைப் பம்புகள்
அளவைப் பெருக்க, குழாய்க் கிணறுகளும் குடிநீர் வழங்கும்
களும் இந்நகரில் இறக்கப்பட்டுள்ளன. ஆழ்துளைக் கிணறு
கிணறுகளை ஆழப்படுத்தவும், கடற்கரை மேலும், பொதுநீர்க்
கிணறுகளையும், சிறு கிணறுகளையும் அமைக்கவும் மாவட்டங்களில் உறை
ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட
குடிநீர் வழங்கும் நிலையங்களுக்கான இணை நகராட்சிகளில்
போடும் பணிக்கும் ரூ. 1·50 கோடி மின்சாரக் கம்பிகள்
பட்டுள்ளது. தஞ்சாவூர் செலவுக்கு அனுமதி வழங்கப்
டிருக்கும் பயிர்களைக் மாவட்டத்தில் விளைந்து கொண்
வடிமுனைக் குழாய்க் காப்பாற்றுவதற்காக ஓராயிரம்
உழவர்களுக்கும் சொற்ப கிணறுகளை இறக்குவதற்கென்று சிறு
கடன் வழங்கவும் அரசு நில உழவர்களுக்கும் ரூ. 1.50 கோடி
வறட்சித் துயர் தணிப்பிற்கு அண்மையில் அனுமதி அளித்துள்ளது.
திட்டமொன்று தயாரிக்கப்பட்டு ரூ. 190 கோடி செலவாகும் விரிவான
அதுபற்றி இந்திய அரசுக்கு



தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் தற்போது நிலவுகிற
வறட்சி நிலைமை நமக்கு நினைவு தெரிந்தவரை மிக மோசமான
நிலைமையாகும். இதன் கடுமையை மத்திய அரசு கருதிப்
பார்த்து, இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட இந்த வறட்சி
நிலைமையைப் போக்குவதற்குத் தாராள மனப்பான்மையுடன்
நிதி உதவி நல்குமென்று நம்புகிறோம். வறட்சி நிலைமை
சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் கடுமையாகவே உள்ளது.
ஆனால், மக்கள் படும் துன்பத்தைக் குறைப்பதற்கான அனைத்து
முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

12. தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே காவிரி
நீரைப் பகிர்ந்து கொள்வதைப் பொறுத்தவரை, 1924 ஆம்
ஆண்டு ஒப்பந்தம் சட்டப்படிச் செல்லத்தக்கது என்றும்,
புதியதோர் ஒப்பந்தம் ஏற்படும்வரை தொடர்ந்து செயல்படுத்தக்
கூடியது என்றும் இவ்வரசு எப்போதும் கூறி வந்துள்ளது;
இப்போதும் அவ்வாறே கூறி வருகிறது. காவிரி பாசனப்
பகுதியில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக வறட்சி நிலைமை
இருந்து வருகிறது. நிலைமை இவ்வாறிருக்க, காவிரி நீரில்
தமிழ்நாட்டிற்குச் சட்டப்படி உரிமையான பங்கினைக் கர்நாடக
அரசு தடுக்கவும் மறுக்கவும் முயன்று வருகிறது. இத் தகராறில்
மத்திய அரசு சமரசம் செய்வதுடன், பிரச்சினைக்கு விரைவில்
தீர்வு காணவும் வேண்டும். மேலும் சென்னையில்,
15-12-1982 ல் நடைபெற்ற மாநிலப் பாசன அமைச்சர்கள்
மாநாட்டில் நமது முதலமைச்சர் இதனை வலியுறுத்தினார்,
அப்போது இது குறித்து விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்
வதாக மத்தியப் பாசன அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை ஓரளவேனும் குறைக்க,
அவர்களின் நலன் கருதி, கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்தும்
பொருட்டு, தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஓடும் காவிரி கிளை
நதிகளின் குறுக்கே அணைகள் கட்டுவதுபற்றி இவ்வரசு
யோசித்து வருகிறது.

13. தமிழ்நாட்டில் தொடர்ந்து பருவமழை பொய்த்த
தாலும் கர்நாடகாவிலிருந்து காவிரி மூலம் மிகக் குறைந்த நீர்
வரவு காரணமாகவும், கேரளாவிலிருந்து மின்சாரம் நமக்கு
போதிய அளவு கிடைக்காததாலும், இம் மாநிலத்தில்
மின்சார நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்
விளைவாக எல்லாவகைப் பயனீட்டாளருக்கும் மின் வெட்டு
விதிப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழியேதும் இல்லை.
இந்த மின் வெட்டு உயரழுத்த மின்சாரம் பயன்படுத்தும்
தொழிற்சாலைகளுக்குத் தேவையில் 75 சதவீதமாகவும் மின்
அழுத்தத்தில் 60 சதவீதமாகவும் உள்ளது. அடுத்த பருவமழை
பொழியத் தொடங்கும் வரையில் மின் உற்பத்தி நிலைமை

மிகவும் இக்கட்டாகவே இருக்கும். ஆயினும், அனல் மின் நிலையங்களில் மின்சாரம் கையாளுவதை உற்பத்தியாவதை உறுதி செய்வதற்குத் தன்னாலியன்ற அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. ஆனால் இம் மாநிலம் தற்போது பல்லாண்டுகளாகத் தொடர்ந்து மின் வெட்டுகளை அனுபவிக்கும் நிலைமை, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் புதிய அனல் மின் நிலையங்களை அமைப்பதன் வாயிலாக மட்டுமே சீரடையும்;

இந் நோக்கத்தினை எய்தும் பொருட்டு, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மாநில அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. மைய அரசும் மின் உற்பத்திப் பெருக்கத்தை வலியுறுத்துகிறது. இத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்தவும் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் செவ்வனே செயல்படுவதை உறுதி செய்யவும், மத்திய அரசின், அதன் பல்வேறு நிறுவனங்களின், ஒத்துழைப்பும் உதவியும் கனிசமான அளவுக்கு இன்றியமையாது தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மின் நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்திய அரசு நிர்ணயம் செய்த நிலக்கரி டன் அளவைக் காட்டிலும் நமது அனல் மின் நிலையங்களுக்கு வழங்கும் நிலக்கரி அளவு குறைந்து விட்டதை நாம் இப்போது காண்கிறோம். இவ்வாறு வழங்கப்படும் நிலக்கரியின் தரமும் சிறந்ததாக இல்லை. இத்தகைய காரணங்களை முன்னிட்டு, இம் மாநிலத்தின் அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தியில் அதிகச் செலவு கொள்ளும் எரி எண்ணெயைப் பயன்படுத்தி ஓரளவு மின் உற்பத்தி செய்யும் நிலைக்கு உந்தப் பட்டுள்ளன. நிலக்கரியை முடையிருப்பு வைக்க வெளிநாட்டிலிருந்து ஒருமுறை இறக்குமதி செய்வதற்கான இம் மாநில அரசின் செயற்குறிப்பு இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது குறித்து மாநில அரசுக்கு உதவும் வகையில் மைய அரசு உடனடி முடிவெடுக்கும் என்று உளப்பூர்வமாக நம்புகிறோம்.

14. அனல் மின் நிலையம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு அதிகச் செலவாகும் என்பதையும் இது தொடர்பாகக் கருத்தில் கொள்ள வேண்டும். அனல் மின் உற்பத்திக்கு புனல் மின் உற்பத்தியை விட அதிகம் செலவாகும் என்பது அனைவருக்கும் தெரியும். அநேகமாக நம்மிடமுள்ள புனல் மின் ஆதாரங்கள் அனைத்தையும் இந்த அரசு பயன்படுத்தி விட்டது. எனவே, மின் உற்பத்திக்கு நம்மிடமுள்ள ஒரே மாற்று வழி அனல் மின் உற்பத்தித் திட்டங்களை அல்லது அணு மின் உற்பத்தித் திட்டங்களை மேற்கொள்வதேயாகும். இக்கட்டான இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபட இந்த அரசுக்கு உதவி செய்வதற்காக மத்திய அரசு தமிழ்நாட்டில் அணு மின் திட்டங்களைத் தொடங்கும் என்று நம்புகிறோம். அனல் மின் நிலையங்களைப்



பொறுத்தவரையில், இம் மாநில அரசு அதிக முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இத் திட்டங்களை தொடங்குமுன் இம் மாநில அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கவேண்டிய அவசியம் உள்ளது. மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கும் மொத்த மின் கட்டணங்கள் தற்போது மின் உற்பத்திக்கான செலவுக்குக் கூட கட்டுபடியாகாத நிலையில் உள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்து உரையாற்றியபோது நிதி அமைச்சர், மின் வாரியத்திற்கு ஆகும் செலவுகளை ஈடு செய்ய அதற்கு ரூ. 271 கோடி தேவைப்படும் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார். எனவே, மாநில மின் வாரியத்தின் ஆண்டு வரவு-செலவுப் பற்றாக்குறை பல கோடிக்கணக்கான ரூபாய் வரை உயர்ந்து கொண்டே போவதை ஓரளவுக்கு ஈடு செய்ய, மின் கட்டணங்களை மனமின்றி உயர்த்துவதைத் தவிர வேறெந்த வழியும் இந்த அரசுக்கு இல்லை. மின் கட்டண வீதங்களை உயர்த்துமாறு மாநில அரசை, மத்திய திட்டக் குழுவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தவிர்க்க முடியாதது என்பதால், இதனை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

15. தற்போது இம் மாநிலத்தில் மிகவும் இக்கட்டான உணவு நிலைமை உள்ளது. கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழகத்தில் தொடர்ந்து பருவ மழை தவறியதால் உணவு தானிய உற்பத்தி மிகவும் தாழ்ந்துள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். எடுத்துக்காட்டாக, 1982-ல் குறுவை சாகுபடிப் பரப்பளவு 20 சதவீதம் குறைந்து விட்டது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 'சம்பா' பயிர் சாகுபடியும் மனநிறைவு அளிப்பதாக இல்லை. எனவே, இம்மாநிலத்தில் நெல் உற்பத்தி இறங்குமுகத்தைக் காட்டுகிறது. பொதுப்பங்கீட்டு முறையின் கீழ் செலவாகும் அரிசியின் அளவு உயர்ந்துவிட்ட தால், உணவுப் பிரச்சினை தீவிரமாகிவிட்டது. 1982 ஏப்ரலில் இவ்வாறு செலவான அரிசி 56,000 டன் ஆகும். இந்த அளவு தற்போது ஏறத்தாழ 86,000 டன் ஆகத் உயர்ந்துள்ளது. பொதுப்பங்கீட்டு முறையின் மூலம் பயனீட்டாளர்கள் அரிசி பெறுவது இனி வரும் மாதங்களிலும் தொடர்ந்து அதிக அளவில் இருக்கும். அரிசி உற்பத்தி குறைந்துபோய், செலவாகும் அரிசியின் அளவு உயர்ந்துவிட்டதால் அரிசிக் கையிருப்பு அளவு மிகவும் குறைந்து விட்டது. நம்மிடம் ஒரு இலட்சம் டன் அரிசியும் இரண்டு இலட்சம் டன் நெல்லும் தற்போது இருப்பிலுள்ளன. தற்போது இருப்பிலுள்ள அரிசியும் நெல்லும் நீண்ட காலத்திற்கு வராது. இந்திய அரசுடன் இம் மாநில அரசும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் அதிகாரிகள் நிலையிலும் அமைச்சர்கள் நிலையிலும் தொடர்ந்து அயராது முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும், 1982-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து இம் மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்நிலையில் மேலும் காலதாமதம் செய்யாமல் உற்ற தருணத்தில் உறுதுணையாக உதவ மத்திய

அரசு முன்வந்து உடனடியாகக் கணிசமான அளவு உணவு தானியங்களை ஒதுக்கும் என்று நம்புகிறோம். அதே சமயத்தில், உணவு நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துவர மாநில அரசு முடிந்த அளவுக்கு எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டு வருகிறது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதி கூற விழைகிறேன்.

16. பருவ மழை பொய்த்துப்போனது, நிலக்கரி, சிமிட்டி முதலிய மூலப் பொருள்கள் கிடைக்காமலிருப்பது போன்ற இக்கட்டான நிலைமைகள் அரசுக்கு ஏற்பட்டிருந்தபோதிலும், வளர்ச்சிப் பணிகள், எவ்வித தங்கு தடையுமின்றி விரைவாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டில், ரூ. 711 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்திருக்க, திட்ட சாதனை, திட்ட ஒதுக்கீட்டை விஞ்சக்கூடும். அண்மையில் மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 1983-84ஆம் ஆண்டுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 845 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. இது நடப்பாண்டு நிதி ஒதுக்கீட்டினை விட 18.87 சதவீதம் அதிகமாகும். கடந்த சில ஆண்டுகளில் அனுமதித்த திட்ட ஒதுக்கீட்டைக்காட்டிலும் அதிக அளவில் சாதனை செய்துகாட்டிய தனிச் சிறப்பினை இம் மாநிலம் பெற்றுள்ளது. வரும் ஆண்டுகளிலும் இந்த நல்ல நிலைமை தொடர்ந்து இருக்குமெனத் தோன்றுகிறது.

17. இந்தியப் பிரதம மந்திரியின் "புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்திற்கு" இவ்வரசு முற்றிலும் ஆதர வளிக்கிறது. திட்டப் பணியில் ஏற்படும் முன்னேற்றத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உன்னிப்பாகக் கண் காணித்து வருவதுடன், வளர்ச்சி வேகம் சற்றும் குறையாம லிருக்குமாறு முறையாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

18. இம் மாநிலத்தின் பொருளாதார நடவடிக்கையின் முக்கிய துறைகள் சிலவற்றை இப்போது நான் குறிப்பிட விழைகிறேன். இம் மாநிலத்தில் பெரும்பான்மையினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற வேளாண்மைத் துறையில் இவ்வரசு, தொடர்ந்து சிறப்பு நாட்டம் செலுத்தி வருகிறது. வேளாண்மையில் நல விரிவுத் திட்டத்தின் வளர்ச்சியை நோக்க மாகக் கொண்டுள்ள பயிற்சி-நேர்காணல் திட்டம், உலக உதவி பெறும் திட்டமாகும். இத்திட்டம் 1982, ஜூலை முதல் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நல விரிவாக்கப் பணிக்கு ஏற்புடைய தொடர் நடவடிக்கையாக, ஒழுங்குமுறை அங்காடிகளில் கிராமக் கிடங்குகள் கட்டுவதன் மூலம் உழவர் களுக்கு விற்பனை வசதிகளை இம் மாநில அரசு செய்து கொடுத் துள்ளது. உழவர்கள் தங்களது விளை பொருள்களைக் கொண்டுவந்து. அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் அவற்றை உரியவாறு சேமித்து வைக்க இத்திட்டம் பெரிதும் உதவும்.



19. "இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின்" நிதியுதவியைப் பெறுகின்றதும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடமிருந்து தொழில் நுட்ப வகையில் உதவியைப் பெறுகின்றது மான "பால் பெருக்க II ஆம் திட்டத்திற்கு" இவ்வரசு ரூ. 44 கோடி ஒதுக்கியுள்ளது. இத் திட்டம் செயல்படுகின்ற செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்கள், 1984-85ஆம் ஆண்டிற்குள் பால் உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 5,000ஐக் கொண்டிருக்கும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்ின்கீழும் வறட்சிபாங்கான பகுதித் திட்டத்தின்கீழும் உதகமண்டலத்திலும் கிருஷ்ண கிரியிலும்மொத்தம் இரண்டு பால் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. தரமான விதைகள் வழங்கப்படும் அளவை உயர்த்துவதற்காக, ரூ. 80 இலட்சம் செலவில விதைப் பண்ணைகள் இரண்டு தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மேற்கொண்டும் விதைப் பதப்படுத்தும் பிரிவுகள் மூன்றினை ஏற்படுத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது. பண்ணை மேம்பாட்டைப் பொறுத்தவரையில், கீழ் பவானித் திட்ட பாசனப் பகுதிக்கும் காவிரி பாசனப் பகுதிக்கும் பெரியாறு வைகை பாசனப்பகுதிக்கும் இந்த மேம்பாட்டுப் பணிகள் நீட்டிக்கப்பட்டு வருகின்றன. தோட்டக் கலையும் மேம்படுத்த பட்டு வருகிறது; கோயம்புத்தூரிலும் திருச்சிராப்பள்ளியிலும் தோட்டப் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. இதனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாவட்டங்கள் ஒவ்வொன் றிலும் தோட்டப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும்.

20. உழவர்களுக்கு உறுதுணையாக இவ்வரசு முற்போக்கான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் பலவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செயற்படுத்துவதை விரைவுபடுத்தும் பொருட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (b) பிரிவின்படி மேல் முறையீட்டுத் தனி நடுவர் மன்றம் ஒன்றை அமைப்பதென அரசு முடிவெடுத்துள்ளது. நில நடுவர் மன்றம், நில ஆணை யாளர்கள், நில வாரியம் அளித்த தீர்ப்புகள்மீது செய்து கொள்ளும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் இந்த மேல் முறையீட்டு நடுவர் மன்றம் பெற்றுள்ளது. இது குறித்துத், தேவையான சட்டம் விரைவிலேயே இயற்றப்படும்.

21. நாளது வரையில் திருத்தியமைக்கப்படுகிற நில விவரப் பதிவு முறைத் திட்டம் உழவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகிறது. இத் திட்டம் அண்மையில் மறு நில அளவைச் செய்யப்பட்ட பகுதிகள், தீவிர நில உட்பிரிவுத் திட்டத்தின்கீழ் வரும் பகுதிகள் நீங்கலாக, இம்மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. இதற்காக, இப்போதுள்ள 28 பிரிவுகளை வலுப் படுத்துவதுடன், 56 புதிய பிரிவுகளுக்கு அரசு அனுமதி வழங்கி ... ரூ. 5.17 கோடி செலவாகும்.

22. காடுகளை அழித்தாலும், வரைமுறையின்றி மரங்களை
வெட்டி வீழ்த்தியதாலும், உயிரினவாழ்க்கைச் சூழலில் எற்றத்
தாழ்வும் விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. மிகப்
பரந்த அளவில் மரங்களை நடும் பணியை மேற்கொள்வதில்
அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. தென் மேற்கு, வட
கிழக்குப் பருவ மழை மிக போசமாக இருப்பினும், 8.2 கோடி
செடிகள் ஏற்கனவே நடப்பட்டுள்ளன. 11 கோடி செடிகள்
நடுவது என்னும் திட்ட இலக்கினை எய்த அனைத்து முயற்சி
களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

23. மீனவ மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டப் பணிகள்
ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடிப்படை
வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, இவ்வரசு, ரூ. 67
இலட்சம் திட்டச் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில்
பழையாறு என்னுமிடத்தில் மீன்களைக் கரைசேர்க்கும் தோணித்
துறை அமைப்பதற்கு அனுமதிக்காக அனுப்பியிருந்த திட்டத்
திற்கு மத்திய அரசு அனுமதி கிடைத்துள்ளது. இப் பணி
விரைவிலேயே தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

24. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்கு
பரந்த அளவில் அமையப்பெற்ற சாலை வசதி ஏற்பாடு மிகவும்
இன்றியமையாததாகும். சாலைகள் மேம்பாட்டுக்காக இவ்வரசு
கணிசமான தொகையைச் செலவிட்டு வருகிறது. நடப்பு
நிதி ஆண்டில், ரூ. 10 கோடி செலவில் 500 கிலோ மீட்டர்
கிராமப்புறச் சாலைகள் மேம்படுத்தப்படும். இத்துடன்
ஏறத்தாழ 18,927 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகள்
அமைக்கப்பட்டு, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 43 கோடி
செலவில் மேம்படுத்தப் பட்டுள்ளன. இரு மாநிலங்களுக்
கிடையிலான சாலை அமைப்பின் பொருளாதார முக்கியத்
துவத்தைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசு கிழக் கடற்கரைச்
சாலையில் சில பகுதிகளை மேம்படுத்த ரூ. 300 இலட்சம்
செலவுள்ள திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50
சதவீதச் செலவை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாகக்
கொடுக்கும், எஞ்சிய பாதிச் செலவை மாநில அரசு தன்
சொந்த நிதியிலிருந்து செய்யும்,

25. இம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத்
தொழில் துறை வளர்ச்சி மிகவும் முக்கியமாகும். இம்
மாநிலத்தில் மைய அரசின் முதலீடு சில ஆண்டுகளாகப்
படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்துஸ்தான் புகைபடச்
சுருள் நிறுவனத்தைச் சேர்ந்த கலர் பிலிம் தயாரிப்புப் பிரிவு
உதகமண்டலத்தில் அமைக்கப்படும் என்று இம் மாநில அரசு
நம்பியிருந்தது. ஆனால், இது வேறொரு மாநிலத்தில் அமைக்கப்
படக்கூடும் என்பதை நாம் இப்போது அறிகிறோம். இந்திய
நாட்டில் தயாராகும் திரைப் படங்களில் பாதிக்குமேல் தென்
[illegible]வில் தயாராகிறது. இப் பிரிவு இங்கு அமையுமானால்



ஒருங்கிணைந்த உடனடி விற்பனை வசதியும் துணையான
அடிப்படை வசதிகளையும் கொண்டு பல அனுகூலங்களைப்
பெற்றிருக்கும் என்பது வல்லுநர் கருத்தாகும். இத்தகைய
காரணங்களைக் கொண்டு இம்மாநிலத்தில் இப் பிரிவையும்
வேறு சில பிரிவுகளையும் போதுமான முதலீட்டுடன் அமைக்கு
மாறு இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது.

இம் மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் பணியை
விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தன்னால் இயன்ற
வரையில் இவ்வரசு செய்து வருகிறது. மேலும், ஐந்து
தொழிற்சாலைத் தொகுதிகளை அமைக்க அனுமதி வழங்கப்
பட்டுள்ளது. இத்தொழிற்சாலைத் தொகுதிகளில் அமைய
விருக்கும் தொழில்கள், பின்தங்கிய பகுதிகளில் அமையும்
தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைப் பெறத்
தகுதியுண்டு. தொழில் தொடங்கியதிலிருந்து முதல் ஐந்து
ஆண்டு கால அளவில் இத் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு
இராது. இத் திட்டத்திற்குத் தொழில் முனைவர்களிடமிருந்து
கிடைக்கும் ஆதரவு மிகவும் ஊக்கமளிப்பதாயுள்ளது. தொழிற்
சாலைத் தொகுதிகள் விரைவிலேயே ஏற்படுத்தப்படுமென்று
எதிர்பார்க்கிறோம்.

26. இம்மாநில அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில்,
மத்திய அரசு, 50,000 டன் உற்பத்தித் திறனளவுடன்,
"லீனியர் ஆல்கைல் பென்ஸீன்" உற்பத்தி செய்யும் தொழிற்
சாலையை ஏறத்தாழ ரூ. 50 கோடி செலவில் நிறுவ 'டிட்கோ'
நிறுவனத்திற்கு அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளது. எட்டைய
புரம், தருமபுரி, புதுக்கோட்டை, தேனி ஆகிய இடங்களில்
கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கும் பணி திட்டமிட்டபடி
நடைபெற்று வருகிறது. ஆதி திராவிடர்களுக்கு வேலை
வாய்ப்பளிக்க மேலும் ஒரு நூற்பாலை இராமநாதபுரம்
மாவட்டம் கமுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை
நிறுவனமாகிய தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்,
"அலுமினியம் எலக்ட்ரானிட்டிக் கபாசிட்டர்கள்" தயாரிப்
பதற்கான அனுமதிக் கடிதத்தைப் பெற்றுள்ளது. இச் செயல்
திட்டத்திற்கு ஏறத்தாழ ரூ. 179 இலட்சம் செலவு ஆகுமென்று
எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை அடிப்படையிலான உற்பத்தி
தொடங்கி நடைபெறுகிறது. வணிக அளவிலான உற்பத்தி
இவ்வாண்டு மார்ச்சு-ஏப்ரலில் தொடங்கக் கூடுமென்று எதிர்
பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள்
இரண்டினை அமைப்பதற்காகவும் அனுமதிக் கடிதங்களை
இவ்வரசு பெற்றுள்ளது.

27. ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்கான பல்முனைப்
பணிகளின் அங்கமாக சிறப்புக் கூறுகள் திட்டமொன்றை
அரசு செயல்படுத்தி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்
[illegible] அளவில் ஆதி திராவிடர் குடும்பத்தினரில் 50

துவிகிதத்தினரை ஏழ்மைக் கோட்டை தாண்டச் செய்வது, ஆதி
திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சாதனங்களுக்கு, வசதி
களுக்கு ஏற்பாடு செய்வது என்ற நோக்கத்தை 1980-81-லிருந்து
அரசு பின்பற்றி வருகிறது. அரசின் எல்லா அமைப்புகளின்
ஆதாரங்களும் முயற்சிகளும் இதற்கு உறுதுணையாக
இருக்கின்றன. சிறப்புக் கூறுகள் திட்டத்தின் அளவு, நடப்பு
நிதி ஆண்டில் ரூ. 104.84 கோடி இருக்குமென்றும், அடுத்த
நிதியாண்டில் இது ரூ. 120 கோடியை எட்டுமென்றும் எதிர்
பார்க்கப்படுகிறது. ஆதி திராவிடர்கள் செய்யும் தொழில்களைப்
பல்திறப்படுத்த சிறுதொழில்கள் தொகுதித் திட்டங்கள், குடும்ப
அளவிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்
முதலானவற்றுக்குத் தாராள நிதியுதவி அளிக்கப்பட்டு ஊக்க
மளிக்கப்படுகிறது. மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன்
இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. நடப்பாண்டில், இந்த நிதி
யுதவி ரூ. 10.20 கோடியாகவும் அடுத்த நிதியாண்டில் ரூ. 11.20
கோடியாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

28. ஆதி திராவிடர் குடியிருப்பின் அடிப்படைத் தேவை
களைக் கண்டறிய ஆய்வு நடத்தப்பட்டது. ஆறாவது திட்டக்
கால இறுதிக்குள் இக் குடியிருப்புகளின் குறைந்த அளவுத்
தேவைகளை நிறைவு செய்ய இந்த ஆய்வு உதவியாக
இருக்கும். ஆதி திராவிடர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ள
மனைகளில் வீடுகட்டவும் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு
வருகிறது.

29. இதே போன்று, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்
திட்டமும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்
பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளை மேம்படுத்த,
பழங்குடி மக்களில் 4,200 குடும்பத்தினர் 1983-84-ல் ஏழ்மைக்
கோட்டைத் தாண்டிவர அம் மக்களுக்கு உதவும் நோக்கத்தில்,
மலைவாழ் மக்கள் துணைத் திட்டம் செயற்படுத்தப்படும். இத்
திட்டத்திற்கென, 1983-84-ல் ரூ. 6.50 கோடி செலவிடப்
படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. மலைவாழ் மக்கள்
அனைவருக்கும் இரண்டாண்டுகளுக்குள் குடிநீர் வசதிகள் செய்து
கொடுக்கப்படும். பின்தங்கிய வகுப்பினர் நலன் கருதி, பல
திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.
பின்தங்கிய வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக,
தமிழ்நாடு பின்தங்கிய வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக்
கழகம் என்ற அமைப்பு தற்போது நிறுவப்பட்டுள்ளது. பின்
தங்கிய வகுப்பினரின் தற்போதைய பட்டியல், அவர்களுக்கான
ஒதுக்கீட்டுச் சதவீதம் ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய
பின்தங்கிய வகுப்பினர் நல ஆணையம் என்றோர் அமைப்
பையும் அரசு நிறுவியுள்ளது.

30. நிதி வகையில் நலிந்துள்ள இஸ்லாமிய சமய-அற
நிறுவனங்கள் ஏறத்தாழ 2,700 இருக்கின்றன. இந்த நிறுவனங்கள்
தங்கள் மசூதி முதலிய சொத்துக்களைச் செப்பனிடவும் புதுப்
பிக்கவும் இவற்றில் ஏறத்தாழ 650 நிறுவனங்களுக்கு மாநில
வாரிய பல காலமாக நிதி உதவி அளித்து வருகிறது.



அருகேயுள்ள நிறுவனங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு,
இரண்டாண்டுக் கால அளவில் ரூ. 1 கோடி அளவுக்கு
மானியமளிக்கும் முனைப்புத் திட்டமொன்றை மேற்கொள்வதென
அரசு முடிவு செய்துள்ளது.

31. சுற்றுலா வளர்ச்சியில் அரசு எப்போதும் தனிக் கவனம்
செலுத்தி வந்துள்ளது. மாமல்லபுரம், கன்னியாகுமரி,
இராமேஸ்வரம், உதகமண்டலம் போன்ற பெரிய சுற்றுலா
மையங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து
கொடுக்கப் பெருந் திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இத்
திட்டங்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 80 கோடி வேண்டி
யிருக்கலாம். இத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசின் நிதி உதவி
நாடப்பட்டுள்ளது. மத்திய அதிகார வரம்பிற்குட்பட்ட
உதவி கிடைக்கும் வரை, தனது வரவு-செலவுத் திட்டங்களில் சேர்க்கப்
பல்வேறு துறைகளின் திட்டங்களில் இடம் பெற்றுள்ள திட்டப்
பட்டுள்ள பெருந் திட்டங்களில் தவிர்க்க இயலாத திட்டப் பணிகளையெல்லாம் மேற்
கொள்ள அரசு முயன்றுவருகிறது.

32. புதிய எரிசக்தி ஆதாரங்களையும் உறுதியாகக்
கிடைக்குமென நம்பக்கூடிய எரிசக்தி ஆதாரங்களையும்
கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டிய
தேவையில்லை. தேவைக்கேற்ற மின்சக்தி கிடைக்காத பற்றாக்
குறைநிலை நீடித்துக்கொண்டே போகிறது. இந்த நிலைமை
நீண்டகால எரிசக்தி உற்பத்திக்கான திட்டமிட வேண்டியிருக்கிறது.
இதில் அரசு முக்கியமாக நாட்டம் செலுத்த வேண்டிய
தாகவும் இருக்கிறது. இம்மாநிலத்தில், குறிப்பாக, கிராமப்
பகுதிகளின் வளர்ச்சிக்கு கிடைக்கின்ற நீர் ஆதாரங்களைக்
கருத்திற்கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றதொரு எரிசக்தி
உற்பத்தி-தொழில் நுட்ப அமைப்பை நிறுவுவது மிகவும்
அவசியமாகிறது. எரிசக்தி உற்பத்தியைப் பொறுத்தவரை,
பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்களில் பரிசோதனைகள்,
ஆராய்ச்சிகள் பல மேற்கொண்டுள்ளபோதிலும் அவற்றின்
முடிவுகளை நடைமுறையில் செயல்படுத்துவதில் சிறிதளவே செய்ய
முடிந்துள்ளது. மின்சக்தி உற்பத்தித் திட்டமொன்றை மேற்
கொள்வது, இம்மாநிலம் முழுவதற்கும் எரிசக்தி வழங்கும்
தனிப்பெரும் அமைப்பைத் தொடங்குவதற்கு வழிகோலும் என்ற
நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையின் பேரில், அடுத்த
நிதியாண்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இத்திட்டத்தை
மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

33. நான் எனது உரையை முடிக்குமுன், அண்ணாவின்
இருமொழிக் கொள்கையை இவ்வரசு செயற்படுத்தக் கடமைப்
பட்டுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். காலஞ்
சென்ற பிரதமர் பண்டித நேரு அவர்களும், இந்நாள் பிரதமர்
திருமதி இந்திரா காந்தி அவர்களும், இந்தி பேசாத மக்கள் மீது
இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்று உறுதிகள்

அளித்திருந்த போதிலும், இரயில்வே பணியாளர்கள் ஆண்டுச் சம்பள உயர்வு பெற இந்தி தேர்வுகளில் தேறியாக வேண்டும் என்று இரயில்வே நிர்வாகத்தினர் வற்புறுத்துவதும் அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் இந்திக்கு அளிக்கும் முக்கியத்துவம் அதிகரித்து வருவதும் சில துறைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியைத் திணிப்பதாக அமைவதுடன் மேற்படி வாக்குறுதிகளுக்கு முரணாகவும் இருக்கின்றன. ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குறுதிகளின்படி நடப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்த இவ்வரசு விழைகிறது.

34. எனது உரையில், இவ்வரசு எய்தியுள்ள சாதனைகளையும், எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், வருங்காலத்திற்கென எண்ணியுள்ள திட்டங்களையும் நான் உங்கள் முன் வைத்துள்ளேன். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வகுத்துள்ள திட்டங்களையும், பணிகளையும் செயற்படுத்த, நீங்கள் அனைவரும் இணைந்து செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன். வணக்கம்.

135972
சென்னை-600 008

V2I1,31 N83
N83.37.1 f2